உடுப்பிட்டி மகளிர் கல்லூரி


1868

1993



125 ஆவது

ஆண்டு விழா மலர்




அழகிய நவீன வேலைப்பாடுகள் அமைந்த

கண்கவர் தங்க நகைகளுக்கு

நாடுங்கள்

ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்




அருள்ஸ் ஆபரண மாளிகை

வல்வெட்டித்துறை வீதி

உடுப்பிட்டி

1868

28 - 07 - 1994



உடுப்பிட்டி

மகளிர் கல்லூரி

1868 – 1993

125-வது ஆண்டு விழா

மலர்

28 · 07 · 1994

ಪ್ರಮಾಣಪತ್ರ

ಇದು ಸಾಧಿಸಿದ ಸಾಧನೆಗಾಗಿ

೨೦೨೧ – ೨೦೨೨

ಇವರಿಗೆ ಪ್ರಶಸ್ತಿ ಪತ್ರ-೨೨

ಸಾಧನೆ

೨೮ · ೦೭ · ೨೦೨೨

** சமர்ப்பணம் **





அகரம் அறியக் குறு நடை பயின்று
அரும்பதி வந்த திரு
கருவில் வரமாய் அருள், பொறை ஞானம்
உருவாய் மலர்ந்த துரை
அருள் பொழி அகத்தைத் தெறிதரு ஆடியாய்
இரு விழிச்சுடர் சிரி முனிவன்
வடிவுறு கனக முருகின் நிறைவாய்
முறுவல் பதித்த முகம்
பருதியின் மேன்மை மதி தரு தண்மை
ஒருருவாகிய புதுமை!
பொருவில் திறமை மருவில் நேர்மை
அணியாய் நிறைந்த குரு
கரும யோகமே தருமமாய் நின்று
உறுநெறி காட்டிய ஞானி
பெருமகன் எங்கள் காப்பெனும் துணிவு
பெருமையுமே பெற்றிருந்தோம்
பெருமையும் பேறும் முடிவுற்றதின்று
அருங் கொலு அமர்வினியில்லை
மருங்கினில் சூழ்ந்து அறிவுரை நயந்து
பெறுமொரு துணிவுஇனி இல்லை
இருநிதி, வலம்புரி, மலரினில் குறிஞ்சி
இனி அது எங்கள் நினைவில்
ஒன்றுடன் கால் நூறாண்டின் நினைவுகள்
நூலுரு வாகிட உந்திய
பெருந்தகை துரைராசா பெரியோரவர்க்கே
சமர்ப்பணம் இந்நூல் சமர்ப்பணமே'



★ ★ திருமண அழைப்பிதழ் ★ ★

மணமக்களின் பெற்றோர்கள்,
உற்றார் உறவினர்கள் அனைவரும்
இனிதே வருகை தந்து
மணமக்களை வாழ்த்தி
வரவேற்க அன்புடன் அழைக்கின்றனர்.

எமது பழைய மாணவர் சங்கப் போஷகர்

பேராசான் **அழகையா துரைராஜா** அவர்கள்







அன்னையே

கொடு வெயிலின் வெம்மையையெல்லாம்
தானே தாங்கிக் கொண்டு,
தன் அடியை அண்டியோர்க்கு
குளிர்ந்த நிழலையும் இனிய தென்றலையும் தருகின்ற
பசு மரத்தின் தாய்மை உணர்வை
உன்னிடத்தில் கண்டோம்.
உன்னுடைய வளாகத்திலே,
எங்கள் வாழ்க்கையிலே,
ஒரே ஒரு முறை மட்டும் வந்து போகின்ற
இனிய மாணவப் பருவம்
சந்தோஷமாகக் கழிந்தது
நாங்கள் ஆடினோம், பாடினோம்,
கைகோர்த்து நடந்தோம்.
சிரித்தோம், கதைத்தோம், விளையாடினோம்
சண்டைகள் செய்தோம், சமாதானம் ஆகினோம.
வகுப்பறைச் சிறைகளின் கனதிக்கப்பால்
நிறைவாய்ச் சுதந்திரம் தந்தாய்.
இங்கே தான்.....
எங்கள் அட்சரங்கள் வடிவம் பெற்றன.
எங்கள் மூளைகள் கணனிகள் ஆயின
உன்னுடைய மேடைகளிலே
எங்கள் கன்னிப் பேச்சுகள் மலர்ந்தன.
நடிப்புகள் அரங்கேறின.
சப்தஸ்வரங்களும் சலங்கை ஒலிகளும் கலந்தன
உன்னுடைய மைதானச் சுவடுகளிலே

எங்கள் காற்றடங்கள் பதிவாயின
மழலை முதல் யௌவனம் வரை
நாங்கள் வளர்ந்தது தெரியாமலே
நாற்குண நலன்களும்
எங்களோடு வளர்ந்தன.
நீ வித்தூன்றிய விதைகளும்,
எங்களுள் வளர்ந்தன
உன் மடியில் வாழ்ந்த
கபடுகள் படியாத, கவலைகள் தீண்டாத
ஆளுமையில் வளர்ந்த
அந்த அற்புதமான காலத்துக்காக
உனக்கு எங்கள் நன்றிகள் கோடி
எங்களிலே நீ வித்தூன்றி வளர்த்து
விளைவித்து அனுப்பிய வித்தைகள் யாவினுக்குமாக
உனக்கு எங்கள் நன்றிகள் கோடி
இன்று உனது நூற்றிருபத்தைந்தாவது ஆண்டு
பூர்த்தியிலே
உன்னை எங்களுக்களித்த இறை தொண்டரையும்
இற்றைவரை உற்றபணி செய்து உயர்த்திய
அதிபர், ஆசிரியர், ஊழியரனைவரையும்
நன்றியோடு நினைவிற் கொண்டு
அன்றும் இன்றும் உன் மாணவராய்
அண்டும் பேறு பெற்ற அனைவர் சார்பாகவும்
நின் தாள் பணிகின்றோம்.
தாயே நீ நீடு வாழி!



மலர்க்குழு

மலர்க்குழுத் தலைவி :- திருமதி. பா. இராஜேந்திரசிங்கம்

மலராசிரியர் :- செல்வி. ச. வேலுப்பிள்ளை

துணை ஆசிரியர் :- திருமதி. ஜெ. கந்தசாமி

செயற்குழு :-

திருமதி. பு. சண்முகலிங்கம்
,, அ. பாலசிங்கம்
,, க. துரைசிங்கம்
,, இ. தில்லையம்பலம்
,, த. இராசரத்தினம்
,, ந. சிவராஜா
,, ஈ. குட்டித்தம்பி
,, இ. செல்வராஜா
,, சே. அரியநாயகம்
,, ஈ. விக்னேஸ்வரன்
,, சி. மாசிலாமணி
திருமதி. ஸ்ரீ. குழந்தைவேல்

திருமதி. ந. மகேஸ்வரன்
,, இ. இராதாகிருஷ்ணன்
திரு. சு. கிருஷ்ணராஜா
திரு. சோ. அம்பலவாணர்
திருமதி. செ. கனகசபாபதி
செல்வி. பூ. சின்னத்துரை
திருமதி. வ. கைலயங்கிரிசெல்வம்
,, சு. தனபாலசிங்கம்
,, சு. ஜெகநாதன்
செல்வி. வ. துரைசாமி
திரு. செ. பராராஜசிங்கம்
திரு. ச. ஸ்ரீராமச்சந்திரன்

உடுப்பிட்டி மகளிர் கல்லூரிப் பழைய மாணவர் சங்க நிர்வாகக் குழு:

போஷகர் :- பேராசிரியர் அ. துரைராஜா

தலைவர் :- திருமதி. பா. இராஜேந்திரசிங்கம்
94 மார்ச்சு இலிருந்து
திருமதி. ச. குமாரசுப்பிரமணியம்

உப தலைவர் :- திருமதி. லி. நே. யோசேப்

செயலாளர் :- திருமதி. க. தேவராஜா

உப செயலாளர் :- திருமதி. அ. பாலசிங்கம்

பொருளாளர் :- செல்வி. ச. வேலுப்பிள்ளை

செயற்குழு உறுப்பினர் :-
திருமதி. ச. மகேந்திரராஜ்
செல்வி. ப. பத்மநாதன்
திருமதி. இ. இராதாகிருஷ்ணன்
செல்வி. த. அரியாத்தினம்
திருமதி. சி. ஸ்ரீஸ்கந்தராஜா
திருமதி. ந. மகேஸ்வரன்
செல்வி. வ. துரைசாமி
திருமதி. ஜெ. கந்தசாமி
திருமதி. சு. தனபாலசிங்கம்

மலராசிரியர் கருத்து

1993 மே மாதம் 7-ம் திகதி எங்கள் கல்லூரி ஸ்தாபகமாகி நூற்றிருபத்தைந்து ஆண்டுகள் நிறைந்தன. எங்கள் கல்லூரி வரலாற்றில் நாங்கள் அறிந்த வரையில் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைந்த வெள்ளி விழாவினை அடுத்து நிறைவு விழாக்கள் எதுவும் கொண்டாடப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த நிறைவு விழாக் கொண்டாட்டங்கள் இல்லாதபோதும், இந்தக் கல்லூரி இயல்பாகவே தனக்குரிய வளர்ச்சிப் போக்கில் முன்னேறிக் கொண்டிருந்தமையை யாவரும் அறிந்தோம். எனினும் கடந்த ஏழாண்டு காலப் பகுதிக்குள் கட்டடங்கள் முதலான பௌதிக வளங்களைப் பெரும்பாலும் முற்றாகவே இழந்தும் சிறிது காலம் இடம் பெயர்ந்தும், பின்னரும் தனது வழமையான செயற்பாடுகளை இயல்பாக ஆற்றமுடியாமலும் பெரும் பின்னடைவுகளைச் சந்திக்க நேர்ந்தமை துரதிட்டமே. நூற்றிருபத்தைந்து ஆண்டுகால நிறைவான வளர்ச்சியையும், பாரம்பரியத்தையும் கொண்ட இக்கல்லூரிக்கு ஏற்பட்ட நிலை இக்கல்லூரியைச் சார்ந்த அனைவருக்கும் பெரும் வேதனைக்குரிய தொன்றாகவே இருந்தது. இந்நிலையில் இக் கல்லூரியின் பௌதிக வளங்களை உடனடியாக மீளமைக்க முடியாத சூழ்நிலை இருப்பினும் இதனுடைய பின்னடைவு நிலையை மாற்றி மீண்டும் அது தனது வழமையான செயற்பாடுகளில் முன்னணிக்கு மீள உந்த வேண்டிய பெரும்பணி யாவர்க்கும் இருந்தது. இப் பொதுப்பணியை முன்னெடுக்க வேண்டிய தன் பொறுப்பினை உணர்ந்து அதிபர் திருமதி பா. இராஜேந்திரசிங்கம் உள்ளார்ந்த உணர்வோடும், உந்துதலோடும், தளர்விலா அக்கறையோடும் செயற்பட்டதனால் கல்லூரி இடிபாடுகளின் மத்தியிலும், இடர்கள் நடுவிலும் தனது இயல்புக்குத் திரும்பியது. கல்லூரியை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரப் பல சிரமங்களின் மத்தியிலும் படிப்படியாக அவர் முயன்றார். அத்தகைய முயற்சிகளில் ஒன்றாகவே இந்த நூற்றிருபத்தைந்தாண்டு நிறைவுக் கொண்டாட்டத்தையும் அவர் முன்னெடுத்தார் என்பதில் ஐயமில்லை.

எங்கள் கல்லூரி வரலாற்றைப், பாரம்பரியத்தை, சாதனைகளைக் காலங்காலமாக எடுத்தியம்பவல்ல ஆவணங்கள் யாவற்றையும் இழந்துவிட்டோம். இதற்கு மாற்றீடாக இவற்றை இன்றும் நாளையும் உள்ளோர்க்கு எடுத்துக்கூறப் பயன்படும் ஒரு ஆவணமாகவே எல்லோர் சிந்தையிலும் இம்மலரின் தேவை எழுந்தது. எனினும் நூற்றிருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு ஞாபகார்த்த மலர் வெளியிட வேண்டுமென்ற கருத்தை முன்வைத்தவர் எங்கள் பழைய மாணவர் சங்கப் போஷகராக விளங்கிய அமரர் பேராசிரியர் அ துரைராஜா அவர்களே. நூற்றிருபத்தைந்தாவது ஆண்டு விழாபற்றிக் கலந்துரையாடுவதற்காக 07 - 02 - 93 அன்று நிகழ்ந்த பழைய மாணவர் சங்கச் செயற்குழுக் கூட்டத்தில் இக் கருத்தை அவர் முன்மொழிந்தார். அவரது ஆக்கபூர்வமான அந்த ஆலோசனையை நாம் ஏற்றுக் கொண்டோம் பின்னர் கல்லூரியில் நிகழ்ந்த நூற்றிருபத்தைந்தாண்டு நிறைவு ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் ஆற்றிய உரையில் ஞாபகார்த்த மலரை வெளியிட வேண்டுமென்ற வேண்டுகோள் பிரகடனமானது.

1993 மே மாதம் 7 ஆம் திகதி நூற்றிருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவும் ஞாபகார்த்த மலர் வெளியீடும் நிகழுமெனத் தீர்மானிக்கப்பட்டது, இருந்தும் இடையூறுகள் காரணமாக இது நிறைவேறாமையால் 29 - 07 - 1993 அன்று நிகழ்ந்த பழைய மாணவர் சங்க செயற்குழுக் கூட்டத்தில் பழைய மாணவர் சங்கம் ஞாபகார்த்தமலர் வெளியிடும் பொறுப்பைச் செயற்படுத்த வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. மலர்க்குழுவொன்றும் தெரிவாக்கப்பட்டு நிர்வாகக்குழுவும் இணைந்து செயற்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் உள்ளூர், வெளியூர்ப் பத்திரிகைகளில் பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் இக் கல்லூரியோடு தொடர்புற்றவர்கள் யாவரையும் இம்மலருக்கு ஆக்கங்கள் அளிக்க வேண்டி விளம்பரங்கள் வெளியிடப்பட்டன சென்ற ஆண்டு இறுதிவரை ஆக்கங்களுக்கான, கால அவகாசம் போக்குவரத்து இடையூறு கருதி நீண்டது. இம் மலருக்கான அட்டைப்படத்தைத் தெரிவு செய்த பின்னர், அப்படத்தினைச் சிறந்த முறையில் அச்சிடும் விருப்பினால் அதனைக் கொழும்பில் அச்சிடும் முயற்சியில் இறங்

கினோம். பல அன்பர்களின் உதவியோடு எங்கள் விருப்பு நிறைவேறி அட்டைப் படங்கள் எங்கள் கைக்கு இவ்வாண்டு ஜூன் மாத ஆரம்பத்தில் கிட்டியது. போக்குவரத்து மற்றும் சிரமங்கள் காரணமாக அச்சிடும் பணியும் முற்றுப் பெறாமையால் நாம் எண்ணியபடி, விரும்பியபடி, எமது பழைய மாணவர் சங்கத் தலைவி யாயிருந்து இப்பணியினை முன்னெடுத்துச் சென்ற திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள் தலைமையில், எமது சங்கக் காப்பாளராயிருந்து எம்மை இப்பணியில் ஊக்குவித்த பெருந்தகை பேராசான் அ. துரைராஜா அவர்கள் கரத்தினால் இம் மலரினை வெளியிடும் பெரும் பேறினை இழந்தோம

பேராசான் அ. துரைராஜா அவர்கள் ஜூன் மாதம் 25 ஆம் திகதி இம் மலர் வெளியீட்டு, விழாவில் கலந்துகொள்ள நாள் அளித்திருந்தாரெனினும் அதனிடையில் அப் பெருந்தகையைப் பறிகொடுத்துப் பரிதவிக் கும் நிலைக்கு ஆளானோம். இன்று இம்மலரினை அன்னாருக்கே சமர்ப்பணமாக்கி ஆறுதலடைகிறோம்.

இப்மலரில் வெளிவருகின்ற ஆக்கங்களில் வரலாறு ரீதியான தகவல்களை, சான்றுகளை எமமாலியன்ற வரை சரியாகவே தரப் பெரிதும் முயன்றுள்ளோம். எமது சக்திக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்டு, தரப்பட்டுள்ள தகவல்களில் சான்றுகளில் தவறுகள் ஏற்பட்டிருக்குமாயின், ஆவணங்கள் அழிந்தமையும். பெரும்பாலான பழைய மாணவர்கள், அதிபர் ஆசிரியர்கள் தூர இடங்களில் உள்ளமையால் அவர்களை அணுகும் வசதி இல்லாமையும் தவறுகளுக்குக் காரணமாயின என்பதைப் புரிந்துகொண்டு, மன்னிக்குமாறு வாசகர்களனைவ ரையும் பணிவோடு வேண்டிக்கொள்கிறோம்.

எமது கல்லூரியின் இதுவரை காலமான வரலாற்றினை. வாழ்வினை எடுத்துக்கூறும் ஆவணமாக அமையவேண்டுமென்ற நோக்கோடு வெளிவருகின்ற இம்மலர், இக் கல்லூரியன் எதிர்கால வாழ்விற்கும் வர லாற்றிற்கும் ஓர் உந்து சக்தியாகவும் அமைய வேண்டுமென்ற பெருவிருப்பும் எமக்குண்டு- அவ்விருப்பினை நிறைவாக்கம் தகைமை இம்மலருக்கு வாய்த்ததா என்பதை வாசகர்களே அறிவார்கள்.

இம்மலரை வெளியிடும் இச்சந்தர்ப்பத்தில் எம் கல்லூரி மாதாவின் நிலை, பழைய மாணவர்களாகிய எங்கள் யாவர்க்கும் மனத்துயரளிப்பதாகவே உள்ளது. யுத்த நிலைமைகளால் பின்னடைவைச் சந்தித்துள்ள எமது கல்லூரியை வாழ்த்துகின்ற வளர்க்கின்ற கரங்களாகவே அனைவர் கரங்களும் அமைய வேண்டுமென அவாவுறுகின்றோம். இக் கல்லூரியின் வளர்ச்சிக்காக உதவ, உழைக்க முன்வருவோர் பலரை இக்கல்லூரி ஈன்றுவிட்டது. எனினும் இறை நாமத்தால் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனத்தின் உயர்வுக்காக உழைக்கும் பணியில் அற்குகந்தவர்களை இறைவனே காலத்துக்குக் காலம் நியமிப்பார் எனப் பரிபூரணமாக நம்புகிறோம். கல்லூரி வாழுமா அன்றி வீழுமா என மனம துயருறும் கணத்தில் ஒன்றையே எண்ணுவோம். வளர்ச்சியும் வீழ்ச்சியும் இறைவனாலேயே கூடுவன. மனிதர் கருவிகளே அன்றி கருத்தாக்கள் அல்ல. தனி மனிதர்களு டைய செயற்பாடுகளுக்கு எல்லையும் நியதியும் உண்டு. இறை சித்தமே இந்த நித்தியமானது. '' ஒளியை ஈதலுக்காக ஒளியேற்றப்பட்டது '' என்ற மந்திரத்தை மனதார ஏற்றுக்கொண்டு அதன வழி செல்வோமாக.

செல்வி. ச. வேலுப்பிள்ளை

மாசிரியர்

எமது அதிபரின் செய்தி

அமெரிக்க மிஷனரிமாரின் கடின உழைப்பு, தூரநோக்கு, உயர்ந்த இலட்சியங்களுடன் ஆரம்பிக்கப் பட்ட உடுப்பிட்டி மகளிர் கல்லூரி சொல்லொணா இடையூறுகள் மத்தியிலும் எதிர் நீச்சலிட்டு இன்றுதனது 125 ம் ஆண்டு விழாவினைக் கொண்டாடி மலரொன்றினையும் வெளியிடுவதைக் காணும் போது உள்ளம் பூரிப்பால் நிரம்பி வழிகின்றது விளையாட்டுத்துறை, கலின்கலைகள், கலைவிழாக்கள் மற்றும்சகலதுறைகளிலும் தனக்கெனவோர் தனியிடம் வகித்தும் கல்வித் துறையில் ஒப்பிலா ஸ்தானத்தை எட்டிப் பிடித்தும் இன்று வானளாவிய புகழுடன் மிளிர்கிறது எமது பழையமாணவர்கள் திக்கெட்டும் பரந்துசென்று இப்பாடசாலையின் புகழ்பரப்பியும் தமதுகல்வித் தாயைமறவாது தம்மாலியன்ற சேவையை இக்கல்லூரியின் மேம்பாட்டிற்காகச் செய்வதற்காகத் திடகாத்திரம் பூண்டிருப்பது ஒளிமயமான எதிர்காலத்தை எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

ஒழுக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டின் அத்திவாரத்திலமைந்த இம்மகளிர் கல்லூரிக்கு தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் மெழுகுவர்த்தியாக உருக்கித் தன்னலம் பாராது உழைத்த இப் பாட சாலை முன்னாள் அதிபர்களையும் அவர்தம் சேவையினையும், இப்பாடசாலையின் ஆரம்பகர்த்தாக்களாகிய ஸ்தாபிதர்களையும் இக்கல்லூரி என்றுமே மறந்துவிடப் போவதில்லை ''ஒளிர்வதற்காக ஒளியேற்றுவோம்'' என்ற தாரக மந்திரமான மகுடவாக்கியத்தை அடியொற்றி இக்கல்லூரி வீறுநடையுடன் செல்கின்றது.

இக்கல்லூரியின் பழையமாணவராய், நல்லாசிரியராய், சிறந்தபுகழ் பூத்த அதிபராய் இக்கல்லூரிக்கு நீண்டகாலம் அளப்பரிய சேவையாற்றி 93 ம் ஆண்டின் ஆரம்பத்தில் ஓய்வுபெற்றுள்ளார் எமது பெரும்மதிப் பிற்குரிய திருமதி பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள் அவரின் சேவை இளைப்பாறலின் பின் இக்கல்லூரியின் நிர்வாகத்தை நான் 93 ம் ஆண்டு மாசி மாதப் பிற்பகுதியில் பொறுப்பேற்றேன். இன்றைய காலகட்டத்தில் ஒருபாடசாலையின் அதிபராகக் கடமையாற்றுவது ஒரு சவாலாக அமைந்துள்ள போதிலும் ஆசிரியர்கள் ஊழியர்களின் சகலவிதமான ஒத்துழைப்பையும் பெறக்கிடைத்த நல்லாசியினால் இக்குறுகிய காலத்தில் கல்லூரியின் நிர்வாகத்தைத் திறமையாகவும், செம்மையாகவும் கொண்டுநடாத்தவும், இதன்மூலம் எமதுமாண விகள் பயனடைந்து நற்பிரஜைகளாக சமூகத்தில் உலவக்கிடைத்த அரும்பேற்றிற்காகவும் சகலருக்கும் எனது நன்றிஅறிதலைக் கூறுவதில் இறும்பூதெய்துகிறேன்

125 ஆண்டுகளில் இக்கல்லூரியில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியை ஆவணங்களுடன் கல்லூரிவரலாற்றினைப் படிமுறையாகத் தொகுத்து எமதுஎதிர்கால மாணவர்களும் சமுதாயமும் கட்டாயமாக தம்முன்னோர் விட்டுச் சென்ற அருஞ்செல்வங்களை அறிந்துபோற்றுவது அவசியமாகும். இப்பணியினைப் பழைய மாணவர்சங்கத்தினர் தன்னலம் பாராது, ஆரம்பநாளிலிருந்து இன்றுவரை நடந்தவரலாற்றுச் சான்றுகளைத் தேடித் தொகுத்து எமக்கும் எம்மாணவர்களுக்கும் சகலருக்கும் மலராக அமைத்துத்தரும் பெரும்பணியிலீடுபட்டு அம் முயற்சியில் வெற்றிபெற்றமைக்காகப் பெருமையும் பேருவகையும் அடைவதுடன் எனது வாழ்த்துக்களையும் எனதுஆசிரியர் கள், மாணவர்கள் சார்பிலும் எனது தனிப்பட்ட சார்பிலும் நன்றிக்கடனைச் செலுத்துகின்றேன்.

இக்கல்லூரியின் பெருமைக்கும் உயர்வுக்கும் இன்றும் என்றும் எப்பொழுதும் ஆண்டவனின் ஆசியை வேண்டி நிற்கிறேன்.

திருமதி. இ. குட்டித்தம்பி
அதிபர்
யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

உள்ளே.....

- ஆசிகளும் வாழ்த்துகளும்
- பழைய மாணவர் சங்கச் செயலாளர் அறிக்கை
- அன்னையின் வாழ்வும் வரலாறும் 1
- நயப்பிற்கும் நன்றிக்குமுரிய சிற்பிகள் 27
- இன்றைய அதிபர் திருமதி. இரஞ்சிதம் குட்டித்தம்பி 51
- சிறப்பு ஆக்கங்கள் 55
- நினைவுகள் பழையன ஆனால் பசியன 93
- 125 ஆவது ஆண்டு ஞாபகார்த்த மலர்ப் போட்டிகள் 105
- மாணவர் ஆக்கங்கள் 113
- அன்னையின் நூற்றிருபத்தைந்தாவது அகவை ஆரம்ப நிகழ்வுகள் 127
- அதிபர், ஆசிரியர், ஊழியர் - 1993 130
- அஞ்சலி 132
- மதிப்புரை திரு. R S. நடராஜா 134
- நன்றிகள் 136

ஆசிகளும் வாழ்த்துகளும்

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்
சுவாமி சித்ரூபானந்தா அவர்களிடமிருந்து

இன்றைய சூழ்நிலையில் ஒரு கல்வி ஸ்தாபனம் இவ்வளவு பெருமையோடு தனது நூற்றியிருபத்தைந்து ஆண்டுச் சேவையைக் குறிக்குமுகமாக இம்மலரை வெளியிடுவது கேட்டு நாம் உண்மையாகவே மகிழ்ச்சியடைகின்றோம் அமெரிக்கன் மிஷனைச் சார்ந்த பெரியோர்கள் தோற்றுவித்த இம்மகளிர் பாடசாலையின் 125ஆண்டு நிறைவில் இவர்களது தியாக வாழ்வினையும், இதிற் படிப்பித்த், படிப்பித்துக் கொண்டிருக்கும் சகல ஆசிரியர்களின் பங்களிப்பினையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

சுவாமி விவேகானந்தர் கல்வியைப் பற்றிக் கூறுமிடத்து "மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும். எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தனது சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை" என்றார். ஆகவே இப்பாடசாலை வருங்காலத்திலும் மேலும் பல சீரும்சிறப்பும் பெற்றுத்திகழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

சுவாமி. சித்ரூபானந்தா

ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.
29 - 11 - 1998

கரவெட்டி பங்குத்தந்தை
அருட்திரு. ப. யோ. ஜெபரட்ணம் அவர்களிடமிருந்து

நூற்றிருபத்தைந்து ஆண்டுகளாக கல்வித்துறையில் அரும் பணியாற்றி வரும் உடுப்பிட்டி மகளிர்கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி யும் பெருமையும் அடைகிறேன். "நீங்கள் உலகில் சென்று பலன் தரும்படியாகவும் அந்தப்பலன் நிலைத்திருக்கும் படியாகவும் உங்களை நான் ஏற்படுத்தினேன்" என்ற கிறீஸ்துவின் வார்த்தைகளுக்கமைய உலகிலே நற்பலன் கொடுத்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான நற்பிரஜைகளை உருவாக்கிவிட்ட பெருமை இக்கல்லூரியை சாரும்.

பல்வேறு பாதிப்புக்கள் நிறைந்த இவ்வுலக மக்களின் வாழ்வில் ஒளியையும் அமைதியையும் அளிக்கத் தகுதியான ஒழுக்கமும், உண்மையும், நேர்மையும், இறைபயமும் கொண்ட மக்களை தொடர்ந் தும் உருவாக்க இக்கல்லூரி உழைக்கும் என்பது எமது நம்பிக்கை.

125 ஆவது ஆண்டு நிறைவு விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் இறை ஆசீர் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிக் கின்றேன்.

"இறை யேசு உங்களை ஆசீர்வதிப்பாராக"

ப. யோ. ஜெபரட்ணம்

தென் இந்தியத் திருச்சபை அத்தியட்சகர்
அதிவண. D. J. அம்பலவாணர் அவர்களிடமிருந்து

இலங்கை வந்த அமெரிக்கன் மிஷனரிமார் 1827ம் ஆண்டிலேயே உடுப்பிட்டியில் தங்கள் பல்வகைப் பணிகளை ஆரம்பித்தனர். எனவே உடுப்பிட்டியிலும் நிறுவன ஒழுங்குக்கமைபாத கல்விப் பணிகள் ஆரம்பத்திலேயே இடம்பெற்றன. 1868ம் ஆண்டு உடுவிலில் ஆரம்பித்தது போல் பெண்களுக்கு ஓர் விடுதிப் பாடசாலை வடமராட்சிப் பகுதியிலும் ஸ்தாபிக்க வேண்டும் என்று உடுப்பிட்டிப் பெண்கள் பாடசாலை மிஷனரிமாரினால் ஸ்தாபிக்கப்பட்டது. 1915ம் ஆண்டு இது ஒரு ஆங்கிலத் தமிழ் [Anglovernacular] பாடசாலையாக அரசாங்க அங்கீகாரம் பெற்றது. அந்தநாள் தொட்டு பெண்கள் ஆங்கில கல்விக்கு ஓர் முக்கிய கல்லூரியாக இது வளர்ந்து வந்ததை ஈழத்து மக்கள் அனைவரும் அறிவர்.

பெண்கள் முன்னேற்றம், சமத்துவம், விடுதலை அனைத்திற்கும் கல்வி இன்றியமையாதது என்பதை உணர்ந்த கிறிஸ்தவ மிஷனரிமார் நம் மக்களுக்கு அளித்த பணிகளில் பெண்கள் கல்வி மிகவும் முக்கியம் என்பதை நாம் அறிவோம். 25ம் ஆண்டைக் காணும் இக்கல்லூரி இம்மட்டும் புரிந்த சிறந்த சேவைகளை இன்னும் பன்மடங்கு நம்மக்களுக்கு நிறைவேற்ற வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். செல்வி கி மதியாபரணம், செல்வி லீ வண்ணியசிங்கம் செல்வி ருத் மேன், திருமதி பாக்கியம் இராசேந்திரசிங்கம் போன்ற தலைவிகளின் பாரம்பரியத்தில் தொடர்ந்து, அவர்களினதும் அவர்களுக்கு முன்பணி புரிந்த மிஷனரிமாரினதும் சேவை மனப்பான்மையுடன், இன்றும் இனிமேலும் இக்கல்லூரி பொறுப்புகளை ஏற்பவர்கள் தங்கள் உத்தரவாதங்களை நிறைவேற்றுவார்கள் என்பதே எமது நம்பிக்கை. இறைவன் இக்கல்லூரியையும், அதன் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அனைவரையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக.

D. J. அம்பலவாணர்
தென்னிந்திய திருச்சபை.
அத்தியட்சகர்.

வட்டுக்கோட்டை.
பெப்ரவரி 1993.

வல்வெட்டித்துறை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானப்
பிரதம குருவும்,
அகில இலங்கை சைவக்குருமார், அர்ச்சகர் சபைத்தலைவரும்
சமாதான நீதவானுமாகிய
சிவஸ்ரீ. சோ. தண்டபாணிகதேசிகர் அவர்களிடமிருந்து

மனித வாழ்வில் நூறு ஆண்டுகளென்பது ஒரு பூரணமான காலமாகும். ஆனால் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதனையும் கடந்து இருபத்தைந்தாண்டுகள் நிறைவுடன் பணிபுரிவது போற்றத் தக்கது. இக்கல்லூரி நல்லிதயங்கொண்ட ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டதென்பதிலையமில்லை. அக்கால மிஷனரிமாரின் தன்னலங்கருதாச் சேவையால் வளர்ந்து பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகள் பேரறிஞர்களைத் தோற்றுவித்தது என்பதைக் காணுந் தோறும் கேட்குந் தோறும் மனம் இறும்பூதெய்துகிறது.

இக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினர் வெளியிடும் மலர் ஒளியுடனும், பொலிவுடனும் சிறப்புற மலரவும்; கல்லூரி மேன்மேலும் உயர்ந்த பணிபல புரியவும் வாழ்த்துவதுடன் வாழ்க வளர்கவென என்னிதயபூர்வமான ஆசியையும் கூறுகின்றேன்.

சோ. தண்டபாணிகதேசிகர்

எமது பழைய மாணவர் சங்கப் போஷகரான,
யாழ். பல்கலைக்கழக உபவேந்தர்,
பேராசிரியர் கலாநிதி, அழகையா துரைராஜா அவர்களிடமிருந்து

தமிழ்ப் பெண்கள் கல்வியைப் பெறுவதற்கு தனிமகளிர் கல்லூரி அவசியம் என்ற நோக்குடன் அமெரிக்கன் மிஷனரிமார் 1868-ம் ஆண்டு உடுப்பிட்டியில் ஒரு மகளிர் கல்லூரியை உருவாக்கினார்கள் அத்துடன் தூர இடங்களிலுள்ள மகளிரும் இக்கல்லூரியில் கல்வி கற்பதற்கு வசதியாக இதனை ஒரு விடுதிக் கல்லூரியாக அமைத்தார்கள் இக்கல்லூரி 125 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ் வேளையில், இவ்விழாவிற்குரிய மலர் வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடை கின்றேன். இத்தருணத்தில் இக்கல்லூரி ஆரம்பிப்பதற்கு காரணமாகவிருந்த அமெ ரிக்கன் மிஷனரிமாரை நினைவு கூருதல் மிகவும் பொருத்தமானதாகும்.

உடுப்பிட்டியிலும் இப்பிரதேசத்தை சுற்றியுள்ள இடங்களிலும் வாழும் மக்கள் தமது பெண் பிள்ளைகள் தமிழ்ப் பண்பாட்டுடன் கல்வியைப் பெறுவதற்கு இம் மகளிர் கல்லூரி பேருதவியாக இருக்கிறது. இக்கல்லூரியில் கல்வி பயின்ற பழைய மாணவிகள் பலர் பல துறைகளில் உயர்பதவிகளை வகித்து வருவதைக் காணமுடிகின்றது.

தமிழீழத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏதுவாக விஞ்ஞான தொழில்நுட்ப கலாச்சாரம் மக்களிடையே பரவ வழிவகைகள் செய்யப்பட வேண்டும். இந்த நோக்குடன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மேன் மேலும் ஓங்க வேண்டும். எமது பிரதேசத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு மகளிர் ஆற்றவேண்டிய பங்கு மிக முக்கியமானதாகும். கைத்தொழில் அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போல் எமது பிரதேசமும் விரைவில் வளர வேண்டுமாயின் பெண்கள் வைத்தியர்கள், தாதிகள், ஆசிரியர்கள் போன்ற இலகுவான தொழிலில் மாத்திரம் தேர்ச்சிபெறா மல் பொறியியல் மற்றும் தொழில் நுட்பம் சார்ந்த துறைகளிலும் தேர்ச்சி பெற வேண்டியது அவசியமாகும்.

கடந்த காலத்திலிருந்து எமதுபிரதேசத்தில் நிகழ்ந்துவரும் இனப் போராலும், பொருளாதாரத் தடையினாலும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் உள் கட்டுமானப் பணிகள் பாதிப்படைந்துள்ளன. இந்நிலையிலும் அயராது உழைத்து இக் கல்லூ ரியை வளர்த்து வந்த அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மேன்மேலும் வளர்ச்சியடைந்து இப்பிரதேசத்தி லுள்ள பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு வேண்டிய பங்களிப்பை திறம்பட அளிக்க வேண்டுமென்று இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

பேராசிரியர். அ. துரைராஜா
துணைவேந்தர்.

யாழ்ப்பாண பல்கலைக் கழகம்,
இருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
27 - 10 - 1993

எமது பழைய மாணவர் சங்கத் தலைவியும்,
கல்லூரியின் 125 ஆவது ஆண்டு அதிபர்களில் ஒருவருமான
திருமதி பாக்கியலக்ஷ்மி இராஜேந்திரசிங்கம் அவர்களிடமிருந்து

எமது கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வெளியாகும் மலருக்கு இவ் வாழ்த்துச்செய்தியை வழங்குவதில் நான் பெரு மகிழ்வடைகிறேன்.

எனது கல்விப் பராயமும், கற்பித்தற் பணியும் இக் கல்லூரியுடன் பின்னிப்பிணைந்தவை. எனது ஆரம்பக் கல்வியை இங்கேயே தொடங்கினேன். சிரேஷ்ட பாடசாலைத் தராதரக் கல்வி வரை [எஸ். எஸ்.சி] இங்கேயே பயின்றேன். பட்டப்படிப்பிற்காக நான்கு வருடங்கள் கல்லூரி மாதாவைப் பிரிய நேரிட்டது. இந்தியாவில் எனது பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு மீண்டும் என் கல்லூரிமாதாவுடன் என்னை இணைத்துக் கொண்டு சேவையாற்றத் தொடங்கினேன். இங்கு எனது 37 வருட கால சேவையில் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகக் கடமையாற்றினேன். இக் கல்லூரியில் நான் காலடி பதிக்காத இடம் எதுவும் இல்லை என்றே கூறலாம்.

உடுப்பிட்டி கிராமத்தில் பெண்களுக்கென அமைந்துள்ள, விடுதி வசதியுடன் கூடிய, க.பொ.த (உயர்தரம்) வரையிலான வகுப்புக்களைக் கொண்ட ஒரே கல்லூரி இதுவே. இக்கல்லூரியில் பயின்ற மாணவியர் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் உயர் பதவிகளை அலங்கரிக்கின்றனர். இதனால் கல்லூரி மாதா பெருமிதம் கொள்கிறாள்

இக் கல்லூரி உயர்ச்சிக்காகப் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றார்கள், நலன் விரும்பிகள் எனது மனத்திரையில் நிழலாடுகின்றார்கள். இவர்கள் எல்லோரும் எமது கல்லூரியை உருவாக்கிய சிற்பிகள். இவர்களுக்கு சிரம் பணிகின்றேன். கல்லூரியின் எழுச்சிகளின்போது என்மனம் களிகொள்ளும். கல்லூரியின் இக்கட்டான காலங்களில் மனங்கலங்கும். அண்மைக் காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் எமது கல்லூரி இடியுண்டு, எரியுண்டு பொலிவிழந்தது இக்காலங்களில் எனது மனவேதனைகளை வார்த்தைகளால் கூறமுடியாது.

மனித இனத்தின் அழியாத சொத்தான கல்வியைப்பெற ஏற்ற வசதிகள் இன்றி எமது மாணவியர் அல்லற்பட்டனர். இடிந்தகட்டிடங்

களிலும், மரநிழல்களின் கீழும், போதிய ஆய்வுகூடவசதிகள் இன்றியும் கற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்காளாளார்கள். தளராத மனத்துணிவினாலும், இடைவிடாத முயற்சிகளாலும், பலரது உதவிகளாலும் கொட்டகைகள் அமைத்து எமது மாணவமணிகள் கல்வி அறிவைப்பெற வழி அமைத்துக் கொடுத்தோம். எனினும் இவ்வசதிகள் போதியதன்று எதிர் காலத்தில் இவை மேலும் விரிவாக்கப்பட வேண்டும்

பெண்களின் அறியாமை அகல, சமுக வாழ்வில் அவர்களும் முக்கிய பங்குபெற கல்வியறிவு அவசியம். மாணவிகள் எமதுகல்லூரியில் பெற்றுக் கொள்ளும் கல்விசார் அனுபவங்கள் மூலம் தமக்கும் சமுகத்திற்கும் பயனுடையராதல் வேண்டும்- கல்லூரிமாதா எங்களை வளர்க்கின்றாள், வளம்படுத்துகின்றாள். மேலும்மேலும் நாம் ஒளிரக் கல்லூரி மாதாவை வளப்படுத்துவோம்.

எத்தகைய இடர்களையும் திடசித்தத்துடன் எதிர்கொண்டு வெற்றிகாண எமதுகல்லூரி மாதா எதிர்காலத்தில் மேன்மேலும் எழில் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

பா. இராஜேந்திரசிங்கம்.

உடுப்பிட்டி
டிசெம்பர் 93

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்,
பேராசிரியர் கலாநிதி. அ. சண்முகதாஸ் அவர்களிடமிருந்து

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 125 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. அதன் நினைவாக, அவ்வரலாற்று நிகழ்வை ஆவணப் படுத்துவதற்காக ஒரு மலரும் வெளிவரவுள்ளது. அ ம் மலருக்கு ஆ சி யுரை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

முப்பத்தியேழு ஆண்டுகளாக இக்கல்லூரியிலே பணியாற்றி, இக்கல்லூரியின் அதிபராகவும், இவ்விழாக்கால நாளிலே விழா ஒழுங் குகளுக்கெல்லாம் தலைமை பூண்டு நடத்தித் தற்போது சேவையிலி ருந்து ஓய்வுபெற்றுள்ள திருமதி பாக்கியலக்ஷ்மி இராசேந்திரசிங்கம் எங்களுடைய பாராட்டுதல்களுக்குரியவர். ஒன்றேகால் நூற்றாண்டு வரலாறுடைய ஒரு கல்லூரியிலே நீ ண் ட நா ள் சேவையாற்றிய அதிபராக கடமையாற்றிய பெருமை அவருக்குண்டு.

இக்கல்லூரியின் வ ள ர் ச் சி க் க ர க அரும்பணி செய்யும் தற் போதைய அதிபர் தி ரு ம தி. இரஞ்சிதம் குட்டித்தம்பி அவர்கள் இந் நீண்ட பாரம்பரியமுள்ள கல்லூரியின் வரலாற்றை முன்னெடுத்துச் செல்கிறார். கல்லூரி பழைய மாணவர் சங்கக் காப்பாளர் பேராசிரி யர் அ. துரைராஜா (துணை வேந்த, யாழ். பல்கலைக் க ழ க ம்) பாடசாலை அபிவிருத்திச் ச பை ச் செயலாளர் திரு. சி. சண்முகம் (யாழ்பல்கலைக் கழகக் கணக்காய்வாளர்) எனைய அங்கத்தவர்கள் யாவரும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக செய்யும் பணி பாராட்டுக் குரியது. கல்லூரியின் நினைவு மலர் நன்கு அமையவும், கல்லூரி எங்கள் சமூகத்துக்கு நற்பணியாற்றவும் என்னுடைய வாழ்த்துக் களைக் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பேராசிரியர் கலாநிதி. அ. சண்முகதாஸ்

யாழ் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
டிசெம்பர் - 93



முன்னாள் வடமாநிலக்

கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம்

அவர்களிடமிருந்து

வடமராட்சியில் உடுப்பிட்டி மகளிர்கல்லூரி தன் நன்முத்திரை பதித்த கல்விச்சாலையாகும். இன்று 125 ஆண்டுகள் அளப்பரிய கல்விச்சேவை செய்து எழிலுற விளங்கும் இக்கல்லூரி, மண்ணின் அறிவுச் சுரங்கம் போன்றது. தலைசிறந்த கல்விமான்களை கல்விப் புலத்திற்கு நல்கும் வடமராட்சியில் ''பெண்ணின் பெருந்தக்க யாவுள'' எனப் பெண் குழந்தைகளை வளப்படுத்தி ஒழுக்க நலனோடு கூடிய உயரிய கல்விச்செல்வத்தை நல்கி நிற்கும் கல்லூரியின் நிறைவைப் பாராட்டாமல் இருக்க முடியாது. வடமாநிலத்தின் பெரும் பகுதிகள் கல்விப் பணிப்பாளனாக நிறைவான சேவை செய்த எனக்கு நல்ல தொரு எச்சமாக விளங்கும் இக்கல்லூரியை வாழ்த்தி அமைகிறேன் எங்கள் தாளாண்மைக்கு உந்துசக்தியாக உயர்ந்து நிமிர்ந்து நின்றும் சேவையின் கிகரமாய் திகழும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி யாழ் மண்ணின் பண்பாட்டுச் சின்னமெனலாம். இங்கு கற்றுத்தேறி வெளியேறிய பல்லாயிரம் தாய்மையுள்ளம் மிக்க தாளாண்மைச் சேய்களைக் கண்டு மகிழாமல் இருக்க முடியாது. இவர்கள் போல் எதிர் வரும் காலங்களிலும் ஊருணி நீராய் உயர்நிலை மாணவச் செல்வங்களை இந்த மண்ணுக்கு செம்மை செய்து தரவேண்டுமென அவாவுகின்றேன்.

''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
தருமமே கட்டளைக் கல்''

இரா. சுந்தரலிங்கம்
கல்விப் பணிப்பாளர்,
வடமாநிலம்.



யாழ்ப்பாணம் (வலயம் I) கல்விப்பணிப்பாளர்,

செல்வி. தி. பெரியதம்பி அவர்களிடமிருந்து

உடுப்பிட்டி மகளிர்கல்லூரி அதன் 125ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வெளியிடும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அமெரிக்க மிஷனரியாரால் 1868-ம் ஆண்டில் நிறுவப்பட்ட இக் கல்லூரி நிறுவியவர்களின் விருப்பப் பிரகாரம் கடந்த 125 ஆண்டுகளாக அறிவு ஒளி வீசிவருகிறது.

செல்வத்துட் செல்வம் - அழியாச்செல்வம் கல்விச் செல்வம் என்பர். இக் கல்விச் செல்வத்தை வாரி வழங்கிய இக் கல்லூரியின் வாழ்வில் 1987 ஆம் ஆண்டு ஓர்இருண்ட காலமாகும். அவ்வாண்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் இக்கல்லூரி பேரழிவைச் சந்தித்தது. கல்லூரிக் கட்டடங்கள் தரைமட்டமாயின. கல்லூரியின் வரலாற்றையும் புகழையும் கூறும் ஆவணங்கள் யாவும் முற்றாக அழிந்தன. நான் வடமராட்சிக் கோட்டக்கல்வி அதிகாரியாகச் சேவையாற்றிய காலத்திலேற்பட்ட இப்பேரழிவு எனக்கு மிகவேதனையளித்தது.

கல்விப் பணிக்கு தம்மையர்ப்பணித்த அதிபர் திருமதி பா. இராசேந்திரசிங்கமும் அவரது ஆசிரியர் குழாத்தினரும், பழைய மாணவிகள், பெற்றோர், நலன்விரும்பிகள் ஆகியோரின் உதவியுடன் தற்காலிக வகுப்பறைகள் அமைத்துக் கல்லூரியை இயங்கச் செய்தனர். 1989 ம் ஆண்டளவில் புதியகட்டடங்கள் அமைக்கும் பணி ஆரம்பித்து நடைபெற்றுக்கொண்டிருக்கையில் 1990 ம் ஆண்டில் மீண்டும் போர் மூண்டமையினால் கட்டடப்பணி இடைநிறுத்தப் பட்டது. நாட்டில் அமைதிச் சூழல ஏற்பட்டு கல்லூரியின கட்டடப்பணி நிறைவெய்தி, கல்லூரி அதன் முன்னைய நிலைக்கு மீண்டு புகழ்பரப்ப அருளுமாறு இறைவனை இறைஞ்சுகின்றேன்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதன் 125 ஆண்டு வாழ்வில் பல கல்விமான்களையும், நற்பிரசைகளையும் நாட்டிற்கு வழங்கி பெருமை பெற்றுள்ளது. இக்கல்லூரி பல நூற்றாண்டுகள் வாழ்ந்தோங்கி அச்சீரிய பணியைத் தொடரவேண்டுமென ஆசிக்கின்றேன்.

விழாவும் விழாமலரும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

செல்வி. தி. பெரியதம்பி,
கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

டிசெம்பர் '93



யாழ்ப்பாணம் (வலயம் 2) கல்விப்பணிப்பாளர்,

திரு. க. கந்தசாமி அவர்களிடமிருந்து

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி தனது 125-ம் ஆண்டு நிறைவு விழாவினையொட்டி மலர் ஒன்றை வெளியிடுவது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. யாழ்ப்பாணக் குடா நாட்டின் கல்வி வளர்ச்சியில் உடுப்பிட்டிக் கிராமத்துக்கும், இம் மகளிர் கல்லூரிக்கும் அரிய பெரிய பங்குண்டு. குறிப்பாக இவ்வூரில் பிறந்த புலவர்கள் பண்டிதர்கள், முதலியார்கள் நன்கு தமிழ் செய்து நமது மொழியையும் பண்பையும் கட்டி வளர்த்தார்கள். நம் முன்னோர் அளித்த அழியாச் செல்வம் இதுவே

1860 களில் தமிழ்க் கல்வி, புலமை, பாண்டித்தியம் ஆகியவை ஒரு சில வித்துவான்களிடையே முடங்கிக்கிடந்தன. தமிழ்ப் புலமை வறுமையுடன் சேர்ந்து சோர்ந்து இருந்தது. இது காலம் சென்ற பேராசிரியர் சு. வித்தியானந்தனின் குறிப்பாகும். மேலும் இக் கால கட்டத்தில் வாழ்ந்த சிலர் தமதறிவை மற்றவர்களுக்கும் வழங்க விருப்பமில்லாது இருந்தார்கள். இது கலாநிதி எஸ் ஜெயநேசன் கருத்தாகும். இந்நிலையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப் பட்டது நம்மவருக்கு ஒரு வரப்பிரசாதமாகும்

ஒரு சில திண்ணைகளில் ஒடுங்கி இருந்த கல்வியைப் பலரும் பெற வழி வகுத்த பெருமை இக் கல்லூரிக்குரியது. அமெரிக்க மிஷனரியினர் தமிழ்க் கல்வித் துறைக்கு குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஆற்றிய சேவைகள் இன்று அனைத்துலகத்திலும் எம் மவரின் கல்விநிலை கணிப்புடன் திகழ்வதற்கு காரணமாயின என்பது வரலாறு காட்டும் உண்மை. இப் பணியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் ஒரு பங்கு வகித்துள்ளது. சமூகத்தளைகளை உடைத்து பலரும் கற்க வழிவகுத்தது. பெண்களை வீட்டிலே பூட்டி வைத்த காலத்தில் பெண்களுக்கும் கல்வி அளிக்க முன்னோடியாக இக் கல்லூரியின் வீரம் இதன் சிறப்பான பண்பு.

கடந்த 125 ஆண்டுகளில் இக் கல்லூரி வளர்ந்து நம் சமூகத் திற்கு வழங்கும் கல்விச் செல்வம் எச் செல்வத்திற்கும் மேலாகவே உள்ளது. இதன் வளர்ச்சிக்கு வழிவகுத்த அமெரிக்க மிஷனரியினர் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் நன்றி உணர்வுடன் நினைத்துக் கொள்வோம்

அண்மைக் காலத்தில் பல கஷ்டங்கள் இக் கல்லூரிக்கு ஏற் பட்டுள்ளன கட்டிடங்கள் உடைபட்டுவிட்டன. கட்டிடம் போனாலும் கல்வி போகாது. இது உண்மை என்பது ஔவையார் தொட்டுப் பல ஞானிகள் சொன்ன விடயம் இதில் நம்பிக்கை கொண்டு அய ராது சோராது பலர் உழைக்கிறார்கள். அவ் வரிசையில் திருமதி, பாக்கியலக்ஷ்மி இராஜேந்திரசிங்கம் (இளைப்பாறிய அதிபர்), திருமதி. இ. குட்டித்தம்பி (அதிபர்), திரு. எஸ். சண்முகம் (பாட சாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர்) முதலியோர் சேவை பெரிதே

மீண்டும் இக் கல்லூரி வளம் மிக்க அறிவாலயமாக மிளிர வாழ்த்தி அமைகிறேன்

டிசெம்பர் '93

க. கந்தசாமி
கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்

பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்தின்
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
திரு. ச. செல்லத்துரை அவர்களிடமிருந்து

நூற்றிருபத்தைந்து வருடங்களை நிறைவுசெய்து பெருவிழாக் காணும் யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி சமுக சாதனைக்குரியது

உடுப்பிட்டி, ஈழத்துப் பல்துறை வரலாற்றில் தவிர்க்கப்பட முடியாத இடத்தினைப் பெற்றுக்கொள்ள, இக்கல்லூரியும் காரணமாகும். அங்கு கற்றோர் நிறைந்தனர்.

இக்கல்லூரி கல்வியில் பெண்ணினத்தை ஆண்மைக்குச் சமமாக முன்னிறுத்தியது வடக்கின் கல்விநிறுவனங்களில் ஆங்கிலக் கல்வியின் ஒரு மையமாக விளங்கியது.

கடந்த தசாப்தம் முழுவதும், பல அனர்த்தங்களால் பாடசாலைகள் பாதிக்கப்பட்டன. அழிபாடுகள் ஏற்பட்டன. இடிபோன்ற ஓசையின் போது வகுப்புக்கள் குழம்பின. இழப்புக்களும் அழிவுகளும் ஏற்பட்டன. இவற்றால் அதிகமாக பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் இதுவும் ஒன்று இருப்பினும் இது தனது கல்விப் பாரம்பரியத்தைப் பேணிநின்றது. மாணவாகள் தொடர்ந்தும் வியப்புறும் விதத்தில் குறிப்பிடத்தக்க பெறுபேற்றினைப் பெற்று வந்துள்ளனர்.

இக் கல்லூரி தன் மக்களின் பராம்பரிய கல்விப் பண்பாட்டை உறுதியாகப் பற்றி நிற்கின்றது. மேலைத்தேய அறிவியலையும், ஒழுக்க கட்டுப்பாட்டையும் புகட்டி ''உண்மையொளி'' ஏற்றிவரும் உயர் பாடசாலையாக விளங்குகின்றது.

எதிர்காலத்தில் எல்லாவிதத்திலும் நிறைவான ஒரு அறிவியற் கலைக் கல்லூரியாகத் திகழும் பிண்ணணியும் இதற்கு உண்டு.

பாரதி சொல்லும்,

''சித்தினியல் காட்டி மனத்தெளிவு தந்து
வானகத்தை யிவ்வுலகிலிருந்து தீண்டும்
வகையுணர்த்திக் காக்கும்''

ஒன்றாக இதுமிளிர வேண்டும் நூற்றிருபத்தைந்து ஆண்டு நிறைவு விழாக் காணும் வேளை, வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமைப்படுகின்றேன்.

ச செல்லத்துரை
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
பருத்தித்துறை.

டிசெம்பர், 3 1993

கரவெட்டிக் கல்விக் கோட்டத்தின்
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
திரு சி. சிவராஜா அவர்களிடமிருந்து

1868-ம் ஆண்டு கனம் ஜெ. கி. சிமித் ஐயா அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி காலவோட்டத்தில் நிழல் தரு விருட்சங்களுடன் கூடிய கவினுறு கட்டிடங்களில் கல்விச் சிறப்பும், ஒடுஇணையற்ற இணைப் பாட விதானச் செயற்பாடுகளும் பெற்று மிளிர்ந்தது. கண்ணூறு பட்டாற் போல் போர்க்காலச் சூழலில் பொலிவுறு கட்டிடங்களை இழந்தது. இருந்தபோதும் இக்கல்லூரி கல்வியிலும், கவின்கலையிலும் ஏனைய இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் வீறுநடை போட்டு நாளொரு வண்ணம் வளர்ந்து சிறப்புற்று விளங்குவதை நாம் அனைவரும் அவதானிக்க முடியும்.

கரவெட்டிக் கல்விக்கோட்டத்தில் க. பொ. த உயர்தர விஞ்ஞான, வர்த்தக கலைப்பிரிவுகளுடன் கூடிய ஒரேயொரு உயர்தர மகளிர் கல்லூரியாக விளங்கும் யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வடமராட்சியிலும், அகில இலங்கையிலும் அதீஉன்னத நிலையைத் தொடர்ந்தும் நிலைநாட்ட அயராது பாடுபட வேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்

நூற்றிருபத்தைந்தாவது ஆண்டு மலரினை வெளியிட அயராது முன்னின்று உழைத்த அதிபர், ஆசிரியர், பெற்றார், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் மனமாரப் பாராட்டுவதுடன் ஆசிச்செப்தி வழங்க எனக்கு சந்தர்ப்பம் அளித்த விழாக் குழுவினருக்கும் நன்றி கூறுகின்றேன்.

சி. சிவராசா
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

கோட்டக் கல்வி அலுவலகம்,
கரவெட்டி,
23 - 12 - 1993

பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளரும்,
பாடசாலை அபிவிருத்திச்சபை அங்கத்தவருமான,
திரு. வே. தி. செல்வரட்ணம் அவர்களிடமிருந்து

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி என்னும் விருட்சம் உடுப்பிட்டி என்னும் கிராமத்தைச் சூழவுள்ள கிராமங்களில் வாழும் பெண்பிள்ளைகளுக்கு அறிவு என்னும் நிழலைக் கொடுத்து மேம்படுத்தியது வெளிப்படை. இத்தொண்டினைத் தொடர்ச்சியாக வழங்கிப் பேணிய பெருமை இக்கலைக் கோயிலிற் தொண்டாற்றிய ஆசிரியர்களையும் அதன் முகாமையாளர்களாகத் திகழ்ந்த அதிபர்களையுமே சாரும்

எல்லாவற்றிலும் மேலாக "ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்னும் பாரதியின் இதயநாதத்தை, இச்சூழலில் வாழும் அனாதைப் பிள்ளைகளைத் தனது இதயமான பாடசாலை விடுதியில் வைத்து உணவு, உடை, கல்வி என்னும் மூன்றையும் வழங்கி அனாதை என்னும் உணர்வை இல்லாமற் செய்தவள் இக்கல்லூரித் தாயாவாள்.

இவ்வழகிய கலைக்கோயில் கிடைக்கப்பட்டாலும், சாம்பல் மேட்டிலாவது கல்வியை ஊட்டுவோம் எனத்திடசங்கற்பம் பூண்டிருக்கும் ஆசிரியப் பெருந்தகைகளின் சேவை என்றும் பாராட்டுதற்குரியது

இப்பாடசாலையை முன்னைய பொலிவுடன் மிளிர வைப்பதற்குப் பழைய மாணவர்கள் ஆற்றும் தொண்டு அளப்பரியது தம்மை உன்னத நிலைக்கு உயர்த்திய இக்கல்லூரியின் 125 வது ஆண்டு விழாவையும் மலரையும் பல இடர்களையும் வென்றெடுத்து வெளியிடும் பழைய மாணவர்களின் நன்றி போற்றுதற்குரியது. ஒளிர்வதற்காக ஒளியேற்றுவோம் என்னும் இக்கல்லூரி தாயின் வேள்வியில் தம்மை அர்ப்பணித்துத் தொண்டாற்றும் அதிபர் முகாமைத்துவக் குழு, ஆசிரியர்கள், பழையமாணவிகள் பாடசாலை அபிவிருத்தி சபையினர் யாவருக்கும் கல்வியுலகம் என்றும் நன்றியுடையதாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பல்லாண்டு பல்லாண்டு காலம் இக்கல்லூரி விருட்சம் வளர வேண்டுமென வாழ்த்துத்தெரிவிப்பதிற் பெருமகிழ்ச்சியடகின்றேன்.

வே. தி. செல்வரட்ணம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

கோட்டக்கல்வி அலுவலகம்,
பருத்தித்துறை

எமது பாடசாலை அபிவிருத்திச்சபைச் செயலாளர்,
(கணக்காய்வாளர், யாழ். செயலக கணக்காய்வு உப அலுவலகம்)
திரு. சி. சண்முகம் அவர்களிடமிருந்து

எமது பாடசாலை 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். ஆலயத்தைக் காட்டிலும் வித்தியாலயமே சிறந்தது. அன்று அமெரிக்க மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பலமாற்றங்கங்களைக் கண்டு மதவேறுபாடுகளை மறந்து வளர்ந்துகொண்டே வருகிறது. எத்தனையோ டாக்டர்கள், பொறியியலாளர்களை, ஆசிரியர்களை உருவாக்கியதென்றால் இதன்வளர்ச்சிப் பாதையை எவ்வாறு இயம்புவது. இன்றைய கால கட்டத்தில் எத்தனையோ புத்திஜீவிகளை ஆக்கித்தந்த, தருகின்ற, தரும் கல்வி அன்னையை வாழ்த்தாது இருக்கமுடியாது. விழா எடுப்பதும் சாலப்பொருத்தமானதே.

எழுமையும் தொடர்வது கல்வி; மயக்கம் அறுப்பது கல்வி தொட்டனைத்தூறும் மணற்கேணியைக் கற்றலுக்கு ஒப்பாக்கினார் வள்ளுவர். கல் என்பதிலிருந்து தோன்றியது கல்வி. கற்றல் கருவிலேயே நடைபெறுகின்றது. என்றாலும் கற்றல், கற்பித்தல் திறம்பட முழுமை பெறுவதற்கு மாணவர், ஆசிரியர், பெற்றோர் மூவரும் இணைய வேண்டும். இதனை இணைக்கும் மகத்தான பொறுப்பு அதிபரைச் சார்ந்தது காலவெள்ளத்தில் பல அதிபர்களைக் கண்டது நமது கல்லூரி. ஓய்வு பெறும்வேளையிலும் கல்வி அன்னையின் நன்றியை மறக்க முடியாத இளைப்பாறிய திருமதி பாக்கியம். இராஜேந்திரசிங்கம் அவர்கள் 125 ஆவது ஆண்டு ஆரம்ப விழாவைத் தொடக்கிவைத்து இளமையும், உற்சாகமும், நிறைகல்வியும் உடைய அதிபர் திருமதி. இரஞ்சிதம். குட்டித்தம்பி அவர்களிடம் கையடை செய்துள்ளார்கள். இன்று 125 ஆவது ஆண்டு நிறைவு விழா நிறைவேற உறுதுணையாய் உழைத்த அத்தனைபேரும் பாக்கியசாலிகள். சீரிளமை குன்றாத நம் கல்வி அன்னை கன்னியாய் என்றும் வாழி, வாழி என வாயார வாழ்த்தி மனமாரத் துதிக்கின்றேன்.

சி. சண்முகம்
செயலாளர்:
பாடசாலை அபிவிருத்திச் சபை

உடுப்பிட்டி,
நவம்பர் '93.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் சங்க
கனடாக் கிளைச் சங்கப் போஷகர்
கலாநிதி த. வசந்தகுமார் அவர்களிடமிருந்து

உடுப்பிட்டிப் பெண்கள் உயர்தரப் பாடசாலையினரால், 125 வது ஆண்டு விழாவையொட்டி வெளியிடப் படவிருக்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துசெய்தி வழங்குவதில் உண்மையிலேயே பெருமைப் படுகின்றேன்.

பெண்கள் பாடசாலையானது கல்வியில்மட்டுமல்ல, பேச்சுப் போட்டிகளிலும், விஞ்ஞானப் பொருட்காட்சிகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும், உடற்கல்வி போட்டிகளிலும், மாவட்டரீதியிலும், அகில இலங்கைரீதியிலும் பலபரிசுகளைப் பெற்ற நாட்களை நான் மறக்கமுடியாது. அதே பாடசாலையை நான்கடந்த முறை சென்ற சமயம் பார்த்தபொழுது, தரைமட்டமாக்கப்பட்டும், தளபாடங்கள் சேதமாக்கப்பட்டும், மரநிழலிலே, தரையிலே மாணவிகள் கல்வி பயின்ற காட்சியை நான் மறக்க முடியாது.

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் நீங்கள் அங்கிருந்து கொண்டு, உயிரையும் கையில் பிடிக்துக்கொண்டு, அதேசமயத்தில் பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆற்றும்பணிக்கு ஈடானபணி எதுவு மில்லை அப்படிப்பட்ட அளப்பரிய பணி ஆற்றிவரும் உங்கள் சங்கத் திற்கு வாழத்துச்செய்தி வழங்கும் அருகதையும் எனக்கு இல்லை என் பதே எனதுள்ளத்திலிருந்து வெளிப்படும் உண்மையான கருத்து!

கனடாக் கிளையினராகிய நாம், எம்மால் செய்யக்கூடியதாகிய ஒரு அற்ப உதவியாகிய நிதியுதவியை எங்களால் இயன்றளவு தொடர்ந்தும் செய்துவர, ஊக்கமும், சந்தர்ப்பமும் அளித்துவருவதற்கு கனடாக் கிளையின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த 125 வது ஆண்டு விழாவிலே எமது கல்லூரியைத் தரும்பவும் கட்டியெழுப்பி, கலைகளில் மீண்டும் வளம்பெற திடங் கற்பம் கொள்வோமாக.

த. வசந்தகுமார்

அரசமொழித் திணைக்கள உதவி ஆணையாளர்
பிள்ளைக்கவி வ. சிவராஜசிங்கம் அவர்களிடமிருந்து.

சுழமணித் திருநாட்டில் வடமராட்சி
எழிற்பகுதி மருவுமுடுப் பிட்டிதன்னில்
மாழையுண்கண் மகளிர்கல்வி நலமேலோங்க
வண்மையுள செம்மனத்தார உயர்ந்தவர்க்குக்
கோளுடனே நூற்றிருபத்தைந் தாண்டின் முன்
குறித்தமைத்த கலாசாலை வனப்பினோடு
நாளொருவண்ணம் வளர்ந்து கல்வி கேள்வி
ஞானமுதம் சுரக்கின்ற தேனுவாகிச்
சூழல் தொறும் அறிவொளிப் பொற்கிரணம் வீசித்
துலங்குதல் நம் சமூகத்தின் தவப்பேறாமே

அறிவியலும் மொழித்திறமும் கலைப்பரப்பும்
அழகியலும் சீரிய வாழ்வுக்காதார
நெறிவழங்கு பண்பாடும் தமிழர் சால்பும்
நிலைபெயரா வகைதழைத்துக் கிளைத்து மல்தும்
முறைதனிலே கல்விவளம் ஓபருக்கிமேவும்
முதறிவுக் களஞ்சிய வாசிரியர் தங்கள்
குறைவுபடாப் பணியாற் கல்லூரி நாமம்
குன்றிலிட்ட தீபமெனக் குலவிவாழி

எட்டுணையும் சுயநல நோக்கின்றிக் கல்வி
இயற்பணியும் கல்லூரி யுயர்வுமே தன்
பொற்புடை நோக்காச் சேவை புரிந்த முன்னாள்
புகழதிபர் பாக்கியம்ரா ஜேந்திர சிங்கம்
அட்டதிக்கும் இசைமருவும் குட்டித்தம்பி
அதிபர் கல்விச் சாலைய பிவிருத்திச் சங்க
மட்டில்புகழ் செயலாளர் சண்முகப் பேர்
மகிபனென்போர் புரிசேவை மறக்கொணாதால்.

இன்னபெருஞ் சான்றோர் நற்பணியாற் கல்வி
ஏற்றத்தில் நாட்டமுள பரோபகார
நன்மனத்தார் தாராண்மை நலத்தால் பெற்றோர்
நயமுறுதா ளாண்மையினால் ஞானதானம்
கன்னியர்க்கு வழங்கு பெரும்பணி விண்ணோங்கு
கதிரவனின் ஒளிக்கிரணம் போலெப்பாகம்
தன்னிலுமெய் யொளியெறிப்ப மகளிர் கல்விச்
சாலை இறையருளால் மேற்தழைத்து வாழி

வ. சிவராஜசிங்கம்

பழைய மாணவர் சங்கச் செயலாளரின் அறிக்கை

கல்லூரி வளர்ச்சிக்குத் தன்னாலான பங்களிப்பை வழங்கிவரும் எமது பழைய மாணவர் சங்கத்தின் அறிக்கையை மகிழ்வுடன் சமர்ப்பிக்கின்றேன்.

இத்தருணத்தில் எமது சங்கத்தின் கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கின்றோம். பல கால இடை வெளியின்பின் 1980 ஆளவில் புனரமைக்கப்பட்ட எமது சங்கத்தின் போஷகராக முன்னாள் அதிபர் செல்வி. R. J. மான் அவர்களும், தலைவியாக முன்னாள் அதிபர் திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் அவர்களும் விளங் கினார்கள். கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அன்றைய உப அதிபரான திருமதி. பா. செல்லத்துரை அவர் கள் செயலாளராகவும், எமது கல்லூரியின் பகுதித் தலைவராகக் கடமையாற்றிய திருமதி. மகேஸ்வரன் பொருளாளராகவும் அங்கம் வகித்தனர். அவர்கள் காலத்தில் எமது சங்கம் கல்லூரியின் வளர்ச்சிக்கு இயன்ற ஒத்துழைப்பு வழங்கியது.

கால ஓட்டத்தில் பல்வேறு தடங்கல்களுக்கு மத்தியில் எமது சங்கத்தின் செயற்பாடுகளில் சற்றுத் தேக்க நிலை காணப்பட்டது. இந்நிலையில் எமது சங்கம் 1992 – 10 – 18 இல் மீண்டும் புனரமைக்கப்பட்டது. திருமதி. பா இராஜேந்திரசிங்கம் தலைமைப் பொறுப்பை ஏற்றார். போஷகராக பேராசிரியர் அ. துரை ராஜா அவர்கள் கிடைக்கப் பெற்றமை நாம் செய்த பாக்கியமாகும். இவர்களினது வழிகாட்டலினாலும் ஆலோசனைகளினாலும் எமது சங்கம் பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட்டு புதுப்பொலிவுடன் திகழ்கின்றது.

எம் சங்கம் ரூபா 25,000 ஐ இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையில் முன்னாள் அதிபர்களான செல்வி. ஸ். வன்னியசிங்கம், செல்வி. E. K. மதியாபரணம் ஆகியோரின் ஞாபகார்த்த நிதியாக வைப்பில் இட்டுள்ளது. ரூபா 16,000 ஐ தேசிய சேமிப்பு வங்கியில் பருத்தித்துறைக் கிளையில் முன்னாள் அதிபர் செல்வி. R. J. மான் அவர்களின் ஞாபகார்த்த நிதியாக வைப்பில் இட்டுள்ளது. வட்டிப் பணம் மாணவர் களுக்குச் சிறப்புப் பரிசில்கள் வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுமெனவும் சங்கம் தீர்மானித்தது. கல்லூரியின் 125 ஆவது ஆண்டு ஆரம்ப விழாவையும் எம் சங்கம் பொறுப்பேற்று நடாத்தியது குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் சகல வரலாற்றுக் குறிப்புகளும் அழிந்தொழிந்துவிட்ட இந்தக் காலகட்டத்தில் எதிர்காலச் சந்ததியினருக்குக் கல்லூரியின் வரலாற்றை எடுத்தியம்பும் ஆவணமாக விளங்குவதற்கு 125 ஆவது ஆண்டு மலரொன்றை வெளியிடுவது அவசியம் எனப் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களால் சுட்டிக்காட்டப்பட் டது எனவே இம்மலரை வெளியிடும் பாரிய பொறுப்பையும் நாம் ஏற்றோம்.

பாடசாலை நூல் நிலையத்தை விஸ்தரித்தல், க, பொ. த. உயர்தர வகுப்புக்களின் கல்வித் தரத்தை உயர்த்தல், க. பொ. த. உயர்தர வகுப்புக்களில் ஆசிரிய பற்றாக்குறை ஏற்படுமிடத்து ஆசிரியர்களை நிய மித்தல், பாடசாலை விட்டு வெளியேறும் மாணவிகளுக்கான தொழில்சார் முயற்சிகள் என்பனவும் எம் சங் கத்தின் செயற்திட்டங்களாகும். அதற்கமைய நூலகர் ஒருவரை நியமித்ததோடு, அவ்வுயர் வகுப்புக்களுக் கான நூல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், Mini Lab ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உயர்தர வகுப்பில் கலைப்பிரிவுப் பாடங்களைக் கற்பிக்கப் பட்டதாரி ஆசிரியர் ஒருவரையும் நியமித்துள்ளோம். இவ்வாசிரியர்க்கும், நூலகர்க்கும் மாதாந்த சகாய நிதியாக மொத்தமாக ரூபா 1500 செலுத்தி வருகின்றோம்.

முன்னாள் அதிபர் திருமதி பா. இராஜேந்திரசிங்கம் அவர்களது பிரியாவிடை வைபவத்தை 28-02-1993 அன்று எம் கல்லூரியில் கொண்டாடினோம். வைபவத்திற்குப் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் தலைமை தாங்கினார். அவர் தம் துணைவியார் இராஜேஸ்வரி துரைராஜா அவர்கள் அதிபரைப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

பாடசாலையின் அடிப்படை வசதிகளைப் பேணுவதற்காக இணற்றிற்கு வலையடித்தல், மலசலகூட நீர் கொள்கலன்கள் கொள்வனவு, மாணவருக்கான பத்திரிகைத் தாங்கி (Paper reading stand) என்பவற்றைச் செய்து கொடுத்துள்ளோம்.

எம் கல்லூரியைத் தாங்கி நிற்கும் விழுதுகளான ஆசிரியப் பெருந்தகைகளை கௌரவிக்குமுகமாக 1992 - 10 - 06 இல் நடைபெற்ற ஆசிரியர் தினவிழாவில் கலந்து கொண்டோம்.

கடல்கடந்து வாழும் வேளையிலும் தம் கல்லூரிகளின் நலனுக்காகத் தம் நேரத்தை அர்ப்பணித்து நிதி திரட்டி அனுப்பும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் உறுப்பினர்களும், அவர்களுக்கு உதவியாக இருக்கும் எம் கல்லூரியின் பழைய மாணவிகளும் என்றென்றும் எம் நன்றிக்குரியவர்கள் ஆவர். எம் கல்லூரியின் வளர்ச்சிக்கு அவர்கள் மேன்மேலும் உதவுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு

தற்போதுள்ள பொருளாதாரச் சூழல் காரணமாக எமது கல்லூரியில் சற்றுத் தேக்கநிலை காணப்படுகின்றது. இதனைச் சீர்செய்வதற்கு எமது சங்கம் தன் சக்திக்குட்பட்ட சகல நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு உழைக்கின்றது. கல்லூரியின் முன்னேற்றமே எமது சங்கத்தின் தாரக மந்திரம் இதனை மையமாகக் கொண்டதாகவே எமது செயற்பாடுகள் யாவும் அமைந்திருக்கும்

அகவிருள் நீக்கி அறிவொளி ஏற்றி அரும்பணியாற்றும் கலைக்கோவிலான எமது கல்லூரி மேன்மேலும் வளர்ந்தோங்க ஆண்டவர் ஆசி பொழிவாராக.

திருமதி. சமலவதனா தேவராஜா,
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

பிற்குறிப்பு :- மேற்படி அறிக்கையை நான் வரைந்த பிற்பாடு எமது சங்கத்தைப் பொறுத்த வரையில் சில முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. எமது சங்கத்தின் தலைவியாயிருந்து சங்கப் பணிகளை முன்னெடுத்து எம்மை வழி நடத்திய திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள் சிகிச்சைக்காக மார்ச் '94 இல் கொழும்பு சென்றார், அவர் விட்டுச்சென்ற இடத்தை நிரப்பி சங்கத்தின் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கக்கூடிய தகைமையும், திறமையும் உடையவர் திருமதி. ச. குமார சுப்பிரமணியம் அவர்களே என்று எமது நிர்வாகசபை ஏகமனதாய் முடிவு செய்தது. நிர்வாகசபை அவரை அணுகியபோது பெருமனத்துடன் சம்மதித்தார். கல்லூரியின் இந்த இக்கட்டான சூழ்நிலையில் தலைவர் பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டமை போற்றுதற்குரியது.

மார்ச் மாத இறுதியில் கொழும்பு சென்ற எமது காப்பாளர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் சிறுதுயில் ஓய்வின் பின் சுக நலத்துடன் திரும்பி வருவாரென நாம் எண்ணியிருந்த வேளை அன்னார் மறைந்த செய்தி தாங்கொண்ணாத பேரிடியாக எம்மைத் தாக்கியது. அவருடைய ஆளுமையையும், ஆற்றலையும் ஒரு தூணாகக் கொண்டு சார்ந்திருந்த எமது நிர்வாகசபைக்கு அவரிழப்பு ஏற்கமுடியாத, நம்பமுடியாத, பொறுக்க முடியாத பேரிழப்பாகும்.

இப் பிரிவுகளினால் மனம் நொந்திருக்கும் வேளையில் கல்லூரியின் உயர்தர விஞ்ஞான வகுப்புகளின் இயல்பான இயக்கத்திற்கு ஊறு நேருமோ என்ற அச்சத்தையும் நாம் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இன்றுள்ளமை வேதனைக்குரியதே. எனினும் நிர்வாகக்குழு க. பொ. த. (உ. த.) விஞ்ஞான வகுப்புகளின் சீரான இயக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் வேண்டியதான தன்னாலியன்ற சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. இக் கல்லூரியின் வளர்ச்சியே எங்கள் சங்கத்தின் உறுதியான இலட்சியம் என்பதை மனப்பூர்வமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.



O. G. A. செயற்குழு




மலர்க்குழு



அதிபர், ஆசிரியர், ஊழியர்







அன்னையின்

வாழ்வும் வரலாறும்

எமது கல்லூரிச் சின்னம்

- ஒரு நோக்கு -

திருமதி. புனிதவதி, சண்முகலிங்கம்
B. A., Dip – in – Ed,
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை.

இது எங்கள் கல்லூரிச் சின்னமாகும். இது பல தத்துவங்களை எடுத்தியம்புகிறது. இச் சின்னத்தில் காணப்படும் குத்துவிளக்கு, அகல் விளக்குகள், தென்னை, பனை, நட்சத்திரம் என்பன தத்துவார்த்தங்களின் வெளிப்பாடுகள் - குறியீடுகள் எனலாம் கல்லூரிச் சின்னத்தின் கீழ்ப்பகுதியில் 'ஒளிர்வதற்காய் ஒளியேற்றுவோம்' என்னும் மகுட வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது இவ்விலட்சியமே எம் கல்லூரியின் உயிர் மூச்சாகும்.

அறிவை ஒளி, சுடர், விளக்கு என விதந்துரைக்கும் மரபு, பல நாடுகளிலும் பண்டு தொட்டே காணப்படுகின்றது. கல்வியறிவை வழங்கும் ஆசிரியர்கள் 'ஞான விளக்குகள்', எனக் கல்வியியலாளரால் அழைக்கப்படுகின்றனர். அறிவு மயமான இறைவனை ஜோதியாகப் பல மதங்களும் காணுகின்றன. அறிவு அணையாத விளக்கு; மாந்தர்க்கு அழகூட்டும் அணிகலன். 'கல்வியழகே அழகு' என்கிறது நாலடி நானூறு. ''அகிலத்தின் அணையாத விளக்காகிய அறிவுச்சுடரே மக்களுக்கு உண்மையான அணிகலன்.'' என்ற சோக்கிரடீசின் கூற்றும் ஈண்டு நினைவுகூரற்பாலது.

அறிவு கல்வியால், கேள்வியால், அனுபவத்தாற் பெறப்படும் பாடசாலையில் மாணவர்கள் இம்மூன்று வழிகளாலும் அறிவைப் பெறுகின்றனர். அறிவொளி அஞ்ஞான இருளை அகற்றுகின்றது; மனிதனுள் புதைந்திருக்கும் பூரணத்துவத்தை உய்த்துணர வழிகாட்டுகின்றது. மனிதன் தான் பெறும் அறிவினூடாகத் தானும் பயன்பெற்று தான் சார்ந்துள்ள சூழலையும் ஒளிபெறச் செய்யலாம்; செய்ய வேண்டும். இதுவே அறிவின் பண்பும் பயனுமாகும்

இத்தகைய தத்துவங்களின் வெளிப்பாடாகவே கரங்களில் ஏந்திய குத்துவிளக்கும், இரு பக்கங்களிலும் கடர்விடும் அகல் விளக்குகளும் அமைந்துள்ளன. பாடசாலை வழங்கும் அறிவின் குறியீடாகக் குத்து விளக்கும், அவ்வறிவினால் ஒளி பெற்றுப் பிரகாசிக்கும் மாணவ மணிகளாக அகல் விளக்குகளும் அமைந்துள்ளன

எமது கல்லூரிச் சின்னத்தின் இடதுபக்க மேற்பகுதியில் தென்னையும், வலதுபக்க மேற்பகுதியில் பனையும் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்விரு மரங்களும் தமிழரின் வாழ்வுடனும், வளத்துடனும், கலாச்சாரத்துடனும் நெருங்கிய தொடர்புடையவை. தென்னை தமிழ் மக்களின் வாழ்வில் நிகழும் சகல கொண்டாட்டங்களுடனும் இணைந்தது பூரண கும்பம், இளநீர், தோரணம் என்பன இடம்பெறாத கொண்டாட்டங்களே இல்லையெனலாம். தமிழரின் சமையலில் தேங்காய் இடம்பெறாத நாளே இல்லை.

பனை பூலோக கற்பக தரு. இதன் சகல பாகங்களும் பயனுடையது. நட்டாயிரம் வருடம் பட்டா யிரம் வருடம் பயன் தரத்தக்கது. பருவ காலங்களுக்கேற்ப பல்வகை உணவுப் பண்டங்களை மக்களுக்கும், கால்நடைகளுக்கும் அள்ளி வழங்கும் அமுதசுரபி. யாழ்ப்பாணத்தின் அடையாளமாகப் பனை உள்ளதெனின் மிகையன்று.

இத்தகைய சிறப்பார்ந்த மரங்களை நாம் பேண வேண்டும்; போற்ற வேண்டும் எமது பௌதிகச் சூழலின் செல்வங்களை எமது கல்லூரியின் இலச்சினையில் பொறித்ததன் மூலம் அவற்றிற்குப் பெருமை சேர்க்கிறோம். நாமும் பெருமை அடைகிறோம்.

இவ்விரு தருக்களும் சில தத்துவங்களின் எடுத்துக்காட்டாகவும் திகழ்கின்றன. நன்றியறிதலின் அடை யாளமாகத் தென்னை திகழ்கிறது; உவமிக்கப்படுகிறது. தாளுண்ட நீரை இனிய நீராக, இளநீராகத் தருகிறது.

'' நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
எண்ணு தருங்கொல் எனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால் ''

என ஔவை மூதாட்டி தென்னையின் நன்றியறியும் பண்பை வியந்து பாராட்டுகிறார். நன்றியறி வுடையோனாய் மனிதன் வாழ வேண்டுமென்பதை தென்னை சூசகமாகச் சுட்டி நிற்கின்றது

பனையின் சகல பாகங்களும் பயன் தருவதுபோல, மனிதனும் சகல வழிகளிலும் பிறர்க்குப் பய னுடையோனாய் வாழ வேண்டும். என்பும் பிறர்க்கு உரியதாகும் வண்ணம் வாழ வேண்டும்; அத்துடன் பனையின் பயன் எவ்வாறு நீடித்து நிலைத்து நிற்கிறதோ அவ்வாறே ஒருவனின் செய்கை, அவன் இறந்த பின்பும் நினைவு கூரத்தக்கதாக அமைதல் வேண்டும்

எமது கல்லூரிச் சின்னத்தின் உச்சிப் பகுதியில் நட்சத்திரம் ஒளி வீசுகிறது. நட்சத்திரம் ஒரு விடியலின் அறிகுறி. நம்பிக்கையின் எடுத்துக்காட்டு. ' விடிவெள்ளி ', ' நம்பிக்கை நட்சத்திரம் ' என்கின்ற சொற தொடர்கள் மேற்கூறிய எண்ணக் கருக்களை ஆதரிப்பனவாக, வலுவூட்டுவனவாக உள்ளன. வழிகாட்டுதலின் சின்னமாகவும் நட்சத்திரம் கொள்ளப்படுகிறது. விஞ்ஞானம் வளர்ச்சியுறாத முன்னைய சூலங்களில் நீண்ட பயணம் செல்வோரும் மாலுமிகளும் நட்சத்திர வழிகாட்டுதல் மூலமாகவே தமது பயணத்தைத் தொடர்ந் தார்கள். யேசு கிறிஸ்துநாதரின் பிறப்பை, நட்சத்திர வழிகாட்டுதல் மூலமாகவே தீர்க்கதரிசிகள் அறிந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

மானவன் கல்லூரியில் பெறும் அறிவொளிமூலம் தன் அக இருளை நீக்கி ஞான ஒளியைப் பெறலாம்; பெறவேண்டும் தான் பெறும் ஒளியின் வாயிலாகத் தான் வாழும் சூழலையும் ஒளிரச் செய்ய வேண்டும், கல்வியறிவு பெறுதலுடன் மட்டும் அமையாது நன்றியறிதலுள்ளோனாகவும், சகல வழிகளிலும் பிறருக்கு உதவுபவனாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு வாழ்பவனே மனுக்குலத்தின் வழிகாட்டியாவான்; விடி வெள்ளியாகப் பிரகாசிப்பான். இதனையே நட்சத்திர அடையாளம் குறித்து நிற்கிறது.

இத்தகைய உயர்வான இலட்சிய முத்துக்கள் பதிக்கப்பட்டதாக எமது கல்லூரிச் சின்னம் ஒளிர்கிறது.

" Though sun or moon I can't be to make the whole world bright.
I find some little cheerless spot and shine with all my might."



கல்லூரிக் கீதம்

~~இராகம் : சிந்து பைரவி~~ ~~தாளம் : ஆதி~~

பல்லவி

எங்களது கல்லூரி வாழ்க, உடுப்பிட்டிப்
பெண்களது கல்லூரி வாழ்க, வாழ்க
— எங்களது கல்லூரி வாழ்க.

சரணங்கள்

சீலம் செழிக்கும் உயர் தெய்வ சிந்தனையோடு
ஞாலம் புகழ் கற்பு நாற்குண நலங்களும்
காலம் கடந்து வளர் கலைகளும் பயிலவே
கருணையே அவதாரமாய் வந்த கடவுளே
— எங்களது கல்லூரி வாழ்க.

நல்லார் இணக்கமொடு நற்போத ஞானமும்
சொல்லிலே வாய்மையும் தூய்மை பொலி சாந்தமும்
எல்லா அறங்களிலும் எற்றமும் வளரவே
இறைவனின் திருநாமம் இதயத்தில் மிளிரவே
— எங்களது கல்லூரி வாழ்க.

ஆனந்த மயமான அன்பு நிறை சூழலில்
அகில குலசிறு மணிகள் அனைவோரும் இசைவுகொள
எளிமைபுணர் இளமை செறிகலைகள் அழகுஷிரி
ஒளியெங்கணும் காண ஒளியையே ஈகின்ற
— எங்களது கல்லூரி வாழ்க.

எமது கல்லூரிக் கீதம்

திருமதி. புனிதவதி. சண்முகலிங்கம்,
B. A., Dip - in - Ed.
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை.

கல்லூரிக் கீதங்களின் பொது நோக்கம் கல்லூரியை வாழ்த்துதலாகும். பன்மைத் தன்மை வாய்ந்த பாடசாலைச் சமுதாயத்தில் கூட்டுறவு மனப்பான்மையை உருவாக்கி, மாணவர் அனைவரையும் தம் கல்லூரி நலனில் அக்கறை கொள்ளச் செய்யும் ஆத்ம கீதமாக, பாடசாலை மீதான பற்றை ஏற்படுத்தும் பக்தி கீதமாக அது திகழ்கிறது. கல்லூரிக் கீதமானது கல்லூரியின் ஒற்றுமை, அபிவிருத்தி, புகழ் என்பவற்றை வளர்த்தெடுப்பதிலும் கணிசமான பங்களிப்புச் செய்கிறது. ஒரு கல்லூரியின் அடையாளமாகவும் இது விளங்குகிறது.

கல்லூரிக் கீதங்கள் மேற்கூறிய பொது அம்சங்களுடன் தத்தம் கல்லூரியின் பௌதிகப் பண்பாட்டுச் சூழல், வரலாற்றுப் பின்னணி, கலாச்சாரப் பின்னணி, இலட்சியங்கள் என்பவற்றிற்கேற்ப சில விசேட அம்சங்களையும் கொண்டமைந்துள்ளன. இந்த வகையில் எமது கல்லூரிக் கீதமும் பொது அம்சத்துடன் தனக்கே உரிய சில சிறப்பார்ந்த அம்சங்களையும் கொண்டுள்ளது.

'' எங்களது கல்லூரி வாழ்க '' என வாழ்த்துதலுடன் தொடங்கும் எமது கல்லூரிக் கீதம் கல்லூரி மாதாவை இறைவனாகப் போற்றுகிறது. '' கருணையே அவதாரமாக வந்த கடவுளே '' என்ற வரி இதனைப் புலப்படுத்துகிறது. கல்லூரி மீதான பற்று, அபிமானத்தை வெளிப்படுத்துவதாக இவ்வரி உள்ளது.

இறை வழிபாட்டுடன் எக்காரியத்தையும் தொடங்குதல் தமிழர் மரபாகும். இவ்விதம் செய்வதால் எடுத்த காரியம் யாவும் சித்திக்கும் என்பது நம்பிக்கையாகும். எமது கல்லூரிக் கீதத்திலுள்ள " சீலம் செழிக்கும் உயர் தெய்வ சிந்தனையோடு '', '' இறைவனின் திருநாமம் இதயத்தில் மிளிரவே '' என்ற வரிகள் இறை நம்பிக்கையுடன் இணைந்ததாக எமது கல்லூரிச் செயற்பாடுகள் உள்ளன என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

மனிதன் மனிதனாக வாழவேண்டின் கல்வி அறிவுடன் நல்லொழுக்கம், நற்சிந்தனை என்பன எல்லாம் அமைதல் வேண்டும். எமது கல்லூரி, பெண்கள் கல்லூரியாதலால் பெண்களுக்குரிய ஒழுக்கங்கள் பற்றி எமது கீதம் சிறப்பித்துக் கூறுகிறது. பெண்ணிற்கு அணிகலனாக அமைவது கற்பொழுக்கம்.

'' பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மை உண்டாகப் பெறின். ''

என்கிறான் வள்ளுவன். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் நாற்படையாக அமைத்து பெண்ணைப் பாதுகாப்பன, இத்தகைய கருத்துக்களை முதன்மைப் படுத்துவதாக '' ஞாலம் புகழ் கற்பு நாற்குண நலன்களும் ..... '' என்ற வரி அமைந்துள்ளது.

கல்வி குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கு மட்டும் உரிமையாகாது, எல்லோருக்கும் உரிமையாதல் வேண்டும், எல்லோரும் சந்தோஷமாக, சமரசமாக வாழவேண்டும். இத்தகைய பரந்த மனப்பாங்கை '' ஆனந்த மயமான அன்பு நிறை சூழலில், அகில குல சிறுமணிகள் அனைவோரும் இசைவு கொள..... '' என்ற வரிகள் வெளிப்படுத்துகின்றன.

எல்லோரும் கல்வி கற்கச் சந்தர்ப்பம், வசதி ஏற்படும்போது மனுக்குலத்தைப் பீடித்திருக்கும் அறியாமை இருள் நீங்கும், எங்கும் அறிவொளி பரவும். எமது கல்லூரியின் தாரக மந்திரம் '' ஒளிர்வதற்காய் ஒளியேற்றுவோம் '' என்பதாகும். '' ஒளி எங்கணும் காண ஒளியையே நாடுகின்ற எங்களது கல்லூரி '' என்ற அடி எமது இலட்சியத்தின் வெளிப்பாடாகிறது.

அறம் சார்ந்த கருத்துக்கள், பாடசாலையிலுள்ள இனத்தால் மதத்தால் அந்தஸ்தால் வேறுபட்ட மாணவர் குழுக்களை ஒற்றுமை காணச் செய்கின்றன. எமது பாடசாலைக் கீதத்தில் அறம் சார்ந்த கருத்துக்களும் இடம் பெற்றுள்ளமை நோக்கற்பாலது.

" நல்லாரைக் காண்பதுவும் நன்றே — நலம்மிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே
நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே
அவரோடிணங்கி இருப்பதுவும் நன்றே."

என்றார் ஔவை மூதாட்டி. இக் கருத்தைச் சுருங்க உரைப்பதாக " நல்லாரிணக்கமொடு — " என்ற சொற்றொடர் உள்ளது. ஞானம் தரும் நூல்களைக் கற்க வேண்டும், வாய்மை, மனத்தூய்மை, சாந்தம் ஆகிய பண்புகளைப் பேண வேண்டும், எனவும் எமது கல்லூரிக் கீதம் அறிவுரை கூறுகிறது. குறிப்பிட்ட சில அறக் கருத்துக்களைத் தனித்தனியாகக் கூறிவிட்டு, எல்லா அறங்களும் எமது கல்லூரியில் சிறப்புற்று வளர வேண்டுமென அவாவி நிற்கின்றது

காலங் காலமாக நிலைத்து நிற்கும் கலைகள், எளிமை வாய்ந்த இளமை செறிந்த கலைகள் யாவும் எமது கல்லூரியில் பயிற்றப்படுதலை " காலங் கடந்து வளர் கலைகளும் பயிலவே " " எளிமை புனர் இளமை செறி கலைகள் ..." என்ற அடிகள் எடுத்தியம்புகின்றன

நல்லொழுக்கமும் இறை பக்தியும் கல்வியில் கனிந்த பயனென்கிறார். உலகக் கல்வி நெறியாளராகிய கொமின்யஸ், வளரிக வாழ்வில் செம்மையாக வாழ்ந்து சுற்றில் பேரின்பத்தை அடைய கல்வி வழிகாட்ட வேண்டுமென அவர் மேலும் கூறுகிறார். கொமினியஸ் கூறிய கருத்துக்களை செயற்படுத்துவனவாக எமது கல்லூரியின் செயற்பாடுகள் உள்ளன. இதனையே நாம் கல்லூரிக் கீதமாக இசைக்கிறோம்.

Join we all in gladsome singing
God Bless our school
From our Hearts the prayer is springing
God Bless our school
Dear the place where we are meeting
Loving souls each other greeting.
Fervently our Lord entreating
God Bless our school.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் தோற்றமும்

அமெரிக்கன் மிஷனரிமாரின் பங்களிப்பும்

அதிவண எஸ். ஜெபரேசன்
அத்தியட்சகர் தென்னிந்திய திருச்சபை
யாழ். ஆதீனம்

1866-ம் ஆண்டு ஆடி மாதம் 5-ம் தேதி வட்டுக்கோட்டையில் நடந்தேறிய அமெரிக்கன் மிஷனரிமாரின் விசேட கூட்டத்தில், உடுப்பிட்டியில் ஒரு விடுதிப் பெண் பாடசாலையைத் தாபிக்க வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனை 'அமெரிக்கன் போட்டுக்கு' (VCBFM, Boston) உடனடியாக அறிவித்து, வேண்டிய பணத்தையும், பாடசாலையைப் பொறுப்பேற்று நடாத்தக்கூடிய ஒரு இளம் பெண் மிஷனரியையும் பெறுதற்கான முயற்சியெடுக்கப்பட்டது. இவ் விடயத்தில் அதிக நாட்டமுடையவராக விளங்கிய டாக்டர் கிறீன் அவர்கள் இச் செய்தியை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தார்.

"It is the unanimous opinion of the members of the American Ceylon Mission on the ground that it is desirable establish a Female Boarding School at Uduppiddy and request an appropriation not exceeding 300 pounds for buildings and the maintenance of the school for one year and also request that a young lady be sent out in company with Mr. & Mrs. Sanders as a teacher for the proposed school or for Uduvil as necessity may require."

இவ் வேண்டுகோள் எதுவித தாமதமுமின்றி அமெரிக்காவிலுள்ள "அமெரிக்கன் பிறதேச மிஷனரி ஆணையாளர் குழுவினால்" ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கமைய 300 பவுண் பணமும், பாடசாலைப் பொறுப்பையேற்று நடாத்த செல்வி. தவுன்சென்ட் (Miss. Harriet E. Townshend) அம்மையாரும் அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த உற்சாகம் தரும் முயற்சிகளுடன், உடுப்பிட்டித் திருச்சபைக்குப் பொறுப்பாளராக இருந்த அமெரிக்கன் மிஷனரியான (Rev. J. C. Smith) வண. ஜெ. சி. சிமித் அவர்களும், அவரது பாரியாரும் சபையினரின் துணையுடன் 1868 ம் ஆண்டு வைகாசி மாதம் 7-ம் தேதி 17 பிள்ளைகளுடன் உடுப்பிட்டி விடுதிப் பெண் பாடசாலையை ஆரம்பித்தனர். செல்வி. தவுன்சென்ட் அம்மையார் பாடசாலைத் தலைவியாகப் பொறுப்பேற்றார். திரு. ஜே. விற்சு என்பவர் உதவி ஆசிரியராகவும், திருமதி, பி. றோப்ஸ் என்பவர் மேற்றனாகவும் (Matron) பொறுப்பேற்றுக் கொண்டனர். இவ் விடுதிப் பாடசாலைக்கென இலங்கையிலும் 90 பவுண் பணம் சேர்க்கப்பட்டிருந்தது. 1869 ம் ஆண்டில் மேலும் பல பெண் பிள்ளைகள் விடுதிப் பாடசாலையிற் சேர்ந்தனர். 1871-ல் திரு. இராமு மொறிசன் என்பவர் உதவியாசிரியராக நியமனம் பெற்றார். பாடசாலை துரித வளர்ச்சியடையத் தொடங்கியது. 1872-ம் ஆண்டு வண. ஜெ. சி. சிமித் அவர்கள் தமது பாரியாருடன் அமெரிக்கா சென்றார். அவரது இடத்தை நிரப்ப அவரது புதல்வர் (Rev. T. S. Smith and Mrs Emily F. Smith) வண. ரி. எஸ். சிமித் அவர்களும் பாரியாரும் வந்து உடுப்பிட்டித் திருச்சபைப் பொறுப்புடன் பெண்கள் விடுதிப் பாடசாலையின் பொறுப்பையும் ஏற்றுத் திறம்பட நடத்தினர். இவர்களுக்கு உதவியாக அமெரிக்கன் மிஷனரிமாரான வணக்கத்துக்குரிய டபிள்யூ. ஈ. டிறீமர் (Rev. W. E. Deriemer and Mrs. Emily Deriemer) அவர்கள் அவரது பாரியார் எமிலி டிறீமர், வணக்கத்துக்குரிய சாமுவேல் டபிள்யு. கௌலண்ட் (Rev. Samuel W. Howland and Mrs. E. K Howland) திருமதி மேரி. ஈ. கே. கௌலண்ட் வணக்கத்துக்குரிய எம். டி. சான்டர்ஸ், (Rev. M. D. Sanders) வணக்கத்துக்குரிய ஆர். சி ஹேஸ்டிங்ஸ் (Rev. R. C. Hastings திருமதி மின்னி ரி. ஹேஷ்டிங் (Mrs. Minnie T. Hastings) டாக்டர் கிறீன் ஆகியோர் அயராதுழைத்து வேண்டிய உதவிகளை நல்கி வந்தனர். அவர்களுடன் சுதேச குருவர்களான வண. பேஜ், வண. காப்பென்ரர், வண. சி. நெல் வண. நைல்ஸ், வண. ஸ்ரிக்கினி ஆகியோரின் ஆதரவும் மக்கள் மத்தியில் அவர்கள் ஆற்றிவந்த சமயப் பணிகளும் உடுப்பிட்டி விடுதிப் பெண் பாடசாலையை நவீன பெண் கல்வி யுகத்தின் நுழைவாயிலாக அமைய வைத்தன. 1874-ல் வண. ரி. எஸ் சிமித் அவர்கள் இடமாற்றம் பெற அவரிடத்திற்கு வண. டிறீமர் அவர்களும் அவரது பாரியாரும் வந்து சேர்ந்தனர். மக்கள் மத்தியில் மிகப் பிரபலமான அமெரிக்கன் மிஷனரிகளில் ஒருவர் வண. டிறீமர் அவர்களாவர். அவரது நற் செய்திப் பேச்சைக் கேட்கவும், அவரது நல்லபரான

புலவர் எஸ். எஸ். எரேமியா புலவரின் கிறிஸ்தவ கதாப்பிரசங்கத்தைக் கேட்கவும் மக்கள் பன்னூற்றுக் கணக்கில் திரளுவர். டிறீமர் பாதிரியாரைத் தமிழ் மக்கள் 'பாதிரியார் தருமர்' என்று அழைப்பாராயினர். இதனால் உடுப்பிட்டி விடுதிப் பெண் பாடசாலைக்கு மேலும் புகழ் சேர்ந்தது. 1877-ல் செல்வி தவுன்சென்ட் அம்மையார் அமெரிக்கா சென்று 1879-ல் தான் திரும்பி வந்தார். இந்த இடைக் காலத்தில் திருமதி எமிலி டிறீமர் அவர்களே பாடசாலைத் தலைவியாகப் பொறுப்பேற்றுத் திறம்பட நடாத்தினார். 1879-ல் தான் வண. டிறீமர் அவர்களும் பாரியாரும் அமெரிக்கா சென்றனர். அவ்வாண்டில் வண. எஸ் டயிள்யு. கௌலன்ட் அவர்கள் உடுப்பிட்டித் திருச்சபைப் பொறுப்பையேற்றார். பாடசாலை அபிவிருத்திக்கு முக்கிய இடங்கொடுத்து பல நற்பணிகளைச் செய்தார். செல்வி தவுன் சென்ட் அம்மையார் 1882-ல் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது மறைவு பாடசாலைக்கு பேரிழப்பாகக் கருதப்பட்டது. அவர் மூலமாக பல பெண்கள் கிறிஸ்தவராகியிருந்தனர். அவரது மரணப் படுக்கையில் கூட 14 மாணவிகள் இயேசு பிரானைத் தம்மீட்பராக ஏற்றுக் கொண்டனர்.

வண. ஆர். சி. ஹேஸ்டிங்ஸ் அவர்கள் 1882 ம் ஆண்டு உடுப்பிட்டித் திருச்சபைப் பொறுப்பையேற்றார். இவர் பாடசாலையின் முகாமைக்காரராகவும். இவரது பாரியார் பாடசாலைத் தலைவியாகவும் இருந்து பாடசாலையைத் திறம்பட நடாத்தினர். திருமதி. ஹேஸ்டிங்ஸ் அம்மையார் பதினாலரை வருடங்கள் இப்பாடசாலைக்குத் தலைவியாக இருந்தார். அக் காலத்தில் பாடசாலையின் வளர்ச்சியை அனைவரும் மெச்சிப் பாராட்டினர். மாணவிகளை நல்லொழுக்கத்திலும் கடவுள் பக்தியிலும் வளர்ப்பதற்கு இவ்வம்மையார் செய்த முயற்சிகள் மிக விசேடமானவை சாதாரண வேதப் பாடங்களோடு, நாடோறும் வேத வசனங்களை மனனம் செய்யும்படி ஏவி வந்தார். மாணவியர் வேத அறிவில் அதிகமாகத் தேறினர். பக்திக்கும் விசுவாசத்திற்குமுரிய நல்லுணர்ச்சி மனதிற் கிளர்ந்தெழ, மேலான அனுபவங்களுக்கு அவர்களை வழி நடத்தினார். அவர் மாணவிகள் மீது காட்டிய அன்பும், அனுதாபமும். அவரது தீவிய முன்மாதிரியும் எல்லாரையும் வியப்புறச் செய்தன வண. ஆர். சி. ஹேஸ்டிங்ஸ் அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரித் தலைவராகவும், வட்டுக்கோட்டைத் திருச்சபை மிஷனரியாயும் செல்ல நேர்ந்தமையால் திருமதி ஹேஸ்டிங்ஸ் அம்மையாரும் உடுப்பிட்டியினின்றும் நீங்கி வட்டுக்கோட்டை செல்ல நேர்ந்தது

1900-ம் ஆண்டில் வண. ஜீ. ஜீ. பிறவுண் (Rev. G. G. Brown) அவர்கள் உடுப்பிட்டித் திருச்சபை போதகரானார். அவரது பாரியார் பாடசாலைத் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அவர் மாணவிகளிடையே உற்சாகமான ஊழியஞ் செய்தார். இவர் 1905-ம் ஆண்டு தமது கணவருடன் சாவகச்சேரித் திருச்சபைப் பொறுப்பை ஏற்றுச் சென்றார். பிற்காலத்தில் திருமதிகள் எடித்கேற்ஸ்மில்லர் (Mrs. Edith Gates Miller), டிக்சன் (Mrs. Frances Dickson), கிச்கொக் (Mrs. Hattie Kitchcock) முதலியோரும், திருமதி. ஏ. ஏ. உவாட், (Mrs. Alice Ward) செல்வி கியூற்றன் என்பாரும் உடுப்பிட்டி விடுதிப் பெண் பாடசாலையின் பொறுப்பை ஏற்றுத் திறப்பட பரிபாலித்தனர். இப் பாடசாலை தொடக்கப்பட்டு முதல் ஐம்பது வருட காலத்தில் அமெரிக்கன் மிஷனரிமாரின் தளராத அரவணைப்பினால் மாபெரும் கல்வித் தாபனமாக வளர்த்தெடுக்கப்பட்டது. இன்று பாடசாலைகள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட்ட நிலையிலும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 1500க்கு மேற்பட்ட மாணவிகள் தொகையுடன் ஒளிமிக்க கல்வித்தாபனமாக மிளிர்கின்றதென்றால் அதன் ஆரம்பத்திற்கு அமெரிக்கன் மிஷனரிமார் ஆற்றிய பங்களிப்பே அடித்தளமாகும். இதனைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் நன்றியுடன் நினைவு கூரும் என்பதில் ஐயமே இல்லை.

மகளிர் கல்லூரி வளர்ச்சி

திருமதி பாக்கியம் இராசதுரை
இளைப்பாறிய ஆசிரியை, பழைய மாணவி
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

கடந்து போன என் பள்ளிப்பருவம், ஆசிரிய காலம் முழுவதும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலேயே செலவழிந்தமையால் அவற்றைப் பற்றிச் சிறிது எடுத்துரைப்பது எனக்கும் சந்தோஷமே.

இப் பாடசாலை உடுப்பிட்டிக் கிராமத்திற்கு அறிவுச் சுடரைப் பரப்பும் ஒரு வெளிச்சமாகவும், அநேக பெண்மணிகளைக் கல்வி பயிலச் செய்து அன்னாரின் நடை, உடை, பாவனை யாவற்றிலும் வளர்ச்சியூட்டி முன்னேற்றம் காட்டும் ஒரு வழிகாட்டியாகவும் இருந்ததென்பதற்கு ஐயமில்லை.

இப்பாடசாலை ஆரம்பித்திலே மிஷனரிமார் வந்து தங்கி ஊழியம் செய்த ஒரு இடம் அவர்கள் தங்களுடைய சேவிய காலத்தை இக்கிராம வாசிகளுக்காக அர்ப்பணித்தனர். ஏராளமான பணத்தைச் செலவழித்தனர். அஞ்ஞானமாகிய இருளை அகற்றி மெய்ஞ்ஞானமாகிய ஒளியைப் பரப்ப யோசித்தனர். அநேகர் வந்து கல்வி கற்கும் வசதிக்காக இப் பாடசாலைக்கு அடிகோலினர். பிள்ளைகளைக் கூட்டிச் சேர்ப்பதற்கு ஒரு ஊழியரை நியமித்து அவருக்கு மாதச்சம்பளமும் வழங்கினர். ஆசிரியர்களையும் நியமித்தனர்.

ஆரம்பத்திலே இப்பாடசாலை School of home arts, அதாவது வீட்டுச் சேவியக் கல்விப் பாடசாலை என்றே இயங்கி வந்தது. அங்கே பின்னல்வேலை, பின்னல்வேலை, பாலரை நடத்தும் வேலை, பட்டுச் சவர்க்காரவேலை போன்ற சிறுகைத்தொழில்களைப் பயிற்றினர். இலை மாத்திரமல்ல, ஐப அறை, சாமான்கள் வைக்கும் சிறுவீடு போன்ற அறை எல்லாவற்றையும் தாமாகவே கட்டக் கற்பித்தனர். கல்வி அறிவோடமையாது தமது சமய அறிவையும் பரப்பத் தொடங்கினர். பாடசாலை வளவிற்குள் ஒரு ஆலயத்தையும் கட்டினர். அங்கே தெய்வ வழிபாடு தொடங்கியது பலர் கிறிஸ்தவர்கள் ஆனார்கள்

பாடசாலை வளர்ச்சியின் இரண்டாவது படியாக ஒரு சிறந்த தமிழ்ப் பெண் பாடசாலையானது. ஆசிரியர்கள் மிகவும் ஊக்கமாகக் கல்வி கற்பித்தனர். அநேக பிள்ளைகள் கல்விகற்று ஈடேறினர். தேசம் சுதந்திரம் அடையவும், காலத்துக்குக் காலம் பாடசாலைப் பொறுப்புகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்பட்டனர். பாடசாலை வளர்ச்சிக்காகவே அதிபர்களும் உழைத்தனர்

அடுத்தபடியாக இது ஒரு துவிபாஷா பாடசாலையானது. இவ்விதம் வளர்ச்சி அடைந்தமை எம் எல்லோருக்கும் மகிழ்ச்சியே. பிள்ளைகளும் ஆங்கிலம், தமிழ் இரண்டையும் திறம்படக் கற்றனர். பரீட்சைகளில் தேர்ச்சியுற்றனர். ஈற்றில் எமது பாடசாலை ஒரு ஆங்கில பாடசாலையானது. சுயபாஷையும் கற்பிக்கப்பட்டது. சகலதுறைகளிலும் மிகவும் திறம்பட வளர்ந்து முன்னேறியது. மாணவர்களும் பரீட்சைகளில் தேர்ச்சியுற்று உத்தியோகத்துறைகளில் மேம்பாடுற்றனர்.


பாடசாலை இவ்விதம் வளர்ந்துவரும் வேளையில் அரசாங்கம் பொறுப்புகளை ஏற்றது. சுயபாஷைக் கல்விமுறை, நடைமுறையானது மேலும் இப்பாடசாலை வளர்ந்து வரும் வேளையில் பல கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரு நூற்றாண்டு காலம் முழுவதும் பிரயாசப்பட்டுக் கட்டிய கட்டிடங்கள் தொடிப்போழுதில் அழிக்கப்பட்டு நாசமாகின. தொலைவிலிருந்து வரும் மாணவர்கள் தங்கிக் கற்ற விடுதி வசதிகள் யாவும், பாழடைந்தன.

இக்கஷ்டங்களின் மத்தியில் மாணவர்கள், ஆசிரியர்கள் யாவரும் கலக்கமுற்றனர். தலைவர்கள் தடுமாறினர். என் செய்வது! துக்கமான காரியம்


மீளவும் நமது பாடசாலைத் தலைவர்கள், ஆசியர்கள், மாணவர்கள் திறம்படக் கடமையாற்றி எமது பாடசாலை உயர்வடையும் காலம், விரைவில் வர வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திப்போமாக.

எமது கல்லூரி






அன்று






இன்று







முதல் ஐம்பது ஆண்டுகளில் உடுப்பிட்டி விநாயகர் பெண் பாடசாலை

திருமதி. லீ. நேசரட்ணதேவி ஜோசெப்
B. Sc., Dip - in - Ed
பிரதி அதிபர், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
பழைய மாணவி (1956 – 1967)

பெண்கள் கல்வியிலும் சமுதாய முன்னேற்றப் பணிகளிலும் புறக்கணிக்கப் பட்டிருந்த காலம் அது. கல்வியறிவு உயர்குலத்து ஆண்களுக்கு மட்டுமே திண்ணைப் பள்ளிகளின் மூலம் புகட்டப்பட்ட காலம். இக்காலகட்டத்தில் அமெரிக்க மிஷனரிமார் வட இலங்கையில் கால் எடுத்து வைத்தமை இலங்கையின் கல்வி வளர்ச்சியில், அதிலும் பெண்கள் கல்வியில் ஒரு விடிவெள்ளி தோன்றியது போலமைந்தது.

இங்கு வருகை தந்த அமெரிக்க மிஷனரிமாரின் முக்கிய பணி கிறிஸ்தவ மதப் பிரசாரமே. " மக்களைச் சிந்திக்க வைத்து உண்மைகளை உணரச் செய்து மதமாற்றம் செய்தலேயன்றி கட்டாயத்தின் பேரிலல்ல " என்ற ஜோன் கல்வினின் மதக் கொள்கையை அமெரிக்க மிஷனரிமார் நன்கு உணர்ந்திருந்தனர். எனவே சுவிசேஷப் பணியினைச் செவ்வையே செய்வதற்கு மக்கள் எழுத வாசிக்க அறிந்திருக்க வேண்டியமை அத்தியாவசியம் எனக் கருதினர். இதனால் மக்களுக்கு ஆண், பெண், சாதி, மத பேத மின்றி கல்வியறிவு வழங்கல் அவர்களது சமயப் பணியின் முக்கிய அம்சமாக அமைந்தது. இதற்காக இவர்கள் யாழ்ப்பாணத்திலமைத்த கல்விக் கூடங்கள் கல்வி வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தின. இக் கல்விக் கூடங்கள் மிஷனரிமாரின் பணித்தலங்களுக்கருகாமையில் அமைக்கப்பட்டு அவர்களது நேரடிக் கண்காணிப்பில் இயங்கியமை ஒரு சிறப்பம்சமாகும்

இவ்வரிசையில் பெண்களுக்கென அமெரிக்க மிஷனரிமாரினால் கி. பி. 1824 ல் அமைக்கப்பட்ட உடுவில் மகளிர் கல்லூரியே ஆசியாவில் பெண்களுக்கென அமைக்கப்பட்ட முதல் பெண் பாடசாலையெனும் புகழைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அன்று யாழ்ப்பாண சமுதாய அமைப்பு பெண்கள் கல்வியறிவு பெறுவதனையோ மாணவிகள் மிஷனரிகளின் பணித்தலங்களுக்கண்மையில் தங்குவதையோ விரும்பவில்லை. இதனால் பெண்கள் கல்வியை ஊக்குவிக்கு முகமாக மிஷனரிகள் இலவசக் கல்வி வழங்குவதாகவும், சீதனம் வழங்குவதாகவும், தமது ஸ்தாபனங்களில் உத்தியோகம் வழங்குவதாகவும் உறுதியுரை வழங்கினர். இவற்றால் ஏழ்மையில் வாடியவர்கள் முதலில் கல்விக் கூடங்களில் சேர்ந்து கொண்டனர். பின்னர் படிப்படியாகக் கல்வியறிவு பெறும் பெண்கள் தொகை பெருகிக் கொண்டே சென்றது. இச் சீதனம் வழங்கும் பணி சில ஆண்டு வரை தொடர்ந்ததாக மிஷனரிமாரின் வருகை எனும் நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது. முதற் பெண்கள் கல்லூரியாகிய உடுவில் பெண்கள் கல்லூரியின் வளர்ச்சியையும் அதன் பயனையும் கண்ட வைத்தியரும் மிஷனரியுமான கிறீன் என்பவர் உள்ளத்தில் உடுப்பிட்டியிலும் ஓர் கல்லூரி அமைப்பது மேலும் நன்மை பயக்குமென்னும் கருவைத் தோற்றுவித்தது. இவர் இக் கருத்தை அமெரிக்க போட் கழகத்திற்குத் தெரிவித்து அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க 1866 இல் இங்குள்ள மிஷனரிமார்களுடன் கலந்தாலோசித்து உடுப்பிட்டியில் ஓர் கல்லூரி அத்தியாவசியம் எனத் தீர்மானம் செய்து இதற்காக 300 பவுண் பணமும், அதை நடத்த ஒரு பெண் தலைவியும் தேவையெனப் போட் கழகத்திற்கு அறிவித்தார். கழகத்தினரும் இவரது தீர்மானத்திற்குப் பச்சைக்கொடி காட்டினர். கி பி. 1867 இல் கனம் ஜே. சி. சிமித், ரி. பி. ஹேஸ்கிங்ஸ் என்னும் தேசிகர்கள் மேற்பார்வையில் 25 மாணவர்கள் கல்வி கற்கக் கூடியதும் தங்குவசதி கொண்டதுமான ஒரு கட்டிடம் அமைக்கப்பட்டது. இத் தேவைகளுக்கு இக் கட்டிடம் போதாமையினால் மேற்குப் புறமாக அமைந்திருந்த காணிக் கொள்வனவிற்கும் வேறு செலவுகளுக்குமாக 90 பவுண் பணம் நம் ஈழவள நாட்டிலே சேர்க்கப்பட்டது.

இங்ஙனமாக அமைக்கப்பட்ட கட்டிடத்தில் 1868இல் அமெரிக்காவில் இருந்து வந்த செல்வி ஹியட் ரவுண்ஸன்ட் அம்மையார் தலைமையில் 17 மாணவிகளுடன் ஒரு விடுதிப் பெண் பாடசாலை உடுப்பிட்டியில் ஆரம்பமானது. இதன் முதல் ஆசிரியராக திரு. ஜே. பிச் (J. Fitch) அவர்களும் விடுதி மேற்பார்வையாளராகத் திருமதி பி. ஹோப்ஸ் (Mrs. P. Hobs) அவர்களும் நியமனம் பெற்றனர். அக்காலேனி பருத்தித்துறை கோப்பாய் மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு, ஏழாலை, மட்டுவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த 17 மாணவிகள்

முதலாம் தரத்தில் கல்வி கற்கச் சேர்ந்தனர். 1869இல் மேலும் பல புதிய மாணவிகள் சேரவே திருமதி பிச் உபாத்தியாயினியாக நியமனம் பெற்றார். இவ்வாண்டில் விடுதி மேற்பார்வையாளர் திருமதி. றோப்ஸ் தம் கடமையினிருந்தும் நீங்க அவ் வெற்றிடம் திருமதி. சூசன் பேரின்பம் முத்து என்பவரால் நிரப்பப் பட்டது. கல்லூரி வளர்ச்சியின் பயனாக 1971 இல் திரு. ஈ. மொறிசன் Mr. E. Morrison) உதவி ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டார். இந் நிலையில் 1872 இல் கல்லூரியின் வளர்ச்சியில் கரிசனையுடன் கருமமாற்றி வந்த அதன் முதல்வர்களான திரு. J. C. சிமித், திருமதி. T. S. சிமித் என்போர் அமெரிக்கா செல்லவே, பெற்றாரின் பணியைத் தொடர மகன் ஜே. எஸ். சிமித்தும் துணைவியாரும் முன் வந்து அப்பதவிகளை ஏற்று கல்லூரியை வழிநடத்தினர். 1871-ம் ஆண்டு வரை ஆண்டு தோறும் கல்லூரி நிர்வாகக் குழுவினர் கல்லூரி மாணவிகளைப் பரீட்சித்து வந்தனர் ஆயின் 1872 இல் முதல்முறையாக 28 மாணவிகள் அரசினால் நடத்தப்படும் மூன்றாந் தரம் தொடக்கம் ஆறாந் தரம் வரையான பரீட்சைக்குத் தோற்றி ரூபா 400 - பணம்கொடை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. 1868 இல் முதலாம் தரத்தில சேர்ந்த 17 மாணவிகளில் சிலர் இடையில் விலகிச் சென்றமையால் இவர்களில் 6 பேர மாத்திரமே 1873-ம ஆண்டு பங்குனி 27 ம் நாள் அரங்கேறி உத்தம கிறிஸ்தவ மாதராக ஊழியம் செயயத் தகுதி பெற்று ஊழியம் செய்தனர்.

1877 இல் கனம் ஜே. எஸ். சிமித் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல கனம் டிறிமர் அவர்கள் கல்லூரியை பொறுப்பேற்கலானார். இவ்வாண்மேட ஆசிரியர் திருமதி. மொறிசன் அவர்கள் கிறிஸ்துவின் ஐக்கியத்துள் பிரவேசிக்க அவரது இடத்துக்குச் செல்வி. லாறா சின்னாச்சி அவர்கள் நியமனமபெற்று மிகத் திறமையாகக் கடமையாற்றினார். கனம டிறிமர் அவர்கள் ஆசிரியராகப் பணிபுரிந்தகாலை மாணவியர் ஆங்கிலப் பாடங்களையும கற்றுத தேர்ந்தனர். 1877இல் செல்வி ரவுண்சன் அம்மையார் அமெரிக்கா சென்று 1879 இல் திரும்பும வரை திருமதி டிறிமர் அம்மையார் அவர்கள் கல்லூரியின் அனறாடக் கருமங்களை மேற்பார்வை செய்து வநதார்.

1879 இல் கனம் S. W- கவுலண்ட் தமபதிகள் கல்லூரி நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடத்தினர். மேலும் திரு. ஜே. பிச் அவர்கள் பதின் மூன்று வருடகால சேவையின் பின்னர் கல்லூரியை விட்டு நீங்க திரு. C. M. சாண்டேஸ் அவ்விடத்திற்கு நியமனம் பெற்றார். 1882 இல் பதினான்கு வருடம் கண்ணியதுடன் கல்லூரியை நடாத்தி வந்த செல்வி எச் ஈ. ரவுண்சன் அம்மையார் கடும் சுகவீனமுற்று கர்த்தருக்குள் ஆறுதல் பெறப் பரமபதம் அடைந்தார். அன்னார் தம் இறுதி மொழியாக " பிள்ளைகளே! நான் உங்களுடன் இருந்தபொழுது மொழிந்தவற்றை ஞாபகத்தில் கொள்ளுங்கள்; நான் இருக்கப்போகும் இடத்துக்கு நீங்களும் வரத் தெண்டியுங்கள்," என தம் மாணவிகளைப் பார்த்து மொழிந்தார். இவர் மரிக்கும் பொழுது இவர் மூலம் பதின் மூன்றுபேர் குணம் பெற்றனர். இவ்வாண்டில் திருமதி ஆர். சி. ஹோஷரிங்ஸ அம்மையார் கல்லூரியைப் பொறுப்பேற்றார். 1890 இல் திரு சி. எம். சாண்டேஸ் வேறிடம் செல்ல திரு. ப. எஸ். கிறிஸ்ரியன் ஒன்பதரை ஆண்டு காலம் அதிபராகக் கடமையாற்றி நீங்க அவரது இடத்திற்கு திரு. எல். வி. கிளாரன்க நியமனம் பெற்றார். இவரே கல்லூரியின் ஐம்பதாம் வருட நிறைவு விழாவின் போது கல்லூரி வரலாற்றை எடுத்தியம்பும் வாய்ப்பையும் பெற்றார்.

1891 இல் கனம் ஹேன்ரிங்ஸ் தம்பதிகள் அமெரிக்கா செல்ல அவ்விடத்திற்கு திருமதி. பெல் அம்மையாரும், சிமித் அம்மையாரும் நியமனம பெற்றுக் கல்லூரியை வழிநடத்தினர் இவரின் பின் 1895 இல் பிறவுண் தம்பதிகள் கல்லூரியின் தரத்தை உயர்த்த முயன்று கல்லூரியில் ஆங்கிலம் கற்பிக்க வசதி செய்தனர். இக்காலத்தில் சூசன் பேரின்பம் முத்து அவர்கள் சேவையிலிருந்து இளைப்பாறினார் 1905 இல் திரு. பிறவுண அவர்கள் பிரிந்ததின் காரணமாகக் கல்லூரியின் வளர்ச்சி சற்றுமந்த நிலையடையவே இக்கல்லூரி உடுவில் மகளிர் கல்லூரியுடனை இணைந்து செயற்பட வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது. இதனால் உடுப்பிட்டித் திருச்சபையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த விடுதிப்பெண் கல்லூரி உடுப்பிட்டித் திருச்சபையை விட்டு விலக்கப் பட்டமை திருச்சபைக்கும் இக்கோவில் பற்றுக்குமே பாரிய இழப்பாயிற்று. இம்மந்தகரமான நிலை அதிககாலம் நீடிக்கவில்லை மீளவும் 1908 இல் கனம் டிக்சன் தம்பதியினர் கல்லூரிப் பொறுப்பை ஏற்றனர். இவர்களைத் தொடந்து திருமதி ஹிச்கொக் அவர்கள் பொறுப்பை ஏற்றார்.

1881-ம் ஆண்டு தொடக்கம் 1896 வரை ஆங்கில பரீட்சைகள் நடத்தப்பட்டு வந்தபோதும் பரிட்சையின் தரம் மிக உயர்ந்ததாக இருந்தமையால் 1896 இல் இப்பரீட்சை ரத்துச் செய்யப்பட்டது. இதன் பின் 1912 இல் பதவி ஏற்ற உவாட் அம்மையார் மீண்டும் ஆங்கிலப் பரீட்சைக்கு மாணவிகளைத் தயார் செய்தபோதும் 1915 லே தான் அவரது முயற்சி அனுகூலமாயிற்று. இவர் காலத்திலே மாணவியர் விடுதியில் தங்காது கல்வி பெற்றனர். ஆரம்ப 50 ஆண்டு காலத்திலே இக்கல்லூரியில் 594 மாணவிகள் கல்வி பயின்று அவர்களுள் 265 மாணவியர் நன்முறையில் வெளியேறினர். இவ் 265 மாணவியருள் எழுபதுபேர் ஆசிரியர்களாகவும் பதினாறுபேர் வேத சாஸ்திரிகளாகவும் திகழ்ந்தனர். இக் காலப்பகுதியில்

முப்பத்தொரு ஆசிரியைகள் கல்வி கற்பித்தனர். இக் கல்லூரியின் ஐம்பதாம் ஆண்டு ஆரம்ப காலத்தில் புதிய வகுப்பறைகளும், மண்டபமும் அமைக்கப்பட்டு அதிலே அன்றாட அலுவல்கள் இடம்பெற்றன.

இவ்வாறாகப் பல்வேறு இடையூறுகள் தடைகள் மத்தியிலும் மிஷனரிமாரின் தளராத ஊக்கத்தாலும் திருச்சபையினர் அளித்த ஆதரவினாலும் ஐம்பது ஆண்டுகள் பணியாற்றி இக்கல்லூரி இன்று 125ஆம் ஆண்டில் பல்வேறு கட்டிடங்களையும் 1500 மாணவியரையும் அரைநூறு ஆசான்களையும் கொண்டு வடமாநிலத்தில் கல்விச் சுடர் வீசும் மகளிர் கல்லூரியாக மிளிர்வதைக் காணும்போது இறும்பூது எய்தாதார் யார் உளர்?

மேலும் 1918 ஆடி. 19 ஆம் நாள் நடைபெற்ற அரை நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் பற்றி "உதய தாரகை" என்னும் யாழ் ஆங்கில தமிழ்ப் பத்திரிகை வெளியிட்டிருந்த குறிப்புகளின் சுருக்கத்தை இக்கால சந்ததியினர் அறியும் நோக்குடன் கீழே குறிப்பிட்டுள்ளேன்.

இவ்விழாவுக்கு 300 பழைய மாணவர்கள் சமூகம் கொடுத்திருந்தனர். யுபிலிக் கொண்டாட்டத்தின் முதற்கட்டம் ஆலயத்தில் "தோத்திர ஆராதனை" யுடன் ஆரம்பமானது. ஹிச்கொக் போதகர் அக்கிராசனம் வகுத்தார். தலைமை ஆசிரியர் எல். வி. இளாரன்சால் கல்லூரி வரலாறு வாசிக்கப்பட்டது. கனம் சி. டி. வேலுப்பிள்ளை அவர்கள் கலாசாலை, சபை வளர்ச்சியிலும் சமுதாயத்திலும் ஏற்படுத்திய வளர்ச்சியைப் பற்றி எடுத்தியம்பினார். பின்னர் கல்லூரி மண்டபத்தில் செல்வி எச். ஈ. ரவுன்சன், திருமதி. ஆர். சி. ஹேஸ்டிங்ஸ் ஆகியோரது படங்கள் திரை நீக்கம் செய்யப்பட்டன. அதன்பின் ஒவ்வோர் பத்து ஆண்டுகளுக்குமான கல்வி கற்றோர் பெயர்ப்பட்டியல்கள் வாசிக்கப்பட்டன. இத்தருணத்தில் இப்பாடசாலையில் கல்வி கற்றோர் பலர் பிரசன்னமாயிருந்தது பெருமைக்குரியதாக விளங்கியது. இறுதியில் அங்கு அரங்கேற்றப்பட்ட காட்சிகளும், பயிற்சிகளும் வேதாகமம் நமது நாட்டுக்கு அளித்த நன்மைகளுக்குச் சான்று பகர்வதாய் அமைந்தன.

அறிவாற்றலை ஒருவன் மேசைமேல் உள்ள விளக்கைப்போல், தனக்கு மட்டும் பயன்படுத்திக் கொள்ளாமல், ஒரு கலங்கரை விளக்கத்தைப்போல் பிறருக்கும் பயனளிக்கச் செய்ய வேண்டும்.

— பீச்சர்

கல்லூரி வரலாற்றில்
இரண்டாவது கட்டம்
(1918 — 1968)

திருமதி. அம்பிகை பாலசிங்கம்
யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை
பழைய மாணவி (1944 — 1960)

யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் வரலாற்றுக்குறிப்புக்கள் திரட்டப்படக்கூடியசாதனங்கள் பெரும்பாலும் அழிந்து போய்விட்டன. கல்லூரியின் வரலாற்றுக் குறிப்பேடுகள் 1987ல் இடம்பெற்ற "ஒபரேஷன் லிபரேஷன்" இராணுவ நடவடிக்கைகளினால் சிதைந்தும் அழிந்தும் போயின தகவல்கள் திரட்டக்கூடிய வேறு சாதனங்களும் நமக்குக் கிடைத்திலது எனவே அக்காலப் பகுதியிலே கல்லூரியில் கற்ற, கற்பித்த பெரியார்களிடமிருந்து பாடசாலையோடு தொடர்பாகவிருந்த ஊர் மக்களிடமிருந்தும் பெற்றுக் கொண்ட தகவல்களைத் திரட்டி ஒருவாறு தொகுத்துத் தந்துள்ளோம். வரலாற்று ரீதியில் திட்டமிட்ட காலப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்களைக் கோவையாக்க முடியாமைக்குப் பெரிதும் வருந்துகிறோம்.

1918-ம் ஆண்டு ஆடி மாதம் பாடசாலையின் ஐம்பது வயதுப் பூர்த்தியானமைகான "யூபிலி" கொண்டாட்டம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. முதல் ஐம்பது ஆண்டு காலப்பகுதியில் கல்வியில் அரங்கேறிய 265 பேரில், 98 மாணவிகள் யூபிலிக் கொண்டாட்டத்திற்கும் சமுகம் கொடுத்திருந்தார்கள். அந்நேரம் பாடசாலையின் தலைவியாகத் திருமதி. W. E. கிச்கொக் அம்மையாரும் ஆசிரியராகத் திரு. L. V. கிளாரன்சு அவர்களும் இருந்தார்கள். திருமதி. W. E. கிச்கொக் அவர்களைத் தொடர்ந்து திரு. மில்லர்ஐயரும் மில்லர் அம்மாவும் கடமையேற்றனர். மில்லர் ஐயர் பாடசாலையின் முகாமையாளர் ஆகவும் மில்லர் அம்மா பாடசாலையின் தலைவியாகவும் பணி புரிந்தனர். அமெரிக்கா நாட்டில் இருந்து மிஷனரி வேலைக்காக அனுப்பப்பட்டிருந்த இத் தம்பதியினர் தன்னலமற்ற சேவை புரிந்தனர். மிஷனரி வேலைத் திட்டத்தில் ஓர் அம்சம் மக்களிடையே கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல் அதிலும் பெண்களுக்கு கல்வியறிவு ஊட்டலென அமைக்கப்பட்ட இப் பாடசாலையில் மில்லர் அம்மா சிறப்பான சேவை ஆற்றினார்.

இவர்கள் காலத்தில் பாடசாலை உள்பள்ளிக்கூடம், வெளிப்பள்ளிக்கூடம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது. பிள்ளைகள் பாடசாலைக்கு போவதும் மிகக் குறைவு. ஆசிரியர் கிளாரன்சு, ஆசிரியர் சொலமன் ஆகியோர் வீடுவீடாகச் சென்று பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கூட்டிச் செல்வார்கள். உள் பள்ளிக்கூடத்தில் விடுதி வசதியும் இருந்தது. பெண்கள் விடுதியில் தங்கிப் படித்தார்கள். தொண்டமனாறு, சாவகச்சேரி, மட்டுவில், மிருசுவில், அச்சுவேலி இன்னும் வேறு இடங்களிலுமிருந்தும் பெண்பிள்ளைகள் வந்து விடுதியில் தங்கியிருந்து கல்வி பயின்றார்கள்.

மிஷன் ஆதரவில் நடைபெற்று வந்த பாடசாலையாதலால் அமெரிக்காவில் இருந்து மாணவிபருக்கு உடுப்புக்களும் வந்தன எனவும் அறிகிறோம். அன்னம்மா அக்கா என்று பிரியமாக அழைக்கப்படும் ஆசிரியை பிள்ளைகளுக்கு மணிலே எழுதிப்பழக்கினார்கள். பிள்ளைகள் மூன்றாம் வகுப்புக்கு வந்ததும் தடிபேனையால் மையில் தொட்டு எழுதப் பழக்கினார்கள் பேனைக்கு போடும் முனையை "G" முனையாக இருக்க வேண்டும், என்பதில் கவனமாக இருந்தார்கள். ஏனெனில் ஆரம்பத்திலிருந்து பிள்ளைகள் உறுப்பமையழுத வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருந்தார்கள்.

மில்லர்ஐயர் காலத்தில் விடுதியில் தங்கி இருந்த மாணவிகளை உலாவக் கூட்டிச் செல்வார்கள். அக்காலத்தில் தொண்டமானாறில் மிஷன் வீடு ஒன்று இருந்தது. உலாவக் கூட்டிச் செல்லும் மாணவிகளுக்குக் கேக், இனிப்பு வகைகள் வழங்கி அவர்களைச் சந்தோஷப்படுத்தி தாமும் மகிழ்ச்சியுறுவார்கள். மாணவிகளும் மிஷன் வீட்டில் சிறுபொழுது ஓய்வுபெற்று ஆடிப்பாடி மகிழ்ந்து பாடசாலை திரும்புவார்கள்.

மில்லர் தம்பதியினரைத் தொடர்ந்து செல்வி. மத்தாய் என்னும் கேரள நாட்டுப் பெண்மணி பாடசாலைத் தலைவியாகப் பணியேற்றார். இவர் காலத்தில் ஏறக்குறைய முந்நூறு மாணவிகள் கல்வி கற்கக் கூடிய பாடசாலையாக எமது பாடசாலை வளர்ச்சியடைந்து இருந்தது. பெண்கள் பாடசாலையானதால் "தொழில் முன்னிலைக் கல்வி" (Junior Domestic Science) என்ற கல்வி அமைப்பினை விரிவுபடுத்தி மாணவிகளைப் பயிற்றுவித்தார். மில்லர்ஐயர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட தச்சுவேலை, நெசவுவேலை,

பன்னம் பின்னல் போன்ற வேலைகளுக்குப் பெரிதும் ஊக்கம் கொடுக்கப்பட்டு வந்தது. செல்வி. மத்தாய் அதிபராக இருந்த காலத்தில் பண்டித ஸ்ரீ. ஜவகர்லால் நேரு, செல்வி. இந்திராநேரு [அன்றைய], விஜயலக்ஷ்மி பண்டிட் ஆகியோர் இங்கு வருகை தந்தனர் என்று எமது கிராமத்தில் வதியும் முதியவர்களிடமிருந்து அறிகிறோம்.

மாணவிகளுக்கு வாசிக்கும் பயிற்சியைத் தூண்டுவதற்காக வாசிகசாலை அமைக்கப்பட்டு அழகான படங்கள் உள்ள ஆங்கிலக் கதைப்புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தன அப்புத்தகங்களையும் அவற்றின் அழுத்தத்தையும் தொட்டுணர்ந்து பார்ப்பதிலே தமக்கு ஒரு தனி இன்பம் என்று அன்றைய மாணவிகள் கூறுகின்றனர். நேசம் அக்கா, வள்ளியம்மை அக்கா, பரிமளநாயகம் அக்கா ஆகியோர் சிறப்பாக ஆங்கிலம் கற்பித்தார்கள். ஆங்கிலத்தில் கதைகள் வாசிக்கும் ஆர்வத்தையும் மாணவரிடையே தூண்டினார்கள் என்றால் மிகையில்லை கிளாறன்சு ஆசிரியரின் மகள் வயலினும் கற்பித்தார்.

நவமணிகளின் பெயர்களைக் கொண்டு 'ஒப்பல்' ''றூ'' ''டயமன்ட்'' என மாணவிகள் இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன. நத்தார்விழா மற்றும் விழாக்களும் பாடசாலையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வந்தன.

செல்வி. மத்தாய் அவர்களைத் தொடர்ந்து செல்வி. மதியாபரணம் அவர்கள் பாடசாலை அதிபராக இருந்தார். இதுவரைகாலமும் விதேசிகளின் தலைமையில் இயங்கிவந்த யாழ்/உடுப்பிட்டி பெண்பாடசாலை முதன் முதலாக ஒரு சுதேசியின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து எமதுபாடசாலையில் எமது நாட்டைச்சேர்ந்த முதல் அதிபர் என்ற பெருமை செல்வி. மதியாபரணத்துக்குச் சேரும். ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்று வந்த மாணவிகளில் 13 பேர் சிறப்பெழுத்தரப் பத்திரத் தேர்வுக்குத் தோற்றி அதில் 12பேர் சித்தியடைந்தனர். ஆங்கிலப் பாடத்திற்கும் சிறப்பு சித்து பெற்றனர். இவர் காலத்திலே எமது பாடசாலை இரு பாஷை பாடசாலையாக இயங்கி வந்தது.

மாணவிகளிடையே கலைத்திறனை வளர்க்க வேண்டும் என்பதில் பெரு விருப்புடைய இந்த அதிபர் அதற்கெனஒரு அரங்கம் வேண்டுமெனத் தெளிந்து கொண்டு அம்முயற்சியில் ஈடுபட்டார். இவரது பெரு முயற்சியினால் பெரிய மண்டபம் உருவாக்கப்பட்டது. இம் மண்டபத்திற்குக் கூரை அமைப்பதற்குக் கிராமவாசிகளின் உதவியை வேண்டி வீடுகள் தோறும் சென்று பனைமரம் பெற்று மண்டபத்துக்குக் கூரையமைத்து முடித்தார். பாடசாலை மாணவிகளின் தொகை தானாகவே உயர்ந்தது. செல்வி மதியாபரணம் அதிபராக இருந்த காலத்தில் எமது பாடசாலை மாணவிகள் கூடைப்பந்தாட்டத்தில் யாழ்ப்பாணத்தில் சிறந்த குழுவெனத் தெரிவாகி இறுதிப்போட்டிக்காகத் தலைநகருக்குச் [கொழும்பு] சென்றனர். '' ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை '' என்ற காலம் மலையேறி இச்சிறிய கிராமத்தில் இருந்து பெண்கள் விளையாட்டுக்காகக் கொழும்பு செல்வதென்றால் இந்நிகழ்வு எமது பாடசாலையின் வரலாற்றுப் பெருமையன்றோ! இக்கூடைப் பந்தாட்டக் குழுவிற்குப் பயிற்சி கொடுத்த பெருமை செல்வி றோஸ்மலர் மதியாபரணம் அவர்களுக்குரியதாகும்.

ஏற்கனவே இருந்த நூல் நிலையம் விரிவாக்கப்பட்டுத் தமிழ் புத்தகங்களும் அங்கே வைக்கப்பட்டன. ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சி இல்லாத மாணவிகள் இதனால் பெரிதும் பயனடைந்தார்கள். அதிபர் செல்வி மதியாபரணம் அவர்கள் அனாதைச் சிறுமிகளுக்கென அனாதை விடுதி ஒன்றும் அமைத்து, அனாதைப் பிள்ளைகளைப் பராமரித்தார். இதற்கென நிதி உதவி மிஷன் மூலமாக கிடைத்தது. பாடசாலை விடுதியும், மிஷன் விடுதியும் தனித்தனியாக நிர்வகிக்கப்பட்டது. அயற் கிராமங்களில் இருந்த தாய் தந்தையற்ற பெண் பிள்ளைகளும்கூட அதிபரின் இம் முயற்சியினால் பெரிதும் நன்மை அடைந்தனர். சமூகத்தினால் அவர்கள் கவிடப்படாமல் தங்கள் பிற்கால வாழ்க்கைக்கு நிலையான ஊதியத்தை தேடக்கூடியதான வகையில் அதிபர் ஒரு வசதியை ஏற்படுத்திக் கொடுத்தார் என்றே கூற வேண்டும்.

செல்வி மதியாபரணம் அவர்களின் பின்னர் 1946-ல் செல்வி ஜீ. எம் லீ. வன்னியசிங்கம் அவர்கள் எமது பாடசாலை அதிபராகக் கடமை ஏற்றார் அதிபர் செல்வி. லீ அவர்களின் காலம் எமது பாடசாலை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தொன்றாகும். இரு மொழிப் பாடசாலையாக இருந்த எமது பாடசாலை உடுப்பிட்டி மகளிர் ஆங்கிலப் பாடசாலை ஆகப் பரிணாம வளர்ச்சியடைந்தது. மின்சாரத்தின் உபயோகத்தை கிராம மக்கள் பெரிதும் அறிந்திருக்காத அவ்வேளையில் பகீரதப் பிரயத்தனம் எடுத்து பாடசாலைக்கு மின் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தார். இது எமது கல்லூரிக்கு அன்றைய நிலையில் ஒரு வரப்பிரசாதமாகும். 100 × 20 சதுர அடி பரப்பைக் கொண்ட பிரதம பாடசாலைக் கட்டிடத்தை அமைத்துக் கொடுத்ததோடு பாடசாலை மண்டபத்தையும் புனர் நிர்மாணஞ் செய்தார். இரசாயன ஆய்வு கூடம் ஒன்று உரிய முறையில் சகல வசதிகளோடும் வேண்டும் என பதற்காக 1954 ல் ஒரு '' காணிவல் கள்யாட்ட விழாவை '' பாடசாலை வளவில் ஒழுங்கு செய்து அதன் மூலம் நிதி திரட்டினர். இந்த இரசாயன ஆய்வு கூடத்திற்கான அடிக்கல் அந்த வருடம் கார்த்

திக் மாதம் 13-ம் திகதி ஐக்கிய அமெரிக்காவின் அந்நாள் தகவல் தொடர்பு 'டைரக்டராக' (Director) இருந்த திரு. ஜீ. ஹன்ரிங்ரன் டேமன் (Mr. G. Huntington Damon) அவர்களால் நாட்டப்பட்டது. இவை தவிர இடைநிலைப் பாடசாலைக் கட்டிடங்கள் சிலவும் அதிபரால் திருத்தி அமைக்கப்பட்டது. மனைவியல் ஆய்வு கூடமும் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டது. பாடசாலையில் பெற்றார் தினவிழா, பரிசளிப்பு விழா போன்ற நிகழ்ச்சிகளை நடாத்தும் பொழுது கல்லூரி மண்டபத்தில் இடம் போதாமையாக இருந்தமை செல்வி லீ. அவர்களைப் பெரிதும் பாதித்தது.

எனவே திறந்த வெளியரங்கம் ஒன்று எமது கல்லூரியில் அமைக்க வேண்டும். என முயற்சிசெய்து வெற்றியும் கண்டார். மாணவிகளை ஆளுக்கு ஒரு புத்தகம் நூல் நிலையத்திற்கு அன்பளிப்புச் செய்யுங்கள் எனப் பணித்து நூல் நிலையத்தை விஸ்தரித்தார். இவர் காலத்தில் "பிருதிவிராஜ்" என்னும் வரலாற்று நாடகம் மாணவிகளால் நடிக்கப்பட்டு, யாழ் நகர மண்டபத்திலும் மேடையேற்றப்பட்டுப் பலரதும் ஏகோபித்த பாராட்டினைப் பெற்றது. அத்துடன் அமையாது கொழும்புத் திட்டக் கண்காட்சிக்கும் எமது கல்லூரியில் இருந்தும் ஒரு நடனக்குழு சென்று பங்குபற்றியதோடு போட்டியில் முதற் பரிசையும் தட்டிக்கொண்டது. "யாழ்ப்பாணத்தில் உடுப்பிட்டி என்று ஒரு இடம் இருப்பதே தெரியாது. அப்படியிருக்க அங்கிருந்து வந்து போட்டியில் கலந்துகொண்டு முதற்பரிசையும் தட்டிக்கொண்டு விட்டதே" என்று மற்றும் பெரிய பாடசாலைகள் அங்கலாய்த்துக் கொண்டன.

மாணவியர் சீருடை அணிந்து, பட்டிகட்டி, காலுறை சப்பாத்துகள் உடன் பாடசாலைக்கு எடுப்பாக வரவேண்டும் என்பது லீ அம்மையாரின் விருப்பு. பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக பாடசாலையில் கல்வி கற்கும் அனைத்து மாணவிகளுமே விளங்க வேண்டும் என்பது அவரது தணியாத தாகம். அதே வேளையில் பெண்களுக்குரிய நாற்குணங்களும் ஒவ்வொரு மாணவியிடமும் இருக்க வேண்டும் என வாராந்தக் கூட்டங்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவார்.

மாணவிகளுக்குச் சாரணீயம் கற்பிக்கப்பட்டது இதன் மூலம் நற்பண்புகளை மாணவர்களிடையே வளர்த்தார். பாடசாலைக்கென ஒரு கொடி, கீதம், பாடசாலையின் மகுட வாக்கியம் யாவும் லீ அம்மையார் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது பிள்ளைகள் விளையாட்டுத்துறை கலைத்துறை மற்றும் புறச் செயற்பாடுகளில் எல்லாம் ஆர்வத்தோடு பங்குபற்றினார்கள் உடற்பயிற்சிப் போட்டிகளில் மாவட்ட ரீதியாகப் பெரிய கல்லூரிகளுடன் போட்டியிட்டு வெற்றிகளும் பெற்றன. அவ்வாறே இலங்கை வானொலியினர் நடாத்தும் பேச்சுப் போட்டி, வெண்பா வாசிப்புப் போட்டி, குறுவினாப் போட்டி (ஆங்கிலத்திலும்) கலந்து கொண்டு பாடசாலைக்கு மகிமை சேர்த்தனர்.


இல்லங்கள் மறுசீரமைக்கப்பட்டுப் பாடசாலை ஸ்தாபகர்களின் பெயர்கள் சூட்டப்பட்டன. ஹிச்கொக் ஹியூஸ்ரன், மில்லர், ஹேஸ்ரிங் என ஸ்தாபகர்களின் பெயர்களோடு நான்கு இல்லங்களாகப் பிரிக்கப்பட்டது. பாடசாலைக் கீதமும் அதிபர் லீ. அவர்கள் காலத்திலேயே எழுதப்பட்டது.

எழுத்துத்துறையில் மாணவிகளை ஈடுபடுத்துவதோடு கல்லூரி வளர்ச்சியை மட்டிடும் அளவுகோலாகவும் கல்லூரி சஞ்சிகைகள் இவர்கள் காலத்தில் வெளியிடப்பட்டன.


இவர் எமது கல்லூரியில் பூரணத்துவமான சேவையாற்றியதோடு நின்றுவிடவில்லை. வாழையடி வாழையெனத் தனக்குப்பின் தனது சேவையைத் தொடரக்கூடிய ஒரு அதிபரை தனது ஆசிரியர் குழாத்தில் இருந்து தெரிவுசெய்து அவரையும் தன்வழியிலே பழக்கினார். ஆம்! அவர்தாம் செல்வி. R. J. மேன் அவர்கள். செல்வி. R J. மேன் அவர்கள் 1960இல் அதிபராக பதவியேற்றார். அன்னாரது சேவைக் காலத்தை விரித்துரைக்கப்புகின் அது ஒரு நீண்ட அத்தியாயமாக அமையும். அன்னாரது காலத்தில் எம் கல்லூரி அன்னையின் எழில் எவ்வாறு மெருகூட்டப்பட்டதென்பதை இவ்வரலாற்றின் IIIம் பகுதியில் வாசகர்கள் அறிந்து கொள்ளலாம்.

21-ST JAFFNA

Girl Guides Troop




at annual rally



on picnic



Little friends at a school function



With the Principal





ஒரு நூற்றாண்டின் பின் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி (1968 – 1993)

செல்வி. வதனராஞ்சினி துரைசாமி, B. A.
ஆசிரியை.
பழைய மாணவி (1970 – 1983)

1968-ம் ஆண்டு மே மாதம் 7-ம் திகதி எங்கள் கல்லூரிக்கு ஒரு நூற்றாண்டு நிறைந்தது. இவ்வேளை செல்வி R. J. மேன் அவர்கள் இங்கு அதிபராக இருந்தார்கள். ஆரம்பகால அதிபர்களின் அர்ப்பணிப்பு நிறை சேவையினால் உன்னதமாக வளர்ந்து வந்த இப் பாடசாலை நூறு வருடங்கள் நிறைவுறும் காலப் பகுதியில் செல்வி. R. J. மேன் அவர்களின் தலைமைத்துவத்தில் தனது வரலாற்றின் பொற்காலத்தை எட்டியதெனக் கூறுதல் மிகையானதல்ல. கல்வி, கலை, விளையாட்டு என சகல துறைகளிலும் இப்பாடசாலை உயரிய சாதனைகளை இக்காலத்தில் நிலைநாட்டியது.

1970-ம் ஆண்டிலே அகில இலங்கை ரீதியிலான உடற்பயிற்சிப் போட்டியில் இப் பாடசாலை மாணவிகள் மத்திய பிரிவிலும் கீழ்ப் பிரிவிலும் முதலிடங்களைத் தட்டிக் கொண்டனர். இச் சாதனையின் கர்த்தாவாக விளங்கியவர். இப் பாடசாலையின் பழைய மாணவியும், இப் பாடசாலையின் அப்போதைய உடற்பயிற்சி ஆசிரியையுமான திருமதி. பாக்கியம் வீரசிங்கம் (அப்போது செல்வி. பா. முத்து) அவர்களாவார் இவருடைய காலத்திலேதான் விளையாட்டுத்துறை இப்பாடசாலையில் உறுதியாகத் தளம் கொண்டு வளர்ந்து, பல சாதனைகளையும் கண்டு இற்றைவரை இப் பாடசாலையின் ஒரு பாரம்பரியத் தலைமையாகக் கணிக்கப்படுகிறது என்பது பாடசாலை வரலாற்றிலே கோடிட்டு காட்ட வேண்டிய ஒரு அம்சமாகும்.

விடுதி வசதியோடு கூடிய பாடசாலையாயிருந்தமையாலும், ஒழுக்கத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் பெயர் பெற்றிருந்தமையாலும், வடமராட்சிக்கு வெளியேயிருந்தும் மாணவிகள் இப் பாடசாலையை நாடி வந்தனர். ஆசிரிய வளப் பற்றாக்குறை காரணமாக இடையில் சோர்வுற்றிருந்த உயர்தர கலைப் பிரிவு வகுப்புகள் அதிபர் அவர்களின் முயற்சியினால் புத்துயிர் பெற்றன வசதிக் கட்டண அமைவில் நிறைமனம் வாய்ந்த ஆசிரியர்களை நியமித்து வகுப்புகள் செம்மையாக நடத்த ஒழுங்கு செய்தார். அவரது முயற்சியால் 1973-ம் ஆண்டு முதல் மீண்டும் பல்கலைக்கழகக் கலைத்துறைக்கு மாணவிகள் தெரிவாக ஆரம்பித்தனர். உயர்தர வகுப்புகளுக்கு மட்டுமல்லாது சாதாரண தர வகுப்புகளிலும் ஆசிரியர் இட மாற்றங்களால் வெற்றிடங்கள் ஏற்பட்ட வேளைகளில் பிரத்தியேக ஆசிரியர்கள் மூலம் வகுப்புகள் நடத்துவித்தார். அயற்பாடசாலை ஆசிரியர் மூலமாகவும் பயிற்றுவித்தார்.

செல்வி. R. J. மேன் அவர்கள் முயற்சியால் 1970-ம் ஆண்டளவில் கல்லூரிக்கு பான்ட் வாத்தியக் கருவித் தொகுதியும் பெறப்பட்டது. மாணவிகளுக்கு இசைக் கருவிகளைப் பயிற்றுவிக்க ஆசிரியையையும் நியமித்தார். கல்லூரி விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் மட்டுமல்லாது, யாழ் மாவட்டத்தில் நிகழ்ந்த மாணவர் பங்குபற்றும் நிகழ்வுகளிலும் இக் கல்லூரியின் பான்ட் வாத்தியக் குழு மெருகு சேர்த்தது சாரண இயக்கமும் அக்காலத்தில் இங்கு சிறப்பாக வளர்ந்தது. மேலைத்தேய சங்கீத ஆசிரியை ஒருவரும் நியமிக்கப்பட்டு மாணவிகள் பயில வசதி செய்தார். கலை நிகழ்ச்சி எனினும், உடற்பயிற்சி அணிவகுப்பு நிகழ்ச்சியெனினும் ஆசிரியர்களுக்குத் துணையாக, வெளியிலிருந்து பயிற்றுவிப்போரை அழைத்து, தாமே நேரில் நின்று பயிற்சியை அளிப்பார். இரவிலும் கூட மாணவிகள் விடுதியில் தங்கியிருந்து அவருடைய நேரடி மேற்பார்வையில் பயிற்சி பெற்ற சந்தர்ப்பங்கள் பலவாகும். எந்த நிகழ்விற்கும் போதிய எவு பயிற்சியும், தேவையான ஒத்திகையும் கொடுப்பது அவருடைய தனிப்பண்பு. எல்லாத் துறைகளிலும் அவருக்கிருந்த பரந்த அறிவும் ஆற்றலும் அவருடைய நேரடி மேற்பார்வைக்கு அர்த்தமும் பலனும் சேர்த்தது.

இக் கல்லூரி கிறிஸ்தவ கல்லூரியாக ஆரம்பமான போதிலும் இங்கு கல்வி பயிலும் பெரும்பான்மையான சைவ மாணவர்களின் சமய அறிவையும், கலாசாரத்தையும் மரபையும் பேணும் வகையில் சரஸ்வதி பூசை பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. சைவசமயப் பரீட்சைகளிலும், போட்டிகளிலும் மாணவர்கள் உற்சாகத்தோடு பங்கேற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார்கள். விவேகானந்தாசையப் பரீட்சைகளிலும், சிலதெறிக் கழகப் பரீட்சைகளிலும் இக்

கல்லூரி மாணவர்கள் சிறப்புப் பரிசில்களைப் பல முறை பெற்றுள்ளார்கள். சிவராத்திரி விழாக் காலங்களில் ஆண்டு தோறும் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலான திருத்தலங்களுக்குச் சமயச் சுற்றுலாக்கள் நடத்தப்பட்டன.

ஏறக்குறைய 1964-ம் ஆண்டளவில் கல்லூரி வளவின் வடக்குப் புறமாக ஒரு வகுப்பறைத் தொகுதியும், 1967 இல் முன்னர் ஆசிரிய விடுதியிருந்த இடத்தில் இரு வகுப்பறைகளும் (தற்போதைய காரியாலயம்) 1973-ம் ஆண்டளவில் உயிரியல் ஆய்வுகூடம் முன்பாக தேவாலய எல்லையுடன் புதிய வகுப்பறைத் தொகுதியும் அமைக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் இப் புதிய கட்டிடம் குண்டு வெடிப்பில் சேதமுற்ற போதும் வெகு விரைவிலேயே இது திருத்தியமைக்கப் பட்டது.

ஆண்டு தோறும் நிகழ்ந்த சாரணப் பாசறைகளில் ஆசிரியைகள் செல்வி. பா. முத்து, செல்வி. சவேலுப்பிள்ளை செல்வி R. இராசரட்ணம், திருமதி. A. விசுவகுமார் ஆகியோரின் வழிநடத்தலோடு மாணவிகள் பங்கு பற்றினர் செல்வி, V. புவனேஸ்வரி நடன ஆசிரியையாக கடமை ஆற்றியபோது, 'சாகுந்தலம்' என்னும் நாட்டிய நாடகம் அகில இலங்கையில் முதற்பரிசு பெற்றமை, இக் கல்லூரி கலைத்துறையில் அடைந்த வளர்ச்சிக்கு சான்று பகர்வதாகும்.

இப் பாடசாலையின் வளர்ச்சிக்காகத் துணிவுடனும் திறனுடனும் பல கருமங்களை ஆற்றி வந்த செல்வி. R. J. மேன் அவர்கள் 1974 ம் ஆண்டின் இறுதியில் பதவி உயர்வு பெற்று, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலைக்கு அதிபராக மாற்றலாகிச் சென்றார். மிகச் சிறந்த ஆளுமையும், துணிவும், ஆற்றலும், சகலதுறை வல்லமையும், சேவையில் பற்றும் கொண்ட செல்வி. R. J. மேன் அவர்களால் ஏறக்குறைய 4 ஆண்டுகள் ஆசிரியராகவும், உப அதிபராகவும், பதினைந்து ஆண்டுகள் அதிபராகவும் இக் கல்லூரிக்கு வழங்கப்பட்ட சேவை வார்த்தைகளின் விரிவிற்கு அப்பாற்பட்டது எனலே கூறலாம் ஒப்பிடமுடியாத ஆளுமைத்திறன் கொண்ட அத்தலைவியின் இடமாற்றம் கல்லூரித் தாய்க்கு பெரும் இழப்பேயாகும்.

1975-ம் ஆண்டு ஜனவரி மாதம் திருமதி. க. இரத்தினசாமி அவர்கள் அதிபராகப் பதவி ஏற்றார்கள். 1978 ஏப்பிரல் வரையான ஒரு குறுகிய காலமே இவரது பதவிக் காலமாக இருந்த போதும் நிறைவான பல சேவைகளை இக்காலத்தில் இவர் இப் பாடசாலைக்கு ஆற்றியிருக்கிறார் நூலகத்திற்கான புதிய கட்டிடமும் அதனோடிணைந்த வகுப்பறைகளும் இவரது காலத்தில் அமைக்கப்பட்டன. பாடசாலை மாணவர்களுக்கான பற்சிகிச்சை நிலையம் 1976-ம் ஆண்டு புதிய சட்டிடத்தோடு பாடசாலை முன்றலில் அமைக்கப்பட்டு, பற்சிகிச்சைக்குப் பொறுப்பான தாதி உத்தியோகத்தரும் நியமிக்கப்பட்டு, மாணவர்களின் பற்சுகாதாரம் பேணும் நற்சேவை ஆரம்பிக்கப்பட்டது. வெகு காலத்திலேயே முதன்முதலாக 1977 இல் H. N. C. E. விஞ்ஞான வகுப்புகள் எமது கல்லூரியிலே ஆரம்பிக்கப்பட்டன. இது வெறுமனே கல்லூரியின் தரத்தைக் கூட்டும் ஒரு நிகழ்வு மட்டுமல்ல, பாடசாலைப் புறக் கிருத்தியங்களிலும், விழாக்களிலும் சிறப்பான பங்களிப்பு தரவல்ல அணி சேர்க்கவல்ல, ஆளுமைப் பண்பில் தம் பின்னுளோருக்கு வழிகாட்டவல்ல, சிரேஷ்ட மாணவ வளத்தைக் கல்லூரிக்கு வழங்கும் ஒரு பரிணாமப்படியாகும் இக் கல்லூரியின் ஆரம்பகாலம் தொட்டு காலத்திற்குக் காலம் ஆரம்பப் பிரிவில் ஆண் பிள்ளைகள் கல்வி பயின்று வந்துள்ளார்கள். 1976-ம் ஆண்டு முதல் 1981 வரை ஆண் பிள்ளைகள் இங்கு கல்வி கற்றார்கள்.

திருமதி. க. இரத்தினசாமி அவர்களின் பின் திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள் அதிபரானார். உயர்கல்வி தவிர்ந்த இவரது மாணவ வாழ்க்கை முழுவதும், உயர்கல்வியின் பின்னான ஆரிய சேவை முழுவதும் இக்கல்லூரியிலேயே பிந்ததென்பது குறிப்பிடவேண்டிய அம்சமாகும். இவர் அதிபரான ஆண்டிலே [1978] மாணவிகள் யாழ் மாவட்டக் கைத்தொழில் நிலையங்களைப் பார்வையிடக் கல்விச் சுற்றுலா சென்றனர். ஏறக்குறைய ஒரு தசாப்தத்தின் பின் 1980ம் ஆண்டில் இப்பாடசாலை மாணவிகள் அகில இலங்கை ரீதியிலான உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடத்தை மீண்டும் ஈட்டிக் கொண்டனர் திருமதி. பா. வீரசிங்கம் [செல்வி. பா முத்து] அவர்களிடம் இப்பாடசாலையில் மாணவியாயிருந்த திருமதி. நேசமணி கதிகாமநாதன் [செல்வி. நே. கனகரத்தினம்] உடற்பயிற்சி ஆசிரியராக அப்போது இருந்தார். 1982 இல் மீண்டும் சிவராத்திரி விழாவின்போது சமயச் சுற்றுலா இடம் பெற்றது

இக்காலகட்டத்தில் விடுதி வசதி மீளவும் ஆரம்பிக்கப்பட்டதால் வெளியூர் மாணவிகளின் வருகை அதிகரித்தது உயர்தர விஞ்ஞான வகுப்பு மாணவிகள் இடையிடையே விஞ்ஞான வெளிக்கள நிலையம் நடத்திய பாசறை வகுப்புகளில் கலந்து கொண்டனர். பரிசுகளும் பெற்றனர். இக்கல்லூரியிலிருந்து முதன் முதலாக பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்திற்கு 1982ம் ஆண்டு செல்வி கனைவாணி குமாரசாமி செல்வி குணராணி இளம்பூரணம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டமை கல்லூரி வரலாற்றில் ஒரு படிக்கல் ஆகும். 1985ம் ஆண்டளவில் இங்கு உயர்தர வர்த்தக வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இங்கிருந்து பல்கலைக் கழக கலை, முகாமைத்துவ, வர்த்தக, பொறியியல்

மருத்துவ, கணித, விஞ்ஞான கற்கை நெறிகளுக்கு அனுமதி பெறும் மாணவிகள் தொகை படிப்படியாக அதிகரித்தது.

முதன்முதலாக மாடிக்கட்டிடமொன்று 1987ம் ஆண்டு அமைக்கப்பட்டது எமது கல்லூரி எல்லா வளங்களிலும் எல்லா வழிகளிலும் சிறப்பான சீரான வளர்ச்சியுடன் முன்னேறிக் கொண்டிருந்தவேளை எண்ணாமல் எதிர்பாராமல் போரிடர் சேர்ந்தது. 1987ம் ஆண்டு வடமராட்சியில் நிகழ்ந்த இராணுவ நடவடிக்கைகளின் போது, நடைமுறை வாழ்வு குலைந்து, மக்கள் இடம் பெயர்ந்து மீளவும் வழமை மெல்லத் திரும்பியவேளை உடுப்பிட்டி மற்றும் கரவெட்டி மக்களுக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. அமெரிக்கன் மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்டு ஒரு நூற்றாண்டு காலத்துக்கும் மேலாகக் கல்விப் பணியாற்றி, அவ்வூரின் அறிவுக் கண்களாகத் திகழ்ந்த உடுப்பிட்டி அமெரிக்கன மிஷன் கல்லூரி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி இரண்டும் எரியுண்டு அழிந்து கிடந்தன.

இடிந்துபோன எமது கல்லூரியின் நடுவே உறுதியோடு நின்ற மரங்களே எம்மை வரவேற்றன. கலை வகுப்பு ஆவணங்களோ, ஆய்வுகூட உபகரணங்களோ, விளையாட்டுக் கருவிகளோ, தளபாடங்களோ எதுவுமே எஞ்சியிருக்கவில்லை. எங்கள் அன்னைக்கு எஞ்சிய சொத்து அவளது மாணவச் செல்வங்களும், ஊற்றெனவர அவள் வரையாது வாரி அளித்த கல்விச் செல்வமும் மட்டுமே ஆனால் அத்தோடு அந்தச் சரித்திரம் ஓய்ந்து விடவில்லை.

தளராத உறுதியும் செயலாற்றும் திறனும் கொண்ட அதிபர், ஆசிரியர்களையும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரையும் உந்து நிலையிலும், உதவிபோடும் விளையாட்டு மைதான ஒரமாக இரு கொட்டில்கள் அமைத்தார். இவ்வேளை எமது சகோதர பாடசாலையான உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் கனடாக்கிளையினர் தமது கடமை போலுணர்ந்து உதவிக் கரம் நல்கியமை என்றும் மறக்கற்பாலதன்று கொட்டில்களிலும் மரநிழல்களிலும் வெறுந்தரையில் அமர்ந்து எமது பிள்ளைகள் உற்சாகத்தோடு கல்வி பயின்றனர்.

அரசியலில் ஏற்பட்ட தற்காலிக அமைதிச் சூழலில், கல்லூரியின் புனரமைப்புப் பணிகளுக்கான திட்டங்கள் அமைக்கப்பட்டு, ஆரம்பிக்கப்பட்ட வேளையில் 1987 இன் இறுதிப் பகுதியில் இந்திய இராணுவம் வந்தது. எமது கல்லூரி இராணுவ முகாமாகவேண்டிய துர்ப்பாக்கியநிலை நேர்ந்தது. அக்காலத்தில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அடைந்த கஷ்டங்களைச் சொல்லில் வடிக்கமுடியாது. பாடசாலையைச் சுற்றிலும் இராணுவக் காவலரண்கள். எந்நேரமும் ஆயுதபாணிகளான இராணுவத்தினரின் நடமாட்டம் இத்தனை கஷ்டங்கள் மத்தியிலும், பயமும் பீதியும் நிறைந்த நேரத்திலும் பாடசாலையை இடம் பெயர்த்துச் செல்லாது, பாடசாலை ஆசிரிய, மாணவ வளங்களை இழந்து வீழ்ச்சியுறவிடாது அத்தனை சிறார்களையும், ஆசிரியர்களையும் எத்தவித அசம்பாவிதத்திற்கும் ஆளாகாத வண்ணம் வழிநடத்திச் சென்ற அதிபரின் அசாத்தியத் துணிவை என்றும் போற்றுதல் கடனாகும். எக்கருமத்திலும் அவர் வேண்டுகின்ற இறைகருணையே அவருக்குத் துணையும் பலமுமளித்தது என்பதில் ஐயமில்லை. இதன் இடைக்காலத்தில் 2 ஓட்டுக் கொட்டில்களும், குறைநிரந்தர (Semi Permanent) வகுப்பறைத் தொகுதியொன்றும் விளையாட்டு மைதான ஓரத்தில் அமைக்கப்பட்டு ஆரம்பப் பிரிவுக்கான மாடிக்கட்டிட வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி, வாணி விழா, ஒளி விழா (கிறிஸ்மஸ்) முதலான விழாக்கள், சாரணியம் முதலான புறக்கிருத்தியங்கள் தடைப்பட்டிருந்தபோதும் கல்வித் திணைக்களம் நடத்திய ஆங்கிலதின, தமிழ்த்தினப் போட்டிகளிலே பங்குபற்றி வெற்றியீட்ட மாணவர்கள் தவறவில்லை. 1989 ம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டியில் மத்திய விரிவுக் கட்டுரை ஆக்கத்தில் மாகாணசபை மட்டத்தில் இக்கல்லூரி மாணவி முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இரு வருடங்களுக்கும் அதிகமாக இங்குநிலை கொண்டிருந்த இந்திய இராணுவத்தினர் 1990 முற் பகுதியில் வெளியேறினர். மீளவும் ஏற்பட்ட தற்காலிக அமைதியில் புனரமைப்புப் பணிகள் உத்வேகம் பெற்றன. எனினும் 1990 ம் ஆண்டு ஜூனில் போர் மேகம் சூழ்ந்தது. கல்லூரி சிறிது காலம் இடம் பெயர்த்திருந்த போதும் 1990-ம் ஆண்டு இறுதியில் தனது இடத்திலேயே கல்லூரி இயங்க ஆரம்பித்தது. கட்டிடப் பணிகள் ஸ்தம்பிதமாயினும், கல்லூரியின் வழமையான நிகழ்வுகள் தொடர்ந்தன. சிலவருட இடைவெளியின்பின் 1992 இல் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. 1991ம் ஆண்டு மாசி மாதம் முக்கல்லூரியின் ஏற்பிகளில் ஒருவரான செல்வி. R. J. மேன் அவர்கள் அமரத்துவம் அடைந்தார்கள். 1992 மாசி 18 ல் அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள், பெற்றார், பழைய மாணவிகள் கூடி அன்னாரின் ஞாபகத்தை அனுஷ்டித்தனர். 1992ம் ஆண்டு வாணிவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 1991 முதல் மீண்டும் நவராத்திரி நாட்களில் கும்பம் வைத்து பூசைகள் முறையாக நடைபெற்று வருகின்றன கிறிஸ்துவின் பிறப்பினைக் கொண்டாடும் ஒளிவிழாவும் மீண்டும் 1991 முதல் டிசம்பர் மாதத்தில் நடைபெற்று வருகிறது.

1992-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ம் திகதி கொண்டாடப்பட்ட உலக ஆசிரிய தின நிகழ்வுகளில் எமது கல்லூரி ஆரம்பப் பிரிவின் பிரிவுத் தலைவியாகத்

கடமையாற்றிய திருமதி. தங்கமணி மகேஸ்வரன் அவர்கள் வடமராட்சிக் கோட்டத்திலும், யாழ் மாவட்டத்திலும் சிறந்த ஆசிரியைகளில் ஒருவராகக் கௌரவிக்கப்பட்டமை பெருமைக்குரியதாகும். இவர் இக்கல்லூரியின் பழைய மாணவியென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1992 ம் ஆண்டு ஜூலை மாதம் கல்வித் திணைக்களத்தின் புதிய நியமங்களுக்கேற்ப பாடசாலை அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. 1992ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18ம் திகதி மீளவும் எமது பழைய மாணவர் சங்கம் புனருத்தாரணம் செய்யப்பட்டு புதிய நிர்வாகசபை தெரிவானது. மிக நீண்ட காலத்தின் பின் 1992-ம் ஆண்டு இறுதியில் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்புவிழா நடைபெற்றது. இடர்கள் சூழ்ந்த நிலையிலும், சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதி பெற்று 3 மாணவிகளுக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளையினர் அளித்த பணப்பரிசில்கள் விழாவில் வழங்கப்பட்டன. கல்லூரியின் பதிவேடுகள் அழிந்தமையால், கடந்த காலப் புள்ளிவிபரங்கள் இல்லாதபோதும், திரட்டிய விபரங்களின் அடிப்படையில் கடந்த பத்தாண்டுகளில் பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களுக்கும் பரிசு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

விஞ்ஞான ஆய்வுகூடங்கள் இல்லாமையால் தற்காலிக ஆய்வுகூடமாக கல்லூரியின் நூலகக்கட்டிடம் சிறிதளவு திருத்த வேலைகளின் பின் பயன்படுத்தத் தொடங்கியது. கல்லூரியின் நூலகமாகப் பயன்படுத்தும் வகையில் திரு. இராஜரட்னம் அவர்கள் கல்லூரியின் அண்மையிலுள்ள தமது வீடொன்றை அன்பளித்தார். கல்லூரியில் தொன்று தொட்டு இயங்கி வந்த யாழ்ப்பாணம் 21 (21st Jaffna) சாரணிகள் குழு மீள இயங்கச் செய்வதற்கான பூர்வாங்கச் செயற்பாடுகள் 1992 இல் ஆரம்பமாயின.

1992-ம் ஆண்டு இவ்வாறு புனருத்தாரண முயற்சிகளுடனும், விழாக்களுடனும் நிறைவெய்த 1993ம் ஆண்டு பிறந்தது. இவ்வாண்டு எமது கல்லூரி வரலாற்றில் ஒரு மைல் கல். 1993 இல் கல்லூரித் தாய்க்கு 125 வயது நிறைவதைக் குறிக்குமுகமாக பழையமாணவர் சங்கத்தினுதவியோடும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளையினரின் உதவியோடும் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர், பழையமாணவர், பெற்றோர் அனைவரும் இணைந்து ஆரம்பவிழாவொன்றினை 1993 மார்சி 19 இல் கொண்டாடினார்.


1993 ம் ஆண்டு மார்சி 27-ம் திகதி இக்கல்லூரியுடன் 50 ஆண்டுகள் பிணைந்திருந்த, 1978 முதல் அதிபராக இக்கல்லூரியை வழிநடத்திய திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள் பிரியாவிடை பெற்றார். அதிபர் பதவியிலிருந்து அவர் விடைபெற்ற போதும், அவரென்றும் இக்கல்லூரியின் பழைய மாணவி இன்றும் அவர் எமது பழைய மாணவர் சங்கத் தலைவராயிருந்து கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பணியற்றுகிறார்.

இக்கல்லூரியின் அதிபர்கள் ஒவ்வொருவரும் பெரும் பான்மையாக, முன்னைய அதிபர்களின் உப அதிபர்களாக அமைந்திருக்கிறார்கள். அம்மரபிலேயே இன்றைய அதிபர் திருமதி. இ. குட்டித்தம்பி அவர்களும் இக்கல்லூரியில் 6 ஆண்டுகள் ஆசிரியராகவும் 2 வருடங்கள் பிரதி அதிபராகவும் பணியாற்றியபின் 1993 மே மாதம் அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார்.


1993-ம் ஆண்டில் கல்வித் திணைக்களம் அளித்த நிதிமூலம், சேதமுற்றிருந்த கல்லூரி மண்டபம், இரசாயன ஆய்வுகூடம், மனையியல்கூடம் என்பன திருத்தியமைக்கப்பட்டுள்ளன. விடுதியுடன் இணைந்த கட்டிடங்களும் திருத்தப்படுகின்றன.


இத்துணை இடர்கள் மத்தியிலும் தனது கல்விப் பணியைத் தொடரும் எம் கல்லூரி பழைய நிலையை அடைந்து மேன்மேலும் வளர்கண்டு வரலாறு படைக்க வேண்டுமென வாழ்த்திப், பணிந்து அமைகின்றேன்.


மைதானங்களில் நாங்கள்




























எமது கல்லூரியும் விளையாட்டுத்துறையும்

செல்வி. பத்மராணி பத்மநாதன்
உடற்கல்வி ஆசிரியை,
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
பழைய மாணவி (1974 — 1988)

'விளையாட்டு இல்லாமல் கல்வி பூரணமடையாது' என்பது ஒரு சிறந்த கருத்தாகும். விளையாட்டானது உடல்நலம் மட்டுமன்றி சமுதாய வாழ்க்கை, நல்லவழியில் பொழுதுபோக்குதல் மற்றும் வேலையில்லாதபோது சோம்பேறித்தனம் இல்லாமல் நேரத்தைப் பயன்படுத்தல், நற்குண அபிவிருத்தி, சம்பிரதாயக் கோட்பாடு, கட்டுப்பாடு முதலிய நன்மைகளையும் அளிக்கின்றது.

உடற்பயிற்சியானது "டிரில்" எனப்படும் மேனாட்டுப் பயிற்சியினாலும் சூரிய நமஸ்காரம், யோகாசனம் போன்ற சுயதேசப் பயிற்சிகளினாலும் மனிதனின் உடல் நலத்திற்கு ஒரு தனிச்சிறப்பினை அளிக்கும். இவ்வித உடற்பயிற்சியை தனியாய்ப் பழகினாலும் சரி பலபேர்களுடன் ஒரு கூட்டமாகப் பழகினாலும் சரி உடல் நலத்தையும் நல்ல உரத்தையும் மட்டுமே கொடுக்கும் ஆனால் மைதானத்தில் ஆடும் படியான கட்சி விளையாட்டுகளும் ஒட்டப்பந்தயங்களும் உடல் நலத்துடன் இனநல அபிவிருத்தியையும் கட்சி விசுவாசத்தையும் இன்னும் பல அரிய நலன்களையும் அளிக்கும் ஆகையால்தான் ஓர் ஆங்கில நிபுணர் விளையாட்டின் புகழைப்பற்றிப் பேசும்போது 'வெலிங்டன் பிரபு', 'ஈட்டன்' பள்ளி மைதானத்தில் விளையாடியதால் தான் 'வாட்டலூ' சண்டையில் நெப்போலியன் என்ற மாபெரும் வீரனைத் தோற்கடிக்க முடிந்தது என்றார்.

இவ்வாறாக உடற்கல்வியின் சிறப்பை நாம் கூறுவோமேயானால் தொடர்ந்து கூறிக்கொண்டே போகலாம் விளையாட்டின் மூலம் ஒரு மனிதன் தனது உடல், உள, சமூக மன எழுச்சி விருத்தியை ஏற்படுத்திக் கொள்கிறான். ஒரு மனிதன் எவ்வளவு தான் கற்றவனாக இருந்தாலும் சுகதேகியாக இல்லாவிட்டால் கற்றவையே பயனற்றதாகும் எனவே விளையாட்டே ஒரு மனிதனைப் பூரண மனிதனாக்குகின்றது.

யாழ் மாவட்டத்திலே பழைய காலங்களில் சில பாடசாலைகளிலேயே விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இவற்றில் ஒன்றாக எமது பாடசாலை திகழ்ந்துள்ளது. ஆரம்ப காலத்திலிருந்தே விளையாட்டானது எமது பாடசாலையில் இருந்து வந்தாலும் செல்வி மதியாபரணம் காலத்தில் சிறிது முன்னேற்றமடைந்து காணப்பட்டுள்ளது.

இக் காலத்தில் சுதேச விளையாட்டுக்களான கிளித்தட்டு, வாரோட்டம் போன்றனவும் முக்கியமாகத் திகழ்ந்துள்ளன. செல்வி. மதியாபரணம் அவர்களைத் தொடர்ந்து செல்வி. ஸ. வன்னியசிங்கம் அவர்கள் எமது பாடசாலையைப் பொறுப்பேற்றார். இவருடைய காலத்தில் செல்வி. இராசநாயகம், செல்வி. செல்லத்துரை, செல்வி. வின்னிலோ என்போர் விளையாட்டுத்துறை ஆசிரியராகக் கடமையாற்றினார்கள். இவர்களின் பின் திருமதி. குகதாசன் விளையாட்டுத்துறை ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

ஒரு பாடசாலையின் விளையாட்டுத்துறை வளர்ச்சியடைய வேண்டுமாயின் ஒரு மரத்தின் வளர்ச்சிக்கு ஆணிவேரும் பக்கவேரும் எவ்வாறு உதவுகின்றதோ அதுபோன்று உடற்கல்வி ஆசிரியர் ஆணிவேராகவும் அதிபரும் ஏனைய ஆசிரியர்களும் பக்கவேர்களாகவும் திகழவேண்டும். இதற்கு உதாரணமாக எமது பாடசாலையையே குறிப்பிடலாம். ஏனெனில் எமது அதிபர், விளையாட்டு ஆசிரியர் திருமதி. குகதாசன் ஆகியோர் சேர்ந்து விளையாட்டிற்காக அரும்பாடுபட்டனர்.

இவருடைய காலத்திலேயே ரெனிஸ் மைதானம் அமைத்து ரெனிஸ் விளையாடப்பட்டது. அத்துடன் **Badminton**, சதுரங்கம் போன்றனவும் அறிமுகப்படுத்தப்பட்டது செல்வி. ஸ. வன்னியசிங்கம் அதிபர் அவர்களின் தூண்டுதலினால் பெண்கள் பாடசாலையில் வலைப்பந்தாட்ட மைதானமொன்று வேண்டுமென்று அத்திவாரம் அமைக்கப்பட்டது. இதற்கு எமது விளையாட்டுத்துறை ஆசிரியை மிகவும் உழைத்தார்.

இப்படியாக வளர்ந்துவரும் காலத்தில் எமது பாடசாலை அதிபராக செல்வி. **R. J. Mann** அவர்கள் கடமை ஏற்றார். இவருடைய ஆரம்ப காலத்திலும் திருமதி. குகதாசன் அவர்களே விளையாட்டுத்

துறை ஆசிரியராகக் கடமையாற்றிப் பதவியுயர்வு பெற்று ஒரு விளையாட்டுத்துறை அதிகாரியாக பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்றுவிட்டார்.

இவருடைய காலத்தைத் தொடர்ந்து எமது விளையாட்டுத்துறை ஆசிரியராக திருமதி. மு. வீரசிங்கம் (செல்வி. பா. முத்து) அவர்கள் கடமையேற்றார். எமது பாடசாலை விளையாட்டுத்துறை வளர்ச்சியில் இக்காலம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. எனவே இக்காலத்தை எமது கல்லூரி விளையாட்டுத்துறையின் பொற்காலமாகக் கருதலாம்.

எமது அதிபரான செல்வி. **R. J. Mann** அவர்கள் எமது பாடசாலைக்காகத் தன்னையே அர்ப்பணித்து அரிய பல தொண்டுகளைச் செய்தார். அதில் ஒரு முக்கியமான சேவை என்னவெனில் எமது பாடசாலை வளவின் தெற்கு மேற்கு எல்லையில் குளமும் குட்டையுமாக இருந்த நிலப்பரப்பை ஒரு சமதரையாக்கி ஒரே நேரத்திலேயே பல குழுக்கள் உடற்பயிற்சி செய்யத்தக்க, வடமராட்சியில் இயற்கை வளங்களுடன் அமைந்த ஒரு மைதானத்தை கூற்றமதிலுடன் அமைப்பித்தார். இச் சாதனையைக் கல்லூரி என்றும் மறக்க முடியாது.

இது மட்டுமன்றி அடித்தளம் அமைக்கப்பட்டிருந்த வலைப்பந்தாட்ட மைதானத்தை சிறப்பாக அமைப்பித்த பெருமையும் இவரையே சாரும். இக்காலத்தில் எமது பாடசாலை உடற்பயிற்சியில் யாழ் மாவட்டத்திலேயே முன்னணியில் திகழ்ந்ததுடன் அகில இலங்கை ரீதியிலும் சிறப்புப்பெற்று விளங்கியது போற்றுதற்குரியதாகும். எமது பாடசாலையை அகில இலங்கை ரீதியிலும் அறிய வைத்த பெருமை அதிபரான செல்வி. **R. J. Mann** அவர்களையும் விளையாட்டு ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி மு. வீரசிங்கம் (செல்வி. முத்து) அவர்களையுமே சாரும். செல்வி முத்து அவர்கள் பாடசாலையின் விளையாட்டுத்துறையே தனது வாழ்வென நினைத்து அல்லும் பகலும் பாடசாலைக்காக உழைத்தார்.

செல்வி முத்து அவர்களின் அயராத உழைப்பினால் எமது பாடசாலை உடற்பயிற்சிக் குழுக்கள் மூன்று முறைகள் அகில இலங்கையில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டன குறிப்பாகச் சொன்னால் 1965 ஆம் ஆண்டு 15 வயதிற்குக் கீழ்ப்பட்ட பிரிவு முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இக் குழுவிற்கு செல்வி. சந்திரவிமலா கந்தசாமி அணித்தலைவராக இருந்தார். அதனைத் தொடர்ந்து 1970 ஆம் ஆண்டு 13, 15 வயதுக் குழுக்கள் இரண்டும் அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டன. இவற்றில் 13 வயதுப் பிரிவுக் குழுவின் தலைவியாக செல்வி. ரூபராணி செல்வரட்ணமும் 15 வயதுப் பிரிவுக் குழுவின் தலைவியாக செல்வி. மேரி ஏபிரகாமும் இருந்தனர்.

வடமராட்சியிலேயே விளையாட்டுப் போட்டி ஆரம்பத்தில் ஒலிம்பிக் தீபம் கொண்டு செல்லும் முறையை முதன்முதல் எமது அதிபரான செல்வி **R. J Mann** அவர்களே ஆரம்பித்து வைத்தார். இவருடைய காலத்தில் மெய்வன்மைப் போட்டியும் முன்னேற்றமடைந்து காணப்பட்டது. இவற்றைவிட வலைப்பந்தாட்டம், ரெனிக்கொயிட், எறிபந்து, பூப்பந்து போன்றவற்றிலும் எமது பாடசாலை சிறந்து விளங்கியது.

செல்வி. **R. J. Mann** அவர்கள் அதிபராக இருக்கையில் பல உடற்கல்வி ஆசிரியர்கள் எமது பாடசாலையிலிருந்து தெரிவானார்கள். குறிப்பாகப் பூரணம் கந்தசாமி, நேசம் ஆறுமுகம், பாக்கிய சௌந்தரி தாமோதரம் போன்றோராகும். இவர்களை உருவாக்கிய பெருமை எமது அதிபரையே சாரும். இவரது காலத்திலேயே எமது பாடசாலைக்கு பான்ட் வாத்தியத் தொகுதியும் பெறப்பட்டது. இப்படியாக எமது பாடசாலை அகில இலங்கை ரீதியில் விளையாட்டுத்துறையில் ஒரு முன்னணிப் பாடசாலையாகத் திகழ்ந்த காலத்தில் 1978 ஆம் ஆண்டு எமது பாடசாலையின் புதிய அதிபராக திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள் கடமையேற்றார். இவருடைய காலமும் எமது பாடசாலை விளையாட்டுத்துறை வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இவர் எமது பாடசாலையிலேயே கல்வி கற்று, பின் நீண்டகாலமாகக் கற்பித்து, பல வருடங்கள் உப அதிபராகக் கடமையாற்றி, கல்வித்துறையில் மட்டுமன்றி விளையாட்டுத்துறையிலும் பல சாதனைகளை நிலைநாட்டியமையால் எமது பாடசாலையின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு மேலும் உறுதுணையாக இருந்தார்.

இக்காலத்தில் செல்வி நேசமணி கனகரட்ணம் அவர்கள் விளையாட்டுத்துறை ஆசிரியராகக் கடமையாற்றினார். இவர் எமது பாடசாலை பழைய மாணவி. இவர் பாடசாலைக் காலத்திலேயே விளையாட்டில் மிகவும் சிறப்புப்பெற்று விளங்கினார் இவர் செல்வி. முத்து அவர்களின் மாணவியாவார் அவருடைய உடற்பயிற்சிக் குழுவில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று பின் தான் ஆசிரியராக வந்ததும், தன்னுடைய ஒரு குழுவை அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைப் பெறவைத்து பாடசாலைக்குப் பெருமையைத் தேடித் தந்தார். இப்படியாக எமது பாடசாலையிலிருந்து வாழையடி வாழையாக உடற்பயிற்சி ஆசிரியர்கள் தோன்றிக் கொண்டேயுள்ளார்கள். இது போற்றுதற்குரியது.

இவருடைய காலத்தில் 1980இல் எமது பாடசாலையின் 15 வயதிற்குக் கீழ்ப்பட்ட உடற்பயிற்சிக்குழு அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றது சிறப்பிற்குரியதாகும். இக்குழுவிற்குச் செல்வி. பிரபகலா அமிர்தலிங்கம் தலைமை தாங்கினார். எமது விளையாட்டுத்துறை ஆசிரியரான செல்வி. நேசமணி கன்கரட்ணம் அவர்களின் பயிற்றுவித்தலினாலேயே அவரது மாணவிகளான செல்வி. ச. முத்துச்சாமி, செல்வி. ப. பத்மராணி, செல்வி. கி. தேவகி போன்றோர் தற்போது உடற்பயிற்சி ஆசிரியர்களாகத் திகழ்கிறார்கள் எனவே நான் முன்பு கூறியது போன்று எமது பாடசாலையிலிருந்து உடற்பயிற்சியாசிரியர்கள் வாழையடிவாழையாகத் தோன்றுகின்றார்கள் என்பது பொய்யல்ல.

எனவே இவர்களை உருவாக்கிய பெருமை அதிபரான திருமதி. பா. இராசேந்திரசிங்கத்தையும் விளையாட்டு ஆசிரியரையுமே சாரும். இக் காலத்திலும் பாடசாலை உடற்பயிற்சியில் மட்டுமன்றி வலைப்பந்தாட்டம், எறிபந்து, மெய்வன்மைப் போட்டிகளிலும் சிறப்புப்பெற்று விளங்கியது.

இதன்பின் தற்போது திருமதி இ. குட்டித்தம்பி அவர்கள் அதிபராக கடமை ஏற்றுக்கின்றார். இவர் எமது பாடசாலையிலேயே ஆறு வருடங்கள் ஆசிரியராகவும் இரு வருடங்கள் பிரதி அதிபராகவும் கடமையாற்றியமையாலும் வினையாட்டில் ஈடுபாட்டுடன் விளங்கியமையாலும் இவரும் எமது பாடசாலை விளையாட்டுத்துறைக்கு மேலும் உறுதுணையாக உள்ளார். இவருடைய காலத்தில் செல்வி. பத்மராணி பத்மநாதன் அவர்கள் விளையாட்டுத்துறை ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைகளிலும் இவருடைய காலத்தில் எமது பாடசாலை உடற்பயிற்சிக் குழுக்கள் மூன்றும் யாழ் மாவட்டத்திலேயே மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டன. இவற்றைவிட மெய்வன்மைப் போட்டி, வலைப்பந்தாட்டம் போன்றவற்றிலும் சிறப்புப்பெற்று விளங்குகின்றது

இவ்வாறே எமது பாடசாலை விளையாட்டுத் துறை மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென்று கடவுளை வேண்டிக்கொண்டு, இதுவரை காலமும் எமது பாடசாலையின் விளையாட்டுத்துறைக்காகப் பாடுபட்ட அதிபர்களையும், ஆசிரியர்களையும் நினைவு கூர்ந்து வாழ்த்தி எமது பாடசாலை 125 ஆம் ஆண்டைத் தாண்டிச் செல்லும் வேளையில் விளையாட்டுத்துறையில் மேலும் பல சாதனைகளைப் படைக்க வேண்டும் என்று அவாவி அமைகின்றேன்.

" மனிதனை மனிதனாக்கும் மதந்தான் இன்று நமக்குத் தேவை.
மனிதனை மனிதனாக்கும் கல்விதான் இன்று தேவை.
எல்லா வகைகளிலும் மனிதனை மனிதனாக்கும் தத்துவங்கள்
தான் இன்று நமக்குத் தேவை "

— சுவாமி விவேகானந்தர்

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் கலைத்துறை வளர்ச்சியும்

செல்வி. சறோஜாதேவி கதிரவேல், B. A.
ஆசிரியை,
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
பழைய மாணவி (1974 — 1988)

எமது கல்லூரி 1868ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் ஏழாம் நாள் ஆரம்பிக்கப்பட்டது. இது ஒரு சிறிய கல்விக்கூடமாகக் குறைந்தளவான மாணவிகளுடன் ஆரம்பிக்கப்பட்டாலும், உடுப்பிட்டியிலும் அதன் அயற்புறங்களிலும் வேறு பெண்கள் பாடசாலைகள் இன்மையால் எதிர்பார்த்ததைவிட மிகவிரைவில் மக்கள் ஆதரவைப் பெற்றது. இதற்கு முன் எமது கிராமங்களில் பெண்களின் கல்விநிலை மிகவும் குறைந்தளவிலேயே காணப்பட்டது. அதாவது பெண்கள் தமது கிராமிய வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைக் கல்வியை வீட்டில் பெற்றோரிடமிருந்தே கற்றுக்கொண்டனர். ஆனால் இக்கல்லூரியின் ஆரம்பத்தைத் தொடர்ந்து படிப்படியாகக் கிராமப் பெண்களின் கல்விநிலை உயர்வடைந்தது.

நீண்டகாலப்போக்கில் பல பெண்கள் இடைத்தரக் கல்வியில் சிறப்புறத் தேர்ச்சியடைந்தனர். ஆனால் அவர்கள் உயர்கல்வியைத் தொடர அயற் பாடசாலைகளை நாடிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. அன்றைய சமூகத்தில் நிலவிய கட்டுப்பாடுகள் மிகவும் இறுக்கமாக அமைந்திருந்தமையால் எல்லாப் பெண்களும் சேய்மையிலுள்ள கல்வித்தாபனங்களை நாடிச்செல்ல முடியவில்லை. இந்தக் கஷ்டமான நிலைமையை உணர்ந்த அதிபர் செல்வி. லீ வன்னியசிங்கம் அவர்கள் அரச அனுமதியுடன் 1958 இல் முதன்முதலாக உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கலைத்துறையை ஒரு பிரிவாக ஆரம்பித்து வைத்தார். இவரது இவ்வரும்பணி உடுப்பிட்டிக் கிராமப் பெண்களுக்கு மட்டுமன்றி அயற் கிராமப் பெண்களுக்கும் ஓர் வரப்பிரசாதமாக அமைந்தது. முதன்முதல் ஆரம்பித்த இக் கலைத்துறையில் மூன்று மாணவிகள் கல்வியை ஆரம்பித்தனர். இவர்களுக்குத் தமிழ்மொழி திரு. நமசிவாயம் பிள்ளை அவர்களினாலும் அரசியல் செல்வி சத்தியாதேவி (திருமதி. ச. கிருபரட்ணம்) அவர்களினாலும், சமஸ்கிருதம் திருமதி. கோபாலரட்ணம்மா அரியரட்ணம் அவர்களினாலும், இலங்கை வரலாறு செல்வி R. செல்லப்பா அவர்களினாலும் போதிக்கப்பட்டன. இவ்வாறு பலரது அயராவுழைப்பினால் கலைத்துறையிலிருந்து முதலாவது முறையிலேயே செல்வி. செல்லக்கண்டு வேலுப்பிள்ளை (திருமதி. செ. வரதராஜன்) அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு அனுமதி பெற்றுச் சென்றாரென்பது பெருமைக்குரிய விடயமாகும். இவரே எமது கல்லூரி மாதாவின் முதலாவது கலைப்பட்டதாரிப் புத்திரியுமாவார். தற்போது இவர் வவுனியா மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றுகின்றார். இவரது பல்கலைக்கழகப் பிரவேசம் எமது கல்லூரியின் கலைத்துறை வளர்ச்சிக்கு உரமிட்ட ஓர் நிகழ்வாகும். இதனைத் தொடர்ந்து படிப்படியாகக் கலைத்துறை வளர்ச்சியடைந்து வந்தது.

பின் அதிபர் செல்வி ஆர். ஜே. மேன் (Miss. R. J. Mann) காலத்தில் உயர்தர வகுப்பில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவியது. இதனை நிவர்த்தி செய்ய உபகாரச் சம்பளத்தில் பல ஆசிரியர்களை அமர்த்திக் கலைத்துறையைத் தளரவிடாது பேணினார். இவர் காலத்திலேயே எமது கல்லூரியில் உயர்தர மாணவர் மன்றமும் அமைக்கப்பட்டது. இது கல்வி சார்ந்த மற்றும் புறவேலை சார்ந்த செயற்பாடுகளில் முன்னணி வகித்து வந்தது. அத்துடன் எமது கல்லூரி விடுதிவசதி கொண்டதாகக் காணப்பட்டமையால், வடமராட்சியின் ஏனைய கிராமங்களிலிருந்தும், வலிகாமம் தென்மராட்சி போன்ற பகுதிகளிலிருந்தும் பல பெண்கள் விடுதியில் தங்கி கல்வி கற்று வந்தனர். இதனால் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. அத்துடன் பல்கலைக்கழக அனுமதிபெற்றுச் செல்லும் மாணவிகளின் எண்ணிக்கையும் சிறிது அதிகரித்தது.

தொடர்ந்து அதிபர் திருமதி. க. இரட்ணசாமி அவர்கள் காலத்தில் உயர்தர வகுப்பில் கலைத்துறை மேணப்பட்டதுடன் விஞ்ஞானத்துறையும் புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அடுத்து 1978இல் திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள் அதிபரானார், இவர் எமது கல்லூரியின் பழைய மாணவியாகவும் பின் உப அதிபராகவுமிருந்தே அதிபராகக் கடமையேற்றதினால் முன்னைய அதிபர்களின் அடியொற்றி உயர்தர வகுப்பில் கலைத்துறையை வளர்க்க அரும் முயற்சி செய்

தார் இக் காலத்தில் தமிழ் இந்துநாகரிகம். புவியியல், பொருளியல், வர்த்தகமும் நிதியும், அளவையியலும் விஞ்ஞானமுறையும், கணக்கியல், இசை, பரதம், மனைப்பொருளியல் எனக் கலைத்துறையினருக்கான பாடங்களும் விரிவடைந்து சென்றன அத்தோடு எமது கல்லூரியிலிருந்து பல்கலைக் கழகக் கலைப்பீடத்திற்குச் செல்லும் மாணவிகளின் எண்ணிக்கையும் வருடாவருடம் அதிகரித்து வந்தது.

உன்னதமாக வளர்ந்து வந்த எமது கல்லூரிக்கு 1983 ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்பட்ட நாட்டுப் பிரச்சினைகள் இடையூறாக அமையினும் 1987 ஆம் ஆண்டு '' ஒப்பரேஷன் லிபரேஷன் '' நடவடிக்கையின்போது எமது கல்லூரி இடிக்கப்பட்டதே மிகப் பெரிய இடையூறாகும். எமது நூல் நிலையம். தள பாடங்கள், காரியாலயக் கோப்புகள், பதிவேடுகள், உபகரணங்கள் பல முற்றாக அழிந்துவிட்டன. எனவே இவ்விடைக்கால வளர்ச்சியின் செம்மையான புள்ளி விபரங்களை இங்கே குறிப்பிட்டுக்காட்ட முடியவில்லை. அத்தோடு பல்கலைக்கழக அனுமதியை மட்டும் வைத்துக்கொண்டு கலைத்துறையின் வளர்ச்சியினைக் கணிப்பிடல் வழுவுடையதாகும். ஏனெனில் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகள் வருடாவருடம் துரித கதியில் அதிகரித்து வருகின்றது. 1987 ஆம் ஆண்டு 246 ஆகக் காணப்பட்ட வர்த்தகப் பிரிவு வெட்டுப்புள்ளி, 1990 ஆம் ஆண்டு 277 ஆக அதிகரித்ததைக் குறிப்பிடலாம். இவ்வாறு வருடாவருடம் பல்கலைக்கழக வெட்டுப் புள்ளிகள் அதிகரித்தாலும் எமது கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகக் கலைப்பீடத்திற்குத் தெரிவு செய்யப்படும் மாணவிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தே செல்கின்றது. எனவே வழுவுடையதாயினும் எமது கல்லூரியின் கலைத்துறை வளர்ச்சியைக் காட்ட பல்கலைக்கழகக் கலைப்பீடத்திற்கு அனுமதி பெற்றோரின் புள்ளி விபரத்தை இங்கே தருகிறேன்.

இங்கு 1987 ஆம் ஆண்டுவரை சிறுசிறு தளம்பல்களைக் காட்டினும் பொதுவாக வளர்ச்சியையே அவதானிக்க முடிகின்றது 1987 ஆம் ஆண்டின்பின் சிறுகச்சிறுகக் கல்லூரியைப் புனரமைத்துத் திட்டப்பட்டுவிட்ட மனதோடு மீண்டும் மாணவிகள் கல்விகற்கத் தொடங்கிவிட்டனர். இதனால் மீண்டும் 1989 இல் 11 மாணவிகள் பல்கலைக்கழகக் கலைப்பீடத்திற்கு

ஆண்டு	பல்கலைக்கழகக் கலைப்பீடத்திற்கு அனுமதி பெற்றோர்
1981	6
1982	1
1983	6
1984	2
1985	7
1986	4
1987	6
1988	1
1989	11
1990	9

அனுமதி பெற்றுச் சென்றனர். இன்று தொடர்ச்சியாக நிகழும் பல பிரச்சினைகளின் மத்தியிலும் இவையாவும் பழகிப்போன ஒன்றாகக் கருதி மாணவிகள் கல்வியில் முன்னேற்றம் காட்டிவருகின்றனர்.

1993 இல் எமது கல்லூரியின் அதிபராக திருமதி. இ. குட்டித்தம்பி அவர்கள் கடமையேற்றிருக்கின்றார். எனினும் 1985 ஆம் ஆண்டிலிருந்தே இவர் எமது கல்லூரியில் பணியாற்றி வந்திருக்கின்றார். எனவே 1985 இன்பின் ஏற்பட்ட கலைத்துறை வளர்ச்சியில் இவருக்கும் பெரும்பங்குண்டு. ஆகவே அதிபராக இருந்தும் தொடர்ந்து கலைத்துறை வளர உழைப்பார் என்பது உறுதி.

எத்தகைய இடர்வரினும் தொலைதூரங்களுக்கப்பாலிருந்து தொண்டு செய்யப் புறப்பட்ட அமெரிக்க மிஷனரிமாரின் அந்தராத்மாவின் உந்துதலால் சின்னஞ்சிறு கிராமமாகிய உடுப்பிட்டியில் ஏற்றிவைக்கப்பட்ட இந்த விளக்கு காலத்தால் அழியாது துலங்கி மேலும் பல விளக்குகள் ஒளியேற்றப்படக் காரணமாக இருக்கும் என்பது எமது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். அத்துடன் எமது கல்லூரியின் கலைத்துறை வளர்ச்சிக்கும் படைத்த சாதனைகளுக்கும் காரணமாக இருந்த, இருக்கிற அதிபர்களையும், ஆசிரியர்களையும், மாணவிகளையும் நாம் நன்றியோடு நினைவு கூர்ந்து எமது கல்லூரியின் 125 ஆவது ஆண்டைக் கடந்து செல்கின்றோம்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் இசை நடனத்துறை வளர்ச்சியும்

செல்வி. மாலினி, பொன்னையா, B. A
ஆசிரியை
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
பழைய மாணவி 1969 — 1979)

வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் மனிதர் உண்ணும் போதும், உறங்கும் போதும், ஓடும் போதும், துள்ளும் போதும் பேச்சிலும் மூச்சிலும் ஒவ்வோர் அசைவிலும் தாளலய உணர்ச்சிகளை வெளியிட்டால்தான் அவர்கள் வாழ்க்கை முழுமையானதாகும். இசையும் தாளமும் உள்ளத்தை வளர்க்கின்றது. துலங்கச் செய்கின்றது. உள்ளத்தை உருவாக்குகின்றது. சங்கீதக் கல்வியானது மாணவர்களின் உள வளர்ச்சிக்கு அவசியமென உணர்ந்த அதிபர் செல்வி. ஆர். ஜே. மேன் சங்கீத ஆசிரியராக திரு. வைத்தீஸ்வர ஐயர் அவர்களை நியமிக்க உதவினார். அவரின் இனிய பேச்சும் குரல் வளமும் மாணவர்கள் இசை பயில்வதில் ஆர்வத்தைத் தூண்டியது; மாணவர்கள் பாடசாலையில் நடைபெறும் விழாக்களில் முறையாகச் சங்கீதம் பாட இவரே காரணமாகவிருந்தார். இவர் ஓய்வுபெற செல்வி ஜெயலக்ஷ்மி குணரட்னம். செல்வி வசந்தி தருமலிங்கம், திருமதி. நடராஜா ஆகியவர்கள் இசையாசிரியர்களாக சேவையாற்றியபின் இசைக் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி. பிரானேஸ்வரி சிதம்பரப்பிள்ளை அவர்கள் இசையாசிரியையாகக் கடமையேற்றார். எளிமையும் பக்தியும், இனிய குரல்வளமும் கொண்ட இவர் மாணவர்களைக் கவர்ந்ததில் வியப்பொன்றுமில்லை மாணவர்களுக்கு மிகவும் இலகுவான முறையில் சங்கீதம் கற்பித்து ஊக்குவித்து வருகிறார். இதைவிட புற இசைச் செயற்பாடுகளான கோவில்களில் பஜனைகள் கச்சேரிகள் ஒழுங்குசெய்து மாணவர்களை வழிப்படுத்தியும் இசைப் பண்ணிசைப் போட்டிகளிலும், பாடசாலை வைபவங்களிலும் இசையின்பமளிக்க மாணவர்களைப் பயிற்றுவித்து வருகிறார். எமது கல்லூரியில் இவரிடம் சங்கீதம் பயின்ற மாணவர்கள் பலர் இன்று இசை ஆசிரியர்களாகக் கடமைபுரிந்தும் வெளிநாடுகளில் இசைக் கச்சேரி செய்தும் வருவது குறிப்பிடத்தக்கதாகும். 1980 - ஆம் ஆண்டு முதல் செல்வி. நாகேஸ்வரி இராசையா அவர்களும் இவருடன் இணைந்து இசை ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

நடனத்துறையை எடுத்துக் கொண்டால் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் முதல் நடன ஆசிரியையாக திருமதி. வே. புவனேஸ்வரி அவர்கள் 01-01-64 இல் நியமிக்கப்பட்டார். அவரது கம்பீர நடையும் கலகலப்பான பேச்சும், இனிய முறுவலும் அவருக்கே யமைந்த தனிப்பாணியாகும். ஆசிரியர் குழாமுடனோ, மாணவர்களுடனோ பழகும்போது அன்பாகவும், நட்புறவுடனும் பழகுவார். நடனத்துறையில் அன்று தொட்டு இன்றுவரை தனக்கென ஒரு தனியான இடத்தைப் பெற்றுக்கொண்டவர் இவரெனின் மிகையாகாது. எமது பாடசாலையில் கற்பித்த காலத்தில் தனது சேவையில் ஆழ்ந்தபற்றும் மாணவர் நலனில் மிகுந்த அக்கறையுடையவராகவும் காணப்பட்டார். பாடசாலைகளுக்கிடையே நடந்த நடனப் போட்டிகளில் மாணவர்களைப் பங்குபற்றச் செய்து முதலாமிடத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நோக்குடன் இரவுபகல் பாராது சுயநலனைப் பேணாது பாடசாலையின் நலனிலேயே தனது முழுக்கவனத்தையும் செலுத்தி அயராது உழைத்தமைக்குச் சான்றாக 01-05-1967 ஆம் ஆண்டு எமது பாடசாலை சார்பில் பங்குபற்றிய உழவர் நடனமும், கரகாட்டமும் மாவட்டரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டன.

இவர்தான் எடுத்துக் கொண்ட எந்தவொரு செயலையும் வெற்றிகரமாக நிறைவேற்றும்வரை ஓய்ந்திருந்ததில்லை. உதாரணமாக நான் இவரிடம் நடனம் பயின்றகாலத்தில் ஒரு நாட்டிய நாடகப் போட்டியில் பங்குபற்றியிருந்தேன். அப்பொழுது அவர் நாட்டிய நாடகக் கதையை விளக்கி அதில்வரும் கதாபாத்திரங்களைப்பற்றிக் கூறும்போது அவற்றை எம்மால் சரியாகப் புரிந்துகொள்ள முடியாமையால் அப்பாத்திரங்களின் பண்பை அப்படியே தத்ரூபமாகக் காட்டவேண்டும் என்பதற்காக தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரையும் கலையில் ஈடுபாடுடைய ஆசிரியர் ஒருவரையும் அழைத்து அவர்கள் மூலமாகக் கதாபாத்திரக் குணாதிசயங்களை விளக்கி அதன் பின்னரே நாட்டிய நாடகப் பயிற்சியளித்தார். இவரது அரும் முயற்சியினாலேயே மீண்டும் 01 06 1969ஆம் ஆண்டு தில்லானா என்னும் உருப்படி மாவட்டப் போட்டியில் முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்டது. சாகுந்தலம் என்னும் நாட்டிய நாடகம் 01-06-72 ஆம் ஆண்டு போட்டியில் கலந்து கொண்டு தேசிய ரீதியில் முதலாமிடத்தைத் தட்டிக்கொண்டது.

ஒரு நுண்கலை பயிற்றும் ஆசிரியரிடம் எத்தகைய பண்புகள் அமைந்து காணப்பட வேண்டுமோ, அத்தனை பண்புகளும் அவரிடம் அமைந்து காணப்பட்டது. "செய்யும் தொழிலே தெய்வம்" எனத் தனது சேவையை இன்னும் இங்கில்லாவிடினும் நடன ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் எனதன்பு மிக்க ஆசிரியையை என்றும் மறந்து விட முடியாது. அவர் என்றும் கலையுலகில் பிரகாசிக்கும் துருவ நட்சத்திரம் என்றே கூறலாம்.

பின்பு இவரது காலத்தைத் தொடர்ந்து திரு மதி. பா. இராஜேந்திரசிங்கம் அதிபர் அவர்களின் காலத்தில் செல்வி. சுபித்திரா அவர்கள் நடன ஆசிரியராகக் கடமையேற்றார். இவரது காலத்திலும் எமது பாடசாலை பல நாட்டிய நாடகப் போட்டிகளில் பங்குபற்றி மாவட்டப் போட்டிகளில் சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுக் கொண்டது. இவரது காலமும் எமது பாடசாலையில் ஒரு குறிப்பிடத்தக்க காலமாகும். இவர் 1983 இல் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்குச் செல்ல இவரது பணியை செல்வி. இராஜகுமாரி இரட்ணராஜா, செல்வி. கிரிஜா பரமசாமி, திருமதி சந்திரா ரமேஷ் என்போர் ஒருவர் பின் ஒருவராக வசதிக்கட்டண அமைவில் ஆற்றினார்கள். இவர்களைத் தொடர்ந்து நான் எனது பாடசாலையிலேயே நடன ஆசிரியராகக் கடமையாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. பின் செல்வி. புவனேஸ்வரியின் இன்னொரு மாணவியான செல்வி அனுஷா சோமசுந்தரம் அவர்கள் நடன ஆசிரியராக இருந்தார். இன்று அவரைத் தொடர்ந்து செல்வி பேரின்பநாயகி சிவகுரு அவர்கள் நடன ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தளராத மனமும், விடா முயற்சியும் கொண்டவர். எனவே இவரது காலமும் எமது கல்லூரி வாழ்வின் நடனத்துறையில் குறிப்பிடத்தக்க காலமாக அமையும். அமைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

உண்மையான தன்னம்பிக்கையுடன் கூடிய தன்னடக்க சுபாவத்தைத்தான் சர்வகலாசாலையில் பயின்றதாக வேண்டும்.

ஒரு சர்வகலாசாலையிற் படித்து பயன்பெறக்கூடிய ஒரே விஷயம் அறிவுதான்.

— சி. வி. ராமன்

நம்பிக்கும்
நன்றிக்குரிய
சிற்பிகள்

எமது சுதேச அதிபர்கள்



செல்வி. திருபைமலர் மதியாபரணம்
1934 — 1946



செல்வி. திரேஸ் மங்கையர்க்கரசி
லீ. வன்னியசிங்கம்
1946—1959



செல்வி. றூத். ஜெயமணி மேன்
1960—1974



திருமதி. கனகமணி இரத்தினசாமி
1975—1978



திருமதி. பாக்கியலஷ்மி
ஜோசேஜந்திரசிங்கம்
1978—1993





என் நினைவுத் திரையிலே நீங்காத இடம்கொண்ட அதிபர் செல்வி. கிருபைமலர். மதியாபரணம் அவர்கள்

திருமதி. எஸ். செல்வத்துரை
B. A., Dip in-Ed., S. L. E. A. S.. Class III
இளைப்பாறிய உப அதிபர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவி
(1932 — 1944)

நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும், எடுப்பான தோற்றமும் கொண்டவர் இவர். எங்கள் அன்புக்கும், அபிமானத்திற்கும் உரியவர் இவர். சிறந்த பண்புகள் பல நிறைந்தவர். சான்றோர் பலர் தோன்றிய உயர் குடும்பத்திற் பிறந்தவர். நிர்வாகத்திறன் நிறைந்த அதிபராக மாத்திரம் அல்ல, ஆற்றல்கள் பல நிறைந்த ஆசிரியராகவும் காணப்பட்டார். இத்தகைய பெருமை வாய்ந்த எங்கள் அதிபர் செல்வி. மதியாபரணம் அவர்களை நினைத்த மாத்திரத்தே, என் மனத்திரையில் ஓடிவரும் காட்சிகள் பசுமையாகவே இருக்கின்றன.

அதிபர் செல்வி. மதியாபரணம் அவர்களுக்கு முன்னர், செல்வி. மத்தாய் அவர்கள் அதிபராக இருந்தார்கள். செல்வி. மதியாபரணம் அவர்கள், செல்வி. மத்தாய் அவர்கள் ஆற்றிய சேவைகளையும் மனதிற் கொண்டு, மேலும் பாடசாலையின் வளர்ச்சிக்கு வேண்டிய மாற்றங்களையெல்லாம் துரிதமாகச் செயற்படுத்திப் பாடசாலையைத் துரித வளர்ச்சிப் பாதையில் நெறிப்படுத்திச் சென்றார். அன்னாருக்கு எங்கள் இதயங்களில் என்றும் முதலிடம் ஒதுக்கப்படும்.

இவர் அதிபராக இருந்த காலத்தில், நானும் எனது சகாக்களும் கற்ற காலத்தில், எமது பாடசாலை ஆங்கிலம் மூலம் கல்வி பயிற்றும் ஸ்தாபனமாக இருந்தது. நான் 1943-ம் ஆண்டு ஆங்கில மூலம் S. S. C. பரீட்சைக்குத் தோற்றியபோது எல்லாமாகப் பதின்மூவர் தோற்றினோம். பன்னிருவர் தேறினோம். சிறப்புப் புள்ளிகளும் பெற்றோம். இது எங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஒரு சான்றாகும். அத்துடன் செல்வி. மதியாபரணத்தின் நிர்வாக ஆற்றலை அளவிடும் கருவியாகவும் இது அமைந்துவிடுகிறது.

செல்வி. மதியாபரணம் அவர்களின் காலத்தில் கல்லூரியிலே **Inter Personal Relationship**, நிர்வாகத்தைச் சுமுகமாக நடத்திச் செல்வதற்கும், அதனாலே கற்றல், கற்பித்தல் ஆகியன சிறப்பாக நடப்பதற்கும் சாதகமாக அமைந்திருந்தது. தாவது அதிபருக்கும் — ஆசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் — மாணவர்களுக்கும் இடையில் உள்ள இயைபு நிலை மிகவும் திருப்தியாக இருந்தது. மாணவர்களுடைய ஆளுமை வளர்ச்சிக்கு வழி வகுக்கும் வகையில், ஒரு சில அறிவுப் பாடங்களுக்கு மாத்திரம் இடமளிக்காமல், மாணவர்களின் சிறப்பாற்றல்களும் வெளிப்பட்டு விருத்தியடையக்கூடிய வகையில் விளையாட்டுக்கள், சங்கீதம், நடனம், நாடகம் ஆகியவற்றுக்கும் முதலிடம் கொடுக்கப்பட்டு கல்விப் பொருள் திட்டம் - **Curriculum** விரிவாக்கப்பட்டது. அதனால் கர்நாடக சங்கீத ஆசிரியர், மேற்கத்தைய சங்கீத ஆசிரியர் இருவரும் அமர்த்தப்பட்டார்கள். நாடகம், நடனம் ஆகிய துறைகளில் அனுபவம் உடைய ஆசிரியர்கள் ஏற்கனவே கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள். இந் நிலையில் பாடசாலையின் நிர்வாகம் ஒழுங்காக, உள்வீட்டுப் பூசல்கள் ஏதுமின்றி நடைபெற்றது. சங்கீதம், நாடகம், விளையாட்டு ஆகிய செயற்பாடுகள் எங்கள் அதிபர் காலத்தில் பாடசாலையின் உள் முயற்சிகளாக மாத்திரம் அமையாது பருத்தித்துறை **Hartley College** இல் அக்காலத்தில் நடாத்தப்பட்ட விழாக்களில் தவறாது பங்குபற்றிப் பலரின் பாராட்டுக்களை எங்கள் பாடசாலை பெற்று வந்தது. இந்நிலை எமது பாடசாலைக்கு ஒரு பெருமையான ஸ்தானத்தை அப்பொழுதே ஏற்படுத்தியது எனக் கூறலாம்.

செல்வி மதியாபரணம் அவர்களின் சேவைக் காலத்தில் அனாதைகள் இல்லம் ஒன்று செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஆற்றல் உள்ள அனாதைப் பிள்ளைகளுக்கு ஒரு புகலிடம் வேண்டும் என்று ஒரு அனாதை இல்லத்தைத் தொடக்கி வைத்தமை அவருடைய கருணை நிறைந்த உள்ளத்தின் தன்மையை வெளிப்படுத்துகின்றது. அவர் ஆரம்பித்து வைத்த அனாதைகள் இல்லம் தொடர்ந்து செயற்பட்டதனால் எத்தனையோ மாணவர்கள் ஆசிரியர்களாகவும் வேறு உத்தியோகங்களில் ஈடுபட்டவர்களாகவும் இருக்கின்றார்கள்.

செல்வி, மதியாபரணம் அவர்களின் காலத்தில் பாடசாலையில் ஒரு விடுதி நன்கு செயற்பட்டுக் கொண்டிருந்தது. தூர இடங்களிலிருந்து வந்த பல மாணவர்கள் இந்த விடுதியில் இருந்து கற்றலில் ஈடுபட்டனர். சாவகச்சேரி, கோடிகாமம், வரணி. நாகர்கோவில், குடத்தனை, நவிண்டில், அச்சுவேலி, இடைக்காடு, ஏழாலை மானிப்பாய், தெல்லிப்பழை: ஆனைக்கோட்டை ஆகிய இடங்களிலிருந்து பல பிள்ளைகள் வந்து, விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தார்கள். இதிலிருந்து பாடசாலையின் பெருமை செல்வி, மதியாபரணத்தின் காலத்தில் எந்த அளவுக்கு வியாபித்திருந்தது என்பதை வாசகர்களே சிறிது எண்ணிப் பாருங்கள். பாடசாலையில் ஒரு வாசிகசாலையும், தேவைக்கு ஏற்ற அளவில் தமிழ், ஆங்கில நூல்களும் இருந்தன. அதனால், அப்பொழுது கல்வி பயின்று கொண்டிருந்த என் போன்றவர்கள், வாசிக்கும் பழக்கத்தை உடையவர்களாக வருவதற்கு வாய்ப்பு எற்பட்டது.

எங்கள் அதிபர் காலத்திலே ஆரம்பத்தில் ஒரு விசாலமான மண்டபமும், நன்கமைந்த ஒரு அரங்கும் தேவைப்பட்டன. அதிபர் அவர்களின் அயராத முயற்சியாலும், ஆசிரியர்களின் ஒத்துழைப்பினாலும், பாடசாலைச் சூழலில் அமைந்துள்ள கிராமங்களின் உதவியினாலும் அழகான மண்டபமும் அரங்கும் கட்டப்படுவதற்கு இலகுவருள் கூட்டியது. மாணவர்கள் எல்லோரும் ஆனந்தம் அடைந்தோம். எங்கள் கலை நிகழ்ச்சிகள் யாவும் மெருகு பெற்று விளங்க, புதிதாக அமைக்கப்பட்ட அரங்கு துணை நின்றது அவ்வரங்கில் நானும் எனது சக மாணவர்களும், பாடசாலையை விட்டுச் செல்வதற்கு முன்னர், குசேலர் நாடகம், இளையான் குடிமாறனார் நாடகம், இஸ்ரவேல் நாயகன் என்ற நாடகம் வேறு பல சங்கீத நிகழ்ச்சிகள், சிறுவர்களின் குயிலி, கோலாட்டம் என்பன அரங்கேற்றப்பட்டன.

எங்கள் அதிபரின் சேவைக் காலத்தில் பல விழாக்கள் கொண்டாடப்பட்டன: அவற்றுள் **Miss. Book Walter** அவர்களின் வெள்ளி விழா மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அந்த நிகழ்ச்சியை நான் மிகவும் சந்தோஷத்துடன் என்றும் நினைவு கூருவது வழக்கம். **Miss. Book Walter** அவர்கள் எமது பாடசாலை முகாமையாளராக இருந்தவர். அவரது வெள்ளிவிழா அன்று அவர் மேளவாத்திய பின்னணியுடன் பாடசாலை நுழைவாயிலிலிருந்து அவருக்கென அலங்கரிக்கப்பட்ட மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். நுழைவாயிலிலிருந்து மாணவர்கள் சிலர் பூமழை பொழிந்தும். சிலர் பன்னீர் தெளித்தும் அவரை அழைத்துச் சென்றனர். இவர்களுள் நானும் ஒருவராக இருந்தமையை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன், அன்று பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றன அதிபர் செல்வி. மதியாபரணம் அவர்களினதும், அவர்களின் ஆசிரியர்களினதும் மேற் பார்வையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் எவையாயினும் அவை எப்பொழுதும சிறப்பாகவே அமையும்.

எங்கள் அதிபர் சிறந்த ஆளுமையுடைய நிர்வாகியாக மாத்திரமல்ல; முழுமையான ஆளுமையுடைய ஓர் ஆசிரியராகவும் காணப்பட்டார். அவர் **S. S. C.** வகுப்பினருக்கு ஆங்கிலம் கற்பிக்கும் பொறுப்புடையவராக இருந்தார். நான் அவரிடம் ஆங்கிலம் கற்றதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அவர் எங்களுக்கு ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை நன்றாக வலியுறுத்தி, ஆங்கிலத்தில் எழுதுமாற்றல் மாத்திரமிருந்தால் போதாது, பேசுமாற்றலையும் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டுமென அழுத்திக் கூறுவார். ஆங்கிலம் பயிலும்போது உச்சரிப்புக் கவனிக்கப்பட வேண்டுமெனக் கூறுவார். எங்களுக்குப் பரீட்சைக்குப் புறம்பானவற்றையும் அவர் கற்பித்தார். நல்ல முறையில் உச்சரிக்கத் தெரியவேண்டுமென்பதற்காக **Phonetics** ஐ எங்களுக்கு அறிமுகம் செய்து உதவினார். அது என்னைப் பொறுத்தமட்டில் எனக்குக் கல்வியுலகில் பெரும்பயனுடையதாயிருந்தது.

எங்கள் அதிபர், வகுப்பறையில் ஆசிரியராக இருக்கும்போது மாணவர்களுடன் சரளமாக உரையாடுவார். தான் ஒரு அதிபர் என்பதை மறந்து நாங்கள் எப்படி நடக்க வேண்டுமென்று சொல்லுவார். பாத்திங்களைச் சரித்து வைத்துக்கொண்டு நடப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று சொல்லிக் கரும்பலகையில் வரைந்தும் விளக்குவார். காலை நேரங்களில் பிரார்த்தனைக்கு மாணவர்கள் வரிசையில் நின்று நடந்து செல்லும்போது சத்தம் போடாமல், காலை நிலத்தோடு உரோஞ்சாமல் வாத்தியப் பின்னணிக்கேற்ப, அழகாக நடந்து செல்கிறார்களா எனக் கவனிப்பது அவரின் வழக்கம். அடுத்து வகுப்பிலிருந்து படிக்கும்போது சில மாணவர்கள் இரு கால்களையும் ஆட்டுவதுண்டு இது அவருக்குப் பிடிக்காது. "காலை ஆட்டுபவர் பக்கத்திலிருந்தால், உடனே அவரது காலில் மெதுவாகத் தட்டி விடுங்கள் அவர் உடனே காலை ஆட்டுவதை நிறுத்தி விடுவார்." என்று அடிக்கடி சொல்லுவார். மாணவர்கள் தம்மை நடத்திக் கொள்ளும் முறையிலே பிறரிடம் தவறுகளைக் கூட விடக்கூடாது என்ற எண்ணத்துடன்தான் அவர்கள் இப்படியாக நடந்து கொண்டார்கள். ஒரு அலைக்கு இல்லாத அங்கலாய்ப்பு எங்கள் அதிபருக்கு இருந்ததைக் கண்டோம்.

செல்வி. மதியாபரணம் அவர்கள் எங்கள் பாடசாலையின் அதிபராக வருவதற்கு முன்னர் உடுவில் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். உளவியலையும், கற்பித்தல் முறைகளையும் நன்கு அறிந்தவர். நானும் எனது சக மாணவர்களும் S. S C. பரீட்சைக்குத் தோற்றிய பின்னரும் பாடசாலைக்குச் செல்வது வழக்கமாக இருந்தது. அப்பொழுதெல்லாம் ஒய்வு நேரம் எங்களுக்குக் கூடுதலாக இருந்தது. செல்வி. மதியாபரணம் அவர்கள் எங்களுக்குச் சில வேலைகள் தருவது வழக்கம் சிறுவர் பகுதிக்குச் சென்று அவர்கள் எப்படியான முயற்சிகளிலே ஆர்வம் காட்டுகிறார்கள், எங்களைக் கண்டதும் எப்படி நடந்து கொள்கிறார்கள். ஆசிரியர்கள் அவர்களுடன் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்றெல்லாம் அவதானித்துக் குறிப்புகள் எடுத்துவர வேண்டுமென்று கூறி, எங்களைப் பாலர் கல்வி பயிலும் பகுதிக்கு அனுப்புவதுண்டு. நாமும் சென்று எமது அவதானக் குறிப்புகளை எடுத்துக்கொண்டு வந்து வாசித்துக் காட்டுவோம் எங்கள் அதிபர் குழந்தைகளின் நடத்தைகளுக்கான உளவியல் தரவுகளைப் பற்றி நமக்குக் கூறுவார்.

ஒருமுறை இப்படியாக உளவியல்பற்றி எமது அதிபருடன் நாங்கள் கலந்துரையாடிக் கொண்டிருந்த போது எங்கள் சக மாணவராகிய தவமலர் என்பவர் பற்றி அதிபரிடம் கூறினோம் அதாவது, தவமலருக்கு வெங்காயத்தில் விருப்பமில்லை; அவ அதைச் சாப்பிடுவதில்லை; காரணம் எதுவாக இருக்கலாம் எனக் கேட்டோம். அதற்கு அதிபர் கூறியதை உங்களுக்குச் சொல்லுகிறேன். '' அவவிற்கு வெங்காயத்தை வெறுக்கக் கூடிய முறையிலே சிறு பராயத்திலே ஏதோ நடந்திருக்கிறது. பயம் காரணமாகவும் வெறுப்பு ஏற்படலாம் அவபற்றி ஒரு தனியாள் ஆய்வு செய்தால் காரணத்தை அறியலாம் '' என்றார். ஆனால் நாம் அதைத் தொடர்ந்து ஒன்றும் செய்யவில்லை. பல நாட்களின் பின் தற்செயலாக தவமலரின் அம்மாவுடன் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. வெங்காய விஷயம் பற்றிப் பேசினோம். அவ ஒரு முறை சிறுமியாக இருந்தபோது வெங்காயக் குவியலுக்குள் சிக்கி, விழுந்ததாகவும், கதறி அழுததாகவும் கூறினார். அம்மாவைச் சந்தித்தது நல்லதாய்ப் போயிற்று. விழுந்த அன்று ஏற்பட்ட பயம்தான் அவருக்கு வெங்காயத்தில் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதையும், அதனாலேயே அவர் வெங்காயம் சாப்பிடுவதில்லை என்பதையும் அறிந்து கொண்டோம். தவமலரைப் பொறுத்தமட்டில் தனக்கு ஏற்பட்ட பயத்துக்குரிய காரணம் தெளிவுபடுத்தப்பட்டதன் பின் அவ வெங்காயத்தை விருப்புடன் சாப்பிடுவதற்குத் தொடங்கினாவா என்பதை நாம் விசாரித்து அறிவதற்குரிய சந்தர்ப்பம் நமக்குக் கிடைக்கவில்லை. நிச்சயமாக அவருடைய நடத்தையிலே மாற்றம் ஏற்பட்டிருக்கும் என நான் நம்புகிறேன்.

ஆடிப்பாடி, ஆனந்தமாக கற்றலில் ஈடுபடக்கூடிய சூழலை, கற்றல் நிலைகளை (Learning Situations) உருவாக்கித் தந்து நம்மையெல்லாம் உயர்நிலைக்கு இட்டுச் சென்ற எங்கள் மதிப்புக்கும் அன்புக்குமுரிய ஆளுமை மிக்க அதிபர் செல்வி. மதியாபரணம் அவர்கள் எங்கள் பாடசாலையிலிருந்து 1946-ம் ஆண்டு பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலைக்குச் சென்று விட்டார்கள் என அறிந்தபோது எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. இருந்தாலும் அன்னாரின் நிர்வாகத்தின் கீழ் எங்களுக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பங்கள் வேறு பலருக்கும் கிடைக்கட்டுமே என்று எண்ணி என்னைச் சமாதானப்படுத்திக் கொண்டேன்.

எனக்கு பாதரட்சைகள் இல்லாததை எண்ணி வருந்திக்கொண்டே யிருந்தேன்; பாதங்களே இல்லாத ஒருவனைக் கண்டபின் என் வருத்தம் தீர்ந்தது.

இனிய அதிபர் செல்வி. திருமைமலர் மதியாபரணம் அவர்கள்

திருமதி. செல்வகாந்திமதி. பொன்னையா
இளைப்பாறிய ஆசிரியை,
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
பழைய மாணவி (1936 — 1945)

அதிபர் செல்வி. கி. மதியாபரணம் அவர்கள் நிமிர்ந்த நடையும், சீரிய பண்பும், அறிவாற்றலும் மிக்கவர். அதிபர் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற இலக்கணத்திற்கு ஒப்பானவர். இவர் யா / மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த போதிலும், தமது கடமையின் நிமித்தம், தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கே நல்கி இருந்தார் என்றால் மிகையாகாது.

இவர் அதிபராக இருந்த காலத்தில் நான்கு பெரிய கல்விக்கூடங்களும், இரண்டு மாணவர் விடுதி மண்டபங்களும் அமைந்திருந்தன. கிட்டத்தட்ட 20 ஆசிரியர்களையும் 500 மாணவர்களையும் கொண்ட, ஓர் சிறிய பாடசாலைச் சமூகமாக விளங்கிய போதிலும், கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டுத்துறை, இசை நாடகங்கள் போன்ற துறைகளிலும் சிறந்து விளங்குவதற்கு எமது அதிபரின் ஆக்கமும் ஊக்கமும் அடிகோலியதென்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

இவர் இக்கல்லூரியில் கடமையேற்ற பொழுது மாணவர்களுக்குப் போதிய கட்டிடவசதியோ சுற்றுப்புற பாதுகாப்போ இருக்கவில்லை. இவ்வசதிகளை மாணவருக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, தாமே முன்னின்று ஆசிரியர்களுடன் சேர்ந்து அயற்கிராமங்களுக்குச் சென்று நிதி திரட்டி, விடுதி மாணவரின் நன்மைகருதியும், பாடசாலையின் நன்மை கருதியும் முள்ளுவேலி மூடுவித்து வெள்ளைமதில் கட்டுவித்தார். அதுவுமல்லாமல் கலைவிழாக்களில் மாணவர்களை ஈடுபடுத்தி அதன் மூலம் பெறப்பட்ட நிதியைக் கொண்டு இன்றைய நாட்டுச்சூழலினால் இடிந்து காணப்படும் பெரிய மண்டபத்தைக் கட்டிய பெருமையும் எம் அதிபரையே சாரும். இதுமட்டுமல்ல அன்று (J. S. C.) Junior School Certificate என்ற வகுப்புவரை தான் இருந்தது. இந் நிலையை மாற்றி, (S. S. C.) Senior School Certificate என்ற வகுப்பை வைப்பதற்கு பிரதம கல்வி அலுவலகத்தில் அனுமதி பெற்று நடத்தியமை எமது பாடசாலை வரலாற்றில் முதல் படிக்கல் என்று கூறலாம். இந்த வகுப்பை எமது கல்லூரியில் அமைத்தபோது 12 மாணவர்கள் அவ் வகுப்பில் கற்று 8 மாணவகள் ஒரே தடவையில் சித்தியெய்தினர். இதன் பின் பாடசாலையின் பெறுபேற்றைக் கண்டு மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

இது ஒரு புறமிருக்க எமது அதிபர் ஓர் இயற்கை ரசிகை என்பதை நான் எடுத்துக்காட்டவேண்டியுள்ளது. இயற்கையை ரசிக்கவேண்டுமென்ற ஆவலுடன், இன்று கவனிப்பாரற்றுப் பாடசாலை முன்றலில் காணப்படும் வட்டவடிவில் அமைந்த அந்தப் பூந்தோட்டத்தை அமைத்து, பலவர்ண மலர்ச் செடிகளாலும், கொடிகளாலும் அலங்கரித்து தமது பிள்ளைகள்போல் அவற்றைப் பராமரித்து வந்தார் காலையிலும், மாலையிலும் எமது அதிபரைக் காணவேண்டுமாயின் பூந்தோட்டத்தில் தான் காணலாம். இதைத் தனக்காக மட்டுமன்றி, விடுதி மாணவர்களின் நலனுக்காகவும், மாணவர்களாகிய நாமும் அந்த இயற்கையை ரசிக்க வேண்டும் என்ற நோக்குடனும் தான், அந்தப் பூந்தோட்டத்தை அமைத்திருந்தார்.

இன்னும் சொல்லப்போனால் விடுதி மாணவர்களை தம் பிள்ளைகள் போல் கருதி, எமது ஆஞ்ஞை விருத்தியில் அக்கறை கொண்டவராயிருந்து மாலை வேளைகளில் எம்முடன் சேர்ந்து இனிய பாடல்களை எமக்குச் சொல்லித் தந்து பியானோ வாசிப்பார். அவரின் இனிய குரலோசை இன்றும் கேட்கிறது.

இதைவிட வார இறுதி நாட்களில் சுற்றுலாக்களுக்கு அழைத்துச் சென்று, இயற்கை இன்பத்தை அள்ளிப் பருகத்தந்து தாமும் மகிழ்வார்.

அவர் ஒரு சிறந்த அதிபர் மட்டுமல்ல தீர்க்க சிந்தனையும் உளவியல் அறிவு மிக்கவராயும் இருந்தார் என்பதற்கு ஓர் சிறு உதாரணம் கூறலாமென நினைக்கிறேன். எமது அதிபர் செல்வி கி. மதியாபரணம்

அவர்கள் தம் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் வீடுகளுக்கு தனது சகபாடியான செல்வி. லுடுவிசி அவர்களுடன் சென்று மாணவர்களின் குறைநிறைகளைப்பற்றி கலந்துரையாடி, பல வறிய மாணவச்களுக்குப் பாடப் புத்தகங்களை வாங்கி அளித்தும், உற்சாகமூட்டியும் கல்வியைத் தொடர உதவி அளித்தார்.

எளிமையும், இனிமையும், நேர்மையும், அன்பும் கடமையில் கண்ணியமும் கொண்ட எமது அதிபர் செல்வி. கி. மதியாபரணம் அவர்கள் தமது அதிபர் சேவையை இப் பாடசாலைக்கு நல்கிய காலத்தில் கல்வி கற்கக் கிடைத்த நாமனைவரும் இன்று எதோ ஒரு வகையில் ஒளியேற்றும் சிறு தீபங்களாக விளங்க வைத்த பெருமை அவரையே சாரும்.

பெயருக்கேற்ப அவர் ஆண்டவனின் கிருபையைப் பெற்றவராகவும், அறிவே ஆபரணமாய் அமைந்தவ ராகவும் மிளிர்ந்தாரெனில் மிகையாகாது.

" சமன்செய்து சீர்தூக்கும் கோல் போல்
அமைந்தொருபாற் கோடாமை சான்றோர்க்கணி. "

தாய் நாட்டிற்காக மடிவது உயர்வு.

அதைவிட உயர்வு தாய் நாட்டிற்காக உயிர் வாழ்வது.

ஏனெனில் நாட்டைக்காக்க மகன் வேண்டும்.

ATRIBUTE

TO THE LATE MISS GRACE LEE VANNIASINGHAM

B. A., Dip - in- Adm

MRS. GRACE. NALLAMANICKAM
Retired Teacher - Udupiddy Girls' College,
Waverley Court,
U. K

" Fading away like the Stars of the morning,
Losing their light in the glorious Sun,
Thus would we pass from the earth and its toiling,
Only remembered by what we have done. "

As the Late Miss Grace Lee Vanniasingham has done a lot to be remembered, let us ponder about them

Miss Lee, as she was often known, was definitely a most legendary character of the present century.

She was an old girl of the famous Uduvil Girls' School of the American Mission, gained her degree from the Madras University, but at the time when the authorities of the American Mission approached her to ask her te be the Principal of the Uduppiddy Girls' School, was teaching at the Methodist Vembadi Girls' High School.

Now, Uduppiddy Girls' School, situated in a five acres, with its high gate and massive boundary walls, was already a well established Bilingual School started by the American Mission and later maintained by the local Church. Leading to the main bungalow, along the drive way are very rare tropical trees such as Ebony, Satinwood, teak and Mahogany The hedge of gorgeous Bougainvillaes and a circular flower garden in front of the main bungalow, attract the attention of all passer by. There was a house for the Aicar of the Church, a few class rooms, a well established Boarding House, as it was a Boarding School as well a house for the staff, an Assembly Hall which was later built by a Principal with a Church at one end. Over looking the main Bungalow are two Play Grounds. The houses are built on high foundations with broad Verandas and chiefly from the main bungalow, without any difficulty one could see what is happening on the main road. Though a Bilingual School the Women who studied there had super training so much so their off springs in later years are the prominent Christian men and women of the island of Ceylon.

Jaffna has produced very many educationists, but the late Miss. Grace Lee Vanniasingham is one of the gre test of them all. She was a committed Christian, full of Faith and Courage, and a lady of vision. When she took over in 1947 her one aim was to raise the standard of the school. So now it is known as Uduppiddy Girls' College but isn't it due to the tireless efforts of Miss. Lee & the Staff and students of her time

In 1950 she went to England to do her Diploma in administration and was there for one year and returned with more resolute determination. Finance was the greatest challenge, but concerts were organised and as the public responded beautifully, very soon a well equipped Science Laboratory was built A well planned Domestic Science Laboratory was extended from one of the old houses. Class rooms were added for the Middle and Lower School.

Miss Lee was a lady of prayer. She worked hard to get a beautiful miniature Chapel built, extending from the Vicar's bungnlow. This had carpet seating and had all other chapel adornments put in. Every member of the staff was given a turn to lead the staff prayers The chapel also provided a haven to have a silent worship and meditation for the staff.

Miss Lee paid "Tithes". She believed in setting a side one tenth of her income to the work of God. The Church, the Clergy and the needy were her concern. Every term a special service was prepared by the staff and students and conducted in the Church. So for christmas and Easter and Harvest time, the public had the privilege of attending these beautiful witnesses for Christ,

She had a desire for music and used to play her violin well to the accompament of Piano. This is where I came in contact with her. My late husband stopped me from teaching after marriage and for the first time, I came to Uduppiddy to live after having my education training and teaching career in the Batticalo Methodist English High School, St. Bridget's Convent in Colombo, and in the Kandy Convent. She asked me to join the staff so after stopping from teaching for ten years, my husband, after much deliberation, allowed me to continue teaching so from 1949 till 1963 I was on the Day Staff of Uduppiddy Girls' College.

Miss Grace Lee Vanniasingham retired from service five years earlier than the the usual period because she used to regret that she did not sacrifice her youth to the service of God, like the Late Rev. Malar Chinniah who, as a newly fledged trained teacher gave it up, and all the glamour of the world, to do God's work. She went to England to be trained as a Deaconess and after doing work under the Methodist Mission in various fields was one of the first two women to be ordained for Ministry.

On retirement Miss. Lee was for a short term at Mission House, Nainativu as Christion worker, There after she joined the C. S. I. Sisterhood in South India and was living at VISHRANTHI NILAYAM in Bangalore doing God's work freely until her death in 1984. When I was at Kynsey Road, Colombo whenever she had business in Colombo before going to Bangalore, she used to come and stay with me. Then I noticed how she used to pray sitting cross legged on her bed, for the needs of the whole world mentioning every item she knows of.

She was a lady of Prayer no doubt. These and many more things will be remembered with gratitude till eternity.

Now she is in glory. I am sure she would have heard the Lord say, "Welldone, my good and faithfull servent enter into my rest."

The true source of right is duty. If we all discharge our duties, rights will not be far to seek — Mahatma Gandhi.

மங்கையர்க்கு அரசி

பண்டிதை. திருமதி. தேவகி. நீலகண்டன்
இளைப்பாறிய ஆசிரியை,
உடுப்பிட்டி மகளிர் கல்லூரிப் பழைய மாணவி.
(1946 — 1951)

நான் என் தந்தையார் மாற்றலாகிச் சென்ற இடமெல்லாம் சென்று இரண்டொரு முன் னோடிக் கல்லூரிகளில் கல்விபயின்று தந்தையாரின் மரணத்தின் பின் சொந்த ஊரான உடுப்பிட்டி வந்த காலம், செல்வி மதியாபரணம் அவர்கள் பிறிதோர் இடத்திற்குமாற்றலாகிச் செல்ல, செல்வி வீ. வன்னியசிங்கம் அவர்கள் புதிய அதிபராக நியமனம் பெற்ற காலமாகும்.

அவரது காலம் உடுப்பிட்டிப் பாடசாலை மாணவியரிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய காலம் "கடுகு சிறிது காரம் பெரிது" என்பர். புதிய அதிபர் தோற்றத்தால் சிறியர். வளர்ந்து நெடிது ஓங்கியவர் அல்லர். எனினும் விடயங்களை நிர்வகிக்கும் ஆற்றலாலும், ஆளுமையாலும், பெரியவராய் இருந்தார். ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து ஆணை செலுத்தும் அத்தனை பண்புகளும் அவரிடத்தே காணப்பட்டன.

சாந்தம் தவழ்கின்ற, அமைதி விளங்குகின்ற, அரும்பு புன்னகை பொலிகின்ற பார்வையினாலேயே பார்ப் பவரைக் கவர்கின்ற, அழகுமுகம் அவரது. பாரத நாட்டுப் பண்பாடும், மேலை நாட்டு நாகரீகமும் கலந்த எழில் மங்கையாக, குதியுயர்ந்த பாதணிமாட்டி, குதிரையின் கம்பீர "டொக் டொக்" நடையோடு, எங்கும் சுறுசுறுப் பாக உலாவி வரும் காட்சி, எம் உள்ளத்தை விட்டு அகலவில்லை.

இவர் பதவியேற்ற காலம். நான் ஒரு சாதாரண மத்தியவகுப்பு மாணவியே. அதிகம் அவர்களுடன் நெருங்கிப் பழகவோ, அவர்களது பண்புகளை அறியவோ வாய்ப்பு இருக்கவில்லை. அவர் வாரந்தக் கூட்டங்களிலும் சிறப்புக்கூட்டங்களிலும் பேசிய போது மாத்திரம் நான் அவரை அறியக்கூடியதாக இருந்தது. ஆனால் அந்த வேளைகளிலும் அவரது சிறப்பம்சங்களைக் காணக்கூடியதாகவிருந்தது.

ஆங்கிலத்தில் அதிகம் பாண்டித்தியம் உள்ளவராக இருந்தும் அவர் தமிழ்ப்பண்பைப் பெரிதும் மதித்தார். மாணவியரிடத்து ஒழுக்கமும், அடக்கமும் சிறக்க வேண்டுமென்பதை அவர் என்றும் வற்புறுத்தி வந்தார். மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அவசியமானது ஒழுக்கம். இதனால் அன்றோ வள்ளுவரும்,

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்" என்றார்.

கல்லூரிகளில்கல்வி பயிலும் எல்லா மாணவியருக்கும் உத்தியோகம் கிடைக்கும் என்பது நிச்சியமில்லை. ஆனால் வாழ்க்கைப் பயணம் - குடும்ப வாழ்க்கை - நடந்தே தீரும். அந்த வாழ்வைப் பண்பும், பயனுமுள்ளதாக அமைத்துக் கொள்ள வேண்டும். அத்தகைய பண்புள்ள வாழ்க்கைக்குப் பெண்கள் கட்டாயம் ஒழுக்கமுடையவராயும், அடக்கமுடையவராயும் வாழப்பழக வேண்டும் என்பது அவர் அடிக்கடி கூறும் புத்திமதி. பாடசாலையில் இடம்பெறும் எந்த நிகழ்ச்சியிலும் அவர் மாணவரிடையே ஒழுங்கு அடக்கம் முதலியவற்றை எதிர்பார்த்தார்.

அடுத்ததாக, மாணவரிடையே அவர் எதிர்பார்த்தநேர்மையை, பிழையான வழியில் வினையாடி வெற்றி கொள்வதிலும், சரியான வழியில் நின்று தோல்வியைத்தழுவல் வெட்கத்திற்குரியதன்று என்பது அவர் கொள்கை.

இவரது வருகையின் பின், இவரது தளராத முயற்சியினால், கட்டடங்கள் பெருகின. கலைக்கூடங்கள் சிறந்தன. தனக்கென வாழாப் பிறர்க்குரியவராய்ச் சேவைமனப்பான்மையோடு கடமையாற்றினார். மேலை நாட்டிலிருந்து சேவைமனப் பான்மையோடும் தியாக சிந்தையோடும் வருகை தந்த மிஷனரிமாரால் ஸ்தாபிக்கப் பட்ட ஸ்தாபனங்களிலிருந்து சேவை செய்பவர்களும் அத்தகைய கொள்கை இலட்சியங்களுடனேயே செயலாற்ற வேண்டும் என்று, தானும் அத்தகைய கொள்கையுடன் முன்மாதிரியாகத் தன்னலமற்ற சேவையாற்றினார்.

எனது பாடசாலை துவிபாஷா பாடசாலையாக இருந்தது. பின் ஆங்கிலப் பாடசாலையாகத் தரம் உயர்ந்தது. பெண்கள் சாரணிய இயக்கமும் ஆரம்பிக்கப்பட்டது.

இவரது காலத்தில் தான் பாடசாலைச் சஞ்சிகையும் [MAGAZINE] முதல் முதல் வெளியிடப்பட்டது சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டது மூக்கியமானதே. இ தை வி ட மூக்கியமான மறக்கமுடியாததொன்றும் நிகழ்ந்தது. சஞ்சிகைக்கு முதல்முதல் படம் எடுத்த நாள் தான் மறக்கமுடியாதது. செல்வி மேரிறிச்சேட்ஸ் என்ற ஒரு ஆசிரியை இவர்கள் ஒருவித்தத்தில் செல்வி வன்னியசிங்கம் அவர்களுக்கு சொந்தமும் கூட, கணிதத்தில் திறமையானவர் பரந்த சரிரமும் குள்ளமான தோற்றமுமுடையவர். இங்கே கற்பிக்க வருவதற்கு முன்னர் யாழ் மத்திய கல்லூரி யில் கற்பித்தவர். அங்கு மத்திய வகுப்புக்கு இவர் பாடம் எடுக்கச் செல்லும் தருணம். உயர்தர வகுப்புமாணவர். இவரைப்பார்த்து ''யானை போகுது டா திருவாரூர்த்தேர் அசையுதடா'' என்று பகடி ப ண் ணு வ தை, தனக்கு மாணவர் பட்டம் வைத்ததை, எங்களுக்குப் பாடம் எடுக்கும் போது சொல்லிச்சிரிக்கவைத்தார். இந்தியக் கோயில் தேர்களில் பெரியது திருவாரூவர்த் தேர். இலேசில் அசையாது. அதை அசைய வைப்பதற்கு ஆயிரக்கணக்கில் மக்கள் தேவை

ஒரு நாள்மதியம் பாடசாலைக் சஞ்சிகைக்குப் படம் எடுக்க மாணவியரை ஒழுங்கு படுத்தும்படி அதிபர், ஆசிரியர் செல்வி மேரிறிச்சட்ஸ் அவர்களைக் கூப்பிட்டுச் சொ ன்னார். அவர் முறையே வகுப்புத் தலைவியரைக் கூப்பிட்டு மாணவியரை, சரியந்தரம் இரண்டரை மூன்று மணியளவில் ஆயத்தமாக வருமாறு கூறும்படி சொன்னார் மாணவியரும் கலைந்து வீடு சென்றனர் பிற்பகல் படம் எடுக்கும் ஆயத்தத்துடன் 'குகன்' படப் பிடிப்பாளர் வந்துவிட்டார். அதிகமான மாணவிகள் சமூகம் அளிக்கவில்லை. படப் பிடிப்பாளர் ஒரு பக்கம் ''வெ ளி ச் ச ம் போகிறது'' என்று அவதிப்பட்டுக்கொண்டு இருந்தார். அதிபர் அவர்கள் ஆசிரியர் றிச்சேட்ஸிடம் ''நேரம் சரியாகக் கூறப்பட்டதா?'' என்று கேட்டபடி இருந்தார். எங்களில் பொறுப்பாக நின்ற சிலர் ''எல்லாம் சரியாக அறிவித்தோம்'' என்று பதிலளித்தோம். "இவர்களை எங்கே இன்னும் கா ணோ ம்'' என்று பாடசாலையைப் பார்த்தபடி இருந்தோம் கடைசியில் கொஞ்சம் கொஞ்சமாக அரைக்கரைவாசியினர் வந்து சேர்ந்தனர். படம் எடுப்பவர் குமிழியைத் திருப்பி மாணவரை ஆ ரியரை ஒழுங்கு செய்வதில் ஈடுபட்டிருந்தார். ஆசிரியை றிச்சேட்ஸ் அவர்கள் படத்துக்கு நின்ற ஒருபகுதியினரைச் சுற்றிவந்தவர் - அவரது முகம் அழுததினால் போ லும் வீங்கி கண் ணெல்லாம் சிவந்து பார்க்கவே பரிதாபமாக இருந்தது எங்கள் அருகில் வந்த அவர் மெல்லிய குரலில் கோபத் துடன் ''காலைத் தூக்கித் தோளில் போடுங்கள்'' என்றார். எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தோம். மறுகரையில் அப்படிச் சொன்னாரோ என்னவோ தெரியாது. திரும்பவும் ''உங்கள் உங்கள் தோள்களில் காலைபோடமுடியாதவர்கள் கெதியில் உங்களுக்கு முன்னிருக்கும் ஆட்களின் தோள்களில் காலைப் போடுங்கள் அப்பொழுதுதான் நீங்கள் இவ்வளவு நேரமும் வேலை வினைகெட்டு வெண்கட்டி [CHALK] பூசி வெய்யிலில் காயவைத்துப் போட்டு வந்த சப்பாத்துக்கள் படத்துக்கு நன்றாகத் தெரியும் என் ற ார் எங்களுக்கு அப்பொழுது தான் விஷயம் புரிந்தது. காத்திராப் பிரகாரம் படம் எடுக்கும்படி சொன்னபடியால் கூடுதலான மாணவிகள் அதிபருக்குப் பயந்து, சீருடையில் வருவதற்கு கால்மேசு, சப்பாத்து இல்லாத படியால் தாமதித்திருக் கிறார்கள். மாணவியர் நேரத்திற்கு வராததால் பொறுப்புக்கு விட்ட ஆசிரியை மேல் அதிபர் கோபித்திருக்கிறார் அந்தக்கலையிலும் அவர் மாணவியரிடைய அறியாமையை நினைத்து தனது பகடிப் பேச்சு மூலம் மாணவியரை மட்டந்தட்ட இப்படிகூறியிருக்கிறார். படத்துக்குச் சப்பாத்துப் போட்டுவந்த ஒரு சில ரைக் கரைகளுக்குவிட்டு, போடாதவரைப் பின்னுக்குப் விட்டால் ஒரு குறையும் தெரிந்திராது தெரியவராது. இதை யார் சிந்தித்தது? மாண வியருக்கு இது காலம் கடந்த ஞானோதயம். எல்லோரும் தாம்தாம் சீருடையில் போகவேண்டும். இல்லையேல் பேச்சு வாங்கவேண்டிவரும் என்று சிந்தித்துச் செயற்பட்டதன் விளைவு அது. இன்று எம்மிடையே அந்தமாதிரிக் கண்டிப்பும் அன்புமிக்க அதிபரும் இல்லை. எங்களைத்தன் பகடிகளால் துன்பத்திலும் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்த அந்த அன்பான ஆசிரியையும் இல்லை. இதுதான் உலக வாழ்க்கை.

ஆயிரத்தொளாயிரத்து அறுபதாம் ஆண்டுகளில் எல்லா மாணவியரும் கற்றுவர வேண்டும். என்ற அ வ ர் தம் அவாவின்காரணமாகப் பாடசாலை நிலையம் புதுவடிவம் பெற்றது. மாணவியரிடையே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சிகள் அ ள பரியன. ஷேக்ஸ்பியர், பிரான் போன்றமேலைநாட்டு அறிஞரின் ஆங்கில மூல நூல்களும், தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ''ஷேக்ஸ்பியர் கதைக்கொத்து'' போன்ற நா ட க கதைகளை நூல்களும் கலைக்கனஞ்சியமும் இடம்பெற்றன. மாணவர் நன்முறையில் பாடசாலை நூல்நிலையத்தைப் பயன்படுத்துவதற்காக நோ ரூபியில் நூல்நிலைய நேரம் [LIBRARY READING PERIOD] எ ன இரு பாட வேளைகள் ஒன்வொரு வகுப்புக்கும் ஒதுக்கப்பட்டன' அ வ ர் க ள் நூல்களைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்த ஒவ்வொரு மாணவியும் தொகைக்கு ஒரு நூலையேனும் வாசித்து, அதைப்பற்றிய சி றி ய தயிப்புரையை எழு தி வகுப்பாசிரியருக்குக் காட்டித் திருத்தம் செய்விக்கவேண்டுமென்ற ஒழுங்கு முறையையும் ஏற்படுத்தினார். இவரின் புத்திமதியின் பேரில் வகுப்பு வாசகசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. வசதியுள்ள மாணவியர் ஒவ்வொரு புத்தகம்

அன்பளிப்புச் செய்தனர். வீவு காரணமாக ஆசிரியர்கள் சமுகமளிக்காத வேளைகளில் மாணவியர் அமைதியாக இருக்கவும் அறிவு பெறவும் இது பெரிதும் உதவியது.

கீழ்வகுப்பிலிருந்து மேல்வகுப்பு வரையிலுள்ள மாணவியர் ஒவ்வொருவரதும் குடும்பப் பின்னணியை அறிவதில் அவர் ஆர்வம் காட்டினார். ஏழை, அனாதை மாணவியரைக் கணித்து அவர்களுக்கான சலுகைகளை அளிப்பதில் அவர் பின்னிற்கவில்லை. அவரிடம் காணப்பட்ட இச் சிறப்பம்சம் சிறப்பானது. எந்தச் சிறிய பிள்ளையிடமும் இருக்கும் சிறப்பு ஆற்றலை மதித்துக் கௌரவிப்பதும் அவரிடம் மேலோங்கியிருந்தது. அதாவது அவர்களின் ஆற்றல் மேலோங்க மேலும்மேலும் உற்சாகம் அளிக்கப்படவேண்டும். இதுவே அவரின் வேணவா.

பெற்றார்தின விழாக்காலமொன்றிலே மேல்வகுப்பு மாணவரிடையே ஆங்கிலக் கட்டுரைப்போட்டியொன்று இடம்பெற்றது. அப்போட்டி "Spread of Communism in the world" எனும் தலைப்பிலானது. அப்போது நான் எட்டாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். எட்டாம் வகுப்பு மாணவியரும் அப்போட்டியிற் கலந்து கொள்ளலாமென அறிவிக்கப்பட்டது. அந்நேரம் ஆங்கில ஆசிரியராக இருந்த ஆசிரியை எங்களில் ஒருசிலரை உற்சாகப்படுத்தி அப்போட்டியில் கலந்துகொள்ளச் செய்தார். பரீட்சைக்குத் தோற்றியபின் இருந்த சிரேஷ்ட வகுப்பு மாணவியர், பரீட்சைக்குத் தோற்றிருந்தசிரேஷ்டவகுப்பு மாணவியர் முதலாம் வகுடச் சிரேஷ்ட வகுப்பு மாணவியர் எங்கே? நாங்கள் எங்கே? நாங்களாவது இவர்களுடன் போட்டியிடுவதாவது? ஆசிரியரின் தூண்டுதல் நம்மை கலந்து கொள்ளச் செய்தது.

வியாழக்கு முதல்நாள் எங்கள் ஆசிரியர் வந்து "கட்டுரைப்போட்டியில் உமக்கு பரிசு கிடைத்திருக்கிறது அதிபர் அவர்கள் தனிப்பட்டமுறையில் அப்பரிசைத் தருகிறார்கள். உமது வகுப்பின் தரத்துக்குக் கூடிய முறையில் நீர் எழுதியிருக்கின்றீராம்" என்று புகழ்ந்தார். என்னால் நம்பமுடியவில்லை. நான்கனவிலும் எதிர் பாராவொன்று. அவரிடம் ஆங்கிலம் கற்கும் வாய்ப்பு எனக்கு அதிகம் கிடைக்கவில்லை. காரணம் அவர் கள்சிரேஷ்ட வகுப்பிற்கு ஆங்கிலம் கற்பித்தார்கள். நான் சிரேஷ்ட வகுப்பில் கற்கவந்த சமயம் அவர்கள் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றுவிட்டார்கள். அந்நேரம் எங்கள்பாடசாலையில் உயர்தரவகுப்புக்கள் இல்லாத காரணத்தால் ஏலவே பரீட்சைக்குத் தோற்றியவர்களும், தோற்றஇருப்பவர்களும் ஒருமித்து ஒரே வகுப்பிலிருந்து கற்பது வழக்கம், அதன்காரணமாக அவர் வெளிநர்ட்டிலிருந்து மீண்டும் வந்த சந்தர்ப்பம் நான் இறுதிப் பரீட்சைக்குத்தோற்றிப் பாடசாலையை விட்டு வெளியேறும் காலம் ஒருசில மாதங்கள் மாத்திரம் அவரிடம் ஆங்கிலம் கற்கும் வாய்ப்பைப் பெற்றேன் அதேபோல அவர்கள் பாடசாலையிலிருந்து ஓய்வுபெறும் தருணம் நான் ஆசிரியையாக மாற்றலாகிவந்து அவர்களின் கீழ்ச்சிலமாதம் கற்பிக்கும் வாய்ப் பையும் பெற்றேன்.

இக்காலப்பகுதியிரண்டும் வாழ்நாள் முழுவதும் என்னால் மறக்கமுடியாதவை. அவர்களிடத்து நான்கண்ட அறிவு, அடக்கம், நேர்மை, கடமைமறவாமை, சமயப்பற்று முதலிய அரும்பெரும் குணங்கள் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

கற்பித்தலைப் பொறுத்தமட்டில் அவர்மிகவும் கண்டிப்பானவர். ஆங்கிலத்தில் பெரிதும் பாண்டித் தியம் உடையவராக இருந்தார் தமிழறிவுக்கும் ஆற்றலுக்குமேற்றவாறு சொற்சுவையும், பொருட்சுவையும் ஒருங்கே செறிய மிகமிக இனிமையான குரலில், இலகுவானமுறையில் ஆங்கிலத்தைப் போதித்தார். கண்ணாடிணியந்த அவரது பார்வை படிப்பிக்கும் புத்தகத்தைக் கண்ணால் பார்ப்பது போலிருக்கும். ஆனால் கடைசிவரையிலிருக்கும் மாணவி கவனமில்லாமலிருப்பதையும் கண்டுபிடித்துவிடும் அதன் காரணமாக நாங் கள் யாவரும் அவரது வகுப்பில் என்றும் விழிப்புடனே இருப்போம். மாதப்பரீட்சைகளில் ஒருசிலரைத்தவிர பலர் திருப்திகரமாக எழுதுவதில்லை கெட்டிக்கார மாணவர்களைக் தட்டிக் கொடுப்பார். ஆங்கிலமொழியில் குறைவான மாணவர்களை ஏளனத்துடன் கண்டிப்பது கிடையாது பராபட்சமற்ற முறையிலே மாணவிகளை நடத்துவார். இன்னும் வசதிகுறைந்த மாணவிகளுடன் இன்முகத்துடன் உரையாடி உற்சாகப்படுத்துவர்.

வெளிநாட்டு வருகைக்குப் பின் அவர் எங்களுக்கு வகுப்பில் கூறிய புத்திமதி மிகமிக முக்கியமானதோர் அம்சம் – தொழிலின் மகத்துவம் (DIGNITY OF LABOUR) தமது சொந்த அனுபவம் ஒன்றைக்கூறினார். "இங்கு சிலர் குறிப்பிட்ட சிலதொழில்களைச் செய்யக்கூச்சப்படுகிறார்கள். மேலைநாட்டவர்கள் மூட்டை தூக்கக்கூட வெட்கப்படுவதில்லை நான் அங்கிருந்த ஒருசமயம் நோய்வாய்ப்பட்டேன். எனதுஉடைகள் பல கலவை செய்யப்படாது இருந்தன. நோய் மாறியபின்பும் அவற்றைச்சலவை செய்யத்தக்க நிலையில் நான் இருக்கவில்லை நண்பி ஒருவரின் அறிவுறுத்தலின் பேரில் எனது ஆடைகளைச் சலவை செய்ய ஒருவர் தேவையென விளம்பரம் செய்திருந்தேன்."

''குறிக்கப்பட்ட நாளில் எனது ஆடைகளைச் சலவை செய்ய ஒரு பெண்மணி வந்தார். அவரைக் கண்டதும் நான் அதிர்ந்து போனேன் வந்தவர் வேறுயாருமல்லர். ஒரு சிலநாட்களுக்குமுன் அந்நாட்டு வீசா (VISA) அலுவலகத்தில் உயர் பதவியில் காணப்பட்ட அதே பெண்மணிதான். அவர் என்னை அடையாளம் கண்டாரோ தெரியாது. நான் அவரை அடையாளம் கண்டுகொண்டேன். வேலை முடிந்ததும் வேதனத்தை இன்முகத்தோடு வாங்கிச் சென்றுவிட்டார். நாம் கூடப்பணத்தைக் கொடுத்தால் அவர்கள் உரியபணத்தை எடுத்துக் கொண்டு மீதியைத் திருப்பித் தந்து விடுவார்கள். தொழிலில் ஏற்றத்தாழ்வு இல்லை பொய் சொல்லக் கூடாது. களவெடுக்கக்கூடாது. எனவே தொழிலில் ஏற்றத்தாழ்வு காட்டாது எத்தொழிலையும் செய்யும் மனப் பக்குவம் வரவேண்டும். ஆனால் கூடுதலாக இலங்கையர் இப்போது சொந்த நாட்டில் செய்ய வெட்கப்படும் எத்தனையோ தொழில்களை மேல்நாடுகளிற் செய்கின்றார்கள். இது எம்மை வியப்பிலாழ்த்தியது.

காசநோய் நிவாரணத்துக்காக அந்நேரம் பாடசாலைகளில் கொடித்தினம் அனுஷ்டிக்கப்படுவது வழக்கம். மாணவியர் ஒவ்வொருவரும் பத்துப்பத்துச்சதம் கொடுக்கவேண்டுமென வேண்டுகோள். அதன் பிரகாரம் பணம் கொடுக்கும் மாணவியருக்குச் சிறுசிறு கொடிகள் வழங்கப்படும். அவற்றை அவர்கள் சட்டைக் கொரில (eollar) குத்தி மகிழ்வது வழக்கம். அதிபர் அவர்கள் எஸ்தர் என்றொருபிள்ளையை வளர்த்து வந்தார். அது கீழ்வகுப்பிலே கல்விபயின்றது. அதிபர் அப்பிள்ளையிடம் கொடித்தினத்து நிதியாக இருபது சதங்களைக் கொடுத்துவிட்டிருக்கின்றார். அவரைப்படிப்பித்த ஆசிரியை அனுபவமற்றவர். வஞ்சகமில்லாது எஸ்தருக்கு இருபக்கக் கொலரிலும் (eollar) இரண்டு கொடிகளைக் குத்திவிட்டிருக்கின்றார். பாடசாலை விட்டு விடுதிக்குப் போன எஸ்தரைக்கண்டதும் அதிபருக்கு எஸ்தரின் ஆசிரியை மேல் மிகுமிகக் கோபம் வந்துவிட்டது.

எத்தனை வறிய சிறிய பிள்ளைகளின் மனதில் இவ்வாசிரியரின் செயல் உளவியல் ரீதியாகப் பிழையான சிந்தனையைத் தூண்டிவிட்டிருக்கும். இந்தப் பிள்ளையைப் பார்த்துக் தாங்களும் தங்கள் இருபக்கக் கொலரிலும் கொடிகுத்த வேண்டுமென்ற அவாவால் தமது தாய்தந்தையரிடமிருந்து இன்னொரு பத்துச்சதம் வாங்கிவந்து இன்னொரு கொடிவாங்கவேண்டும் என்றெண்ணி வீடு சென்றிருப்பார்கள். கூடிய தருமம் செய்ய வசதியிருந்த படியால் எஸ்தரிடம் இருபது சதம் கொடுக்கப்பட்டதேயல்லாமல் இரண்டு கொடிக்காக அப்பணம் கொடுக்கப் படவில்லை. இப்படிப்பட்ட விடயங்களை ஆசிரியர் கிறிதுசிந்தித்து முன்மாதிரியாகச் செயற்படவேண்டுமென்று அந்த ஆசிரியையைக் கூப்பிட்டுத் தனிப்பட்ட முறையில் கூறியதோடல்லாமல் தொடர்ந்து நடந்த ஆசிரியர் கூட்டத்திலும் இது பற்றிக்கூறினார். ஏழைப்பிள்ளைகளைப் பிழையானமுறையில் தூண்டிவிடக்கூடிய காரியங்களை ஆசிரியராகிய எவரும் செய்தல் ஆகாது என்று கூறினார். அதிபர் பார்வைக்குக் கடுமையானவர். போலக் காணப்பட்டாலும் உண்மையாகவே ஏழை எளியவர்களிடத்து இரக்கசிந்தனையுடையவர் என்பது சொல்லாமலே விளங்கும்.

பெரும்பாலும் கிறிஸ்தவர்களெல்லாரும் இரு பெயர் உள்ளவர்கள். இது அவர்கள் வழக்கம். ஒன்று பிறந்தவுடன் வைக்கப்படும் தமிழ்ப்பெயர், மற்றது அவர்கள் ஞானஸ்தானம் பெறும்போது வைக்கப்படும் கிறிஸ்தவப்பெயர், அந்தப்பெயராலேயே அவர்கள் அழைக்கப்படுவது வழக்கம். இவர்களை எல்லோரும் ''கிறேஸ்'' என்று கூப்பிடுவது வழக்கம்தான் இந்தியப்பிராமண குலத்தைச் சேர்ந்தவர் என்று கூறுவதில் இவருக்கு மிக்க பெருமை. அந்நேரம் இந்தியச் சுதந்திரப் போரில் ஈடுபட்டு பெயர் பெற்றிருந்த மந்திரி மாளவியாவின் உறவினர் தான். என்று புன்முறுவலுடன் பெருமையாகக் கூறுவார். மாணவராகிய எங்களுக்கு இவரது தமிழ்ப்பெயர் என்னவென்று அறிய அதிக ஆசையும் ஆவலும் உண்மையாகவே நாங்கள் அவருக்குப் பயம் ''பூனைக்கு மணிகட்டுவது யார்?'' படிப்பிக்கும் நேரத்தில் நேரத்தை வீணாக்குவதும் குறைவு. அத்திபூத்தாற் போலச் சிலசமயங்களில் சம்பாஷிப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் இன்று எப்படியும் அவரின் தமிழ்ப்பெயரை அறிந்து விடவேண்டும் என்ற ஆவாவில் முன்வரிசையில் இருந்த எங்களில் ஒருசிலர் எங்களுக்குள் சாடையாக கிசுகிசுத்தோம். ''என்னபிரச்சனை? விளங்காதது ஏதும் இருந்தால் கேளுங்கள்' என்றார். நான் துணிந்து ''உங்கள் தமிழ்ப்பெயரை அறிய ஆவல் படுகிறோம்'' என்று கேட்டுவிட்டேன்

''என்னுடைய தமிழ்ப்பெயரா'' என்று மிகுந்த சந்தோஷத்துடன் சிரித்துக்கொண்டு ''கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்" என்று ஒருநொடிபோல [I am the queen of the Ladies]" என்றார். நாங்கள் வியப்படைந்து பார்க்க "Ladies" என்றால் எனது இழுக்க பெண்களுக்குரிய தமிழ்ச்சொற்களை நாங்கள், நங்கையர், மங்கையர்" என்று சொல்ல '' yes, yes, Come on Add the Tamil word for queen" என்றார். உடனே நான் ''மங்கையர்க்கு அரசி" என்று கூறிவிட்டேன். அத்தருணம் அவரின் முகத்திலிருந்த சந்தோஷத்தையும், புன்முறுவலையும் என்னவென்று சொல்வது? என்றும் மறக்கமுடியாதது.

இவர் ஒரு கிறிஸ்தவ சமயத்தவரெனினும் சைவசமயத்தவரையும் மதித்தவர். ஆசிரியரின் ஆற்றலையும் சேவையையும் இவர் பெரிதும் மதித்துப் போற்றினாரேயன்றி ஆசிரியர் கிறிஸ்தவரோ, சைவரோ என்ற வேறுபாட்டோடு ஒருபோதும் நோக்குவதில்லை. அக்காலத்தில் கல்விச்திணைக்களம் ஆசிரியர்கட்கு விசேடபதவிகள் வழங்கி வந்தது இப்பதவிகள் தராதரத் தகுதிச்சேவையடிப்படையில் வழங்கப்பட்டன. தகுதியானவரைச் சிபார்சு செய்பவர் பாடசாலை அதிபர். மனேஜ்மென்ற் (management) பாடசாலையாக இருந்தால் மனேஜரின் (முகாமையாளர்) சிபார்சும் வேண்டும் எமது பாடசாலை மிஷன்பாடசாலை இவர் ஒய்வுபெறும் சிலமாதங்களுக்கு முன்பு விசேட பதவிக்குரிய ஆசிரியரைச் சிபார்சு செய்யவேண்டிய கட்டமொன்று இரு பாடசாலைகளுக்கும் வந்தது. இப்பாடசாலையில் இவரின் சிபார்சை எதிர்நோக்கி இருவர் இருந்தனர். ஒருவருக்குப் பொருளுக்கான சகலதகவுகளுமிருந்தன. மற்றவருக்கு இவைகளளைனைத்தும் இருக்கவில்லை சகல தகமைகளையும் கொண்டிருந்தவர் சைவசமயத்தவர் மற்றவர் கிறிஸ்தவர். அதிபர்சைவசமயத்தவரையே சிபார்சு செய்தார் இதனை மிஷன் முகாமையாளர் வரவேற்கவில்லை இச்சிபார்சை நிராகரித்தார். அதிபர் முகாமையாளரோடு வாதாடினார். கடைசியில் மன்றாடியும்பார்த்தார். பலனளிக்கவில்லை.

இதேவேளை அயற்பாடசாலையிலும் சிபாரிசுப்படலம் இடம்பெற்றது எங்கள் பாடசாலையில் நடைபெற்றதின் அச்சொட்டு அங்கும் ஆனால் ஒருசிறு வித்தியாசம். இங்கும் சிபார்சை எதிர்நோக்கியிருந்தவர் இருவர். இருவருக்கும் எல்லாத்தகவுகளும் இருந்தன. தகவுகள் மிகக் கூடியதாக இருந்தவர் சைவசமயத்தவர் அனால் மற்றவரே அதிபரால் சிபாரிசுசெய்யப்பட்டு முகாமையாளராலும் சிபாரிசு செய்யப்பட்டார். அயற் பாடசாலை அதிபரால் சிபாரிசு பண்ணப்படாத அந்த ஆசிரியர் முகாமையாளரால் நிராகரிக்கப்பட்ட எமது பாடசாலை ஆசிரியரை அணுகினார். இருவருக்கும் இழைக்கப்பட்டஅநீதியைக் கல்வித்திணைக்களத்திற்கு முறையிட்டுத் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு நிவர்த்திக்காணத் தன்னோடு ஒத்துழைக்கும்படி வேண்டினார். தன்னைச்சிபாரிசு செய்து மிஷன் பாடசாலைமுகாமையாளரோடு வாதிட்டும் மன்றாடியும் நின்ற தன் அதிபரின் மனம் நோக தான்செயற்படவிரும்பவில்லை என்றுவிட்டார். இந்த ஆசிரியர் இதனால் எங்கள் அதிபர் எதையும் சரியாகவும் நேர்மையாகவும் செய்வதில் ஒரு சிறிதும் தவறாதவர் என்பது கண்கூடு.

இவர் பாடசாலையைவிட்டுச் செல்லும்போது பாடசாலை வளர்ச்சிக்கு என்னென்ன உதவிகள், முயற்சிகள் செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் பொறுப்பேற்கவிருந்த புதிய அதிபர் கேட்டுக்கொண்டதற்கிணங்கச் செய்துகொடுத்துவிட்டுத்தான் போனார். வாழ்க்கையை எப்படியும் வாழலாம் என்று பலரும் வாழும் இக்காலத்தில் வாழ்க்கை இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்துகாட்டிய பெருமை இவருக்குண்டு. இவர் உள்ளத்திற் பகையும் உதட்டளவில் உறவும் வையாது நேர்மையே அணிகலமாகக்கொண்டு வாழ்ந்தார் பட்டம், பதவி, பரிசுக்காகப் பதறும்உள்ளம் அற்றவராக, பணிசெய்து கிடப்பதையே தனது நோக்கமாகக் கொண்டார் மெய்வருத்தம் பாராது பசி நோக்காது. எவ்வகைத்தீமையும் மேற்கொள்ளாது, கடமையே கண்ணாகக் கரும மாற்றியவர் ஆனால் அதேநேரம் விரும்பத் தகாத குணமொன்றும் இவரிடத்திலிருந்தது. அதுதான் கொண்டதுவிடாமை.

கிராமப் பாடசாலைக்குப் புதியவரான படியாலோ, அல்லது கிராமத்தில் செல்வாக்கிலிருந்த ஒருசிலரின் ஏவலாலோ, ஒருசில சந்தர்ப்பங்களில் நீதியற்ற விடயத்திலும் உண்மைகள் மறைக்கப்பட்டதால் கொண்டதை விடாத குணமுடையவராகக் காணப்பட்டார். இதன்காரணமாகச் சமூகத்தில் ஒருசிலரின் வெறுப்புக்கும் முகாமைத்துவத்தாரின் அதிருப்திக்கும் ஆளான சந்தர்ப்பங்கள் சில இருந்தன. பெரும்பாலும் நன்மையான விடயங்களையே விரும்பி, அவற்றைச் செய்து முடிப்பதிலேயே, கண்ணும் கருத்துமாக இருந்தஅவர் ஒருசில நீதியற்ற விடியங்களைச் செய்தது. பாரதூரமாகத் தோன்றவில்லை. ஆனால் காலப்போக்கில் தான் நீதியற்ற முறையில் விடிவாதமாக இருந்துவிட்டதை உணர்ந்து, சிலசமயங்களில் அது சம்பந்தப்பட்டவர்களுக்குப் பிராயச்சித்தமும் செய்திருக்கிறார்.

பாடசாலையிலிருந்து ஓய்வுபெற்று இத்தியாவில் சுவிசேஷ ஊழியராகக் கடமையாற்றிய சமயம் அவர் என்னிடம் சிறிய உதவியொன்றைக் கேட்டுக் கடிதமொன்று எழுதினார். நான் செய்தது ஒரு சிறிய உதவியே அவர் அதிபர். நான் மாணவி அவரது நன்றி மறாவாத்தன்மையும், சிறியவர் செய்த சிறிய உதவியையும் நினைத்து நடக்கும் பண்பும் உள்ளவர் என்பதைப் பின்னிணைக்கப்பட்டிருக்கும் அவரது கடிதம் விளக்கும். எத்தகைய அன்பும், பண்பும் மிக்க உள்ளத்தினராக அவர் இருந்தார். என்பதும் செய்த அந்தச்சிறிய உதவியை மதித்துப்பாராட்டி ஒருமாணவிக்கு இத்தகைய ஒரு அன்பான கடிதத்தைக் கடல்கடந்த அந்த நாட்டிலிருந்து எழுதியதும் அவரது உள்ளத்தின் உயர் பாங்கினைச் சிந்தித்து சிந்தித்து உருகச்செய்யும்.

'' அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து சால்பு எனற்றியதாண் ''

இத்தகைய அன்பும் பண்பும் மிக்க பெரியோர்கள் எங்களைப்போன்ற சிறியவர்களுக்கு வழிகாட்டிகளாவார். அவர்களுடைய சேவை மனப்பான்மைக்காகவும் தியாக சிந்தனைக்காகவும் மதித்துக் கௌரவித்து பத்திரிகைகளின் வாயிலாகவும் சஞ்சிகைகள் வாயிலாகவும் போற்றிப்பாராட்டப் படவேண்டியவர்கள் மட்டுமல்ல உண்மையாக அவர்கள் மாணவர்கள் உள்ளத்தாற் பூஜிக்கப்படவேண்டியவர்கள்.

Christa Seva Vidhyalaya

Telegram:
DISCIPULA VIDYALAYA, MADRAS

7/2 College Roc
Nungambakam,
Madras 31.

9/10

My dear Nevalan, just a few words to thank you very sincerely for the copy you drew for me with all the teaching work that you had to do. They are really superb and I am proud of your workmanship. Pardon me for giving you all this trouble. May God bless you, all your work and help you to use your talents for His honour and in His Cause. I pray also that God may guide you in your future life to take the right step all in accordance with His will. I also pray for His Healing Mercies for your body & soul & spirit.

Yours affectionate Christa,

R. Bishop Vanniasingam.

Christa Seva Vidyalaya

Telegram:
Diocesan Vidyalaya, Madras

712 College Rd
Nungambakam,
Madras 34.

AN APPRECIATION OF

MISS. R. J. MANN
B. A. Dip - in - Ed.
Principal. Uduppiddy Girl's College.

Mr. S. R. ARIARATNAM
B. A. Dip - in - Ed
Retired Principal Grade I
Udupiddy.

The task of writing an appreciation of our late Principal Miss. R. J. Mann has devolved on me. I feel proud of the fact that I am the most competent person to write an appreciation of the late Principal, with whom I have been associated for a few years.

She has left behind memories that will remain fresh as long as Uduppidy Girls' College lasts. Her exemplary conduct dynamic personality continue to permeate every nook and corner of the Institution. If ever I am asked the most unforgetable character,. I met in all my life, I would without the slightest hesitation mention the name of Miss. R. J. Mann.

This brilliant and erudite scholar from Uduvil joined the staff of our school in 1948 She had specialised in the Arts subjects with duties of teaching English to the senior students. She was of such a simple unassuming and genial nature that it took some time for her many hidden versatile talents to catch the eye of Miss. Lee Vanniysingham the then Principal of the school. It was a pleasant surprise for Miss. Vanniasingham to discover the administrative talents of Miss. Mann and she was made the Vice - Principal of the college. Her popularity both as a teacher and vice - principal became widely known and her popularity among the students and teachers alike, grew by leaps and bounds.

When Miss. Vanniasingham retired Miss. Mann was appointed the principal of the College There had been a time when the highest form in the school was the Senior scho ol certificate By her untiring efforts and the Co-operation of a set of conscientious staff. She had gradually achieved her goal of organising the University Entrance Classes. For up grading the school, She found that certain requirements were unavoidable. She was with an inordinate capasity for making effective appeals. She appealed to the American Mission who then managed the school and ealised the fund necessary to improve, the Library, Laboratories. and the playground, to the expectation of the Education Department, Miss Mann by her untiring efforts and personal Supervision Satisfied the conditions specified by the Department.

The present play ground was earlier a huge pond and during the rainy season, rain water from adjoining places filled the pond and the music of the frogs, during day and Night, was a nuisance. The pond was filled with several tractor loads of sand and gravel and today it is an ideal play field, where Inter - School Althetic Meets of Vadamaradchy are held. The parapet wall round the school and the flower garden in front of the office are real attractions to the school, and the credit undoubtly goes to Miss Mann.

The school was soon upgraded and the University Entrance classes were approved by the Education Department by the time of her getting appointed as Principal Methodist Girls' College Pt. Pedro. She had witnessed with great pleasure that some of her students who entered the University have became Arts Graduates. Today some of her students are in the staff of the college, Miss. Mann has enabled the students of Uduppiddy and the neighbouring villages to receive higher education without much expenditure We the parents should be ever thankful for her praise worthy services.

When Miss Mann was selected for the Dip-in-Ed. course she wanted the books notes I had and that was the first occasion of my meeting her. Later when my sister (Mrs. S. Selvaratnam) joined her staff we frequently met and discussed the knotty problems in the administration of a school.

Miss. Mann was a strong disciplinarian with a dynamic personality. She took a lot of interest in the Extra-Carricular activities of the college. She was aware of the fact that the Education of a child will not be complete by merely passing Examinations So, she encouraged guiding, music classes and gave ample opportunities for the students to participate in the literary and sports activities.

The Credit goes to Miss. Mann and the teachers in charge of Drill, to have made the school get the 1st place, in the senior, intermediate and the junior groups in the Inter school Drill competition, held at the Jaffna Central College grounds where some of the leading girls schools participated.

Miss. Mann was a popular principal in the peninsula, highly respected by the parents and her staff and loved by her students. There was a sudden trianguler transfer by the Departmen asking Miss. Mann to go to Chavakachchery Hindu Ladies College and the Chavakachchery Principal to go to Methodist Girls' College and Miss. Mary, Chinniah the Principal of Methodist to be the Principal of Uduppiddy Girls' College. It was a shock to the parents of Uduppiddy and the the adjoining villages. Miss. Mary. Chinniah was an able principal of experience and an old student and a lady of the place. Yet the parents were very keen that Miss. Mann should continue as principal and convened a meeting and unaimously appealed to the P. T. A. where I was a member, interfere in the transfer. The P. T. A. was sucessful in getting the transfer cancelled. This clearly indicates the talents and administrative Capacity of Miss. Mann and the respect the parents had towards her.

Readers may be surprised to note that she did not retire from our school and worked hard to get a transfer to Meth odist Girls' College During her frequent talks with me, she was worried that she may not retire as a grade I principal and would have a better chance if she gets a transfer to Methodist Girls' College Pt. Ped.o. Her noble qualities and unforgetable services to our school, made us feel that we should not hinder her future prospects.

Her magnanimity is shown by the fact that she had moulded her Deputy Mrs. Rajendirasingam to succeed her. The parents did not feel the absence of Miss. Mann, as Mrs. Rajendirasingam an old student and a local lady, who was long in the staff of the college, performed the duties as principal equally well af Miss. Mann. Her ever smiling face and the pleasant talk she had with the students and staff and her administrative abilities won the admiration of both the staff and students. Though Mrs. Rajendirasingam has retired, her kind words and gentle ways shall ever be cherished by them.

The success af a campaign, undoubtedly goes to the Commander. In the same way the success of Uduppiddy Girls' College mainly goes to Miss. R. J. Mann. It was our earnest hope that Miss. Mann, will live long enough to witness her students looming large in the intellectual horizon but the will of providence was otherwise. We extend our sympathy to the members of the family.

May her soul rest in peace.

அதிபர்
செல்வி ஆர். ஜே. மேன் அவர்கள்

திருமதி. அழகம்மா கந்தசாமி
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை
பழைய மாணவி (1946 — 1960)

அதிபருக்கேற்ற தோற்றமும், குணவியல்பும் கொண்ட செல்வி. ஆர். ஜே. மேன் அவர்களை உடுப்பிட்டி மகளிர் பாடசாலை, ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும் ஏற்று கல்வியில் உயர்ச்சியடைந்த வரலாற்றை எடுத்துக் கூறுவதில், மாணவரும் ஆசிரியரும் பெருமகிழ்ச்சியடைகிறார்கள். உடுப்பிட்டி மகளிர் பாடசாலை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவர் எம் அன்னையாம் அதிபர் அவர்கள்.

செல்வி லீ வன்னியசிங்கம் அவர்கள் அதிபராக இருந்தபொழுது செல்வி. ஆர். ஜே. மேன் அவர்கள் உதவி அதிபராகக் கடமையாற்றினார்கள். செல்வி. லீ. அவர்களின் ஆளுமையைப் பின்பற்றி செல்வி மேன் அவர்கள் தமது நிர்வாகப் பொறுப்பை திறம்பட நடாத்திவந்தார்கள். பார்வையின் மூலம் அவர் தமது உள்ளக்கருத்தை வெளியிடுவதில் சமர்த்தர். அன்பும் கட்டுப்பாடும், ஆளுமையுமிக்க அதிபர் அவர்கள், மாணவகளையும். ஆசிரியரையும் கட்டுப்பாடுகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கக்கூடிய வகையில் தமது நிர்வாகத்தைத் திறம்பட நடாத்தி வந்தார். நீண்ட உரை நடத்தி கேட்பவர்களைச் சலிப்படையச் செய்யமாட்டார். அன்னார் செயலில் செய்து காட்டுவதையே தமது இலட்சியமாகக் கொண்டிருந்தார்.

மாணவர்கள் கல்விகற்பதற்கேற்ற வசதிகளைச் செய்து கொடுப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். ஒழுக்கமுள்ள மாணவர்களாக வாழவேண்டுமென்பதில் பல கட்டுப்பாடுகளை மாணவருக்கு விதித்திருந்தார். பெற்றோரின் துணையின்றி மாணவர்கள் தனியே எவ்விடத்துக்கும் செல்லக்கூடாது என்பது முக்கிய கட்டுப்பாடாக இருந்தது. இத்தகைய கட்டுப்பாடுகளின் காரணமாகப் பெண்பிள்ளைகளின் ஒழுக்கம் பாதுகாக்கப்பட்டது. மாணவர்கள் சிறந்த குருபக்தி உள்ளவர்களாக உருவாக்கப்பட்டார்கள். ஆசிரியர் தமது குரு, என்ற மனப்பான்மை ஒவ்வொரு மாணவியிடமும் காணப்பட்டது. மாணவர் சிறந்த பண்பும், கல்வி அறிவுமுள்ளவர்களாக விளங்குவதற்கு காரணமாக இருந்தவர் அதிபர் அவர்களே. அவரின் நற்போதனையால் மாணவ உள்ளம் பண்படுத்தப்பட்டது.

கல்வி அறிவில் மாத்திரமின்றி கலைகளிலும் மாணவரை சிறந்து விளங்கச் செய்தார். சாரணர் இயக்கத்தை வளரச் செய்வதிலும் கவனம் செலுத்தினார். அகில இலங்கையில் விளையாட்டுப்போட்டிகளில் பங்கு கொள்ளச் செய்து, வெற்றியீட்டிக்கொள்ளச் செய்த பெருமையும் அதிபர் அவர்களையே சார்ந்ததாகும். 'பான்ட் வாத்திய' இசைக்குழுவினரைப் பாடசாலையில் பயிற்றுவித்து, விழாக்களில் இசைக்கச் செய்து யாவரையும் மகிழ்வித்தார்.

அதிபராக இருக்கு பொழுது கலை உயர்தரவகுப்பை இப்பாடசாலையில் அமைக்க அரசாங்கத்தாரிடம் அனுமதிபெற அரும்பாடுபட்டு வெற்றியும் கண்டார் உடுப்பிட்டி மகளிர் பாடசாலையிலிருந்து கலைப்பீடத்திற்கு மாணவிகள் தெரிவுசெய்யப் படுவதற்கு அதிபர் அவர்களது அயராத முயற்சியே காரணமாகும். கலைப்பிரிவு வகுப்பின் ஆசிரியராக இருந்து பாடங்களை சுருங்கக்கூறி விளங்கவைத்தார். குறிப்பின் உதவியுடன் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பார்வையிடும் கற்பித்தல் முறையைக் கையாண்டதின் காரணமாகவும் மாணவர் உயர்தர வகுப்புப் பாடங்களை திறமையாகக் கற்க முடிந்தது.

பல்திறன் விழாக்கள், போட்டிகள் யாவும் அதிபரின் பலநாள் பயிற்சியின் காரணமாக சிறப்பாக நடைபெற்றன. பல இடங்களிலுமிருந்து மாணவர்கள் விடுதிக்கு வந்து சேர்ந்தார்கள் பல ஊர்களின பண்பாடு, கலாச்சாரங்கள் எங்கள் ஊர்மக்களின் வாழ்க்கையை பண்படுத்த அதிபர் வழியமைத்தார். பாடசாலைக்கு தேவையான விளையாட்டு மைதானத்தை அமைத்த பெருமை எமது அன்னைக்கே உரியதாகும். குளமாக

இருந்த நிலத்தை வளமாக்கி, மாணவர் விளையாட்டு மைதானமாக்கி சாதனையை நிலைநாட்டினார். எதிர் கால மாணவர்களும் அவர்நாமத்தை அறியும் சாதனமாக இம் மைதானம் அமைந்துள்ளது. பழையமாணவர் சங்கத்தை புனரமைத்த பெருமையும் எம் அன்னைக்கே உரியதாகும். இடையில் தொய்வுற்று இன்று எழுச்சி பெற்றுள்ள அச்சங்கத்தின் பயனாக படசாலை பல நன்மைகளைப் பெற்று வளர்ச்சியடைந்து வருவது கண் கூடாகும். தற்பொழுது ஓய்வுபெற்ற எமது அபிமான அதிபர் திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள் சங்கத்தின் தலைவியாக இருப்பதும் அன்னாரின் வழிகாட்டலேயாகும்.

1948 முதல் 1974 வரை 26 வருடங்களான தமது அயராத சேவையில் 1960 முதல் 1974 வரை 15 வருடங்கள் அதிபராக நிர்வாகசேவை செய்து கல்லூரியை பிரபல்யப் படுத்திய எம் அன்னையை நாம் என்றும் மறக்கமுடியாது. இப்பாடசாலையை விட்டு பதவி உயர்வு பெற்று பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பாடசாலைக்குச் சென்று அங்கேயும் புகழீட்டினார். தாம் ஓய்வுபெற்ற காலத்திலும் பொது நிறுவனம் ஒன்றின் நிர்வாகியாய் அமைந்து பல கலைகளையும் மாணவர் பயில வழிகாட்டினார். கடைசி காலத்தில் நோயினால் பீடிக்கப்பட்டிருத்த போதும் அவரது உள்ளம் சோராமல் சேவை செய்ததை நாம் போற்றுகின்றோம்.

இல்லறத்தில் ஈடுபடாது பொதுநல சேவைக்காகவே தம்மை அர்ப்பணித்த திபாக தீபத்துக்கு மாணவ ஆசிரியர்கள் நன்றியுடையவர்களாக இருந்து முழு ஒத்துழைப்பையும் நல்கினார்கள் பெற்றோரின் உதவிக்கரங்கள் என்றும் அன்னைக்கு ஆதரவளித்தன. இரக்கமும் அன்பும் நிறைந்த அவரது உள்ளம் யாவரையும் கவர்ந்தது. பாடசாலை பிரபல்யமடைய அன்னாரின் ஆளுமையும் ஆத்மீக பெலனுமே காரணமாகும்.

தமது இறுதிமூச்சுவரை சேவை செய்துகொண்டிருந்த அன்னையின் இறுதியாத்திரை கொழும்புநகரில் நிகழவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆண்டவர் தமது அநாதி நோக்கத்தை அவரில் நிறைவேற்றி முடித்தார் அவரது மறைவை அறிந்து மாணவ, ஆசிரிய சமுதாயம், வேதனையடைந்தது. அவரின் உடலுக்கு அஞ்சலி செய்யும் பாக்கியம் மாணவ ஆசிரியர் சமுதாயத்துக்கு கிடைக்காவிட்டாலும், மனதில் அவர் உருவத்தை நினைந்து அஞ்சலி செலுத்தி தமது நன்றிக்கடனைத் தெரிவித்துக்கொண்டார்கள்

அன்னை மறைந்தாரேயல்லாமல் அவர் புகழ் மறையவில்லை. எமது பாடசாலையை பிரபல்யமாக விளங்கச் செய்த தாயை நாம் எம் மனத்திரையில் நிறுத்திப் போற்றுவோமாக! அன்னை காட்டிய பாதையில் எமது கல்விச் செல்வத்தை வளப்படுத்துவோம்! அவருக்கு நாம்செய்யும் நன்றி அவர் போதனைப்படி வாழ்வதே என்ற இலட்சியத்தை மனதில் நிறுத்தி ஆண்டவர் அருளவேண்டி வாழ்வோமாக!

துணிவுடன் நிகழ் மற்றவை
யாவும் பின் தொடரும்

— நேரு —

என் வாழ்வில் நான் சந்தித்த, மூன்று முத்தான அதிபர்கள்

திருமதி. தங்கம்மா கந்தவனம்,
இளைப்பாறிய அதிபர்,
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
பழைய மாணவி (1942 — 1952)

நான் 1942-ம் ஆண்டு, இராமநாதன் கல்லூரியிலிருந்து, உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிற் காலடி எடுத்து வைக்கிறேன். அந்தப் பசுமையான நாள் ஐம்பது ஆண்டுகள் கழிந்தும் எனது மனதை விட்டகலாது பதிந்துள்ளது. காரியாலய அறையிலே ஒரு சாந்த சொரூபி, கருணையின் வடிவம் அதிபராசனத்தில் அமர்ந்திருக்கக் கண்டேன். புன்னகை பூத்த வதனம்; சிரிப்புச் சிந்தும் கண்கள்; அவர்தான் செல்வி. கிருபைமலர், மதியாபரணம் அமைதியின் பிறப்பிடம்; அன்பின் இருப்பிடம்; என்னையறியாமலே எனது கரம் கூப்பியது. அன்பான வரவேற்பின் பின்னர் யான் எனது வகுப்பறைக்கு அழைத்துச் செல்லப்படுகிறேன். எனக்கு எல்லாம் தலை கீழாகத் தென்படுகிறது. எனது வகுப்பிலே மாணவிகள் வெள்ளைச் சீருடையிலே காட்சியளிக்கிறார்கள். 'நானோ, கணுக்கால் தெரியாத பாவாடை, அரைத்தாவணியுடன் செல்கிறேன். அது இந்துக் கலாச்சாரம், இங்கே மேல்நாட்டு, கிறிஸ்தவக் கலாச்சாரம். வகுப்பிலுள்ள மாணவிகள் என்னை ஒரு விசித்திரப் பிராணியைப் பார்ப்பதுபோல் பார்க்கிறார்கள். எனக்கு அடக்கமுடியாத அழுகை வருகிறது அன்று பின்னேரமே, அதிபர் என்னை ஒருவாரத்தில் நான் சீருடைக்கு மாறிவிடவேண்டுமென, அன்புக் கட்டளையிட்டார்.

செல்வி. மதியாபரணம் முகத்தில் நான் ஒரு பொழுதும் கடுகடுப்பைக் கண்டதில்லை. அமைதி, அடக்கம், பெண்மைக்கு ஓர் உதாரணம் என்றால் செல்வி. மதியாபரணத்தைத் தவிர, அன்றும், இன்றும் என்மனத்தில் வேறு எவரும் தோற்றவில்லை, அன்பினாலும், ஆளுமையினாலும் அவர் அந்தப் பெரிய ஸ்தாபனத்தை அடக்கி ஆண்ட அழகே ஒரு தனியழகு. அவரைப் போன்ற முதன்மைத்துவ அதிபரை இதுவரை நான் சந்திக்கவில்லை ஈராண்டு சென்றபின் நம்மையெல்லாம் கண்ணீர்க் கடலில் நீந்தவிட்டுச் செல்வி. மதியாபரணம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்றுவிட்டார்.

இவர் சென்றபின் இவரின் இடத்தை நிரப்ப வந்தவர், செல்வி. கிறேஸ், மங்கையற்கரசி வீ. வன்னியசிங்கம், அம்மையாராவார். இருவரின் தோற்றங்களிலும் குணாதிசயங்களிலும் நிறைய வேறுபாடு. ஆயின் இவரின் பணியும் இவரை ஒரு முதன்மைத்துவ அதிபராகவே உலகிற்கெடுத்துக் காட்டியது. இவர் வந்ததும் பாடசாலையிற் பல மாற்றங்கள், புரட்சிகளை ஏற்படுத்தினார். சீருடையிலே ஒரே மாதிரிக் கை, கொலர், பொக்கற் என ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினார். கல்வியிலும் ஒன்றுவிட்டொரு கிழமை தகைமைப் பத்திரம் தயாரித்து எக்சலன்ற் (Excellens), ஒனேஸ் (Honours) என மேடையிலே மாணவர் பெயர் வாசிக்கப்பட்டது. வலைப் பந்தாட்டத்திலும் அந்த நாளில் முதலிடம் வகித்த வேம்படி, சுண்டுக்குளி, பண்டத்தரிப்பு என்பவற்றுடன் போட்டி போட்டு வென்றோம். பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி என்பவற்றிலும் ஏனைய கிறிஸ்தவ பாடசாலைகளுடன் போட்டி போட்டு வெற்றியீட்டினோம் விடுதியிலே, இணைப்படியிலே எங்கும் "ஆங்கிலம் பேசு" ("Speak English") எனும் வசனம் காணப்பட்டது. ஆங்கிலம் கதையாதவர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. இப்படியாகச் சகல துறைகளிலும் ஒரு புரட்சியை உண்டாக்கினார் இந்த முதன்மைத்துவ அதிபர்.

இவரின் தோற்றமோ பால் நிறம்; உயரம் குறைவு! நீண்ட கூந்தல், நடுத்தர வயதிலும் சுறுசுறுப்பு, எத்த இடமும் தூய்மையாக இருக்க வேண்டும். வழியில் எங்காவது குப்பை, கடதாசி கண்டால் பொறுக்கிக் கொண்டு செல்வார். உயரம் குறைவானபடியால் சூதியுயர்ந்த சப்பாத்து அணிந்திருப்பார், விரைவாக நடப்பார். ஒரே சுறுசுறுப்பு இவரின் காலத்திலே உடுப்பிட்டி மகளிர் கல்லூரி உச்ச நிலைக்குச் சென்றது. சில வேளைகளில் ஆஸ்துமா வியாதியும் இவரை வருத்துவதுண்டு இருந்தும் அவரின் பணிகளில் அது குறுக்கீடானதில்லை தனிப்பாணியிலமைந்த இவரின் ஆளுமையினால் கல்லூரி பெற்ற நன்மைகள் அளப்பரியன.

இவர் அதிபராயிருக்கும் பொழுதே செல்வி றூத் ஜெயமணி மேன் உப அதிபராக பிரகடனப்படுத்தப்பட்டு இவரின் நிழலையே பின்பற்றி பயிற்சி எடுத்துக்கொண்டிருந்தார். நெடிய தோற்றம், மான்விழி' முழங்காலின் கீழே புரளும் கூந்தல், வெள்ளை நிறம், கொடியுடல், இவரிடம் ஆங்கிலம், சரித்திரம் படிக்கும் பேறு கிடைத்ததை நான் என்றும் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். செல்வி. லீ. ஓய்வுபெற்றுப் போனபின் செல்வி. மேன் அவர்களின் இடத்தை நிரப்பியுள்ளார். நான் 1952-ம் ஆண்டு விவாகம் செய்து கொழும்புக்குப் போய்விட்டேன், பின்னர் 1972-ம் ஆண்டு யாழ்ப்பாணம் திரும்பியபொழுது செல்வி. மேனை பருத்தித்துறை மகளிர் உயர்தரக் கல்லூரியின் அதிபராகச் சந்தித்தேன். எனது மகளை அவரின் மாணவியாக ஒப்படைத்தேன். செல்வி. மேன் அந்தக் கல்லூரியை ஓர் உயர்ந்த நிலையில் வைத்திருந்ததைக் கண்டு உவகை அடைந்தேன்.

நான் ஒரு பாடசாலையிலே 1984 — 1990-ம் ஆண்டு வரை அதிபராகக் கடமையாற்றினேன் அக் காலத்தில் இந்த முத்தான மூன்று முதன்மைத்துவ அதிபர்களின் வழிகாட்டலே நான் எனது சேவையைத் திறம்படச் செய்ய உதவியது. ஓர் அதிபர் இப்படித்தான் அமைய வேண்டுமென வழிகாட்டிய இந்த மூன்று அதிபர்களும் இன்று எங்குள்ளனரோ எனக்குத் தெரியாது ஆயின் எனது உள்ளக் கோயிலிலே மூவரும் குடியிருக்கின்றனர்.

உண்மையான தன்னம்பிக்கையுடன் கூடிய தன்னடக்க சுபாவத்தைத்தான் சர்வகலாசாலையில் பயின்றாக வேண்டும்.

— சி. வி. ராமன்

முன்னாள் அதிபர் திருமதி. கனகமணி இரத்தினசாமி அவர்கள்

திருமதி. த. மகேஸ்வரன்
இளைப்பாறிய ஆசிரியை
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
பழைய மாணவி (1936 — 1947)

உலகில் தோன்றுகின்ற மக்களிற் சிலர் அறிவாளிகளாகத் தோன்றுகின்றார்கள் அவர்களது புகழ் நின்று நிலவுகின்றது. ''அறிவுடை ஒருவரை அரசும் விரும்பும்'' என்பார்கள். அந்த வழியில் யாழ் வடமராட்சியில் அறிஞர் பலரை ஈன்றெடுத்த பெருமை புலோலியம் பதிக்கும் உண்டு. இக் கிராமத்தில் தோன்றியவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் திருமதி. கனகமணி இரத்தினசாமி அவர்கள்

இவர் 1 – 1 – 75 இல் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் அதிபராகப் பொறுப்பேற்றார். இதற்கு முன் இக்கல்லூரிக்கு அதிபராய் இருந்த செல்வி **R. J. Mann** அவர்கள் இக் கல்லூரியை விட்டு வேறு கல்லூரிக்கு அதிபராகச் சென்றபோது இவர் இங்கு அதிபரானார். இக் கல்லூரியிலுள்ள ஆசிரியர்களும் மாணவர்களும், ஊழியர்களும் செல்வி. **R. J. Mann** அவர்களின் நிடீர் மாற்றத்தை அறிந்து கதிகலங்கி நின்றோம் செல்வி. மேன் அவர்களைப் போன்று அறிவும். நுட்பமும், நல்லோர் எனப் பல்லோர் போற்றும் பண்பும் நிறைந்த ஒரு அதிபர் எமக்குக் கிட்டுவாரா என அங்கலாய்த்திருந்தோம். கவலையும் கொண்டிருந்தோம்

02 – 01 – 75 அன்று பாடசாலை முதலாம் தவணை தொடங்குகிறது. ஆசிரியர்களும், மாணவர்களும், ஊழியர்களும கல்லூரி செல்கின்றோம். நான் அதிபர் காரியாலயத்துக்கு எனது நேரப் பதிவைச் செய்வதற்குத் தளர் நடையுடன் செல்கின்றேன். நேரம் பதிவு செய்யுமிடம் காலியாய் இருந்தது. உள்ளே செல்கின்றேன். அதிர்ச்சி அடைகின்றேன். ஆனை இருந்த இடத்தில் பூனை இருக்கக் கண்டேன். என் அதிர்ச்சியிலிருந்து மீளுமுன் பூனைபோல் இருந்தவர் எனக்குக் காலை வணக்கம் கூறினார். உடன் நானும் சுய உணர்வு பெற்றுப் பதில் வணக்கம் கூறினேன். மன்னிக்கவும், செல்வி மேனுக்கும் இவருக்கும் இடையிலுள்ள உருவ வேறுபாட்டை நினைத்துத்தான் பூனைபோல் என்று நினைத்தேன். பின்னர், காலப்போக்கில் உருவத்தில் சிறியவராயினும் அறிவிலும், ஆற்றலிலும் பெரியவர் என்பதை உணர்ந்தேன்.

எமது கல்லூரிக்கு இவருடைய ஆளுமை 1975 ஆம் ஆண்டு தொடக்கம் 1978 ஆம் ஆண்டு வரையுமே அமையப்பட்டதாய் இருந்தும் எத்தனையோ நல் நிகழ்வுகள் இக்காலத்துக்குள் கல்லூரிக்கு உண்டானமை கண்கூடு இவர் தம்மிடம் ஒப்படைத்த கல்லூரிப் பணியை உயிராக நேசித்தார் மாணவச் செல்வங்களை வளமாக்குவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். அவர் செய்த கைங்கரியங்களை உடுப்பிட்டி வாழ் மக்கள் என்றும் மறந்துவிடவில்லை. அவரது சிறப்பியல்புகளை எடுத்துக்கூறி வாழ்த்துவதில் அடியேனும் பெருமை அடைகிறேன்.

திருமதி. கனகமணி இரத்தினசாமி அவர்கள் அதிபராய் பதவி ஏற்றவுடன் எமது கல்லூரி உயர்தர வகுப்பு மாணவிகளுக்கு விஞ்ஞானம் பயிலுவதற்கு விஞ்ஞானப் பிரிவை உண்டாக்குவதற்கு ஏதுவாய் இருந்தார். இதற்குமுன் கலைப்பிரிவு மாத்திரம்தான் இங்கு இருந்தது. விஞ்ஞானப் பிரிவு படிப்பவர் வேறு பாடசாலைகளை நாடிச் சென்று கற்க வேண்டியதாய் இருந்தது. இதனால் இக் கல்லூரியில் அத்திவாரம் இடப்பட்ட மாணவிகள் வேறு பாடசாலைகள் செல்வதால் அப்பாடசாலைகளே பெருமை அடைந்து வந்தன. இவர் வருகைக்குமுன் கலைப்பட்டதாரிகளே எம் கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்தார்கள். இப்பொழுது விஞ்ஞானம் பட்டதாரிகளும் சேரந்து மேலும் பெருமைகளைத் தேடித்தருகின்றார்கள்.

அடுத்து எமது கல்லூரியில் அதிபர், ஆசிரியர்' ஊழியர்களுக்கான நலன்புரிச்சங்கம் என்ற ஓர் அமைப்பையும் ஏற்படுத்தி பந்தம், பாசம், ஒருங்கிணைப்பு என்பவற்றையும் உண்டாக்கியவர் அவர். இளம் மாணவரின் உறுப்புக்களில் பற்களும் முக்கியமானவை, ஒவ்வொரு மாணவரும் பற்களைச் சுத்தமாகவும் உறுதியா

கவும் அழகாகவும் வைத்திருப்பதற்கு ஏதுவாக ஒரு பற்சிகிச்சை நிலையமும் இக் கல்லூரியில் அமைய உதவியவர். இந்நிலையத்திற்கு தாதி உத்தியோகத்தர் ஒருவரையும் நிலையாக நியமிக்க ஏற்பாடுகள் செய்தவர். எமது கல்லூரி மாணவர்களும், அயற் பாடசாலைகளிலுள்ள மாணவர்களும் இந் நிலையத்தில் பற்களுக்கு வேண்டிய சிகிச்சைகளையும் ஆலோசனைகளையும் பெற்று வந்தார்கள். இனனும் கல்லூரியில் இருந்து வந்த நான்கு இல்லங்களில் நிலவிய குறைபாடுகள், பெலவீனங்களையும் ஆராய்ந்தறிந்து, அதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து எல்லா இல்லங்களையும் சமவலிமை உடையனவாக அமைத்த பெருமையும் இவருக்குண்டு.

எம்மிடையே அதிபராகக் கழித்த இவரது கல்லூரி வாழ்க்கையிலே சகோதரத்துவம், தலைமைத்துவம் பெரியோரைக் கனம்பண்ணல், பிறர்க்கு உதவுதல் போன்ற நற்பண்புகள் காணப்பட்டன. ஆகவே இவர் சிறிது காலந்தான் இக் கல்லூரியில் அதிபராய் இருந்தபோதும், செயற்கரிய சேவைகளைச் செய்தமையை நாமும், எமது கல்லூரியும் என்றும் மறத்தலரிது.

உன்னைத் தாழ்த்திப் பேசும் பொழுது நீ அடக்கமா
யிருத்தல் பெரிய காரியமன்று உன்னைப்
புகழ்ந்துரைக்கும் பொழுது அடக்கமாயிருத்தல்
அரிய பெரிய வெற்றியாகும்.

— ஆர்ச் பெர்னார்டு

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் உருவாகிய ஆளுமை திருமதி. பாக்கியலக்ஷ்மி இராஜேந்திரசிங்கம்

திரு. க. குணரத்தினம்
B. Sc , Dip-in-Ed.,
Fellowship-in-Ed. (Bristol)
SLEAS Class IV
இளைப்பாறிய அதிபர்

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வரலாறு படைத்த ஒரு கல்வி நிலையம், வடமராட்சிப் பகுதிப் பெண் பிள்ளைகளுக்கு கல்வியெனும் ஒளியை ஏற்றி அறியாமை எனும் இருளை நீக்கியதுடன் சமுதாயத்தில் அவர் களின் அந்தஸ்தையும் உயர்த்தப் பெரும்பணி ஆற்றியிருக்கிறது.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கோ, ஒரு இனத்தின் விடிவிற்கோ தாய்மாரின் உள்ளம் முதலில் விடுதலை அடைய வேண்டும். கண்மூடித்தனமான பல மூடநம்பிக்கைகள், பகுத்தறிவுக்கொவ்வாத பத்தாம் பசலிக் கருத் துக்கள் அவர்களைச் சுயமாகச் சிந்திக்கவோ செயலாற்றவோ விடுவதில்லை. விடுதலை அடைந்த பெண்ணி னால் தான் வீரப்புதல்வர்களை உருவாக்க முடியும். புதுமைப் பெண்ணைத் தோற்றுவிப்பது கல்வியின் முக் கிய பணியாகும்.

சுதந்திரமாகச் சிந்தித்துச் செயலாற்றக்கூடிய திறமை மிக்க அதிபர்கள் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியை வழிநடத்தி வந்துள்ளனர். அந்த வரிசையில் வந்தவர் தான் திருமதி. பாக்கியலக்ஷ்மி இராஜேந்திரசிங்கம் அவர்கள் இக் கல்லூரியின் மாணவியாகவிருந்து, பின் ஆசிரியராகி, உப அதிபராகி இறுதியில் அதிபராயுமிருந்து இளைப் பாறியவர் திருமதி பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள் அவர் தன் வாழ்க்கை முழுவதையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கே அர்பணித்துள்ளார் என்று கூறினால் அது மிகையாகாது இது ஒரு அரிய சாதனை.

செல்வி. லீ. வன்னியசிங்கம் அதிபராக இருந்தபோது மாணவியாகவும் ஆசிரியராகவும் இருந்தார் சிறந்த கணித ஆசியர் என மாணவர் போற்றினர். செல்வி மேன் அதிபராக இருந்தபோது ஆசிரியராயிருந்து உப அதிபரானார். நிர்வாக நுட்பங்களை நிறைய அவதானித்துத் தெரிந்து கொண்டார். கல்வி டிப்புளோமாப் பயிற்சியும் அவரின் திறமையான நிர்வாகச் செயற்பாட்டுக்கு மேலும் உதவியது.

சமுதாயம் மாறிக்கொண்டேயிருக்கிறது, கல்வியும் மாறுகிறது. கல்லூரியிடம் பெற்றோரின் எதிர்பார்ப்புக் களும் மாறுகின்றன. அதற்கேற்ப நிர்வாகமும் மாறவேண்டும் சூழலுக்கேற்ப இசைவாக்கமடையாவிடில் எந்த சிறந்த நிர்வாகியும் வெற்றிகரமாக செயற்பட முடியாது நிகழ்ந்த பல மாற்றங்களையும் நன்கு புரிந்து செயற் பட்டதனால் திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் சிறந்த அதிபராக முடிந்தது.

அவர் அதிபராக ஆரம்பித்த காலம் பல பிரச்சினைகள் நிரம்பிய காலம் பல பாடசாலைத் தேவைகளுக்கு கல்வித் திணைக்களம் கைவிரித்த காலம். பாடசாலையை முன்னேற்றப் பாதையில் நடாத்திச் செல்ல வேண்டு மானால். பழைய மாணவர் பெற்றோர். பாடசாலை நலன்விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்பையும் ஆதர வையும் அதிபர்கள் பெறவேண்டியிருந்தது. இந்த முயற்சியில் அவர் பூரண வெற்றி பெற்றார்.

மாணவரின் முழுவளர்ச்சி வகுப்பறையிலும், வகுப்பறைக்கு வெளியேயும் நடைபெறும் பல முயற்சிகளிலும் தங்கியுள்ளது. மாணவரின் விருப்புக்கும் ஆற்றலுக்குமேற்ப பாடவிதானம் அமையப் பெற வேண்டும். மாண வரின் நீண்ட காலத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கல்லூரியில் உயர்தர விஞ்ஞான கலை வணிகத் துறைகள் ஆரம்பித்து நடாத்தப்பட்டன. கலை கலாச்சார வளர்ச்சி பேணப்பட்டது. சமய விழாக்கள் கொண்டாடப்பட்டன. விளையாட்டுத் துறையில் விரிவான முறையில் மாணவர்கள் பங்கு பற்றும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டது. மாணவர்கள் பங்கு பற்றும் நிகழ்ச்சிகளில் பெற்றோர் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற் படுத்தப்பட்டது. மாணவர் தொகை அதிகரிக்க கட்டிட, தளபாட வசதிகளும் ஏற்படுத்த வேண்டும். அதிபரின் அயராத முயற்சியினால் அவை ஏற்படுத்தப்பட்டன மாணவர்களுக்கிடையேயான பல போட்டிகளில் வட்டார, மாவட்ட, அகில இலங்கை ரீதியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பல சாதனைகளை ஏற்படுத்தியுள்ளது.

கல்லூரியைத் திறமையாக நிர்வகித்து, கல்லூரியை எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடையச் செய்து பழைய மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள் ஆகியோரின் அன்பையும் ஆதரவையும் பூரணமாகப் பெற்று கல்வித் திணைக்களத்தின் அனுசரணையையும் ஆசிகளையும் பெற்று. உடுப்பிட்டி மகளிர் கல்லூரியை உன்னதமான நிலைக்கு உயர்த்தியதன் மூலம் திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள் கல்லூரியின் வரலாற்றில் ஒரு சாதனையைப் படைத்திருக்கிறார்.

திரு தி. பா இராஜேந்திரசிங்கத்தை நினைவுகூரும் போது அவரின் புன்சிரிப்பும், இனியசுபாவமும் அன்பாகப் பழகும் பாங்குமே கண்முன் நிற்கிறது பொது மக்களை அவர்பால் ஈர்த்ததற்கு இந்த இயல்புகள் உதவியுள்ளன.

அவர் இளைப்பாறிய போதிலும் பழைய மாணவர் சங்கத் தலைவியாக இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு தொடர்ந்து சேவை செய்வது மிகவும் பராட்டுதற்குரியது. இன்றைய நிலையில் கல்லூரியைக் காப்பது சமூகத்தின் கடமையாகி விட்டது. எந்த இடர்வரினும் இளம் சந்ததியின் கல்வியைப் பேணி வளர்ப்போமாக

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 135 ஆண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு மலர் வெளியிடும் குழுவினருக்கு எனது பாராட்டுக்கள். திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள் நீடூழி வாழ்ந்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கும், சமூகத்துக்கும் தொண்டாற்ற இறையருள் புரிவாராக

கல்வி ஒருவனை நல்ல மனிதப் பண்புடையவனாகவும், நற்குடி மகனாகவும் ஆக்க வேண்டும், ஆகவே கல்வி நல்ல மனிதரை உருவாக்கி, அவர்களினூடாக நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

— ரூசோ —

தளராத சித்தம், தணியாத பற்று

திருமதி. கமலவதனா தேவராஜா
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
பழைய மாணவி (1958 — 1969)

யாழ் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியை உருவாக்கிய சிற்பிகளுள் குறிப்பிடக்கூடியவராக திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள் விளங்குகின்றார். இக் கல்லூரியின் வளர்ச்சியில் இவர் ஆற்றிய பங்களிப்பு பன்முகப்பட்டது. மாணவியாக, ஆசிரியையாக, உபஅதிபராக, அதிபராக இருந்த காலங்களிலெல்லாம் அவ்வக் காலத்திற்கு ஏற்ற வகையில் தன் பங்களிப்பை ஆற்றியுள்ளார்.

இவர் 1933 ஆம் ஆண்டு உடுப்பிட்டியில் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் பயின்றார். பட்டப் படிப்புக்காக இந்தியா செல்லும் காலம்வரை இக் கல்லூரியிலேயே தனது கல்வியைத் தொடர்ந்தார். மாணவப் பராயத்தில் பாடசாலையோடிணைந்த புறச்செயற்பாடுகளிலே மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டார். விளையாட்டு, இலக்கியம், சங்கீதம் சாரணர் இயக்கம் ஆகிய புறச் செயற்பாடுகளிலேயே தன்னை இணைத்துக் கொண்டு தானும் வளர்ந்து கல்லூரியையும் வளர்த்தார்.

கல்வியறிவிலேயும் சிறந்து விளங்கினார், கணிதமும், தமிழும் இவரின் விருப்புக்குரிய பாடங்களாகத் திகழ்ந்தன. சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் .இவர் பெற்ற சிறந்த பெறுபேறு காரணமாக இந்தியாவில் பட்டப்படிப்பை மேற்கொண்டு 1956 இல் பட்டதாரியாக நாடு திரும்பினார்.

கல்லூரி மாதாவின் மீது கொண்ட அளப்பரிய பற்றின் காரணமாக இக்கல்லூரியிலேயே தனது ஆசிரியப் பணியை 1956 06 01 இல் ஆரம்பித்தார் இவர் கணிதம் கற்பிப்பதில் விற்பன்னராகத் திகழ்ந்தார். தனியார் கல்வி நிறுவனங்கள் இல்லாத அந்தக் காலத்திலே மாணவர்களின் கவனத்தை தனது அக்கறையான கற்பித்தலின் மூலம் கணித பாடம் நோக்கித் திருப்பினார். 1968 இல் க. பொ. த. (சா / த) வகுப்பிற்கு கேத்திர கணிதத்தில் பல தேற்றங்கள் கற்பிக்கப்பட வேண்டும். எங்கள் ஆசிரியரின் கற்பித்தல் நேர்த்திக்கு இதை ஒரு சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம் ஆசிரியரிடம் கற்று 25 ஆண்டுகள் கழிந்து விட்ட போதிலும் இன்றும் கூட இத்தத் தேற்றங்கள் அனைத்தும் என மனதில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளன. நான மட்டுமன்றி என்னுடன் பயின்ற எத்தனையோ தோழிகளும் இதை என் காதுபடச் சொல்லக் கேட்டு மகிழ்ந்துள்ளேன் டியூறல், தொமஸ்ஈப்பன், ஆசீர்வாதம், எச். எஸ். ஹோல் (H. S. Hall) போன்றோரின் புத்தகங்களில் உள்ள பயிற்சிகளைத் தெரிந்து தருவார். தருவதோடு நின்றுவிடாமல் எமது பயிற்சிகளைக் சலிப்பில்லாது திருத்தி போதிய விளக்கங்களும் தருவார். இதன் பெறுபேறாக மாணவர்களுக்கு கணித பாடத்தில் ஆர்வம் அதிகரித்தது. பொதுவாக விஞ்ஞானம் கற்கும் மாணவர்கள் எண்கணிதத்தில் பங்கும் சரக்கு முதலும் எனனும் பகுதியை தவிர்த்துக் கொள்வது வழமை தேர்வுகளிலும் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கணக்கைத் தெரிவு செய்வதில்லை ஆனால் எங்கள் ஆசிரியையிடம் கணிதம் கற்ற மாணவிகள் தேர்வுகளில் முதலில் தெரிவு செய்வது பங்கும் சரக்கு முதலுமே. அதன் விடையும் சரியாகவே இருக்கும். விடுமுறை நாட்களிலும் கூட வகுப்புக்களை நடாத்தி, வினாத்தாள்களை அச்சிட்டு வழங்கித் தேர்வுகளை நடாத்துவார்.

இவர் எண்கணிதம் கற்பிப்பதிலும் சிறந்த நிபுணத்துவம் பெற்றிருந்தார். இதற்கு எடுத்துக்காட்டாக 1968-ஆம் ஆண்டில் க. பொ. த. (சா / த) பரீட்சையில் எண்கணிதப் பாடத்திற்குத் தோற்றிய 144 மாணவர்களில் 90 பேர் விசேட சித்தியை (Distinction) பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவரின் மாணவியர் பலர் எமது கல்லூரியிலும், அயற்பாடசாலைகளிலும், வேறு மாவட்டங்களிலும் சிறந்த கணித ஆசிரியர்களாக கடமையாற்றுகின்றார்கள் தன் வழியைப் பின்பற்றி ஓர் கணிதஆசிரியப் பரம்பரையையே உருவாக்கிய பெருமை அவருக்கு உண்டென்றால் மிகையாகாது திருமதி. இராஜேந்திரசிங்கம் அவர்களின் மாணவியர் என்று கூறுவதில் இவர்கள் பெருமையடைகின்றனர். இவரின் மாணவியர் வெளிநாடுகளிலும் கணிதத்துறையில் பிரகாசித்துக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1964 இல் உப அதிபராகப் பதவியேற்ற இவர் அதிபர் செல்வி. வீ. வன்னியசிங்கம் அவர்களின் காலத்தில் இருந்தே பாடசாலை நிர்வாகத்தில் அதிபருக்கு உதவியாக இருந்தார். அந்தக் காலகட்டத்தில் நிர்வாக நுணுக்கங்களை அறிந்து கொண்டார். தொடர்ந்தும் செல்வி R. J. மேன் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் நிர்வாகத்தில் கூடுதலான பொறுப்புக்கள் எம் அதிபருக்குத் தரப்பட்டன நிர்வாகத் திறமையில் சிறந்த இரு அதிபர்களின் கீழ் பயிற்சி பெறும்பேறு பெற்ற எம் அதிபர் திருமதி. இராஜேந்திரசிங்கம் தனது காலத்தில் தளராத மனமும் திடமான செயலும் கொண்டு உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் நிர்வாகத்தை பல ஆண்டுகள் திறம்பட நடத்தினார். உதவி அதிபராக இருந்த காலத்திலேயே தன் பட்டப்பின்படிப்பினையும் (கல்வி டிப்ளோமா) மேற்கொண்டு 1978 ஆம் ஆண்டு எமது கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றார், இவர் அதிபராகப் பொறுப்பேற்ற காலத்தில் இவருடைய பண்முகப்பட்ட ஆற்றல்களினால் கல்லூரி உன்னத வளர்ச்சியடையக்கூடியதாக இருந்தது. சிறந்த நிர்வாகியாக, மாணவருடன் தொடர்பாடலில் அன்னையாக, பிரச்சினைகளை விளங்கிக் கொண்டு அவற்றை விடுவிப்பதில் வல்லவராக ஆசிரியர்களுடன் சினேகபூர்வமாகப் பழகுபவராக, பெற்றோரையும், ஆசிரியரையும் இணைக்கும் பாலமாக இவரின் ஆளுமைப் பண்புகள் விரிந்து சென்றன

சிறு பராயத்தில் இருந்தே புத்தகக் கல்வியோடு மட்டுமல்லாது புறவேலைச் செயற்பாடுகளிலும் கூடிய ஆர்வம் கொண்டிருந்தார். அதிபரானதும் கலைத்துறை விளையாட்டுத்துறை, சாரணியத்துறை என்பன சிறந்து விளங்குவதற்கு முதற் காரணியாக விளங்கினார். ஒழுக்காற்று நடவடிக்கைகளிலும் கூடிய கவனம் செலுத்தினார்.

க பொ. த (உ/த) வகுப்புக்கள் திறம்பட நடைபெற ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆசிரியப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வசதிக்கட்டணத்தில் பல ஆசிரியர்களை நியமித்தார். க பொ. த (உ/த) வகுப்பு மாணவர்கள் ஒன்றியத்தை நிறுவினார் ஒன்றியத்தின் பின்னணியில் கலைவிழாக்கள், இலக்கிய விழாக்கள், மாணவ ஒன்றுகூடல்கள் நடாத்தத் துண்டுதல் அளித்தார்.

இவர் எத்தகைய இடர்பாடுகளையும் எதிர்கொள்ளும் திடசித்தம் உடையவர் தான் சரியெனத் துணிந்த காரியத்தை உறுதியுடன் செயற்படுத்தும் வல்லமை மிக்கவர். 1987 இல் வடமராட்சி முழுவதும் நடந்தேறிய இராணுவ நடவடிக்கையின் போது எமது கல்லூரியின் கட்டிடங்களும், தளபாடங்களும் நாசமாக்கப்பட்டன இதனால் எமது கல்லூரியின் மாணவர்களை வேறு பாடசாலைகளுக்கு அனுப்பும்படி ஆலோசனை வழங்கப்பட்டது. இந்த யோசனையை எம் அதிபர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. சில வீடுகளை ஒழுங்கு செய்து மாணவர்களுக்கு அங்கே கல்வியை ஊட்டினார் அதன் பின்னர் எமது கல்லூரியில் தற்காலிக கொட்டகைகளை அமைத்து மீண்டும் அங்கு கல்வி சுற்க வசதி செய்து கொடுத்தார்.


இவர் சமய நம்பிக்கை மிக்கவர் மாணவர்கள் தத்தம் சமயங்களை சிறப்புறக் கடைப்பிடிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவார், ஒளிவிழா வாணிவிழா, போன்ற சமயவிழாக்களை நடாத்தி மாணவர்களை ஊக்குவித்தார். எந்த விழாக்களையும் குறுகிய கால இடைவெளிக்குள் தரமானதாக அமைத்து அளிப்பதில் இவர் வல்லவர்,

தான் சார்ந்த சமூகத்தின் முன்னேற்றத்துக்காகவும் உழைப்பவர். உடுப்பிட்டி தென்னிந்தியத் திருச்சபையின் சிரேஷ்ட அங்கத்தவரான இவர் தேவாலயக்கருமங்களிலும் அக்கறையோடு ஈடுபடுவார்.

இவர் 1993-02-28 இல் தனது சேவையிலிருந்து இளைப்பாறினார். எனினும் கல்லூரியின் முன்னேற்றமே வாது குறிக்கோளாக இன்றும் உள்ளது பழைய மாணவர் சங்கத் தலைவியான இவர் கல்லூரியின் வளர்ச்சிக்கு வேண்டிய பணிகளைச் செய்து வருகிறார். இவரின் தலைமைத்துவத்தின் கீழ் பழைய மாணவர் சங்கம் புத்தூக்கம் பெற்றுள்ளது,

கல்லூரியின் வளர்ச்சிக்கு மேலும் நல்ல பணிகளை ஆற்ற ஆண்டவர் தாமே அவரை ஆசீர்வதிப்பாராக.

எங்கள் ஆசிரியர்கள்



அதிபர்
செல்வி ஜி. எம். லீ. வன்னியசிங்கம்
அவர்கள் காலத்தில்



அதிபர் செல்வி ஆர். ஜே. மேன்
அவர்கள் காலத்தில்



அதிபர் திருமதி க. இரத்தினசாமி
அவர்கள் காலத்தில்







அதிபர், ஆசிரியர், ஊழியர்
1993 பெப்ரவரி





பாடசாலை அபிவிருத்திச் சபை
செயற்குழு உறுப்பினர்கள்



இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:

1. திருமதி. த. மகேஸ்வரன்
2. திருமதி. இ. குட்டித்தம்பி (தலைவர் இன்றைய)
3. திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் (தலைவர் முன்னைய)
4. திரு. க. சண்முகம் (செயலாளர்)
5. திருமதி ஸ்ரீ. குழந்தைவேல்,

நிற்பவர்கள் இடமிருந்து வலமாக

1. திருமதி. இ. சோமஸ்கந்தமூர்த்தி (பொருளாளர்)
2. திரு. S. ஜெகநாதன்
3. திரு. இ. சி. தனபாலசிங்கம் (உபதலைவர்)
4. திரு. K. குணசிங்கம்
5. திரு. செ. பரராஜசிங்கம்
6. திருமதி. க. தேவராஜா

படத்தில் இல்லாதோர்:

திருமதி. ச. குமாரசுப்பிரமணியம் (உபசெயலாளர்)



எமது இன்றைய அதிபர்

திருமதி. இரஞ்சிதம் குட்டித்தம்பி

B. A. (சிறப்பு) கல்வியியல் டிப்ளோமா

திரு. சோமசுந்தரம் அம்பலவாணர்
B. Sc., Dip - in - Ed.
ஆசிரியர்,
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி



வடமராட்சியிலுள்ள ஐம்பெரும் மகளிர் கல்லூரிகளில், கூடுதலான மாணவர்களையும், ஆசிரியர்களையும் உள்ளடக்கிய ஒரு சிறந்த ஸ்தாபனமாக உடுப்பிட்டி மகளிர் கல்லூரி விளங்குகின்றது. அமெரிக்க மிஷனரிமாரினால் தீர்க்க தரிசனத்துடன், கடும் உழைப்பினால் கட்டியெழுப்பப்பட்ட இப்பாரிய கல்விக்கூடம் இவ்வாண்டு தன் 125 ஆவது ஆண்டு விழாவினைக் கோலாகல மாகக் கொண்டாடுகிறது. இத் தொண்ணூற்று மூன்றாம் ஆண்டில் கல்லூரி யின் புகழ்பூத்த அதிபராகிய திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள் நீண்ட கால சேவையின்பின் ஓய்வு பெறுவதும், அவரின் இடத்திற்கு திருமதி. இரஞ் சிதம் குட்டித்தம்பி கடமையேற்பதும், கல்லூரிக்கு நூற்றிருபத்தைந்தாண்டு கள் நிறைவதுமான மூன்று நிகழ்வுகளும் ஓர் சமகால வரலாறாக அமைகிறது

இப் பாடசாலையின் சகல துறைகளிலும், அளப்பரிய சேவை புரிந்த செல்வி. மேன், தொடர்ந்தும் இக் கல்லூரியைத் திறம்பட வளர்த்த திருமதி பா. இராஜேந்திரசிங்கம் போன்றோரின் ஓய்வின்பின் இவர்களின் வெற்றிடத்தை நிரப்புவது ஆச்சரியத்துக்குரிய தொன்றாகத் தோன்றவில்லை. எமது ஆசிரிய குழாத்தின் மத்தியிலேயே எம்மையறியாமலே அவ்விடத்தைப் பூரணப்படுத்துவதற்கு தகுந்த சகல தகைமை களுடனும் உருவாகிக் கொண்டிருந்தார் எமது இந்நாள் அதிபர் திருமதி. இரஞ்சிதம் குட்டித்தம்பி [B. A. (சிறப்பு). கல்வியியல் டிப்ளோமா] அவர்கள்,

திருமதி. இரஞ்சிதம் குட்டித்தம்பி அவர்கள் இளைப்பாறிய அதிபர் டேவிட் போல், துணைவியார் இளைப்பாறிய ஆசிரியை திருமதி. சந்தனவடிவு தம்பதிகளின் ஏக புத்திரியாவார். இவரது தந்தையார் ஒரு சிறந்த அதிபர். வாழ்க்கைத்துணைவர் திரு. குட்டித்தம்பியும் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். கல்விப் பாரம்பரியத்தில் நன்கு தோய்ந்து வளர்ந்த இவர் இப் பதவியை வகிப்பதில் வியப்பொன்றுமில்லை.

யாழ் பல்கலைக்கழக புவியியல் சிறப்புப் பட்டமும், கல்வியியல் டிப்ளோமாவும் பெற்ற இவர், யாழ் குடாநாட்டின் பிரபல மகளிர் பாடசாலைகளாகிய உடுவில் பெண்கள் பாடசாலை, வேம்படி மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவியாவார். பல்கலைக் கழகப் படிப்பினை முடித்துக்கொண்டு தனது ஆரம்பக் கல்விப் பணியினை இணுவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பித்தபோது அவரின் திறமை சுடர்விடத் தொடங்கியது. உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று 01 – 04 – 85 இல் இருந்து எமது ஆசிரிய குழாத்துடன் இணைந்து பணியாற்றத் தொடங்கினார். புவியியல் பாடத்தை மாணவர் ஆர்வத்தோடு கற்குமளவிற்கு அவரின் கற்பித்தற் பணியில் அலாதியானதோர் உத்வேகம் காணப்பட்டது. மாணவர் மத்தியில் பெருமதிப்புப் பெற்ற ஆசிரியர் ஒருவரே நிறைந்த அதிபராக இருக்க முடியும் திறம்பட ஆசிரிய சேவை செய்து, உதவி ஆசிரியராகக் கடமையாற்றும் போது இலங்கை அதிபர் சேவை தரம் II பரீட்சையில் சித்திபெற்று இப் பாடசாலையில் 91 ஆம் ஆண்டு பிரதி அதிபராகக் கடமையேற்றார். இக் கல்லூரியின் தலைமுறை தலைமுறையாக வரும் கல்விப் பாரம்பரியத்தை நடத்திச் செல்லக்கூடிய ஒருவர் இல்லையே என எண்ணை வைக்காது திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் அவர்களின் ஓய் வின் பின் 28 – 02 – 93 இல் இப் பாடசாலையின் அதிபர் பணியினையேற்று கல்வித்துறையில் சேவையாற்றத் தொடங்கினார். இத்தனைக்கும் இப்பெரும் பணியினை சிரமேற் கொண்டபோது இவரின் வயது முப்பத்தா றேயாகும்.

வயதில் இளையவரான இவர் இப்பாரிய சுமையை எவ்வாறு தாங்கிச் செல்லப் போகிறாரென்பது எவரும் எதிர்பார்த்த ஒன்றே. எதிர்பார்ப்புகள் யாவும் காலநீரோட்டத்தில் ஒளிமயமாகவே தோன்ற ஆரம்பித்து விட்டது. வயதில் இளையவரான இவர் சில முதுநிலை ஆசிரியர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்தும், அனுபவமுள்ள அதிபர்களின் நிர்வாக ஒழுங்கு முறைகளை அனுசரித்தும், கொடுக்கப்பட்ட பணியினை மிகவும் கவனமாக ஆராய்ந்து செயல்முறைப்படுத்துவதிலும் ஆர்வம் காட்டியதனால், நாளடைவில் நிர்வாகம் செய்வது அவருக்கு எளிதாகவே காணப்பட்டது.

இன்று கல்விக் கொள்கைகள் யாவும், பழைய கல்விக் கோட்பாடுகளை அத்திவாரமாகக் கொண்டு நவீனமயப்படுத்தலிலும் கூடுதலாக செயன்முறை மேம்பாடுகளை உள்ளடக்கியும் தொழில்முறை சார்பாகவும் அமைந்து ஓர் பரிணாம வளர்ச்சியை நோக்கிச் செல்கிறது. இக் காலகட்டத்தில் துடிதுடிப்பான இளம் அதிபர்களே இவை சம்பந்தமான கல்விக் கொள்கைகளைக் கற்றும் புத்தூக்க முகாமைத்துவ முகாம்களில் பங்கு பற்றியும், கல்விசார் மகாநாடுகளில் தரிசனம் தந்தும் சமூகத்திற்கும் கல்விக் கூடங்களுக்கும் தமது சேவையை அர்ப்பணிக்கத் தம்மைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எமது இளம் தலைமுறை அதிபர் அவர்களிடம் இக் குணநல இயல்புகள் பிரதிபலிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது, ஆகவே எதிர்காலத்தில் இப் பாடசாலையை நிச்சயமாக வழிநடத்தக்கூடிய ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதில் ஆத்ம திருப்தி கொள்ளலாம்.

பாடசாலை ஒழுங்கில் கண்ணாயிருக்கிறார். தினந்தோறும் காலை 7-45 மணிக்கு சமூகமளித்து தேவையேற்படும்போது மாலை வரையும் கடமையிலீடுபடுகிறார். மிகவும் உற்சாகத்துடன் தொழிற்படும் இவர் திணைக்கள அதிகாரிகள். மாணவர்கள், ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் துரிதமாக இனம்கண்டு சாதுரியமாகவும் சுமுகமாகவும் தீர்வு கண்டுவிடுகிறார், ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டபோதும், திறமையாக இப் பாடசாலைக்கு உழைத்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களை வேறு பாட்சாலைகளுக்கு இடமாற்றம் செய்யும் போதும் திணைக்கள மேலதிகாரிகளை நேரில் செல்விகண்டு போராடி எடுத்த பணியினை வெற்றிகரமாக முடித்துவிடும் ஆற்றல் புறநடையாக அமைந்த குணங்களிலொன்றாகும். சாந்தம், இறைபக்தி, பதட்டமற்ற அமைதிப் போக்கு இவ்வகையான விழுமியங்கள் கல்வி நிர்வாகத்திற்கு வேண்டியனவே. ஆசிரியர்களினது மாத்திரமன்றி அவர்களின் குடும்ப அங்கத்தினரின் சுகதுக்கங்களிலும் பங்குகொள்கிறார்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி விளையாட்டுத் துறையில் அகில இலங்கை ரீதியாக முதலிடம் ஈட்டிய பெருமையை இன்றும் மாணவர்கள் தொய்யவிடாது பாதுகாக்கின்றனர், கொத்தணி கோட்ட, மாவட்ட ரீதியில் உடற்பயிற்சி, மெய்வல்லுநர் போட்டிகளில் முதன்மை இடம் பெற்றுக்கொண்டிருப்பது இங்கே முன்னர் பணிபுரிந்த அதிபர்களின் விடா முயற்சியே காரணமென்பதை எவரும் மறுக்க முடியாது, அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி எமது அதிபர் செயற்படும்போது பெருமைப்படாமலிருக்க முடியாது, 93-ம் ஆண்டில் நடாத்தப்பட்ட வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இவரின் கன்னி முயற்சி எனக் கணிக்க முடியாத அளவிற்குப் பெரும் வெற்றியாகவே அமைந்தது. ஒழுங்கு, கட்டுப்பாடு, ஆசிரியர்களை ஒருமுகப்படுத்தல், சகலரின் ஒத்துழைப்பு இவையாவும் அவரின் நிர்வாகத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதிக் கல்விப்பணிப்பாளரே விழாவின் சிறப்பைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. பாடசாலையை வழிநடத்தக்கூடிய ஆற்றலை எதிர்காலம் நன்கு உணரத்தான் போகிறது.

பல ஆண்டுகளாக நடைபெறாதிருந்த உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு இவ்வாண்டு வைபவ ரீதியாக கோலாகலமாக நடைபெற்றது. அதிபர் அவர்கள் இதனை மறுசீரமைத்து. புதுமெருகூட்டி, பிற உயர்தர பாடசாலை மாணவ முதல்வர்கள் ஆசிரியர்களை விருந்தினராகவும், மூன்னாள் அதிபரை முதன்மை விருந்தினராகவும் அழைத்து நாளை புத்துலகம் அமைக்கும் எமது மாணவர்களின் மத்தியில் புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது இவரின் ஆளுமைக்குக் கிடைத்ததோர் பரிசாகும், ஆசிரியர்களை மட்டுமன்றி, மாணவர்களையும் ஒரணியில் திரட்டி, நிர்வாக பரிபாலனம் நடத்தக்கூடிய ஆற்றலையும் வல்லமையையும் இறைவன் வழங்கியிருக்கிறார்.

சாரணீயம் பெண்கள் வாழ்வோடும் கல்வியோடும் பிணைந்தது. பெண்கள் சாரணீயம் முன்வழிவந்த அதிபர்களின் பாதையிலேயே கொண்டு செல்வதற்காக பெரிதும் விழிப்பாக இருக்கிறார். ஒரு சிறந்த பான்ட் அணியினை உருவாக்க வேண்டுமென்பதும் அவரின் செயற்திட்டங்களிலொன்றாகும். இதற்குரிய இசைக்கருவிகளைப் பெற்றுத்தருவதற்கு சோர்வின்றி நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார். நிச்சயமாக அவரின் எண்ணம் கருக்கொள்ளும். பாடசாலை மாணவரின் எழுத்தாற்றலை ஊக்குவிப்பதற்காக மாணவர் கையேடு ஒன்றும் அவரின் நிழலின் கீழ் அரங்கேற்றப்படவிருக்கின்றது.

இக் கல்லூரி கவின்கலை நிகழ்வுகளில் யாழ் மாவட்ட பாடசாலைகளில் முதன்மை ஸ்தானம் கூடுதலாகப் பெறத் தவறுவதில்லை. இவரின் நிர்வாக காலத்தில் எமது மாணவிகள் உலக ஆசிரியர் தினத்தில் அரங்கேற்றிய கலை நிகழ்வு பெரியதோர் பாராட்டைப் பெற்றது. தொடர்ந்தும் நடைபெற்ற வாணி விழா நிகழ்ச்சிகள் தரம்மிக்கதாய் ஆடல் பாடல் நிறைந்து பொலிந்து விளங்கியது இத்தனைக்கும் பின்னின்று எமது ஆசிரியர் உழைக்க, அதிபரின் வழிகாட்டல் பெரும் உந்து சக்தியாக அமைந்தது.

1987 ஆம் ஆண்டில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக எமது கல்லூரியின் பொலிவிழந்தோம் அரும்பெரும் கல்விக் செல்வம் சிதைந்தது. கட்டிடங்கள் அக்கினிக்கிரையாக, சோலை மரங்கள் எரிந்து பாலைவனமாக, ஆய்வுகூடம் அழிந்து நூலகம் எரிந்து சாம்பராகி இன்று இடிந்த கட்டிடங்களின் மத்தியிலும் கிடுகுக் கொட்டில்களின் நிழலிலும் எமது சிறார்கள் பல சிரமத்தின் மத்தியில் கல்வி பயில்கின்றனர். இதனை எமது அதிபர் ஒரு சவாலாக ஏற்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கண்டு நிலைமையை இடித்துரைத்ததின் காரணமாக நிதி ஒதுக்கப்பட்டு மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இப் பணியினை நிறை வேற்றுவதற்காகப் போக்குவரத்து இல்லாத நிலையிலும் மனம் தளராது பசி மறந்து செயற்படும் நிலையை யாம் காணும்போது இப்படிப்பட்ட இளம் அதிபர்களாலேயே இக் காலகட்டத்தில் இதனை நிறைவேற்ற முடியுமென ஆண்டவன் ஆசீர்வதித்தாரோ என நான் எண்ணுவதுண்டு.

இப் பாடசாலையின் கவின்கலை, நன்கு வளர்ந்துவிட்ட போதிலும் பல ஆண்டுகளாகச் சித்திரக் கலையை வளர்க்க ஓர் ஆசிரியர் இல்லையே என்ற இவரின் ஆதங்கம் விரைவில் நிறைவேற இறைவன் நல்லாசி வழங்குவார். நிறைவான ஆய்வுகூடம், சிறந்த மனையியல் கூடம், நூல்கள் நிறைந்த நூலகம், பான்ட் அணிக் குழு இவைகள் முழுமையாக மிகவும் அண்மித்த காலங்களில் அவர் நிறைவேற்ற இறைவனின் ஆசி கிட்டுமென எதிர்பார்க்கிறேன்.

கல்வி நிர்வாகத்தினால் ஏற்படும் பிரச்சினைகளை இனம் காணக்கூடிய நுண்ணறிவு ஈவினைப் பெற்றிருக்கிறார் சகல பிரச்சினைகளும் உடனுக்குடன் தீர்வு காண்பதால் அலுவலகக் கடமைகள் என்றுமே தேங்கிக் கிடப்பதில்லை, திணைக்கள சம்பந்தமான வேலைகள் துரித கதியில் முடித்து அதிகாரிகளின் நற்பெயருக்கும் ஆளாகிறார். பாடசாலை மாணவர்களின் குடும்பப் பின்னணி, அவர்களின் தனித்தனியான வரலாறு யாவற்றையும் தெரிந்து வைத்திருப்பதனால் மாணவர் சார்பான பிரச்சினைகளை நன்முறையில் அணுகி தீர்வு காணப்படுவதனால் மாணவரின் ஒழுக்கமும் ஒழுங்கும் நன்கு கவனிக்கப்படுகிறது

அதிபராகப் பதவியேற்று நடத்திக் கொண்டிருக்கும் இக் குறுகிய காலம் இவரின் எதிர்காலத்தைச் சிறப்பாக பிரதிபலிப்பதாக காட்டுகின்றது. இந்தப் பாரிய ஸ்தாபனத்தை வழி நடத்தி, இதற்குமுன் இந்தக் கல்விக் கூடத்தைச் செவ்வனே வழிநடத்திய அதிபர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஒளிர்வதற்காகத் தீபம் ஏற்றுவார் எனப் பிரார்த்திக்கிறேன்.


குழந்தைகளுக்குச் சிந்திப்பதற்கு வழி கற்றுக்கொடுத்தால் அதுவே உயர்ந்த கல்விக்கு வழி கோலும். தாமே சிந்தனை செய்து கல்வியினைப் பின்பற்ற வேண்டும்.

— ரூசோ —

நிகழ்வுகளில் சில





































சிறப்பு அத்தியாயம்

கல்வியும் கலாசாரமும்

பேராசிரியர் வ. ஆறுமுகம்
தலைவர், கல்வியியற் துறை
யாழ் பல்கலைக்கழகம்

மனித வாழ்க்கையில் கலாசாரத்தின் தோற்றமும் விருத்தியும் மனித இனத்தின் தோற்றம், வரலாறு ஆகியவற்றுடன் இணைந்த ஒன்றாகும். பூமியில் மனிதன் தோன்றிய காலந்தொட்டு அவன் பல கட்டங்களைத் தாண்டி வந்துள்ளான் என்பது கண்கூடு. மிருகங்களோடு மிருகமாய் காட்டுமிராண்டியாக மனிதன் வாழ்ந்த காலத்துக்கும் நவநாகரிக வாழ்க்கையில் நிலை பெற்றிருக்கும் இன்றைய காலத்துக்கும் இடையே கடந்த மைல்கற்கள் கணக்கில் அடங்கா. அவற்றின் ஒவ்வொரு படியிலும் கல்வியின் சுவடுகள் பதிந்திருப்பதைக் காணலாம்,

மனிதனின் ஆரம்பகாலம் வேட்டுவ வாழ்க்கையில் மிருகத்தோடு மிருகமாக வாழ்ந்த காலமாகும். மிருகங்களிலிருந்து அதிகம் வேறுபாடில்லாதவனாக மிருகங்களைப் போலவே அன்றைய மனிதன் தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டான். அந்த வாழ்க்கை நாடோடி வாழ்க்கையாக, ஓரிடத்தில் நிலைத்து நில்லாத, இடத்துக்கிடம் அலைந்து திரியும் ஒன்றாகக் காணப்பட்டது. வேட்டுவ வாழ்க்கையின் பரிணாம வளர்ச்சி விவசாய வாழ்க்கையாகச் செழித்தோங்கிய காலத்தில் நாகரிக விருத்தி படிப்படியாக இடம் பெற்றது. வேட்டுவனாக அலைந்து திரிந்த மனிதன் விவசாயியாக மாறிய போது ஓரிடத்தில் தங்கி வாழும் முறைமை தோன்றியது. அவ்விதம் உருவாகும் குடியிருப்புக்கள் காலப்போக்கில் நகரங்களாக வளர்ச்சியுற்றன நகரங்கள் முதன்மை பெறும் நாட்டு அமைப்புக்கள் விரிவடைந்து அரசுகள் உதயமாகியதைக் காணலாம். அந்தப் படிமுறைவளர்ச்சியின் வழியில் உலகின் பெருமை மிக்க நாகரிகங்கள் பலவும் தோன்றின.

மனிதனின் வளர்ச்சியில் அவனை ஏனைய உயிரினங்களிலிருந்து பிரித்து அவனுக்கென ஒரு தனித்துவமான நிலையைக் கொடுத்தது அவனுக்கிருக்கும் சிந்திக்கும் ஆற்றலாகும். எந்த ஒரு விடயத்தைப் பற்றியோ அல்லது பிரச்சினையைப் பற்றியோ குறித்துச் சிந்திக்கும் திறன் சீவராசிகளுள் மனிதனுக்கு மட்டுமே உண்டு. அந்தத் திறனே மனிதன் மிருகங்களைத் தன்னுடைய விருப்பப்படி ஆட்டுவீக்கும் சக்தியை அவனுக்குக் கொடுத்தது. அந்தச் சிந்தனை ஆற்றல் கல்வியின் வளர்ச்சியோடு மேலும் கூர்மையடைந்தது. கூரிய அறிவுத் திறன் அடிப்படையில் மனிதன் பல்வகைப்பட்ட சிறப்புக்களையும் மேம்பாடுகளையும் தனதாக்கிக் கொண்டதை மனித வரலாறு காட்டுகின்றது.

குழந்தையானது தன்னைச் சுற்றியுள்ள சூழலில் உள்ளவற்றை ஆராய்வதில் எந்த அளவு ஆர்வத்தையும் முயற்சியையும் காட்டுகின்றதோ அதே போன்று ஆதிகால மனிதனும் தன்னைச் சூழ்ந்திருந்த இயற்கையிலிருந்து பல்வகைப்பட்ட பாடங்களைப் படித்துக் கொண்டான். அன்றைய மனிதனுக்கு இயற்கையின் சக்தி பயத்தை ஏற்படுத்துவதாக இருந்தாலும் காலப் போக்கில் அப்பயம் படிப்படியாக மாற்றமடைந்து இயற்கையின் சக்திகளையும் வளங்களையும் தனது தேவைக்குப் பயன்படுத்தும் நிலைக்கு மனிதன் உயர்ந்தான். இயற்கை ஒரு விரித்துவைக்கப்படும் நூலைப்போன்று காட்சியளித்தது. அந்த நூலில் இருந்து மனிதன் கற்றுக் கொண்ட பாடங்களிலிருந்து மனிதனது வாழ்க்கை முறைகளும் போக்குகளும் உள்ளாகிய மாற்றங்கள் நாகரிகங்களின் தோற்றத்திற்கு வித்திட்டன. இந்த வகையில் தோன்றியவையே உலகின் ஆதிகால நாகரிகங்களாகிய கிரேக்க, உரோம, எகிப்திய, சிந்துவெளி, சீன நாகரிகங்கள். அவை ஒவ்வொன்றின் வடிவங்களாக அவற்றுக்குரிய கலாசாரங்கள் பிறந்தன.

அந்தக் கலாசார விருத்தியின் பின்னணியில் கல்வியின் சக்தியைக் காணலாம். மனித இனத்தில் வரலாற்றின் தொடக்கத்தில் மனிதன் தனது சொந்த அனுபவங்கள் அவதானிப்புக்கள் மூலம் பெற்ற அறிவைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளும் முறையில் கற்றல் ஆரம்பித்தது என்று கொள்வது பொருத்தமுடையதாகும். தொடக்கத்தில் அது தனிமனித முயற்சியாகவே இருந்தது. காலப்போக்கில் முழுச் சமூகமும் அக் கல்விக்கான பொறுப்

பினை ஏற்றுக்கொண்டிருப்பது அதற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது. '' கல்வியானது வாழ்க்கை நீடித்த பயணம் '' '' கருப்பையிலிருந்து கல்லறை வரைக்கும் கல்வி '' என்ற கூற்றுக்கள் மனிதவாழ்வில் கல்வி பெற்றுள்ள வரவேற்பினைக் கோடிட்டுக் காட்டுகின்றன,

இவ்விதம் மனித வாழ்வில் கல்விபெற்றுள்ள இடம் அதன் பல்வேறு பயன்களின் அடிப்படையில் காலூன்றியதாகும். அறிவு வளர்ச்சி, ஆளுமை விருத்தி, ஆன்மீக ஈடேற்றம், வாழ்க்கைக்குவழி, கலாச்சார விருத்தி என்பவற்றை இலக்குகளாகக் கொண்ட கல்வியின் செயற்பாடு மனித வாழ்வின் சகல எல்லைகளையும் தனது விசாலத்துக்குள் அடக்கியுள்ளது. இவை எல்லாமோ அல்லது சிலவோ குறிப்பிட்ட தேவைகள்/ பின்னணிகள் என்பவற்றைப் பொறுத்துக் கூடிய கவனத்தைப் பெற்றிருப்பதைக் காலத்துக்குகாகக் காணலாம் எனினும், எந்த இலக்கு அழுத்தம் பெற்றாலும், அது கலாசார விருத்திக்கும் உதவத் தவறவில்லை என்பது கண்கூடு.

கல்விக்கும் கலாசாரத்துக்கு மிடையிலான தொடர்பு ஒன்றையொன்று பேணி வளர்ப்பதிலும் ஒன்றிலொன்று தங்கியிருப்பதிலும் ஒன்றோடொன்று பிணைந்திருப்பதிலும் காணப்படுகின்றது, இத் தொடர்பு மூலம் சிறப்புற்ற மனித இனத்தின் வரலாறு காலத்துக்குகடான கலாசார விருத்தியின் பதிவேடாகக் காணக்கிடக்கின்றது. வேட்டுவ வாழ்க்கையாக ஆரம்பித்த மனிதனது வாழ்க்கை இன்று நாகரிக நெறியில் பண்பாட்டுப் பெருமையுடைய சமூக வாழ்க்கையாகப் பொலிவுபெற்றுள்ளது. பிறருடன் ஒன்றுகூடி வாழத்தலைப்படும்போது மக்களிடையே இடம்பெறும் இருவழியுறவுகள் இந்தப் பொலிவுக்குக் காரணமாகும் என்று கொள்வது பொருந்துவதாகும். இத்தகைய தொடர்புகளும் அவற்றின் பெறுபேறுகளும் மனிதருடைய சிந்தனையோட்டங்கள், மனப்பாங்குகள், செயற்பாடுகள் ஆகியவற்றை நெறிப்படுத்துகின்றன. இந்த நெறிகளின் வழியில் கலாசாரம் மிளிர்கின்றது.

சேர்ந்து வாழத்தலைப்படும் நிலையில் ஒருவரை ஒருவர் உணர்ந்து கொள்ளுதல் மற்றவரோடு இசைந்து வாழுதல் என்ற வளர்ச்சிநிலை ஏற்படுகின்றது. தன்னுடன் கூடி வாழ்பவர்கள், உறவுகொள்பவர்கள் எல்லோரையும் தன்னுடன் எவன் இணைத்துக் கொள்கின்றானோ அவன் பண்பட்டவனாகக் கொள்ளப்படுகிறான். '' பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் '' என்ற கூற்றின் ஆழமான கருத்து இங்குக் கவனிக்கத்தக்கதாகும். கலாசாரப் பின்னணியில் சிறந்துவிளங்கும் சமூக வாழ்வு பண்பாடு நிறைந்து காணப்படுகிறது. பண்பட்ட உள்ளம் பிறருக்காக உருகும் தன்மை கொண்டது. பிறர்படும் துன்பத்தைக் கண்டு அவர்களுக்காகத் தானாக நெகிழும் இயல்பினையுடையவன் எவனோ அவனே உண்மையான பண்பாளனாவான். அல்லாதவர் எவரும் எத்தகைய அறிவும் உயர்வும் உடையவராயினும் பண்புடையவராகக் கொள்ள அருகதையுடையவராகார். இத்தகைய பண்பாளர் சேர்க்கையே கலாசாரத்தின் அடிநாதமாகும். '' நவில்தொறும் நூல் நயம் போலும், பயில் தொறும் பண்புடையாளர் '' தாம் வாழும் சூழலுக்கே மெருகூட்டுபவராவார். அத்தகைய அடிப்படையில் செல்லும் சமூகவாழ்வு முழுமையும் செழுமையுமுடையதாய் விளங்கும்.

கலாசார மேம்பாடு என்பது எத்தகைய வரையறையைக் கொண்டது என்பதும் அது எவ்வகையில் உருப்பெறுகின்றது என்பதும் சிந்திக்கத்தக்கவையாகும். ஒரு சமூகம் கலாசார மேம்பாடுடையதாகக் கொள்ளப்படுவதற்கு அதன் கல்வி, கலைகள், வாழ்க்கைப் பண்புகள் என்பன உயர்ந்த தரத்தையடைந்திருக்க வேண்டும். அந்த வகையில் இவையனைத்தும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவாய், ஒன்றுக்கொன்று உதவுபவையாய் ஒன்றிலொன்று தங்கியிருப்பவையாய் விளங்குகின்றன. இவை அனைத்துக்கும் அடிப்படையாக விளங்குவது கல்வி என்பது மறக்கமுடியாததாகும். மனித இனத்தின் வளர்ச்சியில், அதன் பல்வேறு கட்டங்களுக்குகடாக பெற்ற புதிய அனுபவம் ஒவ்வொன்றும் புதிய தகவல்களையும் அறிவையும் கொடுத்தது. தனக்குக் கிடைத்த அனுபவம் தனக்கு உருவாக்கிய அறைகூவலுக்கு முகங்கொடுத்த மனிதன் அந்த வகையில் புதிய அறிவினைப் பெற்றுக்கொண்டான்.

அறிவின் பெருக்கத்தின் விளைவாக மனிதனுடைய ஆற்றல்களும் திறன்களும் பெருகின. அவ்வகையாகப் பெருகியவற்றுள் மனித பண்பாட்டை வளர்ப்பதிலும் அதன் சின்னமாக உருப்பெற்றதிலும் முக்கிய இடம் பெறுபவை மொழி, அழகியற்கலைகள், அறிவியற்திறன்கள், தொழில்நுட்பத்திறன்கள் என்பவையாகும். மொழியிலும் மொழிக்குகடாகவும் ஏற்பட்ட வளர்ச்சியே ஏனைய திறன்களின் அத்திவாரமாகவும் ஊடகமாகவும் அமைந்தது. மனிதனுடைய நாகரிக / கலாசார வாழ்வோடும் வளர்ச்சியோடும் பின்னிப் பிணைந்தது மொழி. கூடிவாழத் தலைப்பட்ட மனிதரிடையே தொடர்பாடற் தேவைகள் இயற்கையாகவே எழுந்தன. அவற்றை நிறைவு செய்வதாக சைகை மொழியாக ஆரம்பித்து, பேச்சுமொழி, எழுத்துமொழி என மொழி வளர்ந்துள்ளது. அம்மொழியின் செழிப்பும் வனப்பும் அதில் படைக்கப்பட்ட இலக்கியங்களில் மிளிர்வதற்கு நீண்டகாலம் தேவைப்பட்டாலும் அவற்றின் தோற்றம் இயல்பானதேயாகும்.

உலகின் பல்வேறு மொழிகளையும் எடுத்துக்கொண்டால், அவற்றின் இலக்கியப் பாரம்பரியங்கள் அம் மக்களின் கலாசாரத்தைப் பறைசாற்றுவனவாக விளங்குகின்றன. அவ் இலக்கியங்கள் தமது பெருமையின்மூலம் தமது கலாசாரத்தின் சின்னமாக விளங்குவது மட்டுமல்லாமல் அந்தக் கலாசாரத்தைப் பற்றிய தகவல்களை அளிக்கும் களஞ்சியங்களாகவும் விளங்குகின்றன. அவற்றுக்கூடாக அந்த மொழியைப் பயன்படுத்திய மக்களினது வாழ்க்கை, அவர்கள் வளர்த்த கலைகள் எத்தகைய நிலையில் இருந்தன என்பதை அறிந்து கொள்ளலாம். அந்த இலக்கியங்களின் சிறப்பு அம்மக்களின படைப்பாற்றலுக்குச் சான்று பகர்வதாயிருந்தாலும் அதில் கல்விக்கும் பங்குண்டு என்பதை மறுக்க முடியாது. மொழியின் செயற்பாடு வளமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கவேண்டுமேயானால் அந்த மொழி பலமுள்ளதாக உயிரோட்டம் நிறைந்ததாக இருத்தல் அவசியம். மனித உடலின் சக்தி நிலைத்து நிற்க வேண்டுமானால். இரத்தோட்டம் உடலியற் கலன்கள் என்பன புதுப்பிக்கப்பட வேண்டும். அதற்கான போசாக்குள்ள உணவு வகைகளை நாம் உட்கொள்ளுகின்றோம். அதே போன்றது மொழியின் நிலையும். உயிர்த்துடிப்புள்ளதாக தனது பங்களிப்பைச் சரிவரச் செய்யவேண்டுமானால் மொழி அதற்கான வளத்தைக் கொண்டிருக்க வேண்டும். மொழியின் வளமும் வனப்பும் அதில் தோன்றுகின்ற படைப்புக்கள் / இலக்கியங்கள் ஆகியவற்றில் தங்கியுள்ளது. அவற்றின் மூலம் மொழி தன்னைப் புதுப்பித்துக் கொள்ளுகின்றது. அது இல்லையேல் மொழி தனது பழமையில் மட்டும் தங்கியிருக்க வேண்டும். பழமை நிலையில் உள்ள மொழி காலத்திற்கேற்ற கருத்துக்களை முன்வைக்க / வளர்க்க முடியாத நிலையிற் பயனற்றுப் போய்விடும். அப்படியானால், காலப்போக்கில் அது வழக்கொழிந்து இறந்துவிடும். அவ்விதம் இறந்த மொழிகளாக நாம் சில மொழிகளை இன்றும் அறிகிறோம். அந்த ஆபத்திலிருந்து மொழியையும் அது விளக்கும் கலாசாரத்தையும் காப்பாற்றுவதில் கல்விக்கு நிரம்பிய பங்குண்டு. பள்ளிக்கூடத்தில் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர் தனது செயற்பாட்டில் இக் கடமையை மறக்கக்கூடாது.

மொழி வளர்ச்சியின் அடிப்படையில் சுடர்விடும் கலாசார எழுச்சி மக்களிடையே விழிப்புணர்ச்சியையும், ஈடுபாட்டையும் ஏற்படுத்துவது பொது வழக்காகும். கல்வி, மொழிப் பாரம்பரியம் முதலியவற்றில் பெருமித உணர்வினை ஏற்படுத்துவதுடன் அப்பாரம்பரியங்களைப் பாதுகாத்துப் பரப்புவதிலும் பங்களிக்கின்றது. அந்தச் செயற்பாடு மாணவர் மட்டத்தில் சுயமொழியைப் பற்றிய பெருமையினை உருவாக்கிச் சுதேசிய கலாசாரம் பற்றிய அர்ப்பணத்தையும் மேலோங்கச் செய்கின்றது. அதனால் அந்நிய கலாசார மரபுகளுக்கு எதிரான கருத்துக்களும் வேரூன்றி வளருகின்றன. ஒரு நாட்டை அந்நியர்கள் ஆளுங்காலத்தில், தமது பிடியினை இறுக்கிக் கொள்வதற்காக ஆட்சியாளர்கள் தமது மொழியையும் அதற்கூடாகத் தமது கலாசாரத்தையும் புகுத்த முற்படுவதற்கு வரலாறு பல சான்றுகளைப் பகரும். '' பிறப்பாலும் நிறத்தாலும் இந்தியரானாலும் செயலாலும் சிந்தனையாலும் ஆங்கிலேயரான '' ஒரு சமூகத்தை உருவாக்குதல் என்ற மக்கோலே பிரபுவின் புகழ்பெற்ற கூற்று இதனை நிரூபிக்கிறது. இவ்வாறான கருத்துக்கள் சுதந்திர வேட்கை பெருகும்போது பலத்த எதிர்ப்புக்குள்ளானவதையும் வரலாறு காட்டுகின்றது. அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற நாடுகள் அனைத்திலும் இது பொது நியதியாகக் காணப்படுவதுண்டு.

அரசியல் மேலாண்மை என்பது மட்டுமல்லாமல் கலாசார மேலாண்மை நிலையில் அந்நிய கலாசாரங்கள் பிற நாடுகளில் நிலைத்துவிடுவதுமுண்டு. இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு மேலைத்தேய கலாசாரம் பரவியுள்ள விதம். ஒரு காலத்தில் அக் கலாசாரம் மேற்கத்தைய அரசுகள் ஆட்சி செலுத்திய நாடுகளில் அரச ஆதரவுடன் இடம்பிடித்துக் கொண்டாலும், பின்னர் ஆட்சி கைமாறியும் தனது உயர்நிலையைத் தொடர்ந்தும் வைத்திருப்பதை உலகின் பல நாடுகளிலும் காணலாம். அதற்கு முக்கியமான காரணம் அதன்மூலம் கிடைத்த தொடர்புகளும் முன்னேற்றங்களும் என்பதைக் குறிப்பிட்டாலும் ஆங்கில மொழியின் பங்கினை மறுக்க முடியாது, சர்வதேசத் தொடர்பு, அறிவியல் வளர்ச்சி, கலாசார ஊடகம் என்ற தொடர்புகளுக்காக ஆங்கிலக் கல்வி இன்றைக்கும பள்ளிக்கூட மட்டத்தில் மதிப்புப் பெறுகின்றது, எமது நாட்டை எடுத்துக் கொள்ளினும் இவ்வுண்மை தெளிவாகின்றது.

ஒரு கலாசாரத்தின் புகழ் அதில் வெளிப்படும் கலைகளிலும் பிரகாசிக்கின்றது, இங்கு நாம் குறிப்பாக அழகியற் கலைகளான இசை, நடனம், சித்திரம் என்பவற்றுடன் கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றையும் இணைத்துக் கொள்ளலாம். கலவிச் செயற்பாடானது பள்ளிக்கூடப்பருவ மட்டத்தில் இவை அனைத்தையும் வளர்க்கின்றது எனக் கொள்வது பொருத்தமுடையதா என்ற கேள்வி எழுகின்றது கட்டடக்கலை, சிற்பக் கலை இரண்டும் பள்ளிக்கூடப் பருவத்துக்கும் அப்பாலே வளர்க்கப்படுவதுதான் பொது வழக்கு எனினும் அவற்றுக்கும் அவற்றோடு இணைந்த ஓவியக்கலைக்கும் பள்ளிக்கூடத்தில் இடம்பெறும் அழகியற்கலைகள் துணை போகின்றன என்பதை மறுக்கமுடியாது. பள்ளிக்கூடத்தில் பயிலும் பிள்ளைகளுடைய ஆளுமை வளர்ச்சியில் இந்த அழகியற் கலைகளுக்கு முக்கிய இடமுண்டு. அவற்றுக்கூடாகக் கற்போருடைய உள்ளம் பண்படுத்தப்படுகின்றது காதுக்கினிய இசையைக் கேட்பதிலும், கண்ணையும் கருத்தையும் கவருகின்ற நடனம், சித்திரம்

என்பவற்றைக் கண்டுகளிப்பதிலும் ஒருவனுடைய உள்ளம் உரியமுறையில் வளர்ச்சி பெறுகின்றது. இவற்றில் ஈடுபடுவதற்கான முருகுணர்ச்சி மாணவரிடையே படிப்படியாக வளர்க்கப்படுகின்றது. அவ்விதம் வளரும் அழகியல் ரசனை உணர்ச்சி மாணவரிடையே நல்லதன்பால் ஈர்க்கப்படும் மனப்பாங்கினை உருவாக்கும். இந்தப் பாடங்களுக்கூடாக மாணவர்களிடையே ஆளுமை நிறைவு வளர்ச்சி பெறுகின்றது. பள்ளிக்கூடமட்டத்தில் அரும்பும் அழகியற் கலைத்திறன்கள் காலப்போக்கில் சமூகத்தின் கலை வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமையும்.

கலாசார விருத்திக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவற்றுள் அறிவாற்றல் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அறிவுப் பரப்பின் சகல துறைகளையும் உள்ளடக்கி வளரும் இந்த வளர்ச்சி அம் மக்களுக்கு அறிவுப் பெருக்கத்தையும் அதனால் வரும் வளங்களையும் சிறப்புக்களையும் உரித்தாக்கும். அறிவுவளர்ச்சியினால் ஏற்படும் கலாசார மேம்பாட்டில் கல்வியின் இடம் தானாகவே தெரியும் அறிவு வளர்சியில் ஏற்படும் உயர்வு மக்கள் மத்தியில் உயர்ந்த தரங்களையும் உறவுகளையும் பெருகச்செய்யும். அதன் பெறுபேறாகத் தொழினுட்பத்திறன்களிலும் ஏற்றத்தை உண்டாக்குகின்றன. இக்கால வாழ்க்கை தொழினுட்பத்தை அச்சாணியாகக் கொண்டியங்குவது. அதன் வழியிற்றான் பொருளியல் வளமும் பெருகுகின்றது. அப்பெருக்கத்தின் வழியில் மக்களுடைய வாழ்வில் நிறைவும் வாழ்க்கை முறைகளில் நன்மாற்றங்களும் ஏற்படும். அவை கலாசாரத்தின் பெருமைக்கும் உறுதிக்கும் கால்கோளாக அமையும். இதிலும் கல்வியின் செயற்பாடு பின்னணியில் பலமாக விளங்குவதைக் காணலாம்.

இன்றைய உலகினை அவதானிப்பின் தமக்கென உரிய தனித்துவங்களைக் கொண்ட கலாசார மரபுகள் பலவற்றைக் காணலாம் இவை ஒவ்வொன்றினதும் தோற்றமும் விருத்தியும் அந்தந்தச் சமூகத்தின் கல்வி நிலையில் தங்கியுள்ளன. கலாசார விருத்தியடைந்த மக்கள் தமது கலாசாரத்தையொட்டிப் பெருமை கொள்வது இயல்பே. ஆனால், அப்பெருமிதம் குறுகிய போக்குகளுக்கு இட்டுச் செல்வதால் ஏற்படக்கூடிய ஆபத்துக் கெதிராக நாம் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். மற்றையோர்க்கு மதிப்புக்கொடுக்கும் வகையில் எமது உள்ளங்கள் விசாலிக்க வேண்டும். எமது பாரம்பரியத்தையொட்டிப் பெருமைப்படும் எவரும் பிறருடைய பாரம்பரியங்களை எள்ளிநகையாட முடியாது. பரந்த கண்ணோட்டத்தில் எதையும் பார்க்கும் மனோபாவம் வளர்க்கப்படும்போது ஒருவன் உண்மையில் கலாசாரமுடையவனாகக் கருதப்பட முடியும்.

கல்வி ஒருவனை நல்ல மனிதப் பண்புடையவனாகவும், நற்குடி மகனாகவும் ஆக்க வேண்டும். ஆகவே கல்வி நல்ல மனிதரை உருவாக்கி, அவர்களினூடாக நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்

— ரூசோ —

யாழ்ப்பாணமும், குடியேற்றவாதக் கல்வியின் எதிர் விளைவுகளும்

கலாநிதி. சபா. ஜெயராசா
M A., Ph. D.
சிரேஷ்ட விரிவுரையாளர்,
நுண்கலைத் துறைத் தலைவர்,
யாழ் பல்கலைக்கழகம்.

மூன்றாம் உலக நாடுகளின் கல்விச் செயல்முறையிலே குடியேற்றவாதம் ஏற்படுத்திய தாக்கங்கள் மேலை நாட்டு அறிஞர்களினால் இன்று விரிவாக ஆராயப்படுகின்றன. அவற்றின் பின்புலத்தில் எமது பிரதேசத்தை நோக்குதல் பொருத்தமுடையது. குடியேற்றவாதக் கல்வி முறைமை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திய நேர் விளைவுகளிலே எழுத்தறிவின் அதிகரிப்பு, மேலைப்புல அறிவின் பரவல் முதலியவை விதந்து கூறப்படுவதுண்டு. ஆனால் அதன் எதிர்த்தாக்கங்களை மதிப்பிடும் பொழுது தான் பொருத்தமான புதிய ஒரு கல்வி முறையை உருவாக்குவதற்குரிய "உரையாடல்" பிறப்பிக்கப்படும்.

குடியேற்றவாதக் கல்வி முறைமையிலே தோன்றிய பள்ளிக்கூடங்கள் மக்களை அந்நியப்படுத்துவதற்குரிய முகவராகவே இயங்கின. மக்களின் தரிசனங்களல்ல - கல்வி வழங்கியவர்களின் தரிசனங்களே பள்ளிக்கூடச் செயற்பாடுகளினூடாக விதைக்கப்பட்டன. பாரம்பரியமாக அழுத்தம் பெற்று வந்த செயன்முறைப்பாங்கான கல்வியானது, ஏடுமிகைப்பட்ட பொதுக் கல்வியாக - நடைமுறை தழுவாததாக அமைக்கப்படலாயிற்று. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது கல்வி ஒரு தர்மச் செயலாக - கொடைப் பொருளாக அமைக்கப்பட்டபொழுதும் கல்வி வழங்கியோர் அதன் "செலவு - நன்மைகள்" மீதே கூடிய ஊக்கமுடையோராய் இருந்தனர்.

பாரம்பரியமான பண்பாட்டு வேர்களைக் படிப்படியாகத் துண்டிக்கவல்ல வலுவுடன் புதிய கல்விச் செயற்பாடுகள் இயங்கலாயின. கல்விவாயிலாக உருவாக்கப்பட வேண்டிய தலைமைத்துவப் பண்பு கவனிப்பாரற்று விடப்படலாயிற்று. தெறிசிந்தனையின்றிச் "சொல்வதைக் கேட்போராய்" மாணவர்கள் மாற்றப்படலாயினர்.

குடியேற்றவாதக் கல்வி முறைமையின்கீழ் உருவாக்கப்பட்ட பள்ளிக்கூடங்களின் பிரதான இயல்பாக "இருந்தது இரண்டுங் கெட்டான்" நிலையாகும்.

அதாவது: அ) ஐரோப்பிய நாடுகளின் பள்ளிக்கூட இயல்பினை அங்கு காணப்பட்டமை போன்று அமைப்பிலும் தரத்திலும் இங்கு கட்டியெழுப்பவில்லை.

ஆ) சுதேசப் பண்பாடுகளிலே காணப்பட்ட கல்வி விழுமியங்களை வலிமைப்படுத்திக் கூடியவாறு பள்ளிக்கூடங்களை ஒழுங்கமைக்கவில்லை.

பாரம்பரியக் கல்விமுறையிற் கல்வியானது செலவு வழிப்பட்ட நுகர்விற்குரிய பொருளாக அமைந்திருக்கவில்லை. குடியேற்றவாதச் செல்வாக்கானது செலவினூடாகவே கல்வியை நுகர்ச்சி செய்யக்கூடிய அமைப்பை ஏற்படுத்தியது. சீருடை, பாடநூல், உபகரணங்கள், பரீட்சைக் கட்டணம் என்ற கட்புலனாகும் செலவுகள் ஒரு புறம் இடம்பெற மாணவரைக் குடும்பம் சார்ந்த பொருளாதார உற்பத்தியிலே ஈடுபட முடியாமற் செய்த மறைமுகமான இழப்புக்கள் கட்புலனாகாத செலவில் இடம்பெற்றன.

தெரிந்த முறையில் வல்லவர்களுக்குக் கல்வியை வழங்கிய குடியேற்றவாதக் கல்விச் செயற்பாடுகள் "கல்வி வாயிலாகப் புறக்கணிக்கப்பட்டோர்" என்ற பிரிவினரைத் தோற்றுவித்தது. இவர்களின் மேம்பாட்டுக்குரிய நடவடிக்கைகளும் முன்வைக்கப்படவில்லை ஒரு சிலருக்கே தெரிந்தெடுத்துக் கல்வியை வழங்கியமை இரண்டாம் நிலைக் கல்வி, மூன்றாம் நிலைக்கல்வி என்பவற்றிலே மேலும் தாக்கங்களை ஏற்படுத்தியது. மூன்றாம் நிலைக்கல்வியின் ஒடுங்கிய பண்புகள் இன்றுவரை நீடித்துள்ளன

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அண்மையில் ஆரம்பித்த மூன்று பெரும் நடவடிக்கைள் மூன்றாம் நிலைக் கல்வியின் ஒடுங்கிய வாயிலை விரிவாக்கின. அவை

அ) தொழிலாளர் கல்வி நெறி

ஆ) புறநிலை அலகின் கற்கை நெறிகள்

இ) வெளிவாரிப் பட்டப்படிப்பு

குடியேற்றவாதக் கல்வியின் புறக்கணிப்புக்கு உள்ளாகிய துறைகளாக தேசிய மருத்துவம், தேசிய இசை நடனம் முதலியவை அமைந்தன. பள்ளிக்கூடக் கலைத்திட்டத்தில் இன்னமும் தேசிய மருத்துவத்துறைகளாகிய சித்தம், ஆயுர்வேதம் முதலியவற்றுக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இசை, நடனம், சித்தமருத்துவம் முதலிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டமை முன்னோக்கிய பெயர்ச்சியை ஏற்படுத்துவதாக அமைந்தது.

மத்திய கட்டுப்பாட்டைப் படிப்படியாக வளர்க்கும் இயல்பினைக் குடியேற்றவாதக் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுத்தன. பாடத்திட்டம், பாடநூல்கள், ஆசிரியர்கல்வி, கல்வி நிர்வாகம், நியமனங்கள் முதலியவை மத்திய கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு செல்லப்பட்டன. பள்ளிக்கூடங்கள் சுயமாகத் தமக்குரிய துணிவுகளோடு இயங்கமுடியாது ''சார்ந்து'' செயற்படும் நிறுவனங்களாகவே இன்றுவரை இயங்கிவருகின்றன

யாழ்ப்பாணத்துப் பெரும் பள்ளிக்கூடங்களைச் சூழ்ந்து குடியேற்றவாதக் கல்வி இயல்புகளுக்கேற்றவாறு சிறு கடைத்தொகுதிகள் தோன்றின. இந்தக் கடைத் தொகுதிகளில் மேலை நாட்டு இறக்குமதிப் பொருட்களே விற்பனைக்கு விடப்பட்டன. கல்வியின் இயல்பும், பண்டங்களின் இயல்பும் ஒன்றிணைந்தன. பள்ளிக்கூடமும் சிறு கடைத்தொகுதியும் மேலைப்புலக் கவர்ச்சியின் சின்னங்களாக நின்றன. இன்றுவரை இந்த இயல்பின் தொடர்ச்சியினைக் காணலாம். பெரும் பள்ளிக்கூடங்கட்கு அண்மையிலுள்ள கடைகளில் சுதேச உற்பத்திப் பொருட்களின் அறிமுகம் அரிதாகவே உள்ளது. குடியேற்றவாதக் கல்விச் செயல்முறைகள், தாய்மொழி தாழ்ந்ததென்றும், தரங்குறைந்ததென்றும். பெரும் அறிவியற் கருத்துக்களைக் கூறுவதற்குப் பொருத்தமற்றதென்றும், எதிர்மறை உணர்வுகளைச் சமூகத்திலே விதைத்தன. இன்றுவரை இதனுடைய பாதிப்பு முற்றாக நீங்கிவிடவில்லை.

இக் கல்விமுறையின் பிறிதொரு பக்கவிளைவு வெளிநீங்குகையைத் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருப்பதாகும். சொந்த மண்ணைவிட்டு நீங்கிச் செல்லும் அசைவுகள் தொடர்ச்சியாக அனுபவிக்கப்பட்டு வருகின்றன

குடியேற்றவாத ஆட்சியின் ஒருமுகம் தாராண்மை வாதப் போக்காகவும் மறுமுகம் நிராகரிப்பாகவும் அமைந்தது, அந்நியர் ஆட்சியில் சுதேசப் பெண்கள் இல்லங்களைவிட்டு வெளிவருதல் ஆபத்தானதாக அமைந்தது. தென்-ஆசிய நாடுகளிலே பெண்கல்வி பின்னடைந்தமைக்கு குடியேற்றவாத இராணுவ நடவடிக்கைகளே பெருமளவில் பொறுப்பாக அமைந்தன, இராணுவ நடவடிக்கைகளில் இருந்து பெண்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் உறுதியான நடவடிக்கைகளை மத நிறுவனங்களை ஒழுங்கமைத்த பின்னரே பெண்கல்வி மீண்டும் யாழ்ப்பாணத்தில் வளரலாயிற்று.

குடியேற்றவாதக் கல்வி முறைமையின் பிரதான தாக்கமாக விபரிக்கப்படுவது கல்வியோடிணைந்த பணியாட்சி இயந்திரத்தை உருவாக்கியமையாகும். ஒருபுறம் பணியாட்சியினரை உருவாக்கக் கல்வி பயன்பட்டது. மறுபுறம் பணியாட்சியின் பிடிக்குள்ளே இக்கிய ஒரு பொருளாக அது மாற்றப்பட்டது. இக் கருத்தை றிடிங் பல்கலைக்கழக ஒப்பியற்கல்வி விரிவுரையாளர் கெயித் வாட்சன் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

உளவியல் அடிப்படையிலும் குடியேற்றவாதக் கல்வி முறைமையின் தாக்கங்களையும் அழித்தங்களையும் அணுக முடியும். ''நாங்கள்'' என்ற ஒன்றுபட்ட நோக்கங்களுக்குப் பதிலாக 'நான்' என்ற சுய நோக்கையும், சுயநல உணர்வையும், சுயநலத்தைப் பெரிதாகக் கொள்ளலையும் கல்வி வளர்க்கலாயிற்று.

உளவியல் அடிப்படையிலே ஏற்படுத்தப்பட்ட இன்னொரு தாக்கம் "அந்நியமாகும்" உணர்வைக் குடியேற்றநாட்டுக் கல்விமுறை ஏற்படுத்தியமையாகும். ''சுயநலநோக்கு'' ''அந்நியமாதல்'' என்ற இரு பண்புகளினதும் கூட்டுமொத்தமான இணைப்பால் கல்வியானது தனிமனிதருக்குரிய மேல்நோக்கிய அசைவைக் கொடுத்ததேயன்றி உடனடிச் சமூகத்தை மேல்நோக்கி முழுமையாக அசைக்கவில்லை. உதாரணமாக ஒரு கிராமத்திலே உள்ள ஒருவர் படித்து முன்னேற்றம் எய்திய வேளை, அந்த மேம்பாடு அவருக்குரியதாக இருந்ததேயன்றி அவரது கிராமத்தை மேம்படுத்துவதாக அமையவில்லை. அதாவது யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பு (அடுக்கமைப்பு) அடிப்படை மாற்றங்களை அனுபவிக்கவில்லை.

கல்விமுறைமை மீத்திறன் உள்ள மாணவர்களுக்கு மட்டுமே அனுகூலமாக அமைந்தது மெதுவாய்க் கற்போரை ஊக்கப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் வறிதாக இருந்தன- இதனால் கல்வி முறைமையுடன் இணைந்ததாக '' மனமுறிவை '' ஏற்படுத்தும் செயல்களும் ஒன்றிணைக்கப்பட்டன,

பாரம்பரியக் கல்வி முறைமையில் எதனையும் '' தெரியாது " என்று கூறுவதன் வாயிலாகப் புகழீட்ட முடியாது. ஆனால் ஆங்கிலக் கல்வி மேலோங்கியிருந்த யாழ்ப்பாணச் சூழலில் '' எனக்குத் தமிழிலே பேச முடியாதிருக்கிறது " என்று கூறியதன் வாயிலாகத் தம்மைப் பெருமைப்படுத்திக் கொண்டவர்கள் இருந்திருக் கின்றார்கள் என்பதை யாழ்ப்பாணத்து முதியோர்களின் கதைகளில் இருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது.

எத்தகைய மாண்புடன் வாழவேண்டும் எனபதைக் கல்வி எடுத்துக்கூறவில்லை மாறாக '' எவ்வாறு சம்பாதிக்க வேண்டும் " என்ற ஒடுங்கிய உணர்வையே வளர்த்தெடுத்தது. யாழ்ப்பாணத்து சீதன முறை மைக்கும் குடியேற்றவாதக் கல்விக்குமிடையே நேரான இணைப்பைக் காணமுடியும்.

பாரம்பரியக் கல்வியிலே சேவையாகக் கருதப்பட்ட ஆசிரியப் பணியானது குடியேற்றவாதச் செல்வாக் கினால் வேதனத்துக்குரிய ஒரு உத்தியோகமாகச் சுருக்கப்பட்டது. ஆசிரிய சேவையின் உருவாக்கம் நிர்வாக சேவையின் உருவாக்கத்திலும தாழ்ந்த ஒழுங்கமைப்பைக் கொண்டதாக அமைக்கப்பட்டது. வேறு உத்தியோ கங்களுக்குச் செல்வதற்குரிய '' படிக்கல் " ஆகவும் ஆசிரியர் சேவை பயன்படலாயிற்று

'' ஒடுக்கப்பட்டவர்களுக்கான கற்பித்தலியல் '' என்ற நூலில் குடியேற்றவாதக் கல்வி முறைமையின் எதிர்த்தாக்கங்கள் திறனாய்வாளர் போலோ பிறீறி என்பவரால் மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இலத்தீன் அமெரிக்காவை பின்புலமாகக் கொண்ட அவரது ஆய்வுகள் தென் ஆசியாவுக்கும் பொருத்தமானவையாகும்

குடியேற்றவாதக் கல்வி முறைமையானது ''வங்கி" இயல்பினைக் கொண்டதென்றும், அது ஒடுக்குவோ ருக்குச் சாதகமாயும், ஒடுக்கப்படுவோருக்குப் பாதகமாயும் அமைகின்றதென்றும் அவர் குறிப்பிடுகின்றார். மாணவர்களின் ஆக்கத்திறன்கள் ஒடுக்கப்படுகின்றன. அவர்கள் சடப்பொருட்கள் போன்று ''முகாமை'' செய்யப் படுகின்றனர். ''ஆசிரியரின் ஊடாகவே'' அவர்கள் சிந்தித்துச் செயற்படுகின்ற சுருங்கியநிலை ஏற்படுகின்றது. கற்றல் செயல்முறையில் ஆசிரியரே '' சத்தாக '' இருக்கின்றார். மாணவர் '' சடமாக '' இருக்கின்றனர் இந் நிலையிற் கல்விச் செயன்முறையானது எதிர் மானுடப்படுத்தலுக்குக் கருவியாகின்றது என்பது பிறீறியின் கரு த்து.

கல்விமுறையானது பெற்றோர்களை என்றும் பதகளிப்பு (Anxiety) நிலைக்குத் தள்ளியது. கல்வி அடைவு களிலே பிள்ளைகள் பின்தங்கும் பொழுது பெற்றார் பதகளமும், மனச்சோர்வும், வீரக்தியும் அடைகின்றனர் கல்விப்பயனைக் குறுகிய அடைவுகளினூடாகத் தரிசிக்கச் செய்தமையின் பிரதான விளைவாக இது இடம் பெறுகின்றது. நடத்தை இலக்குகளை முன்வைத்து உருவாக்கப்படும் (The objective based Curricular Design) கலைத்திட்ட வடிவமைப்பு மேலைநாட்டு உளவியலாளரின் தீவிர கண்டனத்துக்கு இன்று உட்படுத்தப்பட்டுள் ளது. அதற்குரிய மாற்றுவழிகளாக செயல்முறைக் காட்டுரு (The Process Model) சந்தர்ப்பக் காட்டுரு (The Situational Model) போனறவற்றை அங்கு உருவாக்கி வருகின்றார்கள். இந்நாட்டிற் தொடர்ச்சியாகப் பொரு ந்தாப் பழைய வடிவங்களையே இன்னமும் அரவணைத்த நிலை காணப்படுகின்றது. இதன் அடிப்படையாகவே பொருத்தமற்ற பரீட்சைகளின் மிகையான ஆதிக்கம் செயற்பட்டு வருகின்றது.

பல்வேறு ஆற்றல் வளங்களுக்கு நேர்முகமாக உதவிய குடியேற்றவாதக் கல்வியானது மேலே விளங்கிய எதிர்விளைவுகளையும் தந்துள்ளது. எதிர் விளைவுகளை ஆராய்தல் நேர்ச் செயற்பாடுகளை வலிமைப்படுத்த வல்ல விசையாகும்.

REFERENCES:

1. Keith Watson, (ed.,)
Education in the third world
Groom Helm, London, 1982

2. Michael Globy (ed.,)
Curriculum Design
Groom Helm, London, 1975.

3. Altbach and Kelly.
Education and Colonialism
Longmans, New york, 1978.

4. Carnoy
Education and Cultuarl Imprialism
David MC Kay, New york, 1974

5. Paulo Freire
Pedagogy of the Oppsersed
Pengin Books, Harmonds worth, 1970.

From Dr. Suresh Canagarajah

Head / English Language Teaching Centre
University of Jaffna.

Congratulations to Udduppiddy Girls' College on completing one hundred and twenty five years of service to the community. As the school enters into another era of fruitful educational service, it is useful to refelect on the challenges it will face ahead. The challenges Tamil educationists face today are remarkably different from those confronted by educationists before 1970's. The socio political conditions have changed drastically. We live in a momentous period when the old values have beeu challenged and new values are being sought: when the old social order is being dismantled and a new hierarchy is evolving when the traditional culture has been critiqued and a new culture is being defined. We are literally at the cross-roads. The implications of these chalanges for the future of education are being debated by every single Tamil parent today. An educationist today is in a pioneering situation, having to imaginatively, daringly and prophetically define the course education for the future generation of Tamil students.

To begin with, Uduppiddy Girls' College possesses a rich tradition of schooling that is 125 years old. It has always been known for a sophisticated English education, an exposure to the finest of Western civilization, a moulding in the Christian virtues, and a commitment to strict discipline and rigorous intellectual inquiry all stemming from the missionary roots of the school. But these very ideals are being questioned today, at least implicitly. This educational approach has been accused of breeding a culturally insensitive social elite, who are unresponsive to the pressing needs of their community and uncommited to developing or enriching the indigenous traditions of learning, knowledge, and culture. These are considred alines in their own land whom sir. Pon. Ramanathan described in stronge language as " a genration of intellectual pariahs " in his critique of English edueation as early as his day. The community today wants an educational system that is committed to modernising the Tamil language, safeguarding its classical - literature, developing the folk roots of Tamil culture and the arts and defending the 'community against alien forces of oppression

What does as educationist do in this context? We must certainly give heed to the needs, desires and aspirations of our community justifiably caused by the unique socio - political conditions of our day, In fact, all over the third - world indigenous communities are articulating such dreams and visions for their society, culture and education. But such a rigid nationalistic temperament can also have its limitation. Already, Tamil parents are complaining that their children lack an awareness of international developments, an appreciation of the strengths of other cultures, a proficiency in other tongues, and suffer from a general sence of inbreeding and insularity. Here then is the place for the ideals of Uduppiddy Girls' College; it can complement the development of indigenous values by also providing the urbane, cosmopolitan, multicultural values and outlook it is famous for. What is called for is then a healthy synthesis of the best in the native and Western educational traditions, a constructive reconciliation of the national and international.

To consider a second type of challenge facing the school, we must appreciate thatthe whole community of Jaffna has enjoyed a strong educational tradition that has been a cause of anxiety for the Sinhalese government and grattiude for Universities all over the world. Our students display a motivation to studies- a discipline, drive, and rigor in intellectual pursuits, that are unparalleled in many communities. Refelecting on this unique cultural phenomenon in a recent paper titled " The social foundation of educational and economic activity in Jaffna ?" R. S Perinpanaygam, a Professor of Sociology in New York and the

son of the famous Handy Perinpanayagam of Youth Congress days, discusses how the Protestant Work Ethic displayed in the missionary schools and Saivite revivalism spearheaded by Arumuga Navalar (both ironically propagating similar values like the nobility of hard work, discipline and intellectual advancement) combnined to produce the impresive Tamil educational tradition: However, he is quite perceptive to point out a weakness in this tradition: our attitude to learning has been too mechanical and bookish, denying the creativity, imagination, application, and enjoyment that should accompany learning. This criticism has been amplified today by a rebellious breed of Jaffna youth. They have corrected this imbalance by ingeniously and industriously applying their knowledge to invent products that make our life in Jaffna so tolerable during those dark days. If necessity is the mother of invention, things ranging from karosene-run vehicles to the home made jam - bottle lamp testify to the ingenuity of these often unschooled youth. They demand then an attitude to learning that is practical, utilitarian, and service oriented. Their mokery of selfish, mechanical school - students (many of whom are still book worms running around one tutory after the other, cramming mindlessly for their examcination) is often justified The conflict then is. between knowledge for the sake of knowledge and knowledge for use — the pure and applied modes of knowledge – or the idealistic and utilitarian approaches to learning.

How does an educationist respond to this conflict today ? While the practical orientation is certainly beneficial to all of us and a source of self - reliance and independence for the community today, measuring knowledge by what it can do to us is a bit too reductive and simplistic. Often the sheer delight of learning the joy of discovery and the free spirit of inquiry do in fact motivate further applications and add momentum to learning. Therefore, while correcting our present over emphasis on book learning as an end in itself, we should however, not abandon to habit of relaxed reading, the place of literature and the arts, the creativity of the Humanities — all of which cultivate one's sprit. Here again, then, what is adviseable is a prudent balance, a healthy reconciliation.

In all that I have been discussing so far their lurke the harsh reality of politics. We must admit that we live today in a context when education is extremely politicized. Politics is of course an ugly word for many, and in polite circles nobody likes to broach the topic. However, we must accept that politics has become a fact of life for the people of Jaffna these past few years, and we ignore it only at our peril, Of Course, politics in its essential sence " as the mechanism for organizing social life " is a noble enterprise. We must also realze that politics is unavoidable in any domain of life; in fact everything has political implications, The Noble - prize - winning French thinker Jean - Paul Sartre puts it wittily; " You can runaway from politicis, but politics will catch up with you " It is time therefore to seriously consider the relationship between politics and education in our highly politicized community today.

This is not the place for a scholarly disquisition on politics. Suffice it to make clear that there is a good intervention of politics in education and a bad intervention a constructive approach - and a destructive approach and it is important for any educationist to recognize the difference. The bad option is when politics stifles free thinking, when ideological indoctrination takes over intellectual inquiry. There are ample examples of this trend in history in many totalitarian nations. Even in Sri Lanka we have had racially biased writting of text books, discriminatory admission to Higher Education, and politically motivated appointment for educational and academic positons which have affected the intellectual progress of the whole country. The good intervention of politics in education is when learning is related to the socio - economic challenges of the community, when it leads to social and political awareness' when it inculcates basic values like justice and equality, when it fosters an appreciation of fundamental human rights, when it moulds critical minds needed for a responsible citizenry, when it leads, in short, to social emancipation and a more democratic environment for all of us. Needless to say, an education unrelated to these concerns is impoverished, irresponsible, and superficial. So here again an educationist of contemporary Jaffna has to soberly discern the meaningful and balanced way in which politics can be admitted into education, and must have the courage to resist any dictatorial intervention,

It is clear, therefore, that only a balanced approach to these issues, the discernment of the golden mean, or a sober moderation, which will preve to be constructive in the long run. While we should not be struck blindly in the past, we should not topple recklessly into the Present; while we should not be biased by our own traditions, we should not capitulate to the novelv of newer traditions; while we must develop the courage to critique our own preferred values, we should not uncritically absorb the newer values.

I pray that Uduppiddy Girls' College will continue to provide a sound and constructive education for the community in critical times like these,

There are obviously two educations. One should teach us how to make a living and the other how to live.

— James Troslow Adams —

EDUCATION AND SOCIETY

Mrs. P. Rajendrasingam
B. A. Dip-in-Ed., S. L. E. A. S. Class III.
Retired Principal,
Uduppiddy Girls' College.

Every country in all continents have a system of education that teach the alphabets from the KG class to the Research Department of their Universities so luxuriously and boastfully maintained at State expense. They impart education in all faculties that when one comes out of them such graduates are crowned as intellectuals worthy of recognition and admiration of the society. This is true of practically all the countries.

But is education so done, proved its worth both to those who impart knowledge, to those who are " enlightened " and to the ignorant and poverty stricken society into which people are born.

Has education in the present age done that yeomen service of breeding the permanent qualities to bring out the best in man and whether it had helped to improve the society and whether it had brought out better and more useful service to the community internally and externally - that is the equality of men everywhere. In fact the brotherhood of man.

There is, I think, a vast difference between theory and practice. During my life time I have seen such diverse opinions on a given fact of life. People often think and speak differently from what they really do. Such ' mixed ' valuations have not brought out the best in men but only clownish appearances to suit the man and the occasion.

I have found out the principles of justice, fairplay courage to stand up for what is right and the ability to speak the truth at all times and all the other ' good ' qualities are now fading away in the dusk for the on-coming generation. As a teacher and principal, I usually wonder how our education standards of human values have been eroded to from a stony soil of vast emptiness and hollow mind that benefits neither the society nor the doer.

Purpose of life is therefore not self conceited notions of one's ability but the unity of men and women in a bond of ever lasting happiness and service.

At the same time, blame is not on the education as we see it but how education has been misused for idle talk and worthless pursuit of self-gain

Character - not wealth or power of position - is of extremely supreme worth. There are some corollaries to it. Few of these are that right implies responsibility, every opportunity is an obligation aud every possession is a duty, We should believe in the dignity of Labour, that is, the world owes no man a living but it owes every man an opportunity to make a living. Thrift is essential to a well ordered society. Again truih and justice are fundamental to an enduring social order.

In this respect, let me speak about the books or literature. There are no better friends from among those dead or living than books. Books are of the people, by the people. for the people. Literature is the best and more enduring part of ones personality. You can enjoy the most aristocratic society in the world whenever you want it, The dead are beyond our reach, great living men are usually inaccessible and our friends we cannot always see them. But you can at any moment converse with Socrates or Shakespeare or Thiruvalluvar. In their books you see them at best. You can always almost look into their inmost heart of heart. Books can be a storehouse of knowledge that keeps your mind alert for your life - time and help to swell your feeling for the society. Life of service to community is the noblest service and the path of education. Life of service to man surpasses all the hurdles of passion and prejudice and encompasses not only the universe but the cosmos. "Service is the supreme duty of education and is my only religion", so says an intellect.

I believe in an all - wise and all - loving God - it can be named by whatever name - that the individual's highest fulfillment, greatest happiness and widest usefulness are best found in living in harmony with God's will. This is because God is Love and Love only can overcome hate and right can triumph over might.

Is our education leading to this noble path. I leave it to the readers to justify or not. "Conscience is ones greatest enemy" I, for that purpose, politely refrain from giving my verdict.

Happiness and misery both are sins, one iron and the other gold. Discard both.

— Swami Vivekananda —

கல்வி கற்றலில் வெளிக்கள நிலையத்தின் பங்கு

செல்வி. சீ. வேலுப்பிள்ளை
B. Sc. Dip – in – Ed.
முன்னாள் பிரதி அதிபர்,
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

நற்கால உலகில் விஞ்ஞான தொழில்நுட்ப சமூக மாற்றங்கள் மிக விரைவாக நடைபெறுவதால் எவ் வளவு முன்னேற்றகரமான நிலையிலுள்ள பாடசாலைகளோ பல்கலைக்கழகங்களோ இவ்விரைவான மாற்றங் களுக்கேற்ப சமுதாயத்தில் உள்ள பொறுப்புக்கள் கடமைகள் அனைத்தையும் எதிர்கொள்ளக்கூடிய வகையில் கற்பித்தல் நடைபெறமுடியாது. சாதாரண முறைமையான பாடசாலைக் கல்விமுறை மிக மெதுவாகவே திணைக் களத்தால் கொடுக்கப்படும் கல்வித்திட்டத்தின்படி நடைபெறும். இவ்விரைவாக ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப விரைவில் செயற்படுத்துவதற்கு பாடசாலைக்கு வெளியே வெளிக்களவேலைகளில் இளம் சமுதாயத்தினரை செயலில் ஈடுபட சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். இவ்வெளிக்கள செயலில் ஈடுபட்டு ஆராய்ச்சியில் கவனம் செலுத்தி எமது சமுதாயப் பொறுப்பைச் சிறப்பாக மேற்கொள்வதற்காகவே இலங்கையில் ஆங்காங்கு வெளிக்கள நிலையங்கள் கல்வித் திணைக்களத்தின் மேற்பார்வையுடன் நடாத்தப்பட்டு வருகின்றன. இங்கு பாடசாலைகளில் கொடுக்கப்படும் சாதாரண கல்வியுடன் ஆராய்ச்சி வெளிக்கள கல்விச் செயல்களால் கல்வி ஓரளவு நிறைவு படுத்தப்படுகிறது.

விஞ்ஞான வளர்ச்சி மிக உன்னத நிலையை அடைந்த கணனி உலகத்திலும் பாடசாலைகளில் மாணவர் கள் திணைக்களங்கள் நடாத்தும் பரீட்சைகளில் சித்தியடைவதே நோக்கமாகக் கொண்டு ஆசிரியர்கள் தொழிற் படுகிறார்கள். சுயசிந்தனையிலும் ஆக்கத்திறனிலும் மாணவர்கள் ஈடுபடுதல் அவசியமாகும். முக்கியமாக விஞ் ஞானக் கல்வியைப் போதிக்கும்போது அடிப்படைத்தத்துவமாகிய அவதானித்தல், பதிவு செய்தல், ஒழுங்கு படுத்துதல், ஆராய்தல் போன்றவற்றை மாணவர்கள்பெற ஊக்குவிக்க வேண்டும். மாணவர்கள் பாடசாலை களிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் ஆசிரியர் கூறும் குறிப்புக்களை எழுதி அதனையே படிக்கிறார்கள். தாமாக ஒரு பொருள்பற்றி பல நூல்களை வாசித்துத் தெளிவாக அறிவைப் பெறுவதில் முயற்சிப்பதில்லை. விஞ்ஞான விளக்கங்களால் அடிப்படை உண்மைகளை விளக்கி பொருளாதாரரீதியைப் பெருக்கும் வழிமுறை களைக் கையாள வேண்டும். அத்துடன் எமது தீந்தமிழ் மொழியில் விஞ்ஞான நூல்கள் அதிகம் கிடைப்பதில்லை. அதிகமானவை ஆங்கிலத்தில் உள்ளன. ஆகவே விஞ்ஞான அறிவை விருத்திசெய்ய ஆங்கில அறிவு மிகமிக முக்கியம்.

மனிதனின் ஈரல், நுரையீரல், இதயம் போன்றபல முக்கிய உள்ளுறுப்புக்கள் மாற்றீடு செய்யும் அளவுக்கு உயிரியல், பொறியியல், மரபுப் பொறியியல், நொதியப் பொறியியல் ஆகியவை வளர்ந்த காலத்தில் ஒருவரின் மூளையையே மாற்றீடு செய்யும் அளவுக்கு வரும்காலம் தூரத்திலில்லை. ஆகவே ஒரு நாட்டின் அரசியல் சமூக பொருளாதார வளர்ச்சி விஞ்ஞானத்தின் கையில் உள்ளது.

வெளிக்கள நிலையங்களில் விஞ்ஞான சமூகவியல் ஆசிரியர்கள், கல்விமான்கள் ஒன்றிணைந்து செயலாற்று வர். இங்ஙனமாக செயலாற்றும் நிறுவனமாக தொண்டமானாறு வெளிக்கள நிலையம் தமிழ் மக்களுக்குக் கிடைத்தது ஒரு வரப்பிரசாதமாகும். யாழ் மாவட்டத்திலும் வேறு மாவட்டங்களிலும் மாணவர்கள், ஆசிரியர் கள் பாசறைகளிலும் கல்விக் கருத்தரங்குகளிலும் பங்குபற்ற அழைக்கப்பட்டு மிகச்சிறந்த முறையில் சேவை யாற்றி வந்தது. பாசறைகள் மாவட்ட மட்டத்திலும், அகில இலங்கை மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் நடைபெற்று வந்தன. பாசறையில் பங்குபற்றுபவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு கிட்டிய சூழலில் உள்ள பிரச் சினைகளை உய்த்தறிந்து அதனைத் தீர்ப்பதற்கு எடுக்கக்கூடிய அணுகுமுறைகள் பற்றி ஆராய்வார். பாசறை யில் பங்குபற்றுவோர் தத்தம் அவதானிப்புக்கள் யாவும் பதிவு செய்யப்பட்டு இரவுபகலாக செயலில் ஈடுபடுவர். ஒவ்வொரு குழுவும் தத்தம் பிரச்சினைகள் முடிவுகளை நாளாந்தம் அறிக்கை வடிவில் சமர்ப்பித்து தர்க்கித்து விவாதித்து பகுத்து ஆராய்வதில் ஈடுபடுவர். பல தொடர்ச்சியான பாசறைகளை நாளாந்த பிரச்சனைகளான மாசடைதல், பசுமைப்புரட்சி, உடலுக்குடன் விஞ்ஞான ஆய்கருவிகள் செய்தல் ஆகியவற்றில் நடாத்தப்பட்டன.

பாடசாலைகளில் காணக்கிடைக்காத பல ஆராய்ச்சிக் கருவிகள் பெறப்பட்டு ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டு வந்தன. இதனால் எம்மக்கள் பின்வரும் நோக்கங்களைப் பெறுவதற்குப் பயிற்சி அளித்து வந்தன.

1. தமக்கு மிகக்கிட்டிய சூழலிலுள்ள பிரச்சனை பற்றிச் சிந்தித்துப் பின் சூழலுக்கு அப்பாலும் சிந்திக்கப் பயிற்சி பெறல்.

2) அவதானங்கள் தரவுகளைத் தனது ஆராய்ச்சிக்கேற்ப ஒழுங்குபடுத்தப் பயிற்சி பெறல்

3) நூல்களிலிருந்தும், பங்குபற்றும் கல்விமான்களின் கலந்துரையாடல்களிலிருந்தும் பெறும் அறிவால் தான் பெற்ற அவதானிப்புக்களை மதிப்பிடலில் பயிற்சி பெறல்.

4) தான் பெற்ற முடிவுகளை மற்றவர்களுக்கும் தெரியப் படுத்தும் ஆற்றல் பெறுவதில் பயிற்சி பெறல்

5) இதே போன்ற வெளிக்களப் பயிற்சியை மற்றைய இளம் சமுதாயத்தினர் பெறுவதற்குத் தூண்டுதல்

6) பாசறையில் தொடங்கிய ஆராய்ச்சியைத் தொடர்வதில் பயிற்சி பெறல்

7, சாதாரண வீட்டு, பாடசாலைச் சூழ்நிலை அல்லாத விஞ்ஞான சமூகவியல் அறிவுசார் சூழ்நிலையில் சில நாட்களைப் பிரயோசனமாகக் கழிப்பதில் பயிற்சி பெறல்.

8) பாடசாலைகளில் கிடைக்காத வெளிநாட்டு உள்நாட்டு சஞ்சிகைகள் செய்தித்தாள்கள், விஞ்ஞான அறிவுக் கட்டுரைகள் வெளிக்கள நிலைய நூல்நிலையத்தில் பெற்று வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டுதல்

மற்றும் பல நோக்கங்களைப் பெறுவதற்கு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளித்த நிலையமே இப்போது இருந்த இடம் தெரியாது இடம் பெயர்ந்து அச்சுவேலியில் செயற்படுகிறது. ஆய்வுகூட வசதி, நூல்நிலைய வசதிகளுடன் பாசறை நாட்களில் தங்கும் வசதிகள் யாவும் அளிக்கப்பட்டு பாசறையில் பங்குபற்றுவோர் தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட வாய்ப்பளித்தும் பங்குபற்றியோருக்கு சான்றிதழ்களும் வழங்கிவந்தது.

விஞ்ஞான, கணித பரீட்சைகளை நடாத்தும் பொறுப்பையும் மாவட்ட மட்டத்திலும் அகில இலங்கை மட்டத்திலும் தமிழ்மொழியில் நடாத்திவந்தது. விஞ்ஞான உபகரணங்களை அமைக்கும் திறனை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கி வந்ததோடு ஏற்படும் சந்தேகங்களைத் தீர்ப்பதற்குரிய நிலையமாக விளங்கி வந்தது.

பல வகையில் இளம் சமுதாயத்தினரின் கல்விவளர்ச்சியை ஊக்குவித்த தொண்டமானாறு வெளிக்கள நிலையம் இடம் பெயர்ந்த நிலையிலும் தன்பணியை ஆற்றிவருகிறது. எரிபொருள் தட்டுப்பாடு, போக்குவரத்து வசதியின்மை, மின்சாரமின்மை போன்ற போர்க் கால சூழ்நிலையிலும் வெளிக்கள நிலையத்தினர் தமிழ் மக்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தச் செய்வதில் புத்தூக்கும் அளித்து வருகின்றனர். விரைவில் மாறும் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப எம்தமிழ் இளைஞர்களை விரைவில் மாற்றமடையச் செய்யக்கூடிய நிலையை எம் நிலையம் அடையும் என எதிர்பார்க்கிறோம்.

நம் கடமையைச் செய்வோம் நடப்பது நடக்கட்டும் என்று இருப்போம். அதுவே அறிவுக்கு அழகு. கடமையைச் செய்வதற்கே நமக்கு உரிமை உண்டு. பயன்பற்றிக் கவலைப்படுவது அறியாமை.

— மு. வ. —

PLAY THE GAME - IN LIFE TOO.

K. Indralingam,
Retired Goverment Officer.
English Teacher (On Contract)
Uduppiddy Girls' College.

Ever since birth, children are playful. They play with their mother firstly, while being fed and even other times. Later when he is a bonny baby everyone adores the child to inspire them to play and entertain the elders, for, no happiness is greater than a child's charming smile When the children grow, then again they play with their age groups in their home garden or even in the classrooms with their usual jest and zeal but they very often quarrel or interpret rules to their own advantage for victory is their only aim. But what is most important is that they have loved the game and learnt the art of doing something together. This is a great boon in the society.

In school, we play cricket or football matches as representing '' my school against another ''. This brings us to a higher level of human relations of playing a game in the right spirit. Play well with all dedication to win according to the rules and win or lose admit fairplay, respect the victor and put your hand on your opponent's shoulder and say we played hard, it was a great game. We are dead enemies in the field but sweet friends off it. That game of friendship one bulids on the playing is everlasting, enduring, and we remember even when we beeome grandfathers.

In the 1936 Olympics held in Berlin, when Hitler was the Supreme Ruler who spoke of Aryan supremacy, the black athletes of America were rebuked by him. In one afternoon, one black athlete from the United states broke four Olympic records. One event was the long jump and during this jumping event a new friendship developed. Jesse Owens was the black athlete. Of the three jumps, two were fouls as he overstepped the board. The German who was the European Champion came up to him and said take a few steps behind and run, you will not go foul. He did as told and jumped his last jump. It was done well. The leg was on the board and the jump was a world record He was full of glee and embraced the German. Friendship developed. They parted after the games. The first world war began and in 1940's the German athlete died in the war. Jesse was so unhappy that his conscience began to work. It said " Oh ! he helped you to get a name and fame in which you are now ". He thought what have I done and what shall I do to the man whom we did not know each other at all but he inspired me to such great heights. He waited patiently for the war to end. Then after the war, he went to see his wife and children in Germany and told his wife '' I have come personally to sec you. He helped me in that event and to my glory. Please allow me to take your sons with me to America. They will grow up with me. I owe him a deep debt of gratitude. She just obeyed him. The son or sons (I am not sure) went to live with Jesse Owens in America as his own children. Herein lies the spirit ' play the game '.

I witnessed a funeral of an old sportsman. He had become poor as not affluent. He had a small job. When death conquered him there was a very huge crowd of mourners both old and young, rich and poor, ' kings ' and peasants to pay their last respects. What was he ? I asked. I was told he was a great sportsman. He lived fearlessly, fought bravely, lived honestly and moved along graciously and passed away peacefully into the arms of God What a wonderful life. I thought, without any pomp or pageontry but just a humble man.

There was the famous West Indian cricketer, Sir Garbied Sobers unquestionably the world's greatest all - rounder When he first went to Australia in 1959 - 60 his batting was a Charm. The greatest batsman of all time Slr Don Bradman, an Australian, used to go wherever he played. He used to say Sobers "Today I want a century my son". He lived as his son and was not a visitor in his house. He later married an Australian and settled down in Australia. The greatest West Indian crieketer Sir Frank Worrel was adored by the Australian people that he virtually wept when he and his team finally departed for home after their triumphant tour. He was knighted by the Queen of England for his services to cricket and his ability to win friends through sport. Unfortunately he died of cancer after some years and the whole world mourned his death. The Austratian captain who played against him in that great test series was stunned on his death. He remarked that Worrel was a king among kings. That is the way to play the game.

Sportsmen are great lovers. They meet often and they begin to like each other and the fridndship grows into respect and then develops into love. 'All the girls love a sailor' so goes an old saying. I would say all the girls love a great sportsman. I have seen many happy marriages among sportsmen and sportswomen. He would say I loved her, I had given her a word I should marry. He did not marry for wealth. position, power or status. He married for love and because he wants to be an honourable man that he doesn't want to say something and do another. You may ask me why? He is a great lover. He learnt to love the game and his life is a life of love.

There are so many illuminating illustrations of sporting characters throughout the world of playing the game. The great qualities of live are supreme dedication to one another. Law is made for man and not man for law as the laws of any game would show. It believes in the dignity of man as an individual as you learn in the playing field, Good manners are essential to a well ordered society of human relations which we learn in a game. We take a wrong decision with a silent approval. Truth and justice are essential in life as in a game as otherwise the game will end in chaos and mistrust. A man's word should be always good. What is said once is not changed again for any reason. This again is a sportive way of looking at things.

The rendering of a useful service of bringing happiness to many thousand of spectators in a match is carried on in life. Character is supreme and selfishness is consumed for the sake of the team. Likewise in life too, sacrifice is a virtue worthy of emulation. It thus brings an individual to the highest fulfillment, greatest happiness and widest usefulness that is found in living in harmony withi people around you. Love of game leads to love of family, love of society and love of God. Love is the greatest thing in the world.

These are the principles for which all good men and women throughout the world irrespective of caste, creed. race, education, social position or occupation or religion, are standing and for which many of them are suffering and dying.

Play the game is a must for all and these principles of the game are the principles upon which a new world recognising the brotherhood of man and the fatherhood of God can be established.

கல்வியும் சமூக மாற்றமும்

கீ. நடராசா
B. A. (Cey.), Dip-in-Ed., M. A. (Ed.)

கல்வி மாற்றத்தின் கருவி (Education as instrument of change) என்பதை உணர்ந்து அறிவு, திறன் மனப்பாங்கு. மக்களின் விழுமியம் என்பவற்றுடன் கல்வி தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். எந்தவொரு நாட்டினது சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் இக்கூற்று பொருத்தமானது. இம் மாற்றத்தினை இரத்தக் களரியின்றி அடைவதற்கு கல்வியே ஊன்றுகோலாகும். கல்வி விருப்பங்களை நடைமுறைப்படுத்தும் மாயக் கோலன்று. அதனைத் திறம்படப் பலப்படுத்துவதற்கு தியாகம், மனஉறுதிப்பாடு என்பன அவசியமாகும். எதிர் கால சமுதாயத்தை வடிவமைப்பதற்குத் தற்போதைய நிலையில் தனது இறுதிக்கட்ட மாற்றங்களுக்கேற்ப மனிதனைத் தயாரித்தல் வேண்டும்.

ஒவ்வொரு சமுதாயமும் நாட்டங்கள், அபிலாசைகள் என்பவற்றுக்கேற்ப விசேட பிரச்சினைகள் சிலவற்றைக் கொண்டுள்ளது. சமூகத்தின் விசேட குணவியல்புகள் கல்வித்திட்டத்தில் இடம் பெற்றிருப்பதோடு மாறும் சமுதாயத்திற்கேற்ப கல்வி அமைதல் வேண்டும். எமது தேசிய கல்வி அமைப்பு இரு பிரதான தொழிற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும்.

ஒன்று: பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும் தொழிற்பாடு

இரண்டு: சமூக பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் தொழிற்பாடு

சமுதாய இணைப்பு அதிகரிக்கும் காலங்களிலேயே இவ்விரு தொழிற்பாடுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன.

கல்வியை சமுதாய மாற்றத்துடன் தொடர்பு படுத்தும் பொழுதும் இரு நிலைமைகள் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்

ஒன்று: மாற்றங்கள் மாறும் சமுதாய சூழலுக்கேற்ப சீராக்கம் பெறுதல் வேண்டும்.

இரண்டு: சமூக வளர்ச்சிக்கான புதிய கல்விமுறையொன்று ஆக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு கூறும் பொழுது சமூக வளர்ச்சியை மட்டும் கருத்திற் கொள்ளாது கடந்தகால செயற்பாடுகளின் அடிப்படையில் எதிர்கால வளர்ச்சி பற்றியும் சிந்திக்க வேண்டும். கல்வியானது ஒரு சந்ததியின் கலாச்சாரத்தை இன்னொரு சந்ததிக்குப் பரப்புதல் வேண்டும். வளர்ந்து வரும் சமுதாயம் கடந்தகால சந்ததியின் அனுபவங்களையும் செயற்பாடுகளையும் எடுத்துச் செல்வதோடு புதிய சூழலுக்கேற்ப செயற்பாடுகளிலும் அனுபவங்களிலும் மாற்றம்காண வேண்டும். கல்வி தொடர்ச்சியான செயற்பாடும் அனுபவமும் கொண்ட மீளமைப்பு ஆகும். கல்வி சமுதாயத்தைத் திருத்தும் ஆக்கபூர்வமான முகவர் நிலையமாகும்.

மனித இனம் தனது சூழலின் செயற்பாடு ஊடகம் என்பவற்றின்மூலம் நீண்டகாலமாகச் சேர்த்து வைத்த விழுமியங்களை கலாச்சாரம் என்று குறிப்பிடுவர். இக் கலாச்சாரமானது மனிதனின் அறிவு அனுபவங்களின் அடிப்படையில் அவனுடைய வாழ்க்கை முறையைச் செப்பனிட உதவியது. எனவே எமது கலாச்சாரம் பேணப்படாவிடின் மனிதனின் அறிவு அனுபவங்கள் யாவும் இழக்கப்பட்டு வரப்போகும் சந்ததி மீண்டும் மீண்டும் அவற்றைப் பெறவேண்டிய நிலை உருவாகும். கடந்தகால கலாச்சாரத்தின் பிரதிபலிப்புகள் தற்கால சந்ததிக்குக் கற்கும் கருப்பொருளாக அமைவதோடு காலத்திற் கொவ்வாத பொருத்தமல்லாதனவற்றைக் களைந்தெறிவதன்

மூலம் சமூகச்சாரத்தைப் பாதுகாக்கமுடியும். இவ்வகையில் கல்வியின் சமூக தொழிற்பாட்டில் கல்வியின் கருத்துக்குள் (**Educational Implications of Education as a social function**) எவை என்பது இவ்விடயத்தில் சிந்திக்கத் தக்கது.

ஒன்று: சூழலை இலகுவாக்குவதும் கட்டமைப்பதும் அதன் அடிப்படையாகும் சிக்கலான நாகரிகமொன்றினை முழுமையாக ஏற்றுக் கொள்வதென்பது சிக்கலான விடயமாகும். அதனைப் பகுதி பகுதியாகப் பிரித்தறிந்து பின்னர் படிமுறையில் அதனை ஏற்கவேண்டும். எனவே பாடசாலையின் தலையாய கடமை இளைஞர்கள் புரிந்து கொள்ளக்கூடிய விடயங்களைக் கொண்ட இலகுவான சூழலை வகுப்பதாகும்.

இரண்டு: சூழலைத் தூய்மைப்படுத்துவதும் சித்தாந்தப்படுத்துவதும் அவசியமாகும். பாடசாலைக்கு வெளியே காணப்படும் அனைத்தையும் பாடசாலை வாழ்வில் இறக்குமதி செய்யமுடியாது. தீய அம்சங்கள் சூழல்களிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். ஒரு பாடசாலையில் பல்வேறு சமூகப் பின்னணியைச் சார்ந்தவர்கள் காணப்படலாம். ஆகவே இன, மத, மொழி அடிப்படையில் மனச்சாய்வினை ஏற்படுத்தாது சகிப்புத் தன்மையை உருவாக்குதல் வேண்டும்.

மூன்று: பாடசாலை சிறிய அளவிலான சமூகமாக வெளியுலகத்துடன் தொடர்பு கொள்ளக்கூடிய உயிருள்ள வாகன அமைப்பாக அமைதல் வேண்டும். மக்கள் ஜனநாயக ரீதியிலான வாழ்கை மேற்கொள்ளும் வரை அரசு என்பதும் கருத்தற்றதாகி விடும். ஆகவே பாடசாலை ஒழுங்கமைப்புகளில் ஜனநாயகப் பண்புகள் பிரதிபலிக்கப் படுதல் வேண்டும். மாணவர் விருப்பத்தோடு பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். இவற்றினை பெற்றார் ஆசிரியர் தினம், பொருட்காட்சி, பாடசாலைப் பாராளுமன்றம் போன்றவற்றின்மூலம் உணரச் செய்யலாம். பெற்றோர் பாதுகாவலர் பாடசாலைக்கு அடிக்கடி அழைக்கப்பட்டு ஆசிரியரின் கஷ்டங்களை உணரச் செய்வதோடு மாணவரின் நுண்திறனை வளரச் செய்வதற்கு வழிகாண வேண்டும். கல்வி மான்கள் தமது உயர்ந்த நிலையிலிருந்து இறங்கி வரவேண்டும். ஆசிரியர் தம் சுயநலத்தை மறந்து பொதுநல நோக்கில் தொழிற்படுதல் வேண்டும்.

கல்வியும் சமூக மாற்றமும் என்னும் பொழுது, ஆசிரியர் சமூக மாற்றத்தின் முகவராக **(Teacher as an agent of Social Change)** தொழிற்படுதல் வேண்டும். ஒரு ஆசிரியன் பணிவான முறையில் சேவையாற்றியபோதும் தொழில் ரீதியாக எதிர்கால வடிவங்களைக் கட்டமைப்பதில் அவனே முக்கிய இடத்தை வகிக்கின்றான். பேராசிரியர் ஒட்டாவே **(Prof Ottaway)** என்பவர் ஆசிரியர் தாம் சேவை செய்யும் பாடசாலை மூலமாக சமூகத்தில் சக்தி வாய்ந்த செல்வாக்கினைச் செலுத்த முடியும் என்று கூறுகிறார் " ஒவ்வொரு ஆசிரியரும் கற்பிக்க வேண்டும். சமூகமாற்றத்திற்காகக் கற்பிக்க வேண்டும். மாற்றத்தின்மூலம் திட்டமிட்ட ஒழுங்கான புரட்சிக்கு கற்பிக்க வேண்டும் " என்று அமெரிக்க கல்வி நிபுணர் **Edmund W Gorden** என்பவர் கூறுகிறார். ஆசிரியர் இன்று தம்மை ஒரு சக்திவாய்ந்த தொழிற் சமுதாயமாக மாற்றாத நிலையில் தொழில் சார்ந்த அமைப்பிற்கு தன்னை முழுமையாக ஈடுபடுத்த முடியாத நிலையில் இன்றும் பல கல்வி நிறுவனங்கள் வெறுக்கத்தக்க நிலையில் உள்ள வேளையில் மேற்குறிப்பிட்ட கருத்து பொருந்துமா? என்ற கேள்வி எழாமலும் இல்லை.

எதிர்கால கல்வியானது எமது தேசியப் பணிகளையும் அவற்றின் நோக்கங்களையும் விருத்தி செய்யும் வகையில் பின்வரும் தொடர்புகளை ஏற்படுத்துதல் அவசியமாகின்றது.

ஒன்று: தேசிய இலட்சியத்தை அடையவேண்டுமென்ற அபிலாசையைக் கருத்திற் கொண்டு கடந்தகால கல்வி முறையைத் தற்கால சூழலுக்கேற்ப மாற்றியமைத்தல் வேண்டும்.

இரண்டு: கருத்துள்ள ஒன்றிணைந்த தேசியத்தை உருவாக்கும் வகையில் நகரவாழ்விற்கும் கிராம வாழ்விற்கும் இடையில் கல்வியில் சமசந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும். பொருத்தமான நிறுவனங்கள்மூலம் முறைசார்ந்த முறைசாராக் கல்வி முறைகள் இணைக்கப்படுதல் வேண்டும்.

மூன்று: இளைஞன் தன்னை தெருக்கமாக சமுதாயத்தின் பெரும் பகுதியுடன் இணைத்துக் கொள்வதன்மூலம் மக்கள் சக்தியும் இளைஞர் சக்தியும் இணைந்து வாழ்க்கைத்தர உயர்வுக்கு வித்திடவேண்டும்.

நான்கு: விஞ்ஞானமும் ஆன்மீகமும் இணைவதன்மூலம் கடந்தகால வாழ்க்கைப் பாரம் பரியங்கள், நவீன விஞ்ஞான தொழில்நுட்பத்திற்கேற்ப மாற்றப்பட்டு, எமது வாழ்க்கை முறைக்கு ஏற்றவாறு உள்ளூர் வளங்களின் விருத்திக்கு மாதிரியாக அமைதல் வேண்டும்.

ஐந்து: முறைசார் கல்வியுலகம் உழைக்கும் கல்வியுடன் இணைந்து கலாச்சார உலகமொன்றை உருவாக்கி நீண்டகால கல்வி முறையின்மூலம் மனிதனை முழுமையாக்க வேண்டும்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையும் மனனக் கல்வியும்

திரு. ஐ. சண்முகலிங்கம்
B. A , Dip. - in - Ed.

சுதந்திரத்தின் பின் இலங்கையில் புதிதாக ஆக்கப்பட்ட கலைத்திட்டங்கள் யாவுமே. ஆரம்பக் கல்வி மட்டத்தில் வரவேற்கப்படக் கூடியனவாகவே இருந்தன. அவை உண்மையில் பிள்ளைகள் பூரண மனிதர்களாக மலர வேண்டுமெனவே அவாவி நின்றன. எண் - எழுத்துச் சார்ந்த அடிப்படைத் திறன்களுடன், அழகியற் செயற் பாடு, ஆக்கத்திறன் செயற்பாடு, சூழல் சார்ந்த செயற்பாடு என்பனவற்றின்மூலம் சமூகத்துடன் இயைபு கொள்பனவாக பிள்ளை உருவாவதையே அவை எதிர்பார்த் தன. தேர்வுகளுக்கு அழுத்தங் கொடாது பொதுவான கல்வியை அவை எல்லா மாணவர்களுக்கும் அளிக்க முனைந்தன.

இப்பருவ மாணவர்களுக்கென எழுதப்பட்ட பாடப் புத்தகங்களும், வழிகாட்டி நூல்களும் இந்நோக்கங் களை சரியாகவே பிரதிபலிக்கின்றன. உதாரணமாக ஆண்டு இரண்டில் பயிலும் மாணவர்களுக்கான 'தமிழ்' நூல் எமது சூழல், உறவினர், விளையாட்டுக்கள், இயற்கைக் காட்சிகள், பேணவேண்டிய ஒழுக்கங்கள் என்பன பற்றிக் கூறுவதாகவே அமைந்துள்ளது. 'எங்கள் வீடு' அழகியல் உணர்வுடன் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

"நல்ல நல்ல வீடு
நாங்கள் வாழும் வீடு
கல்லும் மண்ணும் சாத்தும்
கலந்து கட்டும் வீடு

நல்ல பண்னல் ஓடே
மெல்லக் காற்று வீசும்
கொட்டும் மழையில் எம்மை
காக்கும் எங்கள் வீடு" 1

இப்பாடலை அடிச் சரடாகக்கொண்டு மொழியை மட்டுமன்றி பல விடயங்களையும் ஒன்றிணைத்த ரீதியில் கற்பிக்கலாம், மாணவர்களின் அழகியல் உணர்வைத் தூண்டலாம்; ஆக்கத்திறன் செயற்பாட்டுக்கு வழி திறக்கலாம். பொதுவாகவே ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்காகக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட நூல்கள் யாவுமே கலைத்திட்ட ஏற்பாடுகளுக்கமைய அவற்றைப் பிரதிபலிப்பனவாகவே அமைந்துள்ளன. மாணவர்கள் அழுத்தங்களின்றி, தம்மை அறியாது ஈடுபாட்டுடன் படிக்கக்கூடிய பாங்கின வாகவே அவை உள்ளன

அப்படியாயின் இப்பருவக் கல்வியில் 'மனனம்' கூடுதலாக இடம் பெறுகின்றதெனக் கூறப்படும் குற்றச் சாட்டுக்கான காரணங்கள் யாவை? இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையும் ஆரம்ப பாடசாலைக் கல்வி பற்றிப் பின் வருமாறு கூறுகின்றது 'மனனம் செய்யும் கல்வி முறைக்கு அதிக அழுத்தம் கொடுக்காது, செயற்பாட்டு முறைகளும் ஒன்றிணைந்த முறைகளும் மேம்படுத்தி வலுவூட்டப்பட வேண்டும். இந்தச் செயற்பாட்டு முறைகள் உலகின் அனேகமான பகுதிகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதுடன், மாண

வரிடையே அறுதியிட்டு தனிமனிதப் பண்பையும், சமூகத் திறன்களையும் கூர்மையாக்குவதற்கு உதவும் அதே வேளையில் அவர்களின் அறிவுவார்வத்தையும் ஆராய்ந்து புரிந்து கொள்ளும் தன்மையையும் வளரச் செய்கின்றன ஆரம்பக் கல்வி மட்டத்திலான மாணவர்கள் பாடங்களை மனனம் செய்வது ஆரம்பக் கல்வியின் முக்கிய முனைப் பான விடயமாக நிச்சயம் இருக்கக் கூடாது" 2

உண்மையில் 1972-ம் ஆண்டின் கல்வியின் புதிய பாதையும் 1981இன் கல்வி வெள்ளை அறிக்கையும் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கென விதந்துரைத்த கலைத்திட்டத்தில் இக் குறைபாடுள்ளதா? இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் செயற்பாட்டு முறைகளும், ஒன்றிணைந்த முறைகளும் மேம்படுத்தி வலுவூட்டுகின்ற ஒரு கலைத்திட்டத்தைத் தான் வடிவமைத்துத் தந்திருக்கிறார்கள். இந்தக் கலைத் திட்டங்கள் மனனம் செய்கின்ற கல்வி முறைக்கு அழுத்தங் கொடுப்பதில்லை. கலைத் திட்டத்தை தச் செயற்படுத்துகின்ற ஆசிரியர்களும் இதற்கான பயிற்சியையும், சரியான வழிகாட்டுதல்களையும் பெறுவதற்கான வசதிகளும் செய்யப் பட்டுத் தானிருந்தன. ஆனால் மரபு ரீதியாகக் கடைப் பிடிக்கப்படும் சில கற்பித்தல் முறைகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன தான் உதாரணமாக மனனம் செய்யப்படும் எண்கணிதப் பெருக்கல் வாய்ப்பாட்டைக் கூறலாம்: சில நீதிப் பாடல்கள், அறப் பாடல்கள், துதிப் பாடல்களை மனனம் செய்வதைக் கூறலாம்; மாணவர்கள் தமது சுயஊர்ப்பில் தம்மை அறியாமலே மனனம் செய்யும் சில பாடல்களையும் கூறலாம். ஆனால் இவற்றை ஆரம்பக் கல்வியின் மீதான ' அழுத்தங்கள் ' எனக் கொள்ள முடியாது ஒரு வகையில் இவை ஆரம்பக் கல்விக்கு அனுகூலமான விடயங்களே ஆகும். எனவே அழுத்துகின்ற மனனஞ் செய்யும் கல்வி முறை எங்கிருந்து முளைத்தது?

ஆரம்ப பாடசாலைக் கல்வி பற்றி இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழு மேலும் பேசுகின்றது ''எல்லா மாணவர்களாலும் எழுதப்பட வேண்டிய ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை ஞாபகசக்தி அல்லது பெற்ற கல்வியைச் சோதிக்கும் ஒரு பரீட்சையாக இராது, இயற்கை மனப்பாங்கை வெளிக்கொணரும் இயல்பினதாய் அமைதல் வேண்டும். நமது ஆலோசனை ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சையின் அடிப்படை இயல்பினதும், ஆரம்ப மட்டக் கல்விப் போதனையின் அணுகு முறையினதும் அடிப்படைப் பண்பினதும் ஓர் மாற்றத்தில் ஒரு தாக்கத்தைக் கொண்டிருப்பதால் இந்த யோசனைக்கு நாம் விசேடமான முக்கியத்துவம் கொடுக்கிறோம். மனன பாடத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற இந்த பாட அமைப்பின் பலவீனம் இந்தப் பரிமாணம் இல்லாமையே என்பது எமது கருத்தாகும்": 3

ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சையின் அடிப்படை இயல்பு கேள்விக்குரியது தான். ஆனால் 1972-ம், 1981-ம் ஆண்டு கலைத்திட்ட அடிப்படையிலான ஆரம்ப மட்டக் கல்விப் போதனை அணுகு முறையில் கேள்விக்கே இடம் இல்லையென்றே சொல்லத் தோன்றுகிறது. ஆண்டு ஐந்தில் பயிலும் மாணவருக்கென கல்வி வெளியீட்டு திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ' தமிழ் ' பாடநூல் புலமைப் பரிசில் பரீட்சையை மையமாக வைத்து எழுதப்படவில்லை. பிள்ளையின் இயல்பான மலர்ச்சியை வேண்டியே அந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. மொழியாற்றலை வளர்ப்பதுடன் நமது சூழலை அறியவும். எமது விழுமியங்களைப் போற்றவும், இயற்கையை இரசிக்கவும் ஆக்கச் செயற்பாட்டில் ஈடுபடவும் அந்நூல் வழிகாட்டுகின்றது. தேசிய விளையாட்டு விழா, கதிர்காமம், எங்கள் நாடு முதலிய பாடங்கள் எமது சூழலை அறிமுகப்படுத்துகின்றன. தூங்கிதி தொப்பி, புத்தாண்டு பிறந்தது, உலகநீதி பொய் சொல்ல மாட்டேன் முதலிய பாடங்கள் எமது விழுமியங்களைப் பற்றிப் பேசுகின்றன. சிக்குரைக் குன்றம், சிவப்பு ரோஜா ஆகிய பாடங்கள் இயற்கையை வர்ணிக்கின்றன. மைதானம் பிறந்தது, சின்ன மகளின் சின்னக் கைகள், உழைப்பும் பயிரும் ஆகிய பாடங்கள் ஆக்கச் செயற்பாட்டிற்குத் தூண்டுதல் அளிக்கின்றன - 4 இவ்வாறே ஆரம்ப பாடசாலைக் கல்விக்குரிய பாடநூல்கள் யாவுமே பெருமளவிற்கு அழுத்தும் மனனத்திற்கு இடங்கொடுத்து ஆக்கப்படவில்லை என்றே சொல்லலாம்.

அழுத்தும் மனனத்திற்கு இடங்கொடுத்துப் பாடநூல்கள் ஆக்கப்படவில்லைதான். ஆனால் கலைத்திட்ட வரையறைகளை மீறி எவரின் வற்புறுத்தல்கள் தூண்டல்களுமின்றி, ''ஒருவரின் கண்களிலும் படாமலேயே'' அழுத்தும் மனனத்திற்கு இடங் கொடுக்கின்ற போதனா முறைகள் எமது பாடசாலைகளில் அரசோச்சுகின்றன. '' ஆரம்பமட்டக் கல்விப் போதனையின் அணுகு முறை,, என ஜனாதிபதி ஆணைக்குழுவினர் குறிப்பிட்டபோதும் '' தன்னிச்சையாகவே " இயங்கும் இப்போதனா முறையை சரியாக இனங்காணத் தவறி விட்டனர் என்றே சொல்லத் தோன்றுகின்றது, உண்மையில் 1972-ம், 1981-ம் கலைத்திட்டங்கள் எதைத் திட்டமிட்ட ரீதியிற் தவிர்த்தனவோ அதுவே அலைகளையும் மீறி ஆரம்ப மட்டக் கல்வியில் ஆதிக்கம் பெற்றுள்ளது. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையே இப்போது ஆரம்பக் கல்வியின் போக்கை நிர்ணயிக்கும் பிரதான சக்தியாகி விட்டது. கலாநிதி சபா. ஜெயராஜா குறிப்பிடுவது போல ''பரீட்சைகள் மிகை ஆதிக்கம் செலுத்தும் கல்வி அமைப்புகளில் பாடநூல்களும் பரீட்சைகளுக்கு இரையாகிற நிலைதான் இங்கு நேர்ந்துள்ளது'' 5

ஓரளவிற்கு ஆண்டு இரண்டு வரையில் பிள்ளைகள் இயல்பான மனோரம்யமான ஒன்றிணைந்த கல்வியைக் கற்றாலும் பெருமளவிற்கு ஆண்டு மூன்றிலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையே பெற்றோரினதும், ஆசிரியர்களினதும், பாடசாலைகளினதும் இலட்சியமாகப் போய்விட்டது. ஆரம்ப பாடசாலைக் கல்வியின் வெற்றியை ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே கணிப்பிடும் போக்கு சமூக மட்டத்திலும் நிர்வாக மட்டத்திலும் வேரூன்றி விட்டது. எனவே வளரும் இளஞ் செடியினை ஒத்த சின்னஞ்சிறு மாணவன் பெற்றோர்களினாலும் ஆசிரியர்களினாலும் நெருக்கப்படுகின்றான். ஓர் அதிபர் கூறியது போல ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக கசக்கிப் பிழியப்படுகின்றான். இயல்பாக இருக்க வேண்டிய கல்வி நடைமுறைகள் அவனுக்குப் பாரமாகிப் போகின்றன அவன் எண்ணக் கருக்களில் தெளிவின்றியே 'மனனப் பொறிக் கிடங்கில்' வீழ்ந்து விடுகின்றான்: அன்பு - வன்பு அறம் - மறம், இலாபம் - நட்டம் என எதிர்ச் சொற்களையும் மனிதர் - மாந்தர், தொல்லை - இடையூறு வண்ணம் - நிறம் என ஒத்த கருத்துள்ள சொற்களையும் மனனஞ் செய்யத் தொடங்குகின்றான்

யாழ் மாவட்டத்தில் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையை ஒட்டிய தொழில்கள் பல்கிப் பெருகி விட்டன. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் கல்வி நிறுவனங்கள்.

'Practice makes one Perfect'

என்ற விளம்பரத்துடன் ஐந்தாம் ஆண்டு மாணவர்க்கு பயிற்சிப் பரீட்சை நடாத்தும் நிறுவனங்கள்; மாதிரிப் பரீட்சை வினா விடைகளை வெளியிடும் வெளியீட்டாளர்களென ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை நம்பித் தொழில் பார்க்கும் ஒரு கூட்டம் பெருகிவிட்டது. இத்தனை அவலங்கட்கும் சின்னஞ் சிறு பாலகர்கள் முகம் கொடுக்க வேண்டியவர்களாகி விட்டார்கள்.

இப்போது யாழ் மாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கை முழுவதிலுமேயே ஆரம்பக் கல்வியின் இலக்கு ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையே. ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் மாகாணத்தில் முதலாவதாக வரும் பிள்ளையும் அவனின் பெற்றோர்களில் ஒருவரும் யப்பானில் இருவாரகால சுற்றுப் பயணம் செய்யவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது, எனவே முதலாவதாக வரும் போட்டியில் பிள்ளைகள் மேலும் வதைக்கப்படுகிறார்கள். போதனையைவிடச் சாதனை என்பதும் முழு மனிதனாக மலரும் பருவத்துக் கல்வி என்பதும் கலைத்திட்டத்தோடு மட்டும் வரையறுக்கப்பட்டு விட்டது.

புலமைப் பரிசில் வழங்கப்படத்தான் வேண்டும். பேராசிரியர் ப. சந்திரசேகரம் கூறியதுபோல பல்லாயிரக் கணக்கான ஆற்றல் மிகுந்த, ஆனால் சமூக பொருளாதார, கலாச்சார வசதி இல்லாத மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வரப்பிரசாதமாகத்தான் உள்ளது 6 ஆனால் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை நடாத்தும் முறைதான் மாற்றப்பட வேண்டும்.

அதுவரையில் ஆரம்பக் கல்வியில் "அழுத்தும் மனனம்" பாரமாகக் கணக்கவே செய்யும்.

அடிக் குறிப்புக்கள்

1. தமிழ் — ஆண்டு 2 கல்வி வெளியீட்டுத் திணைக்களம் கொழும்பு 2 பக். - 2

2. இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை
இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பட்டது. 1990 மார்ச்சு. பக். - 45

3. மேற்படி அறிக்கை பக். 45

4. தமிழ் — ஆண்டு 5 கல்வி வெளியீட்டுத் திணைக்களம் கொழும்பு 2

5. ஜெயராஜா - சபா — 'கலைத்திட்ட இயங்கு நிலையும் பாட நூல்களும்'
கலை ஞானம் II (1981 — 1982) கல்விக் கழகம்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை பக். - 110

6. சந்திரசேகரம் - ப. — 1981-ம் ஆண்டுக் கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகள் பற்றிய ஆய்வு
மேற்படி பக். 60

நவராத்திரியின் மகிமை
- ஒரு கண்ணோட்டம்

திரு. கி. இந்திரலிங்கம்
ஆங்கில ஆசிரியர் (on Contract
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

இந்துக்கள் ஒன்பது நாட்கள் கொண்ட நவராத்திரி பண்டிகையை கொண்டாடுவார்கள். பூவும் மாலையும் தரித்து இந்துக் தமிழ்க் குழந்தைகள் பாவாடை தாவணியில் காணப்படுவர். குதூகலமாய் ஒன்பது நாட்களும் விழாக்கள் நடைபெறும். அவல், சுண்டல், இனிப்பு பரிமாறப்பட்டு இனிமை தாண்டவமாடும்.

முதல் மூன்று நாட்களும் சரஸ்வதிக்கும். அடுத்த மூன்று நாட்களும் லட்சுமிக்கும். கடைசி மூன்று நாட்களும் துர்க்கை அம்மனுக்கும் பூசை நைவேத்தியம் என்பன நடந்தேறும்.

சரஸ்வதியின் மகிமைதான் கல்வி. கல்வியில்லாத மனிதன் பிரயோசனமில்லாத மண்கட்டி. வெறும் புத்தகப் படிப்பல்ல கல்வி. அறிவும், ஆற்றலும், சிந்தனையும் கல்வியை அழகுபடுத்தி நடத்தி வைக்கும் குணசித்திரங்களாகும். கல்வி அழிவில்லாத செல்வம். பகவத்கீதை, திருக்குறள், திருவாசகம் ஆகியவற்றைப் படித்து வரும் நல்லறிவு, அவற்றைப் படியாதவனுக்குக் கிடையாது. மனித சமுதாயத்திலே கல்வியின் சிறப்பைத் தெரியப்படுத்திய ஆண்டாள் இற்றைக்கு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னேயே கூறிய திருப்பாவை' இன்னும் கல்லில் எழுதியது போல் நெஞ்சில் பதிந்துள்ளது விஞ்ஞான ரீதியான உட்கருத்தை இன்று காண்கின்றோம். ஆழ்வார்களில் ஒரு பெண் ஆண் மகனுக்கும் மேலாக கல்வியின் மகிமையில் மதித் கண்ணாகத் திகழ்கிறார் ஔவைப்பிராட்டி கிராமத்திற்கு வருவது என்றாலே அந்தக் கிராமத்திற்குப் பெருமை சிறு பராயத்திலேயே இளமைப் பருவத்தை மாற்றி கிழப்பருவம் தரும்படி கேட்டு நாட்டுக்கும் மக்களுக்கும் புகழ் தேடித் தந்தார். அவரின் பொய்யாத மொழிகள் இன்று உலகத்திற்கு எவ்வளவு புத்தியையும் அறிவையும் ஊட்டுவதாக விளங்கின்றன. இன்றைய நிலையில் இது மிகத் தெளிவாகப் புலனாகிறது. குழந்தைகள், பிள்ளைகள் பெரியோர், தாய்மார்கள், குடியை, குலத்தை, குடும்பத்தை வாழவைத்தால்தான் நாட்டில் பண்பு, நயம், வெளிச்சம், சந்தோஷம் நிலைக்கும் என்பது எல்லோரினதும் கருத்தாகும்.

லட்சுமி, செல்வத்துக்கு அதிபதி, தன் கையை ஒங்கினால் பொன் குவியும். இன்று மக்கள் பணத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, சமுதாயத்தைக் கெடுத்து விட்டார்கள். உண்மையான உழைப்புத்தான் செல்வம் அந்தச் செல்வத்தை மற்றவர்களுடன் பகிர்வதில்தான் மனிதன் உயர்கிறான். சமூக சீர்திருத்தம் என்பது இருப்பவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுப்பது ஆகும். பணம் சேகரித்து, தன்னையே பணக்காரனாக்குவது இந்தக் காலத்தின் பண்பாகி விட்டது; பணத்தைப் பெற்றவர்கள் மற்றவர்களைத் துன்புறுத்தி, பணத்திற்காக வாழ்ந்து தன்னைப் பெருமைப் படுத்துவது வாழ்க்கை அல்ல அப்படியான கீழ்த்தரமான எண்ணம் இன்று நிலைத்திருப்பது சமூகத்தையே அழிக்கும். பாரதப் பிரதமர் நேருவின் தாய், நாட்டுக்கே செல்வத்தைக் கொடுத்தார். எம், எஸ். சுப்புலக்ஷ்மி சொந்த வீட்டில் வாழ்வதில்லை. அவருக்கு வீடு இல்லை. ' நான் வீட்டைக் கொண்டு போகப் போகிறேனா ' என்பது அவரின் கருத்து' வாடகை வீட்டில் இருந்து கொண்டு, வீடுகட்டும் பணத்தை அனாதை இல்லங்களுக்கு, பாடசாலைகளுக்கு, திருப்பணிகளுக்கு எனச் செலவிடுகிறார், அவரே இலக்குமியாகத் தோற்றமளிக்கிறார். இவர்கள் தான் பூமியில் லட்சுமி கடாட்சம் பொருந்தியவர்கள். உலகத்தில் சிறந்த பெண் (1992) என்ற பட்டத்தை வென்றவரும் இவரே தான். பொருளை அழுக்கி வைத்துப் பணம் சேகரிக்கும் உலகத்தைப் பாருங்கள் இனமும் லட்சுமியை மலமாக வணங்குகிறார்கள். சி. என். அண்ணாத்துரை சொன்னார் '' உயர்ந்த கோபுரங்கள் தாழ்ந்த உள்ளங்கள் '' என்று. சில்லறை வியாபாரி, மறை மாறி பணம் சம்பாதிக்கிறான். கழுத்தில் இருக்கும் பவுண் சங்கிலி தெரிய. மேல் அங்கி இறுத்துபடி அதைக்காட்டுகிறான் உலகம் இப்படியான மனிதரைப் போற்றுகிறது. இது முப்பொருந்தேவி லட்சுமியை வணங்கிய பலனா அல்லது' கேனிச் கூத்தா ?

வீரம் படைத்தவள் பெண். துர்க்கையின் வடிவமாக திகழ்கிறாள். பெண் தங்கள் வைராக்கியத் தாலே சாதிக்கும் தன்மை உள்ளவள் என்பது சரித்திரம் கண்ட உண்மை. எத்தனை பெண்கள் வீரத்தைக் கையாண்டார்கள்! பிரான்ஸ் நாட்டிலே ஒரு ஜோன் ஒப் ஆர்க் (Joan of Arc). இந்திய சுதந்திரத்திற்காகத் தம் உயிரைத் தியாகம் செய்தார்கள் எத்தனையோ பெண்கள். காந்தி மகான் தென் ஆபிரிக்காவில் இருந்து கப்பலில் இந்தியா வரும்போது " எத்தனையோ பெண்கள் நாட்டின் சுதந்திரத்திற்காக உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்தார்கள். கடலில் தள்ளிவிட்டுத்தான் நான் இங்கு வந்தேன் " என்று இந்தியா வந்ததும் கூறினார். சரோஜினி நாயுடு, விஜயலட்சுமி பண்டித் தங்கள் கவுடத்தைப் பார்க்காமல் நாட்டிற்காகப் பாடுபட்டார்கள். காரைக்காலம்மையார் தன் கணவர் தன்னை விட்டுவிட்டு வேறு பெண்ணை மணந்தார் என்று கேள்விப்பட்டதும், தலையால் நடந்து சிவபதம் அடைந்தார். வைராக்கியமுடனும் தன்னம்பிக்கையுடனும் செயற்பட்டார். இப்படியான எத்தனை பெண்களை நாம் கண்டுவிட்டோம். இங்கிலாந்தின் முன்னால் பிரதமர் மாக்கிரெட் தட்சர். இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் கோல்டா மேயர், பாரதத்தின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி ஆகியோர் ஆண்களிலும் பார்க்க தீர்க்க தரிசனத்துடனும் தன்னம்பிக்கையுடனும் செயல்பட்டார்கள். மௌன்பேற்றன் பிரபுவின் (இந்தியாவின் கடைசி ஆங்கிலேய ஆளுநர்) மனைவி தன் உயிலில் எழுதி வைத்ததாவது " எனது கணவன் ஏழு கடலுக்கும் கடற்படைத் தலைவனாக இருந்து, பின்புதான் இந்திய உபகண்டத்தின் ஆளுநராகப் பதவி ஏற்றார். தன் சொத்தைப் பொது உடைமையாக்கி விட்டு, தான் இறந்ததும் தன் உடல் கடலுக்கே சொந்தம் " என்பதாகும். அதன்படி அவர் இறந்ததும், பெரிய போர்க் கப்பலில் கொண்டு சென்று இறுதி மரியாதைக்குப் பின் கடலில் போட்டனர். இப்படி வல்லமை பொருந்திய திடகாத்திரமான தாய்க்குலம் என்றும் புகழுடன் வாழ்வார்கள். ஏன் இப்பொழுது எங்கள் கண்முன்னால் எத்தனை எத்தனை ஞான சௌந்தரிகள் கொள்கைக்காகத் தம்மைத் தியாகம் செய்கிறார்கள். இப்படிப்பட்ட சக்திதான் துர்க்கையின் வடிவமாகும்.

மனிதனுக்கு விடாமுயற்சியும் திடசித்தனையும் திறம்படச் செயற்பட வேண்டும். நவராத்திரி என்பது இன்பமாக ஒன்பது நாட்களையும் தேவாரம் பாடி, உணவு உண்டு களிப்பதல்ல. சக்தி வடிவமாய் கல்வி, பணம், ஒர்மம் இவை ஒன்று சேர்ந்து நாட்டுக்குப் பல விதத்திலும் செயற்படுவதுதான் இந்த நவராத்திரியின் மகிமை. எங்கள் குறைகள் எங்களிடத்தில் தான் உண்டு. விதியில் இல்லை. விதி விதி என்றால் சதியாய் முடிந்து விடும் ஆங்கிலக் கவி ஷேக்ஸ்பியர் கூறுகின்றார் " பிழை எங்கள் கிரகத்தில் இல்லை. எங்களிடம்தான் தங்கியுள்ளது ". எனென்றால் நாங்கள் பலவீனர்கள்" (Fault lies not in our stars. But in ourselves. For we are weaklings.)

எங்களுக்குள் இருக்கும் மூன்று சக்திகளையும் பயன்படுத்தினால் நல்வாழ்வு கிட்டும். நல்வழியில் வாழ்ந்து நல்லெண்ணத்துடனும் திடகாத்திரத்துடனும் பக்குவ நிலையுடனும் மக்களின் தன்மைக்குப் பாடுபடல் வேண்டும். பிள்ளையார் தன் நீண்ட தும்பிக்கையில் மோதகத்துடன் மக்களுக்கு நல்ல எண்ணம் ஊட்டி வைக்கும் தெய்வம். எல்லாச் சக்தியையும் கைக்கொண்டு பிள்ளையார் துணையுடன் நாம் செயற்பட வேண்டும். எங்களிடமும் ஒரு பெரிய மேலோங்கும் கை உள்ளது. அந்தக் கையுடன் செயற்பட்டால் எங்கள் குறைகள் தீரும்; பலம் ஓங்கும்; வெற்றி கிட்டும்; அறிவு வளரும்; செல்வங் கொழிக்கும். வீரம் வெற்றி தரும். சுபீட்சமான எதிர்காலத்தை உண்டாக்கலாம். அந்தக் கை எது என்று கேட்கிறீர்களா ? அந்தக் கைதான் ஐந்து எழுத்துள்ள கை — நம்பிக்கை.

நான் கற்கிறேன் என்று கூறுவதைக் காட்டிலும் நான் அனுபவங்களைப் பெறுகிறேன் என்று குழந்தை கூறும்போதுதான் பயனுள்ள கல்வியை அது பெறுகிறது.

— ஜோன் டீவி —

THE ROLE OF LANGUAGE IN THE DEVELOPMENT OF SOCIETY

Mr. C. Pararajasingam
Teacher,
Uduppiddy Girls' College.

Languages are born equal but they do not develop equally. The structural endowment for languages for their survival and growth is equal in all languages. The difference in development of a language are due to sociocultural and political factors. These differences are reflected in the lexican, style and discourse forms of the languages and not in their grammar because all the languages have certain universal structural characteristics.

A developing language is thus a language of a developing society. The characteristics of a language can thus be defined in terms of the social characteristics of the society and not in the terms of the grammatical characteristics. It means that the development of the society is a necessary condition for the development of its language.

The development of a society can also be sought through an alien language. This is actually done in many developing countries by using a foreign language like English, in the domains of development and power like science and technology, commerce, law and administration. It is this foreign language that gives power and resources for the development of society. It must have control over such power and resources.

So planning for language development necessarily implies planning for a non-discriminatory society by equalising the power and resources among the speakers oe different languages. Language development is thus not merely the case of the language having and building up more linguistic resources like new technical terms referencf. tools etc and a symbolic status as a national language but also a case of the Language providing its speakers more economic resources and political power. But in language planning in many developing countries attention is paid to the former with no concern for the latter.

Further, there is a tendency among the people who are in the majority and dominant in a multi-national country to impose their language upon the population as a whole by develorising, ignoring or eliminating the other languages. This way of adoption is very common in the history of the world, leading of the extinction of minority and regional languages.

Thus language planning can be tool for discrimination and control by the majority, but it can also be used as a potentially revolutionary tool by minorities. so the result of the above kind of language planning is artificial and spurious development of the language and for the society and the country.

LOVE IS LIFE, HATRED IS DEATH

Miss. I. Thushjanthi
Old Student,
Uduippiddy Girls' College.

Man is a rational being. As such, he is bound to act in a rational or thoughtful way both in his personal life as well as in his relationship with his neighbours, friends, relations and the society in which he moves. This is a simple equation well tutored in our classrooms and at home by our elders. The relationship of man has always been a problem ever since Adam and Eve.

If we scale the pages of history, we see copious examples of our relationship in political, economic, social, religious or cultural life of how man has built up a relationship among themselves If we analyse still more closely, this relationship can be broadly divided into two categories. of love, brotherliness. compassion and the other jealousy, hatred, enemity leading to quarrel and war in the international plane.

All religions teach the good things of life and no religion teaches anything detrimental to man. Great many of us say that we are all followers of one religion or another.

History of national growth down to many centuries in all hemispheres has been noteworthy in the relationship that have ironically glorified, very often without reason one country at the downright expense of another. Some stoically built purely on conquest or wars, that is, might is right while others more diplomatically stifled and crippled other nations economically by trade and business. This naturally led to competition and fiercely followed by cut - throat competition of survival of the fittest - whicb is on physical strength and not on moral strength.

If we again follow the course of mans history, say from the time of the Roman Empire, or Greek Empire we shall see that wars occupied a greater part of human mind in bringing economic betterment by subjugating another country or on jealousy and hatred as how Julius Ceasar was murdered. Tyrants ruled their countries more through physical presence than through active participation of the people.

Down to the present age, we thus see through recorded history that downright might succeeded without caring at all for the man in his spiritual sphere. Within this century the world has witnessed two global wars and the achievements in science towards the production of destructive weapons that could even wipe out the entire human race.

All these implies that greed and hatred can only bring utter destruction. Then what is the remedy? This brings us to the opposite of hatred, namely Love. Love of man and God is one. You cannot love God and practice hatred of men. As we know. love is universal. It is a single unifying force embracing all mankind irrespective of religion, caste, creed or class. Most important is that Universalism of man is dependent on this single fact of love the all pervading force of mind and heart that synchronise the human spirit to a perennial sprout of human kindness and love. It embraces many other virtues that flows from it, namely justice, fairplay brotherliness and most important, service to man. If we say love of God then

we must realise that God's work in this world is done by man himself. Love is all pervading, sincere, true, honest and pregnant with all goodness that we can think of. It breeds a spirit that is felt and not seen of the great force of spirit and spiritualism more potent or powerful than the whole force of might combined. As one great man put it, service to man is his only religion. Love gives perfection to growth and permanency in action. Swami Vivekanantha emarked thus, " Love is life and hatred is death ".

Today the countries have come to realise the noble path of spiritualism the most of all conquerring force that can unify man and bring law, order and progress in this war - torn rdisplay of arrogance and greed. The world body the United Nations have stressed that all problems faciug countries should be solved by dialogues, conferences and peaceful discussion to sought out their long - standing problems and even adhoc problems concerning them. Hatred breeds hatred while love unifies man. This is the true way to the concept of peaceful co - existence of all countries.

Love is therefore an electrifying force, that unites men to solve their problems and leads to the establishment of a new world order of peace, stability, contentment, cordiality and to the brotherhood of man.

Remember that the great crime is to compromise with injustice and wrong.

— Subash Chandra Bose —

நானும் எனது ரீவியும்

திரு. சோ. பத்மநாதன்
ஆங்கில விரிவுரையாளர்,
பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி.

என்றும் புன்னகை தவழும் முகங்கள்
சுருக்கம் சிறிதும் விழாத தோல்கள்
குரல் வளம் படைத்த பாடகர்
பொய்யாக் காதலர்,
அற்புத உணவு வகைகள்
எல்லா நோயும் தீர்க்கும்
மாய மருந்து வில்லைகள்
வாழ்வில் வெற்றி தரும்
பெறற்கரிய தாயத்துக்கள்!—
எல்லாம் எனது T.V. திரையில்!
எண்டைகள் — யாரும் சாவதில்லை!
மங்கள முடிவுகள் மகோன்னத பொய்கள்!
வாழ்வின் கசக்கும் அனுபவம் ஏதும்
வராது வெட்டிய செய்திச் சுருள்கள்!

முகத்துக் கொப்பனை நிபுணன் ஒருவன்!
சுறைகளை வெட்டிக் கழிக்க ஓர் "எடிற்றர்"!
அடிபட்டு விழ ஒரு ஸ்ரன்ற் நடிகன்!
எனக்கென்றே காத்திருப்பாராயின் —
எல்லாம் T. V காட்டுமாப் போல
வாய்க்கு மாயின்? ஆகா, வாழ்க்கை
எப்படி இன்பமாக இருக்கும்!

(ஆண்டு 10 ஆங்கில பாடநூலில் உள்ள கவிதையின் மொழிபெயர்ப்பு)

இன்பம் எது?

திரு. கா. நீலகண்டன்
உடுப்பிட்டி ஆசிரியர்

கண்

கடலி னலைகள் மோதி மீளக் காண்ப தின்பம்
கரையிற் சிறுவர் கூடி யாடக் காண்ப தின்பம்
படகு வள்ளம் அலையிற் றவழப் பார்ப்ப தின்பம்
பரந்த வானம் பரவை தழுவப் பார்ப்ப தின்பம்

நில வானிற் கோல மதியம் நிகரி லின்பம்
நிறைய மீன்கள் சிமிட்டி யங்கு நிற்ப தின்பம்
கோல மதியின் கிரணத் திலங்கு தளிர்க ளின்பம்
கொத்து வெள்ளைத் தவள மலர்கள் கொள்ளை யின்பம்

காது

பசிய சோலைக் குயிலின் கானம் பருக லின்பம்
பயிலும் யாழின் குழலி னோசை பயக்கு மின்பம்
கசிய வுளத்தை யுருக்கும் பண்ணிற் கலப்ப தின்பம்
களங்க மில்லாக் குழவி மழலை கணக்கி லின்பம்

மூக்கு

புத்தம் புதிய மலரின் வாசம் பொருத்து மின்பம்
புகலு மகிலுங் களபக் குழம்பும் புணர்க்கு மின்பம்
அத்தர் புனுகு சவ்வா தியற்றின் கந்த மின்பம்
அகத்துக் குரியாள் குழலி னாற்றம் அரியவின்பம்

வாய்

பாங்குக் கமையற் பதார்த்த வகைகள் நல்குமின்பம்
பாலுந் தேனும் பழமும் பாகும் படைக்கு மின்பம்
ஓங்கு மொழுக்க சீல ரூயர்வை யுரைப்ப தின்பம்
ஒப்பில் தமிழின் கவிதை நயத்தை யுணர்த்த லின்பம்

காவிற் புகுந்த தென்றல் தழுவக் கனியு மின்பம்
கருணையன்னை யுச்சி மோக்கக் கதிக்கு மின்பம்
ஆவி கலந்து காத லிருவர் அணைத லின்பம்
அரிய செல்வ மகவைக் கட்டி யணைத்த லின்பம்

இன்ப மிவைகளின்ப மிவைக ளென்று மின்பம்
என்று கருதி யின்ப மயக்கி லழுந்தி யெங்கள்
என்பு மற்சை வரையு ம::தா யுற்றோ முண்மை
யின்ப மதுதா னேதென் றுணரா துள்ளோம்

இன்ப மிவைக ளென்று நிலைத்து நிற்ப தாமோ ?
இந்த வுடல மழியி லிவைக ளென்ன வாமோ ?
ஒன்ப தொன்று வாயிற் குடிலி னுள்ளி ருந்தே
ஒடி யுலவு முயிர்க்கு வாய்த்த வின்ப மேதோ ?

இந்த வுடலைத் தந்து பிறவி யெடுக்க வைத்தான்
இயைந்த மயக்கைக் கெடுக்கும் வழியு மடுக்க வைத்தான்
அந்த இறைவன் வடிவை நிதமு மின்ப ஏதாய்
அமைந்த அவற்றிற் கண்டு கொள்ளல் இணையி லின்பம்

எங்கு மவன்றன் வடிவைக் கண்டு கொள்ள லின்பம்
எல்லா மவனே யென்ப தறிந்து போற்ற லின்பம்
எங்கு மோடி யாடித் தேடி யலைந்தி டாதெம்
இதய வெளியி லவனைக் காண லிணையி லின்பம்.

தாய்மை

திரு. ஆ இந்திரலிங்கம்
B. Sc., Dip - in - Ed.
ஆசிரியர், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

பெற்றவள் பெருமையினைப்
பேதைகள் அறிவதில்லை
மற்றவள் செய்ததெல்லாம்
மனங்களில் கொள்வதில்லை

கருவினில் சுமக்கையிலும்
துயிலாமல் காக்கையிலும்
நோயேதும் காணற்கால்
கண்பனிக் தழுகையிலும்

தாயினைப் போலெவரும்
தரணியில் கிடைப்பாரோ
தன் நலத்தைப் பேணாமல்
எந் நலத்தை பேணுவரோ

கோயில் குளமெல்லாம்
இறையைத் தேடுகிறார்
கண்கண்ட தெய்வமகள்
வீட்டில் அழுகின்றாள்

எந்நாளில் இவர் விழிப்பார்
தெய்வமதைப் புரிந்திடுவார்
அருளாசி அவள் தந்தால்
அகிலமெலாம் வசமாமே

ஆருயிர் அன்னையவள்
அகுதி ஆகுமவள் — அன்னை
அகம் மலர்ந்தால்
எனியே வையகம்மா






ஒளிவிழா '92



வாணிவிழா



வாணிவிழா



மாணவர்கள்
அன்றும் இன்றும்

எமது மாணவ சமுதாயம் அன்றும் இன்றும் எந்தகைய மாறுபாடுகளைக் கண்டுள்ளது என்பது பற்றி பல்துறை சார்ந்த, சமூகப் பிரஞ்ஞையுள்ள பெரியோர் சிலருடன் எமது மலருக்காக நடந்த கலந்துரையாடல்.....

எமது பிரதேசத்தில் ஆரம்பத்தில் குரு சிஷ்ய முறையில் ஒரு கட்டுக் கோப்பு அமைவுக்குள் ஆரம்பித்த கல்வி முறையானது நாட்டில் மேலைத் தேசத்தவரது ஆதிக்கத்தினாலும், நாடு சுதந்திரம் பெற்ற பின் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகள் காரணமாகவும் காலத்திற்குக் காலம் பலவிதமான மாற்றங்களை அடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் மாணவரது அன்றைய நிலையிலும் இன்றைய நிலையிலும் நாம் பல வேறுபாடுகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்த வகையில் மாணவர்கள் மத்தியில் அறிவு, ஒழுக்கம், கலாச்சாரம் போன்ற துறைகளில் காணப்படும் நிறை, குறைகள் எவை என்பது பற்றியும் நிறை வினை மேம்படுத்தவும், குறைவினை நிவர்த்தி செய்யவும் எடுக்கக்கூடிய முயற்சிகள் எவை என்பது பற்றியும் பல துறை சார் அறிவுடையோர் மத்தியில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் கருத்துக்களை முன் வைக்கிறோம்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் திரு ந. அனந்தராஜ் அவர்கள் அன்றைய பாடசாலை நிர்வாகத்தினையும் இன்றைய பாடசாலை நிர்வாகத்தினையும் தெளிவுபடுத்தி பாடசாலை நிர்வாகி என்ற ரீதியில் மாணவ சமுதாயத்தில் இனங்கண்ட மாற்றங்களையும் நிர்வாகத்திலுள்ள நடைமுறைச் சிக்கல்களையும் பல்துறைகளிலும் மாணவர்கள் முன்னேற்றம் அடைவதற்கு எடுக்கவேண்டிய முயற்சிகளையும் எடுத்துக் கூறுகின்றார்.

எமது கல்வி வரலாற்றை 1931 க்கு முன், 1951 — 1960, 1960 க்குப் பின் என மூன்று கட்டங்களாகப் பிரித்தால், 1931 க்கு முன் பிரித்தானியர் காலத்தில் 1910-ம் ஆண்டளவில் மொத்த சனத்தொகையில் 4% ஆனவரே கல்வியறிவுடையோராக இருந்தனர், வசதி, மதம். சாதி என்ற அடிப்படையிலேயே கல்விக்கான வாய்ப்பு அந்தக் காலத்தில் இருந்தது. 1931 இல் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டதை அடுத்து கல்வி கற்றோரின் தொகை அதிகரிக்கலாயிற்று. 1945 ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் இலவசக் கல்வித் திட்டத்தையும் சுயமொழி மூலத்தையும் அடுத்து மேலும் கல்வி கற்போர் தொகை அதிகரித்தது. 1960 இன் பின் பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து கல்வி கற்போர் தொகை கூடியது. முன்னர் பாடசாலைகளுக்கிடையே மத ரீதியான போட்டி இருந்ததெனின். பாடசாலைகள் தேசிய மயமானதன் பின் மிஷனரிப் பாடசாலைகளுக்கும் அரச பாடசாலைகளுக்கும் இடையில் போட்டி காணப்பட்டது.

அன்று பாடசாலைகள் மிஷனரிமாரின் நிர்வாகத்தின் கீழ் இருந்தபோது மாணவரின் கல்வி, ஒழுக்கம் ஆகிய விடயங்களில் அதிபர், ஆசிரியர் மிக உயர்க்கமாகச் செயற்பட்டார்கள். பாடசாலைகளுக்கிடையே முன்னேற்ற நடவடிக்கைகளில் போட்டி காணப்பட்டது, ஆசிரியர்கள் கடமையுணர்வுடன் செயற்பட்டார்கள். திறமை மிக்க அதிபர், ஆசிரியர்கள் தலைமைப் பீடத்தினால் கௌரவிக்கப்பட்டுப் பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டது. அதிகாரிகள் தலையிடுவதற்கு அஞ்சும் அளவிற்குப் பாடசாலை நிர்வாக ஒழுங்குகள் காணப்பட்டன. கல்வி கற்கும் மாணவர்களின் தொகை குறைவாகவும் அதிலும் வசதி படைத்த மாணவர்களே கூடுதலாகவும் காணப்பட்டது. பாடசாலைப் புற நிகழ்வுகளும் மாணவர்களுக்குக் குறைவாகவே இருந்தன. இதனால் மாணவரிடையே கட்டுப்பாடான ஒரு கல்வி முறையை வளர்ப்பதற்கு வசதி காணப்பட்டது.

இன்று பாடசாலைகளில் மாணவர் தொகை கூடுதலாக உள்ளது: (85% இலும் கூடுதலாக உள்ளது.) கல்வி அமைச்சின் கட்டளைகளுக்கு இணங்கத் திணைக்களங்களும். திணைக்கள அதிகாரிகளின் கட்டளைகளுக் கிணங்க அதிபர், ஆசிரியர்களும் செயலாற்ற வேண்டியுள்ளது. அரசியற் சூழ்நிலைகள் மாற்றங்களுக்கேற்ப குறுகிய காலப் பகுதிக்குள்ளேயே பாடத் திட்டங்கள், மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவை நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்கும் குழப்ப நிலைமையை ஏற்படுத்துகின்றன, 1972-ம் ஆண்டின் பின் உயர்கல்வி மாணவருக்குத் தரப்படுத்தல் முறை கோண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து தனிநபர் போட்டி காரணமாக, மேலதிகக் கல்வி வசதி பெற வேண்டுமென்ற உணர்வு ஏற்பட, இதனை மையமாகக் கொண்டி. உருவாக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள் இன்று பாலர் வகுப்பிலிருந்தே நடாத்தப்படுவதால் மாணவர்களின் பார்வை அங்கும் திசை திருப்பப்பட்டது, பாடசாலைகளுக்கிடையே மதரீதியான போட்டி, அரச பாடசாலை, மிஷன் பாடசாலை என்ற போட்டி என்றிருந்தது மாறி இன்று பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிறுவனங்களுக் குமிடையே போட்டி ஏற்படலானது. தனியார் கல்வி நிறுவனம், மாணவர்கள் என பாடசாலைக்கு இரு வழியில் நிர்வாகச் சிக்கல் ஏற்பட்டது. பாடசாலையில் தேவையான கல்வி வளம் இல்லாதபோது மாணவர் தனியார் கல்வி நிறுவனத்தை நாடுகின்றனர். பாடசாலைச் சமூகத்தைப் புறக்கணிக்கின்றனர். எனினும் மாணவரின் ஆளுமை வளர்ச்சி முற்றிலுமாகப் பாடசாலையிலேயே தங்கியுள்ளது என்பது மறுக்க முடியாததாகும் எல்லா மாணவர்களும் கல்வியைப் பெறும் நோக்குடனேயே தனியார் கல்வி நிறுவனங்களை நாடிச் செல்கின்றனரா என்ற கேள்வி இன்னொரு புறமானது

அடுத்ததாகக் கல்வியை நாடி மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஆசிரிய ஆளணி பற்றாக்குறை ஆசிரியர்களிடையே கடமையுணர்வும், விசுவாசமும் குறைந்தமை என்பனவும் அதில் குறிப்பிட வேண்டியவை. ஆசிரியர்களின் வேதனக் குறைவால், பொருளாதாரச் சிக்கலை சமாளிக்க வேறு தொழிலையும் செய்யவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகின்றனர். இதனால் தமது கடமைக்கு மேலதிக நேரத்தைச் செலவிட முடியாதுள்ளனர். அதிபரின் நடவடிக்கைச் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவரால் நல்லாசிரியரையும் பொறுப்பற்ற ஆசிரியரையும் இனம் பிரிக்கவியலாது. கல்வித் திணைக்கள மேற்பார்வை போதுமானதல்ல. ஒரு நாளில் நடத்தப்படுகின்ற மேற்பார்வை மூலம் பெறப்படும் முடிவுகள் கரியானவையாக அமைதல் அரிது. ஆசிரியருக்கென ஒரு ஒழுக்கக் கோவை இல்லாமை ஒரு குறையாகும். அதிபர், ஆசிரியர் இடமாற்றங்களும் ஆசிரியர்கள் தம் கடமையுணர்வைத் தவிர்க்க உதவுகிறது இவற்றோடு காலத்திற்குக் காலம் நடைபெறும் பாடசாலைப் புறநிகழ்வுகள், அவ்வப் பாடங்களுக்குரிய சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசிரியரில்லாமை, அரசியற் சூழ்நிலைகளால் ஏற்பட்டுள்ள சக்தி நெருக்கடி, உணவு உடை. உபகரணப் பற்றாக்குறை என்பனவெல்லாம் மாணவர்களை முன்னேற்ற நிலைக்கு இட்டுச்செல்ல நிர்வாகத்திற்கு இடையூறாக அமைபவையாகும்.

ஆயினும் மாணவரிடையே ஒற்றுமை உணர்வையும், பாடசாலைப் பற்றையும். கல்வியின் மேன்மையையும். ஆளுமை வளர்ச்சியையும் வலியுறுத்துவதன் மூலமும், மாணவரின் தகைமைகளை இனம் கண்டு வளர்ப்பதன் மூலமும், மாணவரின் முன்னேற்றத்திற்த எந்த வழிகளிலெல்லாம் உதவிகளைப் பெறலாமோ அவற்றையெல்லாம் கையாள்வதன் மூலமும் அதிபர், ஆசிரியர், கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரின் மனப்பூர்வமான உழைப்பின் மூலமும் இன்றைய மாணவர்களை எதிர்கால நற்பிரஜைகளாக உருவாக்கலாம். உருவாக்க வேண்டும்.

பலாலி ஆசிரிய கலாசாலை விஞ்ஞான விரிவுரையாளரும், பிரபல தாவரவியல் ஆசிரியருமான திரு S. குணசீலன் அவர்கள் தனது கருத்துக்களைத் தெரிவிக்கும்போது.

பாடசாலைகளில் மேற்பார்வையின்போது மாணவர்களை மதிப்பிடல் மூலமே சரியான முடிவுகளைப் பெறமுடியுமெனவும், பாடசாலைகளிடையே உள்ள வர்க்க பேதங்களும் மாணவரிடையே உயர்வு, தாழ்வுச் சிக்கல்களை அளிக்குமெனவும் குறிப்பிட்டார்,

மாணவர்களுடைய அன்றைய இன்றைய நிலைகளை ஒப்பிடும்போது, இன்று சமூக எதிர்பார்ப்பு மாறியுள்ளது. அறிவுக்காக கல்வி என்றில்லாது பணத்தையும், பதவியையும் பெறும் கருவியாகக் கல்வி மாறியது' இன்று பணம் தேட வெளிநாட்டு வேலை வாய்ப்பு முதலான பல வழிகளிருப்பதால், சமூகத்தில் கல்விக்கு மதிப்பில்லை. அண்மையில் ஒரு பெரியார் தனது பேச்சில் ''நான் திரும்பவும் மாணவனாக விரும்பவில்லை'' எனக் குறிப்பிட்டார். இது மாணவ சமுதாயம் இன்று அடைந்துள்ள மாற்றத்தைக் கோடிட்டுக் காட்டுவதாகும் முன்னர் பாடசாலையை விட்டு விலகும் கடைசி நாள் கவலையான நாளாகவே எமக்கெல்லோருக்கும் இருக்கும். ஆனால் இன்று மாணவர் பாடசாலையை விட்டு விலகும்போது இழப்பாகக், கவலையாகக்

கொள்வதில்லை. இன்று மாணவர்கள் பெற்றோருக்கு கட்டுப்பட விரும்பவில்லை. மாறாகப் பெற்றோர் பிள்ளைகளுக்குப் பயப்படும் ஒரு நிலை வந்துள்ளது. இம் மாற்றங்களுக்குப் பின்வருவன காரணிகளாகலாம். இன்றைய மாணவரின் அறிவு விருத்தி கூடுதலாக உள்ளது. அதற்கேற்ப செயற்பட பெரியவர்கள் அவர்களுக்கு இடமளிப்பதில்லை. பரீட்சைப் புள்ளிகளுக்கு அளிக்கப்படும் மதிப்பு மாணவர்களிடையே உள்ள கலைகள் முதலாய ஏனைய திறன்களுக்கும் ஆற்றல்களுக்கும் அளிக்கப்படுவதில்லை. மாணவர்களை அளக்கின்ற அளவு கோல்களாக பரீட்சைப் புள்ளிகளே கொள்ளப்படுகின்றன. இதனால் அவர்களிடையே மன விரக்தி உருவாகிறது. இன்று பொதுவாக பெண்களே ஆண்களைவிட ஆளுமை விருத்தி கூடியவர்களாயுள்ளனர். கணிப்பின் மையின் விரக்தியே இதற்குக் காரணமாயிருக்கலாம். மாணவரிடையேயான இத்தகைய விரக்தி நிலைமைகளை நிவர்த்திக்க எல்லோரும் இணைந்து செயற்பட வேண்டியதவசியம். கல்வி வியாபாரமாவதைத் தடுத்தல் வேண்டும். பெற்றோரைப் பாடசாலைகளின் செயற்பாடுகளில் இணைத்தல் வேண்டும். ஆசிரியர்கள் தமது பொறுப்புணர்ந்து. வழிகாட்டிகளாகவும் முன்மாதிரியாகவும் நடத்தல் வேண்டும்.

இன்று விஞ்ஞானம் பல துறைகளிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆனால் எமது மாணவர் மத்தியில் விஞ்ஞான மன வளர்ச்சியும், ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் ஏன் .இன்னும் மேலை நாடுகள் போன்று இங்கும் எமது சூழல் வளங்களைப் பயன்படுத்தும் வகையில் ஏற்படவில்லை ? என்ற வினாவிற்கு அவர் விளக்கமளிக்கிறார்.

மேலை நாடுகளில் கற்றலை வளப்படுத்தும் கற்பித்தல் சாதனங்கள் பல லட்சங்களைச் கொண்டு ஆக்கப்படுகின்றன. இவை தினமும் மாணவருடைய சிந்தனையைத் தூண்டுகின்றன. சிந்தனை வளர அது செயற்பாடாகின்றது. செயற்பாட்டின் விளைவு ஆக்கபூர்வமான கண்டு பிடிப்பாகும். ஆனால் எமது நாட்டின் பொருளாதாரப் பற்றாக்குறை, வகுப்பறைக் கற்றலைத் தொழில் நுட்ப வசதியுடன் வளம்படுத்த முடியாது தடுக்கின்றது. தொழில்நுட்ப வசதியின்மையால் மாணவர் எண்ணக்கருக்கள் செயல் வடிவம் பெற முடியாதுள்ளது. அத்துடன் இங்கு நூற் கல்விக்கு முதலிடம் கொடுப்பதும் ஒரு குறையாக உள்ளது. மாணவருடைய றிவு வளரும் அதே வேளை திறன்களும் செயற்பாடும் இக் கல்வியால் குறைக்கப்படுகிறது. எமது நாட்டைப் பொறுத்தவரை ஆராய்ச்சி செய்து படித்துப் பட்டம் பெற்ற புத்திஜீவிகள் வாழ வசதிதேடி வெளியேறுவதும், ஆராய்ச்சிகளை வழிப்படுத்தும் திறமையுள்ள தலைமைத்துவம் அருமையாயிருப்பதும் ஆராய்ச்சி நோக்குடைய அறிவு ஜீவிகள் பற்றாக்குறையாயிருப்பதும் எமது சூழல் வளங்களைப் பயனுள்ளதாக மாற்ற முடியாமைக்கு அடிப்படைக் காரணமாகும். அது மட்டுமல்ல மாணவர்களின் மன முறிவும், ஆய்வுகூட வசதிகள் இல்லாமையும், ஆசிரியர்கள் முழுத்திறனுடன் செயற்படாமையும் ஓர் காரணமாக அமைகிறது.

இங்கு அருமையாயுள்ள ஆய்வுகூட வளங்களை மையப்படுத்தி மாணவர்களைத் தாமாகப் பரிசோதனைகள் செய்ய வாய்ப்பளிக்க வேண்டும். அவர்களுடைய சிந்தனையும், செயற்பாடுகளும் வளரும் வகையில் ஆசிரியர்களும், கல்வி ஆலோசகரும் தூண்டிகளாக இருந்து வழிகாட்ட வேண்டும். பாடசாலைகளும் ஏனைய கல்விக் கூடங்களும் வெறும் ஏட்டுக் கல்வியை அளிக்கும் இடமாக மட்டும் அமையாது சிறு தொழிற்சாலைகள் என்ற எண்ணம் உருவாகக் கூடியவாறு மாற்றப்பட வேண்டும் அப்போதுதான் எமது மாணவர்களிடம் மன வளர்ச்சிபும் எமது வளங்களைப் பயனுள்ளதாக மாற்றக்கூடிய நிலையும் உருவாகும். விஞ்ஞான பாடம் எந்த வகுப்பில் ஆரம்பிக்கின்றதோ அப்போதிருந்தே மாணவர்கள் சிறு பரிசோதனைகளைச் சுயமாகச் செய்து விளக்கமளிக்கக் கூடிய ஆற்றலை வளர்க்க வேண்டும். மாணவர்களில் மிகச் சிறிய சதவீதத்தினரே உயர்கல்வி வாய்ப்பைப் பெறுகின்றனர். ஏனைய, பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களை அழைத்து தனித்தனி மாணவர் ஒவ்வொருவருடைய ஆற்றலும் ஆளுமையும் வளருவதற்கு வழி செய்யவேண்டும். தொழில்நுட்பத்திறன் படைத்தோரை அழைத்து அறிவினையும் விளக்கங்களையும் பெறலாம். வளங்களை ஓரிடத்தில் சேர்த்து இரண்டு அல்லது மூன்று பாடசாலைகளுடைய செயற் திட்டங்களை அப் பாடசாலை ஆசிரியர்கள் உரிய ஆலோசகர்களிடம் ஆலோசனைகள் பெற்று வழி நடத்தலாம். சமூகத்திலுள்ள அவ்வத்துறை வல்லவர்களுடைய அறிவுரைகளையும் ஒத்துழைப்புகளையும் பெறவேண்டும் இவ்வாறான செயற்திட்டங்களையும், கருத்தரங்குகளையும் ஒழுங்கு செய்வதற்கும் நடத்துவதற்கும் என்னாலான உதவிகளை வழங்க எப்போதும் தயாராயுள்ளேன்.

உடுப்பிட்டி சேகரப் போதகராய்ப் பணி செய்யும் வண A V. யேசுதாசன் அடிகளார் அவர்கள் மாணவர் மத்தியில் சமயம், தன்னம்பிக்கை ஒழுக்க நெறிகளை வளர்ப்பதற்கு அன்றும் இன்றும் வழிகாட்டுகின்றமையைக் குறிப்பிட்டு இன்றைய மாணவர்களின் தளர்வு நிலையைப் போக்குதற்கு வழிமுறைகளையும் தெரிவிக்கிறார்.

அன்று பெரும்பாலான கல்வி ஸ்தாபனங்களும் மத ரீதியான சபைகளால் நடாத்தப்பட்டன. மாணவர்கள் ஒழுங்கு முறையான கல்வியைப் பெற்றால் அவர்களுக்கு நல்ல ஒரு எதிர்காலம் உண்டு என்பது தெளிவுபடுத்தப்பட்டது. தலைமைப் பீடத்தினால் கட்டுப்பாடும், கடமையுணர்வும் மாணவர்கள் மத்தியில் வளர்க்கப்பட்ட அதே நேரத்தில் மாணவர்களின் அடிப்படைத் தகுதி நிலைமைகள் தனித்தனி இனங்காணப் பட்டு உதவி, அன்பு, ஆதரவு நல்ல முறையில் வழங்கப்பட்டது. மாணவர் தொகை அந்த நேரத்திற் குறைவாகவும் இருந்தமையாலும் சமயம், கல்வி தவிர்ந்த புற வேலைகள் குறைவாகவும் இருந்த காரணத்தினால் தன்னம்பிக்கையை வளர்த்து மாணவர்களைச் சிறப்பாக உருவாக்குவதற்கு அன்று மாணவர்களுக்குச் சமயம் உறுதுணையாக அமைந்தது.

இன்று பாடசாலைகளில் மத போதனைகளுக்கும் அறிவுரைகளுக்கும், அதிக வசதியில்லாததோடு மாணவர் தொகையும், அவர்கள் செயற்பாடுகளும் விரிவடைந்துள்ளன. சூழ் நிலைகள் மாணவர் மத்தியில் நம்பிக்கையற்ற ஒரு எதிர்காலத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்துள்ளமை அவர்களின் தன்னம்பிக்கையைத் தளரச் செய்கிறது. தலைமைப்பீடம். ஆசிரியர்கள் இவர்களாலும் மாணவர் எதிர்காலத்திற்குத் திட்டமிட்டுச் செயற்பட முடியாமையை நாம் காண முடிகிறது. இந்த நிலையில் மாணவர் மத்தியில் எதிர்கால நம்பிக்கையை வளர்க்க வேண்டுமானால் ஒவ்வொரு மாணவரையும் அவரவர் தகுதிக்கேற்ற உயர்கல்வி பெற முடியாத கட்டத்தில் தன் எதிர்காலத்தை உறுதிப்படுத்தக் கூடிய முறையில் சுயதொழில் முயற்சியை மேற்கொள்ளக்கூடிய தொழிற்கல்வி முறைகளைப் பயிலச் செய்தல் வேண்டும். அதற்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும்.

சைவ மதகுருவும் சைவசமய பாட வடமராட்சிப் பகுதி ஆசிரிய ஆலோசகருமாகிய சிவஸ்ரீ. நமசிவாயக் குருக்கள் அவர்கள் வழிமுறையாக வந்த கல்வி வரலாற்றையும் மாணவர்களின் அறிவு ஒழுக்க நிலைகள் மாறியுள்ளமைக்கான காரணத்தையும் நிவர்த்திக்க வேண்டிய வழிமுறைகளையும் எடுத்துரைக்கிறார்.

ஆரம்பகாலக் கல்விமுறை அதாவது உபநிடத கால கல்விமுறை குருகுலக் கல்வியாகும். குருவினிடத்திலேயே 6 வருடங்கள் தங்கியிருந்து மாணவர்கள் பயின்றனர். இங்கு பாடத்திட்டம் வேதமாக இருந்தது. சமயக் கல்வியூடாக ஒழுக்கம் வலியுறுத்தப்பட்டது. அந்தணர்களுக்கு கற்கும் உரிமையிருந்தது. ஏனைய வர்ணத்தோரும் ஒழுக்க நிலையில் சிறந்திருந்தால் கல்வி கற்க வாய்ப்பிருந்தது. உதாரணமாக சத்தியகாம ஜெபலா என்ற பையனின் பிறப்பின்கண் ஐயம் இருந்தபோதும் அவன் உண்மைபேசும் ஒழுக்கமுள்ளவனாயிருந்தமையால் குருவினால் அவனுக்கு கல்வி கற்கும் உரிமை அளிக்கப்பட்டது. இதற்கு அடுத்தபடி இதிகாச காலக் கல்வி முறையாகும். இதுவும் குருகுலக் கல்வியே. எனினும் மாணவர்கள் குருவினிடத்தில் தங்கிக் கற்பதில்லை. சூத்திரர் தவிர்ந்த ஏனைய வர்ணத்தினருக்கு கல்வி உரிமை இருந்தது. வேதம் மட்டுமல்ல, அவரவர் வர்ணத்துக்குரிய கல்வியும் வழங்கப்பட்டது. இதற்கு அடுத்த கட்டமாக சமண சமயத் தொடர்பினால் கல்வி பாவலாக்கப்பட்டது வர்ணக் கல்வி மறைந்தது. எல்லோருக்கும் கல்வி என்ற அடிப்படையில் சமண சமயப் பள்ளிகளில் கல்வி போதிக்கப்பட்டது. இதுவே பள்ளிமுறைக் கல்விக்கு ஆரம்பம். இதனால் இந்து மதமும் எல்லோருக்கும் கல்வி என்ற முறையைப் பின்பற்ற நேர்ந்தது. இதனால் திண்ணைப் பள்ளிமுறை ஆரம்பமானது. வேதமும் வர்ணத்துக்குரிய கல்வியும் என இருந்த பாடத்திட்டம் இலக்கணம், இலக்கியம், காவியம் என விரிவடைந்தது.

இன்றைய கல்வி ஐரோப்பியக் கல்விமுறையுடன் தொடங்கியது புவியியல், வரலாறு, விஞ்ஞானம் எனப் பாடத்திட்டம் மேலும் விரிவடைந்தது. அன்றைய கல்விக்கும் இன்றைய கல்விக்குமிடையிலுள்ள முதன்மையான வேறுபாடு, அது ஆத்மீகம் தொடர்பானது ஒழுக்கத்தை, வாழ்வு முறைமையை வலியுறுத்தியது. இது உயிர் வாழ்க்கைக்குரிய கல்வி. அதாவது வயிற்றுப் பிழைப்புக்குரிய கல்வி. இன்றைய கல்வியில் மதம் போதிக்கப்பட்டாலும் அது வெறும் அறிவுக்குரியதாகவே உள்ளது. மனப்பாங்கையோ திறனையோ வளர்ப்பதாக இல்லை.

மாணவரிடையே ஒழுக்கச் சீர்கேடுகள் மிகுந்துள்ளன. அன்றைய சமூகத்திலும் ஒழுக்கச் சீர்கேடுகள் இருந்துள்ளது தான். இன்று ஒழுக்கமும் வாழ்க்கை முறைமையும் தவறியோரின் வீதம் கூடியுள்ளது இதற்கு ஒழுக்க கல்விமுறை மாறியதே அடிப்படையெனலாம் இந்த ஒழுக்கச் சீர்கேடுகளை மேலும் வளர்த்துவரும் காரணிகள் வீடு, பாடசாலை, சமூகம் என்பனவாகும் வீட்டிலே பெற்றோர் நடந்து காட்டுகின்ற முறை பிள்ளைகளை அவ்வழியிலேயே நடக்க வழி காட்டுகிறது. வெளியிலிருந்து ஒருவர் வீட்டுக்கு வந்து தந்தையாரை அழைக்கிறார். தந்தையார் உள்ளே இருந்தவாறே தான் இல்லையெனச் சொல்லுமாறு மகனிடம் சொல்லியனுப்புகின்றார். மகனும் இதையே பயின்று பின்பற்றுகிறான். பாரம்பரியமாகப் பொய் சொல்லும்

வழக்கம் வருகிறது. ஒழுக்கமும் உண்மையும் இருந்த காலத்தில் இடையிட்டு இந்தப் பாரம்பரியம் எங்ஙனம் குந்தது என்ற கேள்வி எழுகிறது, ஐரோப்பியர் வருகையையே இதற்குக் காரணமாகக் கூறக்கூடியதாயுள்ளது. ஏனெனில் ஐரோப்பியர் வருகையினால் மக்களின் சமூக வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டன. அவர்களது சமய, கலாசார பழக்க வழக்கங்களை வெளிப்படையாக அவர்கள் பின்பற்றவோ கைக்கொள்ளவோ முடியாத நிலை உண்டானது. பதவிகளைக் காட்டி மக்கள் மாற்றப்பட்டனர் உள்ளும் புறமுமாக மனிதர்கள் இயங்கத் தொடங்கியது கூடுதலாக இதன் பின்னரே, அடுத்ததாக பெண் கல்வியின் பின் பெண்கள் தாங்க வேண்டியுள்ள அதிக பொறுப்புகளினால் குடும்பப் பொறுப்பினை, தாய் ஸ்தானத்தை சரிவர முழுமையாக நிர்வகிக்க, நிறைவேற்ற முடியாமையும் பிள்ளைகளின் சீர்கேட்டுக்கு ஒரு காரணமாகிறது. எல்லோருக்கும் கல்வி என்ற தத்துவத்தைக் கொண்ட சமணசமயப் பள்ளிமுறைக் கல்விகூட வழங்க முன்வராத பெண் கல்வி ஐரோப்பியர் காலத்திலேயே ஆரம்பமாகியது. பெண் கல்வியால் எத்தனையோ பல நன்மைகள் கிடைப்பினும், குடும்பத்தில் அவர்களின் பணியும், கவனமும் குறைவதால் ஏற்படும் தீமையும் தவிர்க்க முடியாதது.

அடுத்து பாடசாலையை எடுத்துக் கொண்டால் இன்று ஆசிரியர்களின் ஆளுமையில் ஏற்பட்டுள்ள குறை பாடே மாணவர்களின் ஒழுக்கத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்கள் எப்போதும் பின்பற்றும் இயல்புள்ளவர்கள். எனவே ஆசிரியர்களின் தவறுகள் அவர்களில் பிரதிபலிக்கின்றன. ஆசிரியர்களின் ஆளுமையில் குறைபாடுகள் வருவதற்குப் பல காரணங்களுள்ளன. பொருளாதாரக் குறையை சீர்செய்ய மேலதிக முயற்சிகளிலீடுபடுகின்றனர். அதனால் கடமையில் தவறல் ஏற்படுகிறது. உதாரணமாகப் பிந்தி வருதல் முதலான தவறுதல்களை இழைக்கின்றனர். சமூகம் ஆசிரியர்களின் ஆளுமைக் குறைவினை அங்கீகரித்து விடுகிறது. எனவே சமூகத்திற்குப் பயப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஆசிரியர்களுக்கு இல்லை. முன்னைய காலங்களுடன் ஒப்பிடும்போது, பரவலாக ஆசிரிய நியமனங்கள் தகுதியற்றனவாகவும் காணப்படுவதால் ஆசிரியர்களிடம் நிறைவான ஆளுமையை எதிர்பார்க்க முடியாது. ஒழுக்கத்தையோ, உயர் ஆளுமைப் பண்புகளையோ மேம்படுத்தும் செயற்திட்டங்கள் எதுவும் இல்லை. பதிலாக பரீட்சையில் சித்தியடைந்தவர்களே கணிக்கப்படுகிறார்கள். இவை காரணமாக ஆசிரிய சமூகம் தனக்கிருக்க வேண்டிய ஆளுமைப் பண்பில் மிகப் பின்தங்கியே உள்ளது.

அடுத்து, அரசின் கல்வித்திட்டங்களிலும் முறைகளிலும் ஏற்படுகின்ற மாற்றங்களும் மாணவர் மத்தியில் திரமற்ற நிலையையும் சீர்கேடுகளையும் கொண்டு வருகிறது.

இனிச் சமூகம் எவ்வாறு மாணவரின் ஒழுக்க நிலைக்குப் பொறுப்பாகிறது எனப் பார்ப்போம். ஐரோப்பியர் வருகையுடன் தொடங்கி, தனக்கென்ற கலாசாரங்களையும், நெறிகளையும் படிப்படியாக இழந்து "எப்படியும் வாழலாம்" என்ற மனப்பாங்கு சமூகத்திடம் ஏற்பட்டுள்ளது. குற்றம் செய்தவரையும் சமூகம் ஏற்றுக் கொள்கிறது. உதாரணமாக, ஒரு மதகுரு எத்தகைய நெறிபற்றி ஒழுகுபவராக இருத்தல் வேண்டுமென சமூகம் அறிந்திருந்தும் மதுபானமருந்துகின்ற மதகுரு பூசையாற்றுவதையும் ஏற்றுக் கொள்கிறது. ஒழுக்கக் கேடுகளை அங்கீகரிக்கின்ற மிகப் பாதகமான மனப்பாங்கினைச் சமூகம் கொண்டிருத்தல் எமது கலாசாரம் பண்பாடுகளை அறவே இழக்க வழி கோலும். ஒழுக்கத்தை வலியுறுத்தாத கல்வி முறை சமூக மனப்பாங்கை மேலும் பாதிக்கிறது. வெளிநாட்டு வேலை வாய்ப்புகளால் பணமும் வாழ்க்கை வசதிகளும் கிடைப்பதால் சமூகத்தில் கல்வியின் முக்கியத்துவம் குறைகிறது. தொடருகின்ற யுத்த நிலைமை பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவிப்பதால் நேர்மையீனம், சுயநலம் பொய், களவு முதலான சமூகச் சீர்கேடுகள் மலிகின்றன. சமூக அங்கத்தவர்களாக சமூகத்தின் மத்தியிலேயே ஊடாடுகின்ற மாணவர் மனங்களில் சமூகத்தின் இத்தகைய பொறுப்பற்ற தவறான மனப்பாங்குகளும் சீர்கேடுகளும் வேரூன்றிப் பதிந்து அவர்களையும் அவ்வழியிலேயே நடத்துகின்றன. கல்விப்போட்டி நிலைமையால் உருவாகிய தனியார் கல்வி நிறுவனங்களும் ஒழுக்கத்தைப் பொறுத்தவரை மாணவர்களுக்குச் சாதகமாக அமையவில்லை.

விவேகத்தைப் பொறுத்தவரை இன்றைய மாணவரில் முன்னேற்றம் காணப்படுகிறது. முன்னைய காலம் போலன்றி இன்று அவர்கள் ஊடாடுகின்ற பொருட்கள் யாவும் விஞ்ஞான ரீதியானவை உதாரணமாகத் தொலைக்காட்சி மின் உபகரணங்கள், வாகனங்கள் என்பன. கல்வி முறையால் மட்டுமல்ல இத்தகைய பரிச்சயத்தாலும் அவர்கள் விவேகம் அதிகரித்துள்ளது. தனியார் கல்வி நிறுவனங்களும் மாணவர்களின் அறிவை வளர்த்துள்ளன. சுருக்கமாகக் கூறின் மாணவர்கள் ஒழுக்க நிலையில் தாழ்ந்துள்ளனர். அறிவு நிலையில் உயர்ந்துள்ளனர். எனினும் கல்வியின் குறிக்கோள் எய்தப்படவில்லை என்றே கூறவேண்டும் ஏனெனில் கல்வியியலாளர்களின் கருத்து "கல்வி நற் குடி மகனை உருவாக்க வேண்டும்" என்பதே. கல்வியின் பரப்பு விரிவடைந்திருக்கிறது. பலருக்கும் உரியதாக விரிவடைந்திருக்கிறது. ஆயினும் விளைவு, சமூகச் சீர்கேடு, பொய், களவு, கொலை, நேர்மையீனம் எல்லாம் மலிந்துள்ளது. போகதவஸ்து பாவிக்கின்ற விரக்தி நிலையைக் கொண்டு வந்துள்ளது. இதற்குரிய நிவாணம் கல்வியியலாளர்கள், சமூகவியலாளர்கள், அரசு, பாடசாலை, சமூகம் முதலான காரணிகள் அனைத்தினதும் சிந்தனையிலும், செயற்பாட்டிலும் தங்கியுள்ளது.

ஆசிரியரும், எழுத்தாளருமான திரு. ஐ. சண்முகலிங்கம் (குப்பிளான் ஐ. சண்முகன்) அவர்கள் மொழியின் வழியே வளர்ந்த கல்வி இன்று பொறியின் வழியே சிந்தனையில் பதிவதையும் கற்பித்தல் முறை மாற்றங்களையும் கூறி கல்வி மனிதனை உருவாக்கத் தவறிவிட்டதா என்பது பற்றியும் மாணவரின் எழுத்தாற்றல் பற்றியும் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்.

ஆரம்ப காலங்களில் நிறுவனமயப்படுத்தப்படாத கல்வி இருந்தது. தந்தை வழி மகனுக்கும், தாய் வழி மகளுக்கும் வாழ்க்கைக்கு வேண்டிய கல்வி பாரம்பரியமாகச் சென்றது. பின்னர் தொழில் குழுக்களூடாக அடுத்த பரம்பரைக்கு வேண்டிய அறிவும் திறனும் சென்றன. இதனைச் சாதியமைப்பு முறையில் நாம் காணலாம். நாகரிகம் வளர வளரவே நிறுவன மயப்படுத்தப்பட்ட கல்வி தோற்றம் பெற்றது.

ஆரம்பத்தில் மத பீடங்களே சமூகத்திற்கு வேண்டிய கல்வியை வழங்கின. உலகெங்கிலும் இதனை நாம் காணலாம். மனிதனுடைய நாகரீகமும், சமூக விழுமியங்களும், புதிய சிந்தனைகளும் கண்டு பிடிப்புக்களும் அடுத்த பரம்பரைக்குக் கொண்டு செல்லப்பட வேண்டிய தேவை இருந்தது. ஆரம்பத்தில் மனித இனமும் விலங்குகளைப் போலவே ஒலிக் குறியீடுகள், சைகைகள் மூலமே கருத்தைப் பரிமாறிக் கொண்டது. இதிலிருந்து நாளடைவில் மொழி தோற்றம் பெற்றது. முதலில் மொழி 'பேசும் மொழி' யாகவே இருந்தது. எனவே மனிதனுடைய சிந்தனைகள் அறிவுப் பாரம்பரியங்கள், புதிய கண்டுபிடிப்புகள் யாவும் மனனம் செய்வதினூடே அடுத்த பரம்பரைக்குக் கொண்டு செல்லப்பட்டன. அதாவது மனதில் பதிந்தவற்றை கர்ண பரம்பரையாக (காது வழியாக) அடுத்த பரம்பரை பெற்றது.

மேலும் நாகரிகம் வளர்ச்சி அடைந்தபோது, 'எழுதும் மொழி' யின் தோற்றம் நிகழ்ந்தது. அறிவுச் செல்வங்கள் யாவும் எழுத்தில் பொறிக்கப்பட்டன. ஒரு படி நிலையிலிருந்து அடுத்த படி நிலைக்கு அறிவு வளர்ச்சி அடைந்தது. இப்போதும் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது. எனவே இப் பரிமாணங்களுக்கு அமைய கற்பனவும் கற்பிக்கும் முறைகளும் மாற்றமடைந்தன.

அன்றைய மாணவன் மனனம் செய்வதனூடாகவே அறிவினைப் பெற்று அதனை வளர்த்துக் கொண்டான். இன்றைய மாணவன் விஞ்ஞானப் பொறிகளினூடாக மனனத்திலிருந்து விடுபட்டு அறிவை வளர்க்கக் கூடியவனாக இருக்கிறான். இன்றைய உலகில் நாள்தோறும் அறிவு வளர்ந்து கொண்டே இருக்கிறது. எல்லாவற்றையும் மாணவருக்குக் கற்பித்துக் கொண்டிருக்க முடியாது. கற்கும் ஆர்வத்தை மாணவரிடம் தூண்டி விடுதலே இன்றைய தேவையாக உள்ளது. அந்த வகையிலேயே இன்றைய மாணவனுக்கு வழிகாட்டப்பட வேண்டும்

ஆனால் எமது பாரம்பரியங்கள், தார்மீக ஒழுக்கங்கள் என்பனவற்றைப் பொறுத்த வரையில் இன்றும் மனன செல்வாக்குள்ளதாகவே உள்ளது. பாரம்பரிய இலக்கியங்களையும், சமய நம்பிக்கைகளையும். சமூக விழுமியங்களையும் சிறிய வயதிலேயே மாணவர் மனதில் 'பசுமரத்தாணி' யாய்ப் பதிப்பதற்கு மனனம் உதவுகிறது. அத்துடன் அடிப்படையான எண் பற்றிய எண்ணக்கருக்களுக்கும், விஞ்ஞானக் குறியீடுகளுக்கும் மாணவன் மனனத்தையே சார்ந்திருக்க வேண்டியவனாய் இருக்கிறான்.

அடுத்து கல்வி எய்தும் இலக்கினைப் பார்க்கும்போது இன்றைய கல்வியின் திசை பொருளாதாரத்தையே மையப்படுத்தியதாக உள்ளது. கலை, பண்பாடு, சமூக விழுமியங்கள் நாகரீகம், சமூக மனப்பாங்கு என்பன புறந்தள்ளப்பட்டு விட்டன. 'சம்பாதிக்கும் மனிதனே' கல்வியின் இலக்காகிவிட்டது. எவ்வளவுக் கெவ்வளவு கூடுதலாகச் சம்பாதிக்க முடிகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதற்கான கல்வி சிறு வயதிலிருந்தே ஊக்குவிக்கப் படுகின்றது இன்றைய கல்வியில் 'மனிதன்' மறக்கப்படுகின்றான் அவனுடைய அபிலாசைகள், மன ஏக்கங்கள், மன உணர்வுகள் அவனுடைய ஆத்மீகப் பண்பு, அவனுடைய கலாச்சார வேர்கள் என்பன இழக்கப்படுகின்றன. எல்லாமே 'பணம்' என்ற கருத்து நிலை எமது சமூகத்தில் மேலோங்கி நிற்கிறது. இதனாலேயே பரீட்சையையே முழுமுதல் நோக்கமாகக் கொண்ட கல்வி அமைப்பும் எமது சமூகத்தில் ஆதிக்கஞ் செலுத்துகிறது.

இது மாற்றப்பட வேண்டும். சமூக, நிர்வாக மட்டங்களில் இம் மாற்றத்திற்கான உந்துதல்கள் ஏற்பட வேண்டும். முதலில் மனிதன் மனிதனாக வாழப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். தன்னலத்தைப் போலவே, சமூக நலத்தையும் கருதும் மனப்பாங்கு மாணவரிடத்து ஏற்படுத்தப்பட வேண்டும்.

இன்றைய மாணவனின் எழுதாற்றலைப் பொறுத்தவரை பல்வேறு சக்திகள் அவன்மீது ஆதிக்கம் செலுத்துகின்றன. அவற்றில் முக்கியமானது இன்றைய வீடியோக் கலாச்சாரமாகும். இதனாலேயே பொதுவாக, மாணவர்களிடையே தமது கருத்துக்களைச் சரியாகவும் தெளிவாகவும் தாய்மொழியினூடாகக் கூட புலப்படுத்த முடியாத நிலைமை காணப்படுகிறது. வாசிக்கும் திறனும், பழக்கமும் அற்றவர்களாகவே பெரும்பாலான மாணவர்களுள்ளனர், இதற்கு இன்னொன்று அடிப்படையான காரணம் 'மொழியைப் புரியும் வயதில், அதாவது ஆரம்ப வகுப்புகளில் மொழிக் கல்வியின் மீது போதிய கவனம் எடுக்கப்படாமையே எனக் கருதுகி

றேன். எனது அனுபவங்களினூடாக இதை அவதானித்தும் இருக்கிறேன். எனவே ஆரம்ப வகுப்புக்களில் அடிப்படைக் கல்வியான மொழியிலும் எண்ணிலும் கூடிய கவனம் எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு மொழியின் அடிப்படையான ஆற்றலைப் பெறும்போது மாணவனின் எழுத்தாற்றலும் விருத்தியடையும் என நம்புகிறேன் என்றாலும் இப்போதும் கூட அபூர்வமான மேதமையுள்ள எழுத்தாற்றலை மாணவரிடையே இனங் காண்கின்றேன். எமது இன்றைய சமூகத்தின் சூழ் நிலையும், நவீன அறிவுக் கலைகளின் விசாலித்த தன்மையுமே இவ்வியத்தகு ஆற்றலுக்குக் காரணமென நினைக்கின்றேன். இந்தப் பொறி மேலும் விரிவடைந்து சமூகம் எங்கும் பிரகாசிக்கும் என எதிர்பார்க்கிறேன்.

தனியார் கல்வி நிறுவன இயக்குனரும் ஆசிரியருமான திரு. சி. விசுவாசம் அவர்கள் அன்று மாணவனாயும் இன்று ஆசிரியராயும் இருந்து பார்க்கும்போது ஆசிரிய - மாணவ உறவு நிலை அடைந்து வந்துள்ள மாற்றம் பற்றியும் அதற்கான காரணங்கள் நிவர்த்திகள் பற்றியும் ஆராய்ந்து தருகிறார்.

நாங்கள் கல்வி கற்ற காலம் 60 களின் பிற்பட்ட காலம் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய கல்வி நிறுவனங்கள் சிறிதளவிலேயே செயற்பட்ட காலம். தனியார் கல்வி நிறுவனங்களை விடப் பாடசாலைகளே பிரதான பங்கு வகித்தது. பாடங்களின் சில பகுதிகளை நிறைவு செய்வதற்காகவும், சந்தேகங்களை நிவர்த்திப்பதற்காகவும் கல்வி நிறுவனங்களை நாடிய சூழ்நிலைதான் அப்போதிருந்தது, அந்தக் காலத்தில ஆசிரிய மாணவ தொடர்பு, குருபக்தி நிறைந்த, ஆழமான ஒரு தொடர்பாயிருந்ததை மறுப்பதற்கில்லை. தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களிடம் கூட மாணவர்களுக்கு அதே குருபக்திதான் இருந்தது. அவ்வாறான ஒரு தொடர்புடன்தான் அவர்களை அண்டிக் கல்வி கற்றோம். இன்றைக்கு நாங்கள் ஆசிரியர்களாயிருக்கிற காலத்தில் நோக்கும்போது ஆசிரிய மாணவ உறவு விரிசலடைந்துள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளது இம் மாற்றம் நிகழ்ந்தமைக்குப் பல காரணங்கள் அடிப்படையாயமைந்துள்ளன.

முதலாவதாகத் தனியார் கல்வி நிறுவனங்களின் தோற்றம். பாடசாலைக் கல்வியில் மாணவர் தங்கியிராத ஒரு நிலையை உருவாக்கியது. இதனால் மாணவருக்கும் பாடசாலைக்கும் ஒரு இடைவெளி, மாணவருக்கும் ஆசிரியருக்கும் ஒரு இடைவெளி உண்டாகத் தொடங்கியது. அரசியற் சூழல், யுத்த நிலைமை காரணமாகப் பாடசாலைகளின் நடைமுறைகளில் ஏற்பட்ட அசமந்த நிலையும் இந்த இடைவெளியை அதிகரிக்கச் செய்த ஒரு காரணியாகிறது. கல்வி அடைவு பற்றிய உத்தரவாதமின்மையால் மாணவர் மனோ நிலையில் ஏற்பட்ட மாற்றங்களும் விரக்தி நீலையும் பாடசாலையின் கட்டுப்பாடுகளுக்கு அவர்கள் ஒத்துழைக்கும் பக்குவத்தைச் சீர் குலைத்தது, தனியார் கல்வி நிலையங்களிலெனினும், பாடசாலைகளிலெனினும் இன்று காணப்படுகின்ற தகுதியற்ற அல்லது தரமற்ற ஆசிரிய நியமனங்களும் மாணவர்கள் ஆசிரியர்களிடம் பயபக்தியற்றவர்களாக நடந்து கொள்வதற்கு ஒரு காரணமாகிறது. அறிவும், ஆசிரியத்துவமும், ஒழுக்கமும் அமையாத ஆசிரியர்களின் கற்பித்தலும், நடத்தைகளும் மாணவருக்கு முன் மாதிரியாக அமைவதில்லை, மாணவர்களின் பக்திக்குரிய பற்றுக்கும் பாத்திரமாகின்ற தகுதியை எல்லா ஆசிரியர்களும் கொண்டிராமை வருத்தத்திற்குரியது. ஆசிரிய வளம் குறைந்த சிறிய சிறிய பாடசாலைகளில் அவ்வத்துறைகளுக்குரிய ஆசிரியரல்லாதவர் அந்தப் பாடங்களைக் கற்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது மாணவரிடையே ஆசிரியர்பால் நம்பிக்கையீனமும், மதிப்புக் குறைவும் உண்டாகிறது. மாணவர்களின் அறிவும் சுயாதீனமான, சுதந்திரமான சிந்தனையாற்றலும் விருத்தியடைந்திருப்பதால், இந்த புதிய பரிணாமப் படியில் நிற்கும் அவர்கள் சுயாதீனச் செயற்பாடுகளையே விரும்புதலால் பெற்றோரின் அல்லது பாடசாலையின் கட்டுப்பாடுகளை, அனுசரிக்க விரும்பாத ஒரு கலை முறை இடைவெளி ' தோன்றுகிறது அத்தோடு கல்விக்கல்லாது, பொருளாதாரத்துக்கே முக்கியத்துவம் அளிக்கின்ற சமூக அமைப்பில் பொருளாதார அந்தஸ்தில் உயரமுடியாத ஆசிரியர்களைப் பெரியவர்கள் கணிக்காத, மதிக்காத அந்தப் பண்பு சிறியவர்களான மாணவர்களிடம் கையளிக்கப்படுகிறது.

இத்தகைய காரணங்களினால் இன்று ஆசிரிய மாணவ தொடர்பு பக்தியும் மதிப்புமுள்ள ஒன்றாக இல்லாது கேலிக்குரிய ஒன்றாக மாறிவருவது கவலைக்குரியதே. இதை நிவர்த்திக்கக் கூடிய வழிமுறைகளில் முதலாவதாக தனியார் கல்வி நிலையங்களுக்கும் பாடசாலைகளுக்கு மிடையில் ஒரு சமரச நிலை உருவாக வேண்டும். இன்று நிலவும் போட்டிக் கல்வி முறையாலும், பாடசாலைகள் சரிவர இயங்க முடியாத சூழ்நிலையாலும், தனியார் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு அவசியமானது என்பது கல்விமான்கள் பலரதும் கணிப்பாகவுள்ளது. ஆயினும் தனியார் கல்வி நிறுவனங்களின் அபரிமிதமான வளர்ச்சி பாடசாலை நிர்வாக முறைமையிலும், ஆசிரிய - மாணவ உறவு நிலையிலும் பாதக விளைவுகளை ஏற்படுத்துவதும் கண்கூடு, இந் நிலையில் மாணவனின் ஒழுக்க நிலையைப் பேணும், ஆளுமையை வளர்க்கும் பாடசாலையின் சிக்கலற்ற நிர்வாக ஒட்டத்திற்கும், மாணவரின் கல்வி அடைவு நிலையை உயர்த்தக்கூடிய தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாட்டுக்கு மிடையே ஒரு இணக்கம் கலந்த ஒத்துழைப்பு அவசியமாகிறது. ஒன்று மற்றொன்றின் தேவைகளையும் கடமைகளையும் புரிந்து கொண்டு இயங்குவது இன்றைய காலத்தில் தேவையாகும். தனியார் கல்வி நிறுவனங்கள் வெறுமனனே வர்த்தக நோக்குடன் செயற்படும் நிறுவனங்களாக மட்டுமன்றி மாணவர்களின் ஒழுக்க நிலையையும் குரு பக்தியையும் மேம்படுத்தும் நோக்கோடும் இயங்க வேண்டும். நிர்வாகங்கள் மட்டுமல்ல ஒவ்வொரு ஆசிரியரும் தம் பொறுப்புணர்ந்து செயற்படல் வேண்டும்

இன்றைய சூழலில் நாம் இரு தசாப்தங்களுக்கு முன்பு காணப்பட்ட ஆசிரிய மாணவ தொடர்பினையும் கல்வி நிலையையும் உடனடியாக உருவாக்க முடியாவிட்டாலும் படிப்படியாக அந்தச் சூழ்நிலையை ஏறபடுத்த வேண்டுமென்பதும், இன்றைய காலத்துக்குரிய கல்வி சார் கல்வித்துறைசார் வளர்ச்சியை மேம்படுத்த வேண்டுமென்பதும் அனைத்து சாராரினதும் எதிர்காலச் சந்ததியினருக்கான கடனாகும்.

சங்கீத டிப்புளோமா பட்டம் பெற்று இசை ஆசிரியையாகக் கடமையாற்றும் திருமதி. பிராணேஸ்வரி சிதம்பரப்பிள்ளை அவர்கள் கலையைப் பற்றியும் இன்றைய மாணவர்கள் கலையைப் பயிலுதல் பற்றியும் எடுத்துக் கூறுகின்றார்.

கலைகள் தெய்வீகமானவை. இறைவனைப் பக்தி செய்யவும், இறைவனுக்கு அர்ப்பணமாக்கவும், இறைவனுடன் இரண்டறக் கலக்கவுமே இந்தக் கலைகள் தோன்றி வளர்ந்து வழிகாட்டின. கலைகள் முற்காலத்தில் பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டு, கோயில்களிலும், அரசவைகளிலும் இடம்பெற்று வந்தன. பின் குரு சிஷ்ய முறையில் கலைகளில் ஆர்வமும் ஞானமும் உள்ளவர்கள் குருவை நாடிச் சென்று கலைகளைப் பயின்று வளர்த்தனர். கலை பயிலல் பரவலாக்கப்பட்டமை போல. கலை நிகழ்வுகளும் பொது இடங்களுக்கும் பரவலாக்கப்பட்டன. கலை கலைக்காக என்ற நிலை மாறி சமூக நாகரீகத்தினதும் அந்தஸ்தினதும் அடையாளமாகக் கருதிக் கலை பயிலும் காலம் ஏறக்குறைய இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன் ஆரம்பமானது எனலாம் இதை அடுத்து கலைத்திட்டத்தில் நுண்கலை ஒரு பாடமாகப் புகுத்தப்பட்டதால் மாணவர்களைப் பொறுத்தவரை கட்டாயத்தின் பேரில் ஏதோ ஒரு கலைப் பாடத்தில் 'விரும்பியோ விரும்பாமலோ' கற்கும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டனர். இதனால் மாணவர்களிடம் பாடத்தில் நாட்டம் இன்மையும் ஆசிரியரிடம் பயபக்தி இன்மையும் காணப்படுகிறது. எல்லாக் கலைகளும் எல்லோருக்கும் வரக்கூடியதென்று கூறிவிட முடியாது. ஆத்ம லயிப்பும், துல்லிய ஞானமும் இணைந்ததே கலை இசைக் கலையை எடுக்கும்போது ஓரளவு குரல் வளமும் ஞானமும் உள்ள பிள்ளையினாலேயே சிறந்த முறையில் இசை பயில முடியும். 'இசை கேட்டால் புவி அசைந்தாடும்' என்ற வரிகள் இசையின் சக்தியைக் குறிக்கிறது. பரதக் கலையை எடுத்துக் கொண்டால் நாட்டியம் செய்யக்கூடிய ஆற்றலும் அதற்குரிய உடலமைப்பும் அமையும் போதுதான் நடனபாடத்தில் பிள்ளை ஆர்வத்துடன் ஈடுபடும். ''கல்லிலே கலைவண்ணம் கண்டார்'' என்ற அடிகள் இயற்கையை ஆழ்ந்து அனுபவித்துப் பொறுமையுடன் கலையாக்கு - மாற்றலுள்ள பிள்ளையினாலேயே சித்திரத்தில் இறனையை முடியும் என்பது புலனாகிறது.

எல்லோருக்கும் கலை வல்லமை அரிதெனினும் ரசனை ஆற்றல் ஒவ்வொருவருக்கும் அவசியமானதே. ஏனெனில் கவலையை மறந்து களிக்க வைப்பது கலை. மனம் லயித்து இறைவனை நினைக்க வைப்பது கலை. எனவே, மாணவரிடையே ஆத்மீக உணர்வும், மன அமைதியும், அதன் பயனாய் ஆற்றலும் பெருக, அவர்களைக் கலாரசிகர்களாய் வளர்க்க வேண்டிய பொறுப்பு அனைவர்க்குமுரியது.

ஒவ்வொரு துறை சார்ந்தோரும் அவ்வக் கண்ணோக்கில் தத்தம் கருத்துகளைத் தந்தமை கண்டோம். பொதுவாகப் பார்க்கின் அறிவிலும் சிந்தனைத் திறனிலும் உயர்ந்திருக்கின்ற மாணவ சமுதாயம் ஆளுமைப் பண்பிலும், ஒழுக்க நெறியிலும் நலிவடைந்திருப்பதாகவே பொதுப்படையாகக் கூறப்படுகிறது. இதற்கான காரணிகளாக பொருளாதாரம். சமூகம். பாடசாலை, வீடு எனப் பல உள்ளன. வெளிநாட்டுப் பண வரவினால் அமோகமான பணப் புழக்கமும், அதன் பயனான ஆடம்பாங்களும் ஒருபுறம் யுத்த நிலைமையினால் விடிவிழந்து தொழிலிழந்து தவிப்பது ஒரு புறம் தமது வசதிகளுக்காப்பால் பகட்டுகளுக்காக ஏங்குகின்ற பக்குவமற்ற இளம் உள்ளங்கள் வீட்டினது கட்டுப்பாடுகளை மறுதலிப்பது புதுமையல்ல. சமூகப் பொறுப்பற்ற வீடியோக் கலாசாரமும் கலாசாரத்திற்குப் புறம்பான ஏக்கங்களையும், நோக்கங்களையும், அவர்கள் மனத்தில் விதைக்கிறது. பரீட்சையை மட்டுமே நோக்கமாகக் கொண்ட கல்வி, அதில் வெற்றிபெற முடியாத மாணவர்களை சோம்பேறிகளாகவும், ஊக்கமற்றவர்களாகவும் ஆக்குகிறது. கலைகள் திறன்கள், வாழ்க்கைக்குரிய கல்வி என்பன கவனிக்கப்படுவதில்லை. மொத்தத்தில், கற்க மறுக்கின்ற, உழைக்க விரும்பாத, மெத்தனமான வாழ்க்கையைக் கனவு காணும் இளம் சமுதாயமே இன்று பெரும்பான்மையாகிறது. இந்த நிலையை மாற்றவேண்டிய பொறுப்பு ஆளுமையுள்ள, ஆரோக்கியமான மாணவ சமுதாயத்தை உருவாக்க வேண்டிய கடமை பாடசாலைக்கே உண்டு பாடசாலை என்பது பொறுப்பு, அறிவு, ஆளுமை, கூடமை உணர்வை படைத்த அதிபர், ஆசிரியர்களினால் வழி நடத்தப்பட வேண்டிய ஒரு சிறிய தனிச் சமூகமாகும் குறுக்கீடு இல்லாத அதன் முறைமையான இயக்கத்திற்கு வேறு புறக் காரணிகளான தனியார் கல்வி நிறுவனங்களோ திணைக்களங்களோ உறுதுணையாக இருத்தல் அவசியம். இத்தகைய கட்டமைப்பு பாரால் உருவாக்கப்படும் என்பதே இறுதியாக எஞ்சியுள்ள வினாவாகும்.


முதன்மை பெற்ற நிகழ்வுகளில் சில



கொழும்புத்திட்டக் கண்காட்சியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய நாட்டியக்குழு



நாட்டிய நாடகக்குழு



தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் முதன்மை பெற்ற குழு





நினைவுகள் பழையன

ஆனால்

பரிசுத்தமானவை

உடுப்பிட்டி மகளிர் உயர் நிலைக் கல்லூரியின் நூற்றிருபத்தைந்தாம் ஆண்டு நிறைவு மலரின் வாழ்த்து

திருமதி. மாதேவிப்பிள்ளை
கதிர்காமத்தம்பி
ஆசிரியை - வல்வெட்டி
பழைய மாணவி
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

வாழ்த்துதும் வாழ்த்துதும் மனங்களி கூர்தர
ஆழ்கலையாவும் அழகுடன் பயின்றிட
நண்ணிய பெண்களில் நலம் பல பெற்று
மண்ணினில் மகிழ்வுடன் வாழ்ந்திடுகின்ற
பழைய மாணவிகள் பலருங்கூடி
விளைவுறும் அன்பொடு மேதினிமீது
கடமையின் சிறப்பினால் கன்னியர் உவப்புறும்
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி யன்னை
தொடங்கிய நாள் முதல் துலங்கிடும் வகையில்
மடமையில் நீங்கியே மகளிர் சிறந்திட
கடமையே கண்ணாய்க் கருதிய அதிபர்கள்
பாரநலங்கருதி ஆற்றிய பணியால்
தரத்தினில் உயர்ந்து மகளிர் உயர்நிலைக்
கல்லூரி யாகிக் கவினுறும் பேற்றின்
நூற்றிருபத்தைந்தாம் ஆண்டு நிறைவைப்
போற்றிடும் வகையில் பூத்திடும் மலரை
மாதேவியும் மகளும் ஆகிய நாங்கள்
பல்லோர் மனத்திலும் பதிந்து
பல்புகழ் பரப்பிக் கவின்பெறு மென்றே.

REMNISCENCE OF MY FAVOURITE TEACHERS

At Uduppiddy Girls' School

Mrs. S. SELVADURAI B. A. Dip-in-Ed,
S. L. E. A. S. Cl III
Retired Vice-Principal:
Govt. Teachers' College, Kopay.

Under the able guidance and leadership of our principal Miss K. Mathiaparanam, there was a select group of teachers very much dedicated to their educational service. I remember all of them with pleasure and gratitude for the contribution they have made to the cause of education. Of the many teachers who had served in our school during the time when Miss. K Mathiaparanam was the principal of our school Mrs. Y. Veluppillai (Yohacca), Miss V. Ramalingam (Valliammaiacca) and Miss. Ariakutty (Gnanacca) impressed me so much that I still cherish the memories of these teachers who by their meritorious services have influenced the young minds and helped them a great deal to develop their personalities. When I sometime sit leisurely and recall to memory my early school life, sweet memories of my early teaehers of Uduppiddy Girls' School reel off in my mind - screen.

Mrs. Y. Veluppillai who was highly respected by her students and contemporaries was my favourite teacher She taught Tamil to the upper classes. Her method of teaching was never limited by the syllabuses planned by the Government. As a result of it, her students were able to gain a wide knowledge in Tamil inspite of the English medium. Many of her students did very well in her subject whenever they sat for Public Examinations. Mrs. Velupillai was always seen with a smile with which she attracted al her students and they all found it a pleasure to study under her.

Miss. Ramalingam who taught Hygiene and Physiology is another dynamic figure who cannot be forgotten. I am sure, her memories will remain evergreen in the hearts of all her students. She was in charge of Health and Physical Education. During her time of service she very well managed to see that all facilities necessary to teach the major games were satisfactorily and adequately provided. As a result of it, we the students under her had the rare chance of learning to play Badminton, Paddle Tenis, Throwball, Teniquoit and Netball. Miss. Ramalingam induced in us a love, a deep love I should say, for these major games and thereby helped us to mould ourselves into good personalities.

The inter - personal relationship maintained by Miss. Ramalingnm in the classes made her a popular figure at school during our time. She made her classes very lively by relating interesting stories now and then in the course of her teaching. My association with her as student encouraged me to attain a good position in the field of education.

Miss. Ariakutty who was lovingly called Gnanacca was another favourite teacher of mine. When I was in the lower form , Gnanacca laid the foundation very strongly and satisfactorily to develop a good taste for the study of English Language. She taught us a good number of nursery rhymes with musical background. She had the art of creating very interesting learning - situation, by making us sing and dance and hop and jump We had ample chances of enjoying a lot of physical freedom in the classes conducted by Gnanacca. Knowingly or not knowingly Gnanacca seems to have made use of a good knowledge of Educational Psychology in the course of her teaching It is true that some teachers are born and not made. With great pleasure I would like to humbly declare that I was a student under Gnanacca who was indeed one of the born teachers.

Many of Gnanacca's students including me were too fond of her because of her sweet voice.

What a melodious voice she had !
Very charming it was.

Be a philospher but amidst your philosophy
be Still a man

- Hame -

எமை வளர்த்த கல்லூரி நீ தாயல்லவோ!

திருமதி. செல்வரட்ணம் முத்துசாமி
ஓய்வுபெற்ற ஆசிரியை
பழைய மாணவி (1938 — 1950)

மாதாவே உனது வளாகத்தை ஒளியோடு மிளரச் செய்த பெருமை உனது குழந்தைகளையே சாரும் ஆண்டாண்டு தோறும் உன்னிடத்தில் சேர்ந்து படித்தவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே இருந்தது பெருமைக்குரியது. ஆரம்பத்தில் பாதிரிமார்களின் அரவணைப்பில் தவழ்ந்து இருந்தாய் அப்போது நீ இருந்த கட்டிடமோ சிறியது. அம்மாவை நாடி அடியெடுத்து நடந்து வரும் குழந்தைகள் போல ஆயிரமாயிரம் குழந்தைகள் உனை நாடிவந்தனர்.

நாற்பதுகளில் செல்வி கி. மதியாபரணம் அவர்கள் அதிபராக உன்னகத்தே அமைய பல கட்டிடவசதிகளும் உருவாக, பெரியவளாய் திகழ்ந்தாயம்மா. பெரியவிடுதியொன்றும் அமைக்கப்பட்டது. அது உனக்கு மேலும் மெருகூட்டியது. நாமறிய சாவகச்சேரி, கொடிகாமம், மட்டுவில், சோப்பாய், அச்சுவேலி, இடைக்காடு போன்ற இடங்களில் இருந்து கல்வி என்னும் ஊண் தேடி உன்னிடத்தே வந்தார்கள் உன் குழந்தைகள் அவர்களுக்கு எல்லாக் கலைகளையும் அளித்து வளர்த்து எங்கெங்கே அவர்கள் சென்றாலும் மிளரச் செய்தாய் அம்மா. கல்வி மட்டுமல்ல ஆடற்கலை, பாடற்கலை, நாடகக்கலை, தையற்கலை என்பவற்றையும் ஊட்டி ஊட்டி வளர்த்து வைத்த பெருமை உனக்குரியது.

பள்ளிச் சிறார்களெல்லாம் விளையாட்டு நேரங்களில் உன் வளவிலே வளர்ந்த விளாத்திமரம், புளிய மரம் ஈந்த பழங்களை உண்டு களித்தார்கள் மறக்க முடியுமா?

இலண்டன் மாநகரில் உள்ள பள்ளிச்சிறார்களது நாகரிக சீருடையையும் நவமான கல்வியையும் கண்டு வந்த செல்வி லீ. அதிபர் எங்கள் அன்னையும் அவ்வாறு மேம்பட்டு விளங்கினால் என்னவென்று அரும்பாடு பட்டார். அன்னைக்கோ அளவிலா மகிழ்ச்சி பலவர்ண உடையணிந்து வந்த பிள்ளைகளை எல்லாம் ஒரே மாதிரி வெள்ளை சீருடை அணிந்து நிற்க வைத்தார். பாடல், ஆடல் எல்லாம்மேல்நாட்டுப் பாணியில் காணாத பிள்ளைகளுக்குக் காட்டிவைத்த பெருமை லீ அம்மா அவர்களுக்கே மாணவரிடையே ஆங்கிலம் பேசும் ஆற்றலை ஆக்கிவைத்தார். ''பிருதிவிராஜ்'' என்னும் பெரிய நாடகத்தை மேடையேற்றிய பெருமை இவருக்குரியது.

தாயே உன் ஆசை எல்லாம் நிறைவேறிக் கொண்டே இருக்கிறது. உடுப்பிட்டி சூழலில் எத்தனையோ பெண்கள் ஆசிரியர்களாகவும் பெரும் உத்தியோகத்தர் ஆகவும் வருவதற்கு ஏதுவாக இருந்தாயம்மா. பல மாணவர்களைப் பட்டதாரிகளாக்க வழிவகுத்தாய்

1977 ம் ஆண்டுவரை உயர்தர விஞ்ஞான வகுப்பு இல்லாக்குறை இருந்தது அதையுணர்ந்து விஞ்ஞான பீடத்தை உருவாக்கி வைத்தபெருமை அக்கால அதிபர் திருமதி க. இரத்தினசாமி அவர்களுக்கே. உடுப்பிட்டி வல்வெட்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, அச்சுவேலி, கரணவாய், நவிண்டில் போன்ற கிராமங்கள் அடங்க எண்ணற்ற மாணவர்கள் பயனடையக் கூடியதாய் உன்சிறப்பு இருந்தது.

விளையாட்டுத்துறையில் அநேக வீரர்களைப்பெற்றாய். உடற்பயிற்சியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தை மூன்றுமுறை எடுக்க கூடியதாக வளர்ந்த பெருமை போற்றுதற்குரியதன்றோ.

செல்வி மேன் காலத்தில் சகலதுறைகளிலும் மாணவர்கள் போட்டிகளில் கலந்து வெற்றியீட்டியமை கண்டு பாடசாலை மாதாவாகிய நீ பூரிப்படைந்தாய். அதுமட்டுமல்ல பரீட்சைப் பெறுபேறுகளில் தர முயர்ந்த சித்திகளைப் பெற்றுள்ளார்களே என்று பெருமை யடைந்தாய்.

இதுவரை காலம் அழகுடன் தலை நிமிர்ந்து பெருமையுடன் நிலைநிறுத்தப்பட்ட நீ 1987 ம் ஆண்டு சீரழிந்து சீர்குலைந்தாய் உன்னைப் பார்த்து நாம்எல்லோரும் கண்கலங்கி ஏங்கித் தவித்தோம். எத்தனையோ இளஞ்சிறார்களின் எதிர்காலக் கல்வியை தவிக்க விட்டநிலையில் நீ சீர்குலைந்து நின்றாய். அப்பொழுது அதிபராக இருந்த திருமதி இராஜேந்திரசிங்கம் அவர்கள் துடியாய்த் துடித்து என்ன செய்வது என்று அறியாது திகைத்தார்

பாடசாலை மாதாவாகிய நீ தளர்ந்துவிட்டநிலையில் உன்னைத்தேற்றுவது எப்படி, உயர்த்துவது எப்படி என்று ஆலோசித்தனர். இவ்வளவு சீர்குலைந்தநிலையில் நீ இருந்த வேளையிலும் தாயென்ற ஸ்தானத்தில் கல்வியைப் பாதிப்படையாத வகையில் பொறுப்பினையும் பொறுமையினையும் கடைப்பிடித்தாய் அம்மா பின்னர் பெரிய பெரிய கொட்டில்கள் அமைக்கப்பட்டு இங்கு படித்த மாணவர்கள் வேறுபாடசாலைக்குச் செல்லாது உன் சுயகௌரவத்தைக் காப்பாற்றப் பாடுபட்டார்கள்; உன் அதிபர் ஆசிரியர்கள், தற்பொழுது படிப்படியாக மாணவர்களின் கல்விநிலை உயர்ந்து கொண்டே வருவதற்கு உன் பொறுமைதான் காரணம்.

உன் நிலைகண்டு ஏங்கித்தவித்த எங்களைச் சாந்தப்படுத்தி தன்னாலான முயற்சி எல்லாம் செய்து பாடசாலையின் தரமும், கல்வியின் தரமும், ஏகபோக நிகழ்ச்சிகளின் தரமும் குறையாது, காத்துவளர்த்த பெருமை அண்மையில் இளைப்பாறிய எங்கள் அதிபர் திருமதி இராஜேந்திரசிங்கம் அவர்களுக்கே உரியது.

வழிவழி எங்கள் கல்லூரி வாழ்வாங்கு வாழவேண்டும் என்ற நல்லாசியுடன் இளைப்பாறிச் சென்றார் எமது அதிபர் திருமதி. இராஜேந்திரசிங்கம் அவர்கள்.

எமது கல்லூரி மாதவே! இன்னும் உன்னிடத்தே படிக்கவரும் குழந்தைகள் மேலும் நல்லபயனடைய வேண்டும் என்ற பொறுப்பை எடுத்துக் கொண்டார்; திருமதி குட்டித்தம்பி அவர்கள்.

தாயே! பல்லாண்டு காலம்
தலை நிறந்து ஓங்கி வாழியவே
வாழ்க கல்லூரி
வளர்க கல்வி
ஓங்குக உலகமெல்லாம்

மனிதனிடம் ஏற்கனவே பொதிந்திருக்கும் பூரணத்துவத்தை
வெளிக் கொணரல் கல்வியாகும்,

— சுவாமி விவேகானந்தர் —

நினைவில் நிறைந்த ஞானக்கா

திருமதி. அம்பிகை பாலசிங்கம்
ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
பழைய மாணவி (1945 — 1960)

பசுமை நிறைந்த நினைவுகள் — வானத்திலே சிறகடித்துப் பறக்கின்றன. சிறகடித்துப் பறந்து செல்லும் நினைவுகள் மெதுவாகக் கீழே இறங்கி . இன்று உடுப்பிட்டி மகளிர் கல்லூரியெனப் பீடு பெற்று விளங்கும் அன்றைய உடுப்பிட்டிப் பெண் பாடசாலையின் வடகிழக்கு மூலையில் உள்ள தொங்கல் வகுப்பறையில் தரித்து நிற்கின்றன. அங்கே .....

அன்பு, அறிவு, அடக்கம் ஆற்றலுடன் இன்முகம் கொண்ட ஞானக்கா. அரியநாயகம் தம்பதியினர் தங்கள் ஞானச் செல்விக்கு எத்துணைப் பொருத்தமாகப் பெயர் சூட்டினர்! மெலிந்த குள்ளமான தோற்றம். கார்முகிலின் நிறம், சிறிது கூனல் விழுந்த முதுகு. எப்பொழுதும் அமைதியும், சாந்தமும் பொலியும் முகத்தில் எவரையும் தன்பால் இழுத்துவிடக்கூடிய நீரோடை யொத்த இளநகை. பம்பாய் மில் பருத்திப் புடவைகளில் மெல்லிய வர்ணங்களே அவருக்குப் பிடித்தவை போலும். கஞ்சி போட்டு நன்றாக அழுத்தப்பட்ட புடவையை அழகாகச் சுருக்கு வைத்து உடுத்திப் பின்னால் ''குதிரை வால்'' போன்று செருகிக் கொள்வார். புடவையின் வர்ணம், உடுத்தியிருக்கும் நேர்த்தி, நடந்துவரும் பாங்கு அனைத்துமே கச்சிதமாக இருக்கும். இவை தாம் ஞானக்காவின் உருவப் பொலிவு.

கணீர் கணீர் கணீரென வகுப்புத் தொடங்குவதற்கான மணி ஒலிக்கின்றது. ஞானக்கா தனக்கே உரித்தான இளமுறுவலுடன் இரண்டாம் வகுப்பினுள் நுழைகின்றார், மாணவிகள் அனைவரும் எழுந்து வணக்கம் கூறி அமருகின்றோம். மாணவியர் இருக்கைகளின் வெற்றிடங்களை அவரது கண்கள் மேய்கின்றன. அன்று பாடசாலைக்கு வராத மாணவியரைப் பற்றியும் அதற்கான காரணம் குறித்தும் மற்றைய மாணவியரிடம் விசாரிக்கின்றார். வராதிருந்து அன்று வருகை தந்துள்ள மாணவிகளைத் தனக்கு அருகில் அழைத்து அவர்களின் சுகசேமங்களைத் தாயைப் போன்ற பரிவுடன் விசாரிக்கின்றார். பாடம் தொடங்குகின்றது, கணித பாடத்தில் இலகுவான எளிமையான விளக்கம். ''அம்மா சுட்ட தோசை, தட்டில் இருந்த தோசை; நான் சாப்பிட்ட தோசை...'' கூட்டல் விருத்தி தோசையின் மணத்தோடு சிறுமிகளின் மனதில் ஆழமாகப் பதிந்துவிடும். பாடம் விளங்காத மாணவருக்கு மீண்டும் மீண்டும் விளக்கம் கொடுப்பதோடு அம்மாணவியரைக் கரும்பலகைக்கு அழைத்து அவர்களைக் கொண்டே அக்கணக்குகளைச் செய்விக்கின்றார்.

எழுத்துப் பாடம் என்றால் ஞானக்காவின் மெலிந்து நீண்ட அழகான விரல்கள் வெண்கட்டியை இறுகப் பற்றிக் கரும்பலகையில் முத்தாரம் கோர்க்கும். சொற்களுக்கிடையே இடைவெளி விடவேண்டும் எனக் கூறி தனது அழகான விரலை இடைவெளிகளில் வைத்துக்காட்டி மாணவியருக்கும் அம்முறையைப் பதிப்பார் நாளெல்லாம் ஞானக்காவின் எழுத்தழகைப் பார்த்துக்கொண்டேயிருக்கலாம். ஏறக்குறைய நாற்பத்தாறு வருடங்கள் கழிந்தும் ஞானக்காவின் எழுத்தழகு கண்ணுக்குள் நிற்கின்றது என்றால் இதனிலும் மேலான விளக்கம் கூறவும் வேண்டுமோ? பேச்சு, வாசினை, சூழல் அனைத்துப் பாடங்களுமே அப்படித்தான். தெளிவான விளக்கம், அழுத்தமாகப் பதிய வைக்கும் கற்பித்தல் முறை.

அபிநயப் பாடல்கள் என்றால் ... ஞானக்காவிற்குத் தேமதுரக் குரல். கையில் ஒரு சிறு கொட்டன் — தாளம் தப்பாமல் மேசையில் ஒலி எழுப்ப நாங்களும் சிறு கைகளைத் தட்டி ஞானக்காவுடன் சேர்ந்து பாடுகிறோம். தப்புத்தாளம் போடும் மாணவியரின் கைகளைத் தானே பிடித்துத் தட்டிக் காண்பிக்கிறார்.

''வீமா வீமா ஓடி வா வா'' என்ற பாடல் சிறு காற்சட்டை மட்டுமே அணிந்த சிறுமியின் இடையில் சிறு சிறு வேப்பங் கிளைகளைத் தொடுத்து ஞானக்கா கட்டி விடுகிறார். மேல் முழுவதும் கரித்தூள்

பூசி முகத்தில் குறுந்தாடியும் பரட்டைத் தலையுமாக வேடன் கையில் வில்லும் அம்புந் தாங்கித் தன் நாய் வீமனுடன் வருகிறான், அணிலைத் துரத்திக் களைத்த வேடன் அணில் மரப்பொந்தினுள் நுழைந்ததைக்கண்டு வீமனுக்குக் காட்ட; வீமன் வேடனின் தாடியை அணிலின் வால் என நினைத்துப் பிடித்திழுக்க..... வேடனின் தாடி அறுந்து வீமன் ஒரு புறமும் வேடன் ஒரு புறமுமாக விழ .. என்ன ஆரவாரம்! என்ன சிரிப்பொலி!! சிறுமிகள் அனைவரும் அக் காட்சியைப் புகைப்படக் கருவிபோல மனதினுள் ' கிளிக்'' செய்து விடுகின்றனர். ஆண்டுகள் பல உருண்டோடினும் மாணவியரின் மனதை விட்டகலாத காட்சியும் பாடலும்

ஆங்கில வகுப்புகள் சோடை போகுமா ? தெளிவான நேர்த்தியான உச்சரிப்பு. ஆங்கிலத்தில் சிறுவர்களுக்கான பாடல்களைக் கற்பிக்கும் பொழுது வெள்ளையும் கறுப்புமான ஆட்டுக் குட்டிகள் சிறு செவிகளுடன் வகுப்பினுள் உலாவித் திரியும். முன்னுக்கு வந்து ஆடிப் பாடக் கூச்சமுடைய மாணவிகள் போர்வைகளால் தம்மைப் போர்த்திக்கொண்டு ஆட்டுக் குட்டிகளாக நடிப்பர். '' **Mary had a little lamb; Its fleece was white as snow**" ..... பனிபோன்று வெண்மையான ஆட்டு உரோமம்..... வெள்ளை ஆட்டுக் குட்டியை வகுப்பினுள் பார்க்கும் பிஞ்சு உள்ளங்களில் ஆழமாகப் பதிந்து விடும் ஞானக்காவின் கற்பித்தல் நேர்த்தியைச் சொல்லப்புகின் எல்லையின்றி விரியும்.

பாடசாலை விறாந்தையில் நடந்து வந்துகொண்டிருக்கும் ஞானக்கா ஐந்தாம் வருப்புக்கு முன்னால் நிற்கிறார். ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் அவர்களது ஆசிரியரினால் தண்டனைக்காக நிற்பாட்டப்பட்டுள்ளனர். முகத்தில் கேள்விக் குறியுடன் அந்த ஆசிரியரைப் பார்த்த ஞானக்காவிற்கு -' வேடரின் வீடுகள் எதனால் கட்டப்பட்டிருக்கும் என்ற கேள்விக்கு ஒருவருமே சரியான பதில் சொல்லவில்லை ஞானக்கா '' என்று ஆதங்கத்தோடு அந்த ஆசிரியர் கூறுகின்றார். வழமையான அதே முறுவலோடு ஞானக்கா தன்னிடம் இரண்டாம் வகுப்பில் படிக்கும் ஒரு சிறுமியைக் கூட்டி வரும்படி நின்ற மாணவர்களில் ஒருவரைப் பணிக்கின்றார். சிறுமி வந்தாள். ஐந்தாம் வகுப்பு ஆசிரியை அதே வினாவைச் சிறுமியிடம் கேட்கின்றார், தன் ஆற்றலுக்கேற்ப. வேடர்களைப் பற்றியான பூரண அறிவை ஞானக்காவிடமிருந்து பெற்றுக்கொண்ட அச் சிறுமி பளிச்சென சரியான விடையைக் கூறிவிட்டாள். தலைச்சன் குழந்தையை ஆணாகப் பெற்றெடுத்த தாயின் முகப்பொலிவை அந்த நேரம் ஞானக்காவிடம் காண முடிந்தது.

இன்றைய ஆசிரிய உலகிற்கு ஞானக்கா ஓர் சிறந்த வழிகாட்டி. தனது புனிதமான கடமைக்காகத் தனது உடல் பொருள் ஆவி, அனைத்தையும் அர்ப்பணித்த ஞானகுரு. இன்றைய ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ஞானக்காவைப் போன்று கடமையாற்றக் கூடுமானால் தங்கள் ஆசிரியரைப்பற்றி எழுத விழையும் மாணவ மணிகளின் ஆக்கங்களை வெளியிட எத்தனை ' நினைவு மலர்'' வேண்டும்!!

வாழ்க்கையில் சாவு ஒரு பெரிய இழப்பில்லை. ஆனால் நாம் வாழும் பொழுதே நம்முள் இருக்கும் ஒன்று இறந்து போவது தான் ஒரு பெரிய இழப்பு.

— நோர்மன் கஸின்ஸ் —

உடுப்பிட்டியில் எனது நினைவுகள்

திருமதி. நிர்மலாதேவி விஜயகுமார்
B. Sc. (1 st Class Honours) M. Sc.
விரிவுரையாளர் U. K.
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
பழைய மாணவி (1957 — 1967)

தந்தையின் கைகளைபற்றியபடி ஒன்றுமறியாத சின்னஞ்சிறுமியாக மலங்க மலங்க விழித்தபடி உடுப்பிட்டிப் பெண் பாடசாலை வாயிலை மிதித்த என் கால்கள் பின் பருவப் பெண்ணாகப் பல்கலைக் கழகம் புகுந்து தேர்ச்சி பெற்று இன்று அந்நிய நாட்டில் சுயமதிப்போடும் தன்னம்பிக்கையோடும் நடமாடுகின்றன எனில் அதற்கு மூலகாரணம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரிதான். குழந்தையாக நுழைந்த எனக்கு அறிவுபுகட்டி, எனது திறமைகள் என்னவென்று அறிந்து, அவற்றுக்கு மெருகூட்டி இன்று நான் உடுப்பிட்டிப் பழையமாணவி என்று பெருமையுடன் சொல்லிமகிழும் வண்ணம், அதற்குக் கர்த்தாவாய்த் திகழ்வது எனது பாடசாலையே. அங்கு படிக்கும் போது, நான் அடைந்த அனுபவங்கள், கழித்த இனிமையான நாட்கள் யாவுமே பசுமரத்தாணியாக மனதில் நிற்கின்றன.

எனது பள்ளிவாழ்க்கையில் நான் இன்றும் நினைவு கூருபவர்கள் ஆசிரியை திருமதி ஈ. சி. ஜெயராஜா, இளைப்பாறிய அதிபர் திருமதி பா. இராஜேந்திரசிங்கம் மறைந்த அதிபர் செல்வி ஆர். ஜே. மேன் ஆகியோர் ஆவர். இம்மூவரும் இன்று நான் இந்நிலையில் இருப்பதற்கு முக்காலி போல் அமைந்தவர்கள். இவர்களுடன் ஆசிரியை திருமதி பொ. இரத்தினம் அவர்களும் எனது ஆரம்பகால வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்தவர். இவர்கள் எனக்கும் குருவாக மட்டுமன்றி நல்ல நண்பர்களாக, தாய்மாராக, இருந்து எமது வகுப்பினர் செய்யும் குறும்புகளுக்கும் குழப்படிகளுக்கும் ஈடுகொடுத்து வந்தனர்.

நான் 7 ம் வகுப்பில் படிக்கும்போது வருட இறுதியில் வகுப்புகளுக்கிடையே நாடகப்போட்டி நடைபெறுவது வழக்கம், எமதுவகுப்பில் என்னையும் இன்னும் சில சக மாணவர்களையும் சேர்த்து ''யூலியசீசர்'' கதையின் ஒரு பகுதியை எம்மைப் பழகுமாறு பணித்தார், எமது வகுப்பாசிரியை திருமதி இரத்தினம். அவர்கள் இந் நாடகத்தைச் சிறப்பாக பழக்க அவர் எடுத்த முயற்சியோ பெரியது. நாமும் வினளயாட்டுப் பிள்ளைகள் பேச்சு வாங்கி வாங்கி (சமயத்தில் அடியுங்கூட) பழகினோம். இருந்தும் நாடகப்போட்டி அன்று ஆசிரியையின் தந்தையின் திவஷயானகையால் அவரால் அன்று பாடசாலை வரமுடியவில்லை. அவர் எமக்குத் தந்தஊக்கத்தினால் அன்று நன்றாக நடித்து முதற்பரிசையும் தட்டிவிட்டோம். குதூகலத்தினால் நாம் குழுவாக நேரே ஆசிரியர் வீட்டிற்கே படையெடுத்து விட்டோம். நாம் முதலாவதாக வந்த செய்தி கேட்ட திருமதி இரத்தினம் சந்தோஷமிகுதியில் எம்மை அரவணைத்து பெற்ற தாய்போல் தான்செய்த தின்பண்டங்களை எமக்குத் தந்து சாப்பிடவைத்து மகிழ்ந்ததை இன்னும் மறக்கவே இல்லை.

அடுத்து நாம் எட்டாவது வகுப்பு படிக்கும்போது ஆசிரியை திருமதி ஜெயராஜா எம்மூரில் திருமணமாகிய பின் எமது பாடசாலைக்கு மாற்றலாகி வந்து எமக்கு விஞ்ஞானமும் ஆங்கிலமும் படிப்பிக்க ஆரம்பித்தார். வகுப்பாசிரியராக இருந்து இரசாயனத்திலும், ஆங்கிலத்திலும், ஈடுபாடுவரச்செய்து இவர் எமக்கு ஒரு நல்லாசிரியராகவும் இன்று வயது வேறுபாடுகளைக் கடந்து நல்ல சிநேகிதியாகவும் விளங்குகிறார் அவரது மூத்தகுழந்தை சந்திரிகாவின் முதல்பிறந்த நாளின் போது, எமதுவகுப்பு மாணவியர் யாவரும் எமது சக்திக்கு ஏற்றவாறு 'கன்டொஸ் வாங்கி விழாவிற்குச் சென்ற ஆசிரியையிடம் அனுப்பியதும், அதற்கு அவர் கூடைநிறைய 'கேக்கும் பின்னர் ஒவ்வொருவருக்கும் பிறந்தநாள் புகைப்படம் ஒவ்வொன்றும் கொண்டு வந்து தந்ததும் நினைவில் இன்றும் இனிக்கின்றது.

முன்னைய அதிபர் திருமதி. இராஜேந்திரசிங்கம் நான்படித்த காலத்தில் எமக்குக் கணிதம் கற்பித்தார். அப்போது நான் G. C. E (O / Level) படித்துக் கொண்டிருந்தேன் G. C. E. 'C' Science என்பது எமது வகுப்புப் பிரிவு. இவ்வகுப்பில் உள்ள நாமனைவரும் மிக ஒற்றுமையாகவும் நெருங்கிய நண்பிகளாகவும்

இருந்தோம் தனியே பெயர் சொல்லி எம்மை அழைக்காமல் G. C. E C. Science என்று சொல்வதில் எங்களுக்குத் தனி மகிழ்ச்சி. எமது வகுப்பினர் திருமதி இராஜேந்திரசிங்கத்தின் செல்லப்பிள்ளைகள். இந்தச் செல்லப்பிள்ளைகள் இன்று வெவ்வேறு துறைகளில் பரிமளிக்கின்றார்கள் என்றால் அதற்கு அவரிடம் பயின்ற கணிதமும் முக்கிய காரணி என்பது சந்தேகமே இல்லை.

இளவர்ணச் சேலையை கசங்காமல் கட்டி நிமிர்ந்த நடையுடன் வரும் கம்பீரமான உருவத்தைக் கண்டதுமே அவர் அதிபர் செல்வி. மேன் என்பது எவருக்குமே புரிந்துவிடும். எமதுபாடசாலையின் வளர்ச்சியில், மாணவர்களின் முன்னேற்றத்தில் அவரின் பங்குக்கு எவரும் நிகரில்லை. சின்னச் சின்ன விடயங்களைக் கூட அவதானித்து பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முறை வியக்கத்தக்கது. கல்வியில் மட்டுமன்றி சகலவிதமான கலைகளிலும் எமது பாடசாலை முன்னேற அடிகோலிய இவர், மாகாண ரீதியில். தேசியரீதியில் நடைபெறும் தேகப் பயிற்சிப் போட்டி, பேச்சுப் போட்டியில் பங்குகொள்ளும் மாணவிகள் யாவரும் திருப்தியான முறையில் பயிற்சிபெறுகிறார்களா, போதுமான அளவு பயிற்சிபெற்றுவிட்டார்களா என்பதில் இருந்து பயிற்சியின் போதும், பங்களிப்பின் போதும் பொருத்தமான ஆடை அணிகிறார்களா என்பது வரை அதி சிரத்தையுடன் கவனிப்பார், மாணவியரின் சுத்தம் பேணல், நேரந்தவறாமை ஆகியவற்றில் வெகு கண்டிப்பானவர் பாடசாலைக்குப் பிந்திவந்த காரணத்தால் பாடசாலை முடிந்ததும் வீட்டுக்குச் சொல்லாமல் பள்ளிக் கூட நந்தவனத்திற்கு தண்ணீர் ஊற்றிய அனுபவம் பலருக்குண்டு. அதில் நானும் அகப்பட்டுள்ளேன். ஆனால் அதே அதிபர் எனது திருமணத்திற்கு வந்து வாழ்த்தி எமக்கு அறிவுரையும் ஆசியும் தந்தது மறக்க முடியாததாகும்.

இவ்வண்ணமே எனது பாடசாலை என்று நினைத்தவுடன் எத்தனை எத்தனையோ சுவையான நிகழ்ச்சிகள் சுகமாக வந்து எனது நினைவலைகளை வருடுகின்றன. எனது பாடசாலை பல வளங்களும் பெற்று முதன்மையாக காலாகாலத்துக்கும் திகழ இறையருள் வேண்டுகிறேன்.

அகிலத்தின் அணையாத விளக்காகிய அறிவுச்சுடரே
மக்களுக்கு உண்மையான அணிகலன்.

- சோக்கிரட்டீஸ் -

சகல கலைகளையும் தந்து வளர்த்த கோயில்

திருமதி. சித்திரா மோகனகுமார்
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
பழைய மாணவி (1967 — 1980)

''பயிலும் பள்ளி கோயில்
படிக்கும் பாடம் வேதம்''

— கண்ணதாசன் —

''அரிது அரிது மானிடராதல் அரிது'' என மானிடப் பிறவியின் பயன் பேசப்பட்டுள்ளது. மானிடராகிய எங்களது ஆன்ம ஈடேற்றத்துக்கு ஆலயங்கள் பெரும் பங்களிப்பது போன்று, எங்கள் வாழ்வின் முன்னேற்றப் பாதைக்கு வித்திட்ட உடுப்பிட்டி மகளிர் பாடசாலை நமக்கு கலைப் பூங்காவாகவே என்றும் காட்சியளிக்கின்றது. காலங்கள் வேகமாக ஓடுகின்றன. ஆனால் அக்காலங்களில் சகல கலைகளையும் தன்னுள் அடக்கி தனக்கு நிகரில்லா அக்கலையினை எங்களுக்குச் சகல வழிகளிலும் போதித்து வழங்கிய நமது கலைக்கோயில் என்றுமே எமது நெஞ்சை விட்டகலாது. அக்காலங்களில் எதிர்நோக்கப்பட்ட சகல கலை அனுபவங்களும், கலை ஆக்கங்களும், கலைதந்த பெருமிதவாழ்வும் அக்கலையை அழகாக எடுத்தியம்பிய ஆசிரியர்களும் அழியாத ஓவியங்களாய் எம் நெஞ்சங்களில் என்றென்றும் நிற்கின்றனர்.

''பள்ளிப் பருவத்திலே கலைச் செல்வமதனை
அள்ளிப் பருகத்தந்த கலைக் கோயில்தனை
எண்ணி எண்ணி நிதம் வேதனை — இம்
மண்ணில் யாரிடம் அதை முறையிட,''

பள்ளிப் பருவத்திலே கண்ட படிகள் பல, அப்படிகளை வெற்றியுடன் கடந்து வெற்றி வீரராகி திரை கடலோடித் திரவியம் தேடுபவர்களில் ஒருவராகிக் காலத்தால் அழியாத எங்கள் கலைக்கோவிலைத் திரும்பிப் பார்க்கிறோம் எங்கள் கலைக் கோவில் எங்களுக்களித்த பள்ளிப்பருவம் இனி எம வாழ்வில் கிடைக்கப் போவதில்லை அனுபவமும் கூடத்தான். ஆலயங்களில் இறைவன் காட்சி அளிப்பது போன்று எங்களுக்கு கல்வியிந்த ஆசிரியப் பெருந்தகைகள் எமக்கு குருதேவர்களாகவே எமது சிந்தையில் நிறைந்து நிற்கிறார்கள்

நாம் பிறந்த மண்ணில் இயற்கை அழிவாலும் செயற்கை அழிவாலும் கோயில்கள் கட்டிடங்கள் மாடமாளிகைகள், கலைக் கூடங்கள் சிதைந்து போகலாம். ஆனால் கலைக்கூடங்கள் அரும்பாடு பட்டுக்கட்டி வளர்த்து உருவாக்கிய கலைப்படைப்புகள் என்றும் நிலைக்கவும் எங்கள் மகளிர் கல்லூரியின் பணிதொடரவும் நாம் என்றும் ஊக்கிகளாய் இருப்போம் காலம் காலமாகத்தொடரும் பல்வகை இன்னல்களுக்கும் அனர்த்தங்களுக்குமிடையில் சிக்கிச் சீரழியாமல் மகுடம் சூடிய மங்கை போல் எங்கள் கல்லூரி ஓங்கி வளர ஒன்றுபட்டு உழைப்போம்.

எங்கள் கலைக்கோயில் இந்த உலகிற்கு அளித்த நன்மலர்களுள் நானும் ஒருவளாகி ஆண்டுகள் நூறு உடன் இந்நிகழ்வினைக் கடந்து சென்றுகொண்டிருக்கும் எங்கள் கல்லூரித் தாய்க்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பிக்க வாய்த்த சந்தர்ப்பத்திற்காக இறைவனை வழுத்தி விடைபெறுகிறேன்.

தீபங்கள் திசைப்படுகின்றன

செல்வி. திருமகள் அரியநாயகம்
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
பழைய மாணவி (1978 — 1993)

கற்பனைக் கருவூலங்களிற்கு கலைக்கூடம், அறிவுத் தேடலிற்கு அரும் பொக்கிசம், உறுதி நிலையடைய ஒற்றைக் காலில் நிற்கும் கற்றயனிற்கு உதவும் ஏவுங்கூட்டத்தாருடன் சேர்ந்த ''C_6H_6'', கண்டல் நிலத் தாவரங்களின் கண்ணீருக்காக கருணை வடிவெடுத்த தாங்கும் வேர், மிண்டி வேர் கொண்ட காப்பகம். போதனைகள் ஏறவில்லை என வேதனைகளை ஏற்றிவந்த வீழ்படிவுகளின் தாழ்வு மனநிலைக்கு 'அரச நீர்' 'உடு' எனப் பகரும் சீக்கிரி மரத்தை தன் கண்ணே கொண்டு கரையோரச் சமவெளியில் வந்த 'மொனட்டு நொக்கு' (உடுப்பிட்டி) மீது ஒளிகாலும் மாதாவே உன் சோதிப்பிளம்பில் பெற்ற ஒளியால் மாலை தொடுத்து உன்னை யாசிக்கின்றோம்.

இல்லாத பொருளையும் வேடிக்கை பார்க்கும் மழலை கொலுவிருந்த எழுபதுகளின் இறுதியில், மரங்களும் கட்டிடங்களும் கைகோர்த்து வானளாவக் கதை பேசிய உனது அந்த நாட்களில் வெண்குஞ்சாய் முழந்தாளை மறைக்க முயன்று தோற்ற வெண்சீருடை மேலே தொங்க $\frac{\text{ஒன்று}}{\text{பூச்சியம்}}$ அளவு ஆசைகள், கனவுகள் சுமந்து புகுந்த நாள்

சுடரும் காலத்தில் கல்லூரி ஒழுக்கத்தைப் பேணுகின்றோம் என எங்களின் ஒழுக்கத்தைப் பேணி வளர்த்தோம். வெள்ளாடையின் நடுவே பசுமையைக் கிழித்த வெண்புரைப்பட்டி கழுத்திலே தொங்கி அசைந்தாட கால்கள் சொகுசாக கால்மேசின் அரவணைப்பில் சப்பாத்தினுள் ஒளித்தாட, இளம் மயில்களுடன் நிறைய எடை பார்த்தோம் நிறையை அல்ல விவேகத்தை,

ஆசையை பிரயாசையாகவும், பொறாமையைப் போட்டியாகவும். கோபத்தைக் கண்டிப்பாகவும் கற்றுத் தந்தாய் சுடமை, கண்ணியம், கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க எம்மை கற்பித்தாய்.

நிமிரச் சொல்லி உயர வைத்து விட்டாய். கல்லூரியின் மகிமைக்காக விளையாடுவதாய், பாடுவதாய் வேஷமிட்டு ஏழு ஸ்வரங்களின் ஜாலங்களை ஆலாபித்து அபிநயங்களை தேடி, முத்திரைகளைக் கோர்த்து எம்மையே மகிமைப்படுத்திக் கொண்டோம். அல்லாமலும் எங்கள் தவறுகளின் கை ஓங்கியபோது உனது தவறாத கண்காணிப்பால் தவறாது வழிப்படுத்தி திருத்தி விட்டாய்.

செருப்பிற்கேற்ற கால்களை உருவாக்கும் மா(னி)இடர் காலத்தில் காலுக்கேற்ற செருப்புக்களைத் தேடும் விதங்களை, அணியும் முறைகளை சொல்லியருளினாய்,

ஒத்த மின்னோட்டங்கள் ஒன்றையொன்று கவருவதை நட்பில் பிரயோகித்து 'நண்பனின் நண்பன் நமது நண்பன்' என தர்க்க சாஸ்திரத்தைத் துணைக்கழைத்து எல்லைகளை இல்லாமல் செய்து விட்டாய்.

உனது பெயரைச் சொல்லி எமது பெயரைச் சொன்னால் 'சிபாரிசு' எங்கள் பெயரைச் சொல்லி உனது பெயரை இணைத்தால் மகிமை. இது நடப்பியல் நவீன கோட்பாடு என கோடிட்டாய்.

87 இன் வசந்தகால வேளையில் இழந்து விட்ட இளமைக்கால அணிகலன்களால் 'சாந்தி நிகேதனத்தை' உன்னில் நாம் கண்டோம் இன்றும் உன் வரவில் அன்பும் திருப்தியும் அதிகம். ஆனாலும் நிகழ்ந்துவிட்ட பதிவுகளால் காசேட்டில் செலவுதானே மீதியானது.

பொருள் ஆதாரத்தை ஏட்டில் மட்டும் அறிந்து 'சுகம் + ஆதாரம்' ஆக நோய்கள் அணுகாது இருந்தோம். இதயக்குடா இடிந்தாலும், முடியுருநாடி முட்டுப்பட்டாலும் இதயம் இயங்க யோசிக்கும் என நுதல் சோணை சொல்லியும் ஏற்கவில்லை, ஏறவில்லை செலவில்லாமல் வரவுகள் வைத்தும், வரவில்லாமல் செலவுகள் செய்தும் மகிழ்ந்திருந்தோம்.

ஒளியே உன்னடியில் பேதங்களைத் தொலைத்து விட்டு அன்னப் பேடைகளாய் அணிவகுத்து நின்றோம். விதிப்படி பாலைக் குடித்தோம். தப்பிதமாய் நீரையும் நினைத்திருப்போம் பஞ்ச தந்திரத்தைப் பஞ்சமற்றுத், தரும் போது 'களையையும் கற்று மற' என கற்பித்ததனால் போலும்.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை ஆக காலச் சட்டத்தில் எம் காலங்கள் உயர்ந்து விட்டதனால் சிதனங்களைத் தந்து அனுப்புகிறாய். நாம் 'இசைவு விரிகை' அடைய வேண்டுமென விரும்புகிறாயா? உன்னால் ஏற்றுவிக்கப்பட்ட தீபத்துடன் உலகம் யாவையும் நமதுளவாக்கி நாடலுடன் ஆயிரமாயிரம் நற் சான்றுகள் வாங்கி உனக்கு தட்சணை ஆக்குவோம்.

மதம் பிடிக்காமல் மனம் நெறிப்பட மார்க்கங்களில் குறி வைக்கும் மகத்துவம், கொடுத்தல் கடமைத் துவம், கொள்ளல் உரிமைத்துவம் இவை மனையியல் தத்துவம், "தன்னைப்போல பிறரை நினை" என்ற விழுமிய வாழ்க்கைத்துவம், இருளில் நீக்கி ஒளியில் நடத்தும் பிருகதாரணிய உபநிடத சமத்துவம் இவை நீ கற்றுத் தந்தவைகளில் ஒரு சில கீற்றுக்கள்

அமிலத்தில் ஒரு நிறம், காரத்தில் மறு நிறம், பூணும் காட்டிகளுமல்ல, நிறம் மாறும் பூக்களுமல்ல, உன் வழிநடத்தலால் குறும் பார்வை, நீள் பார்வை குறைபாடு மனதில் தோன்ற முடியவில்லை. இனிவரும் பொழுதிலும் தோன்ற முடியாது.

வசந்தராகங்களில் ஆனந்த ரவியாக எம் இளமை ஊஞ்சல் ஆடிய வேளையில் விதி வரைந்த கடலோரக் கவிதைகளுக்கு சங்கராபரணமாக, ஒளி விளக்காக, நினைவுகள் நிழல்களாக என்றும் எம்மோடு தொடரும். காலம் திருடிவிட்ட கல்லூரிவாழ்க்கைக்கு எம் கண்ணீர்ப் பூக்கள் எப்போதும் மலர்ந்திருக்கும்.
'லெஸ்சின் விதி' இல் திசைகள் திசைப்படுவது போல் சில மக்களிற் நம் உனக்கும்ஒரு 'யுகாந்திரப் பிணைப்பு. — இராட்சதப் பங்கீடுப் பிணைப்போ? ↑↑ ஆக செதுக்கப்பட்ட இரு கோடுகள் சந்திக்க நாட் பார்க்கின்ற செயல் நடக்குமா?

பாடத்தை ஊமை விழிகளால் 'காழகிலைத' படித்து சொல்லத் துடிக்குது மனசு பொய்ச்சாட்சி அல்ல கல்ல. நீயோ நியூட்டனின் IIIம் விதியை நம்பியிருக்கிறாயோ. இவை பூச்சியம் பூச்சியம் என முடிவு செய்து விட்டாயோ

எமக்கு தெரியாமல் அருளப்பட்டுவிட்ட உலக தரிசனத்திற்கு அறிவு தரிசனத்தை காணிக்கையாக அனுப்புகிறாய் காலத்தின் ஊட்டத்தால் அறிவு விருட்சமாகி, ஆனந்த தரிசனம், சுயதரிசனம், தெய்வ தரிசனம் தேடிப் போகின்றோம் உலகின் வண்ணங்களை எண்ணங்களுடன் உரசிப்பார்க்க இரசிப்பாக்கப் போகின்றோம்?

ஒளி மாதாவே உனைப்பிரிந்து தனியாகப் போனாலும் ஒரு மகளாய், உன் நலன் விரும்பியாய் வருவேன் உன்னிடம் எப்பாதும். ஒளியே உன்னை நாம் நேசிக்கிறோம் உன்னால் நாம் இயற்கையை நேசிக்க, பூசிக்க முடிந்தது. உனை தாடும் இடர்கள் கவாலையில் பொசுங்கட்டும், சுடரில் உலகு பிரகாசிக்கட்டும்.

ஒளியே நீ நித்தியமாய் ஒளிர்வாயாக
ஒளியே வளருதி! சுடர்க — பிரகாசிக்க!

'Lighted to give Light'



→ வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி '92



↓

பரிசளிப்பு விழா '92




முன்னாள் அதிபர் திருமதி இராஜேந்திரசிங்கம் அவர்களுக்கு
→ பழைய மாணவரளித்த பிரியாவிடை நிகழ்ச்சி '93




→ முன்னாள் அதிபர் அமரர் செல்வி R. J. மான் அவர்கள் நினைவு நாள் பிரார்த்தனைக் கூட்டம் '92




நிகழ்வுகளில் சில















125-வது ஆண்டு நிறைவு ஞாபகார்த்த மலர்ப் போட்டிகள்

செல்வி. ஸீ. வன்னியசிங்கம் நினைவுப் பரிசிலுக்கான கவிதைப் போட்டி

கொடுக்கப்பட்ட கவிதை அடிகள் ;

"பண்டு தொட்டு மண்டுமிசைப் பாடசாலை யெங்கள் தாபனம்
அண்டு நெருப்பதுண்டு விட்ட சாம்பற்குவியலான போதிலும்"

கவிதை அடியெடுத்துத் தந்து உதவியவர் : திரு. கா. நீலகண்டன் ஆசிரியர் அவர்கள்

முதலாமிடம் :- திருமதி. ஜெயலட்சுமி கந்தசாமி (1957 — 1968)
இரண்டாமிடம் :- செல்வி. நாகேஸ்வரி இராசையா (1961 — 1972)
மூன்றாமிடம் :- செல்வி. கி உமா (1989 — 1990)

செல்வி R. J. மேன் நினைவுப் பரிசிலுக்கான கட்டுரைப் போட்டி

கொடுக்கப்பட்ட கட்டுரைத் தலைப்புகள் :

1. 'அல்லல்கள் மத்தியிலும் அணையா ஒளி ஏற்றிடுவோம்'
2. 'உடுப்பிட்டி மகளிர் கல்லூரி என் உயர்வுக்கு வழிகாட்டி'
3. 'அறிவைப் போற்றிடுவோம் அனைத்தையும் நாம் வென்றிடுவோம்'

தலைப்புகள் ஆக்கித் தந்துதவியவர் :
திருமதி. இராஜேஸ்வரி தில்லையம்பலம் ஆசிரியை அவர்கள்

முதலாமிடம் :- திருமதி, நவமலர் கந்தையா (1942 — 1951)
கட்டுரை : "உடுப்பிட்டி மகளிர் கல்லூரி என் உயர்வுக்கு வழிகாட்டி"

இரண்டாமிடம் :- திருமதி. தவமணி அழகலிங்கம் (1966 — 1975)
கட்டுரை : "அறிவைப் போற்றிடுவோம் அனைதையும் நாம் வென்றிடுவோம்"

மூன்றாமிடம் :- திருமதி, தங்கம்மா கந்தவனம் (1942 — 1962)
கட்டுரை : "உடுப்பிட்டி மகளிர் கல்லூரி என் உயர்வுக்கு வழிகாட்டி"

சிறுகதைப் போட்டிக்கான தரமான ஆக்கங்கள் எதுவும் கிடைக்கவில்லையென்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

அட்டைப்பட ஓவியப் போட்டி

முதலாமிடம் :- திருமதி. இராஜேஸ்வரி சச்சிதானந்தசிவம்
(முன்னர் செல்வி. இராஜேஸ்வரி இரத்தினராசா)
இலுமயாணன் மேற்கு, உடுப்பிட்டி.
பழைய மாணவி (1955 — 1966)

இரண்டாமிடம் :- திருமதி. ஸ்ரீராஜேஸ்வரி குழந்தைவேல்
(முன்னர் செல்வி. ஸ்ரீராஜேஸ்வரி கோபாலகிருஷ்ணன்)
தெணியம்பை, வல்வெட்டித்துறை.
பழைய மாணவி (1945 — 1957)

போட்டிகளில் கலந்து கொண்ட அனைவர்க்கும் எம் நன்றிகள் உரித்தாகுக.

போட்டிகளுக்கு நடுவர்களாயமைந்தவர்க்கும், கவிதை அடிகள், கட்டுரைத் தலைப்புகள் ஆக்கித் தந்தோர்க்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

— மலர்க் குழுவினர் —

பட்டுவிட்ட கடனிலொரு பகுதி தீர்க்கப் பணி செய்வோம்

திருமதி. ஜெயலட்சுமி கந்தசாமி
(முன்னர் செல்வி. ஜெயலட்சுமி சேனாதிராஜா
இமையாணன், உடுப்பிட்டி.
பழைய மாணவி (1957 — 1968)

பண்டு தொட்டு மண்டு மிசைப் பாடசாலை எங்கள் தாபனம்
அண்டு நெருப்ப துண்டு விட்ட சாம்பற் குவியலான போதிலும்
கண்டு நெஞ்சு விம்மும் காடாய் அழகழிந்த போதிலும் — கலைத்
தொண்டு உண்டு ஊழி வரைக்கும் என்றுரைக்கும் ஆலயம்.

செழுமை தரு செல்வம் பல தேடி கோடி சேர்க்கினும்
முழுமை யில்லை உடலம் வீழ முற்றும் சொந்த மற்றதாம்
எழுமை வரை தொடருமொரு நீகரிலாத நிதியமாம் — அந்தப்
பழுதிலாத கல்வி தந்த பதியின் வாசல் மறக்குமோ ?

பேசு மழலைப் பிஞ்சு மகளாய் வந்தணைந்த நாள் முதல்
ஆசிலாத தாயனையார் அரிய பல நெறி சொல
மாசில் மன ஆழ நட்பின் மகிழ்வு நெஞ்சில் ஊசலிட — வாழ்வு
தேசுமயமாய்த் திகழ்ந்த காலம் நினைவிலென்றும் திகட்டுமோ ?

எடுத்த பணிக்கேயர்ப்பணமாய் விடுத்து வாழ்க்கை தவமானோர்
மிடுக்கும் ஞானச் செருக்குமுறை ஆளுமையே வடிவானோர்
தடுத்த சமூகத் தளைகள் அறுத்தே சாதனைகள் படைத்தவர்கள் — இங்கு
அடுத்தடுத்து அதிபராகித் தொடுத்த புகழும் தீயுமோ ?

கட்டிடங்கள் சரிந்து கீற்றுக் கொட்டில்களே தஞ்சமாய்
இட்டிடைஞ்சல் பட்டு இன்று பாடங்களைத் தொடர்கையில்
வெட்டவெளியில் கூடிக்கீதம் வெறுமையாகக் கேட்கையில் — இசைத்
தட்டுச் சுழல இயைந்து நடந்த நினைவு நெஞ்சில் நெருடுது

எத்தனையோ தடவை யெங்கள் அன்னை உடலிற் புண்பட்டாள்
சொத்தனைத்தும் தொலைத்த பின்பும் அணையாச் சோதிச் சுடருளாள்
நித்தம் இந்த மண் அளந்து நிலைபெற்றுயர்ந்து விளங்குமக்கள் — இன்று
எத்தனையோ பேரிருந்தும் அன்னை அவலம் தீர்க்க வகையிலையே.

தொட்டு மண்ணை முத்த மிட்டு தோழர் மனதில் சூள்கொள்வோம்
கட்டவிழும் காலம் வரும் காத்திருந்து கரங்கொடுப்போம்
மட்டில்லாத மகிழ்வுடனே மாடிமனைகள் புரமைத்து — தாய்க்குப்
பட்டுவிட்ட கடனில் ஒரு பகுதி தீர்க்கப் பணி செய்வோம்.

(125 ஆவது ஆண்டு நிறைவு ஞாபகார்த்த மலர்: செல்வி. ல. வன்னியசிங்கம் நினைவுக் கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை.)

வாழி நீ பல்லாண்டே !

செல்வி நாகேஸ்வரி இராசையா
சந்தை வீதி, உடுப்பிட்டி.
பழைய மாணவி (1961 – 1972)

பண்டு தொட்டு மண்டுமிசைப் பாடசாலை எங்கள் தாபனம்
அண்டு நெருப்பதுண்டு விட்ட சாம்பற் குவியலான போதிலும்
தொண்டு பல புரிந்து தோள் நிமிர்த்தி நிற்கும் எங்கள் தபோவனம்
எண்டிசையும் மணம் பரப்பும் எதிடர் வந்திட்ட போதிலும்

வண்டெனச் சிறார்கள் கல்விபயின்றிட வந்து குவியும் எங்கள் நந்தவனம்
செண்டெனச் செம்மையுடன் சிரித்து நிற்கும் சஞ்சலம் வத்துற்ற போதிலும்
கண்டு வியந்து களிகூர்ந்து பலர் நாடும் எங்கள் பிருந்தாவனம்
விண்டு கவிபாடி வியப்பிலாழ்த்த விழைகின்றேன் ஓர் நிமிடமாகிலும்

ஆயிரத்து எண்ணூற்று அறுபத்து எட்டு அது
பாயிரத்தில் பதிந்திடக் காவ்பதித்த ஆண்டு
வாயிருந்தும் சொல்லாது வடிக்கிறேன் கவிதையில்
பேயிருந்த கூடமென்றது புண்ணிய கூடமான கதையை

அன்று அமெரிக்க மிஷனரிமார் தாபித்த கூடம்
நின்று உடுப்பிட்டியில் நீடுபணி செய்த மாடம்
குன்று மேல்வைத்த ஓர் ஒளி தீபம் ஆனது,
இன்று பார் புகழ் பெண்கள் கல்விப் பீடம் ஆனது

மத்தாயும் மதியாபரணமும் மனதில் நிறைந்திருக்க
லீயும் மானும் சீர்மிகு செய்து சிறப்பிக்க
இரத்தினசாமியும், இராஜேந்திரசிங்கமும் வழி தொடர்ந்து அணிசெய்ய
வளர்ந்தது கல்வி சிறந்தது ஒழுக்கம் மிளிர்ந்தது கலாசாலை.

முத்தமிழும் முழுமதியாய் மலர்ந்திட முதறிஞர் பலர்
சத்தமின்றிக் கல்வியைச் சாந்தமாய் சொரிந்திட பேரறிஞர் பலர்
சித்தமெலாம் வெற்றிக்காய் உழைத்திட நல்மணிகள் பலர்
பத்தரை மாற்றுத்தங்கம் பட்டொளி வீசிட ஆசி நல்கினர் பலர்


மண்ணும் விண்ணும் வாய்திறந்து வாழ்த்துப்பாட
எண்ணும் எழுத்தும் ஏற்றம்பெற்று ஏழிசை பாட
கண்ணும் காதும் கண்டும் கேட்டும் களிப்பிலாழ்ந்திட
பொன்னும் பவளமும் ஒருங்கிணைந்து ஓர் பூ ஆகினாய்.

ஒளிர்வதற்காய் ஒளியேற்ற வந்த தாயே
களிப்பதற்காய் கவின்கலையில் உயர்ந்த மாதே
படிப்பதற்காய் நாடியவரை சிறப்பித்த பேறே
வடித்தெடுத்தேன் நின்சிறப்பை வாழி நீ பல்லாண்டே

(125 ஆவது ஆண்டு நிறைவு ஞாபகார்த்த மலர்:
செல்வி. லீ வன்னியசிங்கம் நினைவுக் கவிதைப் போட்டியில்
இரண்டாமிடம் பெற்ற கவிதை)



எங்கள் அரங்குகளில்
















உடுப்பிட்டி மகளிர் கல்லூரி என் உயர்வுக்கு வழிகாட்டி

திருமதி. நவமலர் கந்தையா
(முன்னர் செல்வி. நவமலர் ஐயாத்துரை)
61, வித்தியாலய வீதி, திருகோணமலை.
பழைய மாணவி (1942 — 1951)

"இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த் தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளக்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்."

என அழகுற அமைவுற எடுத்தியம்பினார் புரட்சிக்கவி பாரதி. உடம்பினை வளர்க்கும் அன்னசாலையினும் உயிரினை வளர்க்கும் அறிவுச்சாலை சிறந்ததென அறைதலும் வேண்டுமோ. 'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியான இறைவன் கல்லார் நெஞ்சில் நில்லான்' என்னும் உண்மையை உணர்வோமேயாயின் இறைவனை வணங்குதற்குரிய ஆலயங்களை அமைப்பதற்கு முன்னே அறிவினை வளர்க்கும் கல்லூரிகளை அமைத்தல் வேண்டுமென்பது இனிது விளங்கும். வீடு தோறும் கலையின் ஒளி திகழ வேண்டும். வீதிதோறும் இரண்டொரு கல்லூரி இலங்க வேண்டும். நகரந்தோறும் கலாசாலைகள் ஓங்க வேண்டும். கல்வியை அறியாத கசடர் வாழும் ஊர்களை எரியினுக்கிரையாக்க வேண்டும் என்ற பாரதியின் எண்ணத்தை பிரதிபலிப்பதுபோல் அமைந்தவையே நம் ஈழநாட்டில் ஆங்காங்கே ஆங்கிலேயரால் அமைக்கப்பட்ட கல்லூரிகள். அவற்றில்

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை."

என்று பறைசாற்று முகமாக ஒன்றோடொன்று போட்டியிட்டு எழுந்தவையே உடுவில் மகளிர் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி. உடுப்பிட்டி மகளிர் கல்லூரி என்பன. இக் கல்லூரிகளில் எமது ஊரின் கலங்கரை விளக்காக இருளகற்றும் ஒளியாக விளங்கிய, விளங்குகின்ற, விளங்கப்போகும் கல்லூரிதான் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, 1868 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இக் கல்லூரி இரவீந்திரநாத்தாகூரின் "சாதித்திடு கேதன்" போல் இயற்கை எழில் நிறைந்த சூழ்நிலையில் அடர்ந்த மரங்களினூடே அழகுற இலங்குகின்றது. எத்தகைய இடையூறுகளும் எம் கல்லூரியை நிலைதடுமாறச் செய்யவில்லை.

தனது 125 ஆவது ஆண்டு நிறைவினை எய்தும் எங்கள் கல்லூரியில் நான் பெற்ற நலன்கள் தான் எத்தனை. என் சிந்தனை சிறகு விரித்துப்பறக்கிறது.

"பழைய மாணவர் கிழவி சுபமாய்
பற்கள் இல்லாமல் சிரித்துக் கொண்டு
கோலாகலமாய்" என்ற பாடல் என் காதில் வந்து மோதுகின்றது. ஆம் இப்பாடல் 1948 ஆம் ஆண்டு நடந்த பழைய மாணவர்களின் கலை நிகழ்ச்சியின்போது பாடப்பட்ட பாடல். அன்று அங்கு கூடியிருந்த வெண்பஞ்சுத் தலையும், பற்களை இழந்து சுருங்கிய தோற்றத்தோடு புன்னகை புரிந்து நின்ற பழைய மாணவிகளின் தோற்றம் எனக்கு அவ்வேளையில் நகைப்பைக் கொடுத்தது. ஆனால் இன்றோ எனது அதே தோற்றம், நான் என்னையே பார்த்துக் கொள்கின்றேன். அதே வெண்பஞ்சுக் கூந்தல், பற்களற்ற சுருங்கிய தோற்றம். காலதேவனின் வித்தைதான் என்னே? கிட்டத்தட்ட நாற்பதிற்கு மேற்பட்ட வருடங்கள். என் எண்ணங்கள் 1942 ஆம் ஆண்டிற்குத் தாவுகின்றன. எனது பாட்டி தாயார்,

கற்றத்தார் பலரின் அறிவுக் கண்களைத் திறந்த இக் கல்லூரியின் அதிபரின் அறை வாயிலில் முதன் முறை பாடசாலை செல்லும் ஆவலும் அச்சமும் ஒங்க ஒருவித பயத்துடன் என் தாயாரின் கையை இறுகப் பற்றிய படி நிற்கின்றேன். அறையில் சுத்தமும், அழகாகப் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் ஒழுங்கும், அமைதி நிறைந்த சூழ்நிலையும் எனக்கு பாடசாலையின் மேல் ஒருவித பக்தியை உருவாக்கியது அறையின் நடுவே நடுநாயகமாகக் கம்பீரத் தோற்றத்துடன் நூல்களின் மத்தியில் அமர்ந்திருந்த அதிபர் எனக்கு ஒரு தெய்வமாகக் காட்சியளித்தார். பாடசாலையில் சேர்ந்த அன்றே என் இளம் மனதில் இவ்வதிபரைப் போல் நானும் ஒரு காலத்தில் வரவேண்டும் என்ற எண்ணம் உருவாகியது, நாட்கள் செல்லச் செல்ல பாடசாலையின் பண்புகள் யாவும் என் இரத்தத்தில் ஊறியதுபோல் தோன்றியது, ஆங்கில பாதிரி மார்களின் மேற்பார்வையின் கீழ் பாடசாலை இயங்கியதால் மேல் நாட்டவர்களின் நற்பண்புகள் பல என்னையறியாமலே என்னுள் குடிகொண்டன. பெரியோரை மதித்தல், நேரந்தவறாது குறிப்பிட்ட வேலைகளைச் செய்தல், சுறுசுறுப்பு, கடவுள் நம்பிக்கை, தோல்வியைக் கண்டு தளராதிருத்தல் போன்ற நற்குணங்கள் என்னை வந்தடைந்தன. எனது வாழ் நாட்களில் எத்தனையோ முறை தோல்வியைத் தழுவி மனஞ்சலிக்கும்போதும் எம் கல்லூரியில் பாடப்படும் '' காப்பார் எமைக் காப்பார் காத்தவர் காப்பார் இன்னும் இனிமேல் காத்திடுவார் கலங்காதே மனமே '' என்ற வரிகள் எப்போதும் தென்பையூட்டும். இப்பாடலே என் உயர்வுக்கு உரம் இட்ட தெனலாம்.

அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பர். எனது இக் கல்லூரி வாழ்க்கைக் காலத்தில் முக்கியமான மூன்று அதிபர்களான செல்வி. கி. மதியாபரணம், செல்வி. லீ. வன்னியசிங்கம், செல்வி. R J. மேன் போன்றோரின் கீழ் கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. இவர்கள் மூவரும் இப்பாடசாலை வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றிய முத்தேவிகள் எனலாம். இவர்கள் மூவரும் என் வாழ்க்கையின் உயர்ச்சிக்கு வழிகாட்டிகள். செல்வி. கி. மதியாபரணம் எமது வளர்ப்புத் தாயெனலே கூறலாம். அன்பு, ஏழைகளில் இரக்கம், பொறுமை, ஒழுங்கு, கட்டுப்பாடு என்பன அவரின் முக்கிய நற்பண்புகளாகும். எந்த ஏழை மாணவியையும் கௌரவிக்கும் பண்பு அவரிடம் காணப்பட்டது. செல்வி. லீ. வன்னியசிங்கம் தோற்றத்தில் செல்வி. மதியாபரணத்திற்கு எதிரெனினும் பண்பில் அவரை ஒத்தவரே. எந்த வேலையையும் செய்வதற்குப் பிறரை எதிர்பார்த்தல் கூடாது என்பதைச் செய்கையாலேயே எமக்குணர்த்தியவர் வறிய பிள்ளைகளைத் தன் பிள்ளைகள் போல் வளர்த்தவர். பாடசாலை வளர்ச்சிக்காக இரவு பகல் உழைத்தவர். பாடசாலைகளுக்கிடையே போட்டி நடைபெறுமானால் அவருக்குத் தூக்கமே வராது. தானே பாடசாலையாக மாறிவிடுவார். இக் குணம் அவரின் கீழ் கல்விபெற்ற எமக்கும் ஏற்பட்டதில் வியப்பில்லை எதையும் அழகுக் கண்களோடு பார்க்கும் அவர் காலை ஆராதனையில் போது முதன் முதலாக மாணவர்களை வரிசை வரிசையாக இசைக்கோப்ப நடக்கவைத்து இரசிப்பார். அவரின் பின் பதவிக்கு வந்த செல்வி R, J. மேன் நிமிர்ந்த பார்வை உயர்ந்த தோற்றம், எதையும் ஊடுருவி நோக்குந் தன்மை மிகுந்தவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவையே அவரது தாரக மந்திரம். அவரது மிடுக்கான அழகிய தோற்றத்தில் மயங்கிய நாம் அவரையே எமது இலட்சியப் பெண்ணாக மனதில் பதித்தோம். இம் மூவரது உயர்ந்த பண்புகளே என் உயர்வுக்கு வழிகாட்டின. நூல் நிலயத்தில் எம் மனதைப் பதியவைத்து கிணற்றுத் தவளைகளாக இருந்த எமக்கு விசால அறிவை ஊட்டியது இக் கல்லூரியே. பற்பல ஊர்களிலிருந்து விடுதியில் தங்கி கல்வி கற்றவர்கள் எத்தனை பேர். இப் பலதரப்பட்ட மாணவர்களோடு கல்வி கற்றதன் காரணமாகவும் விடுதிச் சட்டதிட்டங்களுக்கு அமைய கடமைகளை ஆற்றியதாலும் கூட்டுறவு, விட்டுக் கொடுக்குந் தன்மை பகிர்ந்துண்ணும் பழக்கம், ஒழுங்கு, சுத்தம் போன்ற நற்பண்புகள் என்பால் வந்தடைந்தன. இப் பண்புகளே நான் வெளிநாடுகளில் கல்விகற்கும் போதும் உறுதுணையாய் நின்று என்னை ஓர் சிறந்த ஆசிரியையாக விளங்க வைத்தன. எனது முப்பது வருட ஆசிரியத் தொழிலுக்கும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வாழ்க்கையே அத்திவாரமாகும் என்னைப்போல் இன்று எத்தனை ஆசிரியைகள். மருத்துவர்கள், தாதிகள், அதிபர்கள், வக்கீல்கள். எழுத்தாளர்கள் இப் பாடசாலையின் அத்திவாரத்தில் தமது வாழ்வெனும் கட்டிடத்தைக் கட்டி திறம்பட வாழ்கின்றனர்.

Lighted to give Light (வெளிச்சந்தரவே வெளிச்சமாக்கப்பட்டது) என்னும் மகுட வாசகம் இக் கல்லூரிக்குச் சாலப் பொருந்தும். இக் கல்லூரிப் பெரு விளக்கிலிருந்து கொழுத்தப்பட்ட பல விளக்குகள் உலகின் பல பாகங்களில் ஒளி கொடுக்கின்றன. அதில் நானும் ஒரு சிறு அகல் விளக்காக இன்று ஒளிவீச உடுப்பிட்டி மகளிர் கல்லூரி உதவியது என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

வாழ்க உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
வளர்க அதன் பெருமை உலகெலாம்.

(125 ஆண்டு நிறைவு ஞாபகார்த்த மலர்.
செல்வி. R. J மேன் நினைவுக் கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை.)

அறிவைப் போற்றுவோம் அனைத்தையும் நாம் வென்றிடுவோம்

திருமதி. தவமணி அழகலிங்கம்
(முன்னர் செல்வி. தவமணி கந்தையா)
Franz. Liszt, Weg 7,
71083, Herrenberg.
Germany
பழைய மாணவி (1966 — 1975)

அறிவுடையொருவனை அரசும் விரும்பும் என்பதுதான் தமிழர் சம்பிரதாயம். மன்னர்க்குத் தன் தேசமல்லாற் சிறப்பில்லை. ஆனால் கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு. தமிழ் வரலாற்றில் அறிவு தான் கோலோச்சியிருக்கிறது. எக்காலத்திலே அறிவு குறைந்திருந்ததோ அப்போதுதான் நெட்டூரங்களும், நிர்ப்பந்தங்களும் மிதமிஞ்சி, எவ்வளவோ காலம் வளர்ந்து வந்த நாரீகத்தை அழித்தொழித்தது. இவ்வுண்மை தமிழ் மக்களுக்கு மாத்திரம் பொருந்துவதன்று. உலகத்திற்கே இதைப் பொதுமைப்படுத்திவிடலாம். அறிவை பெறாத, குறிப்பாகப் படிப்பறிவைப் பெறாத மக்கள் மிருகங்களுக்கு சமமானவர்களென்று வள்ளுவர் பச்சைத் தமிழிலே பகன்றுள்ளார். ''விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்'' இது இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் தமிழ் நாட்டிலே கருதப்பட்டதென்றால் ஐரோப்பாவில் எப்படிக் கருதப்பட்டது? ''கனம் பொருந்தியவனாயிருந்தும் அறிவில்லாத மனுஷன் அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்'' என்று பைபிளில் சங்கீதம் 49,20 கூறுகிறது. இரு மகான்களும் மிருகம் என்ற சொல்லைப் பிரயோகித்தது வெறும் தற்செயல் நிகழ்ச்சியல்ல.

அறிவரசர்களின் சிந்தனை ஒருமைப்பாடுகளைக் காலமோ, கண்டமோ, காதமோ பிரித்து விடுவதில்லை அறிவுடையவர்கள் எங்கேயிருந்தாலும் அவர்களோடு நேசமொன்றாயிருக்கும் என்று குமரேசசதகம் செப்புகிறது அறிவுள்ள மகான்கள் வெட்கப்படத் தெரிந்தவர்கள் என்கிறது கலித்தொகை அவர்கள் துரோகம் செய்யப் பின்நிற்பார்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்ற முயற்சிப்பார்கள், மறந்தும் மற்றவர்களுக்கு துன்பத்தைக் கொடுக்க மாட்டார்கள்.

தமிழ் வரலாற்றில் அதிகம் வாசித்த மகான் கம்பர். இராமர் காலத்தில் மக்களின் அறிவு எப்படியிருந்தது என்பதை இப்படி விளக்குகிறார்.

''கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்வி முற்ற
வல்லாரும் இல்லை அவை வல்லர் அல்லாரும் இல்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ''

அத்துடன் நிற்கவில்லை, அந்நகரத்தில் கல்வி என்னும் ஒரு விதையானது முளைத்து, வளர்ந்து, அளவற்ற கேள்விகள் என்னும் கிளைகளை வளரவிட்டு செய்வதற்கரிய தவமென்னும் இலைகள் தழைத்து, அன்பு என்னும் அரும்பினைத் தோற்றுவித்துத் தருமம் என்னும் மலரை மலரச்செய்து பேரின்பம் என்னும் பழத்தை பழுக்கச் செய்வதற்கு ஏற்ற இடமாக இருந்தது. இராமராச்சியத்திலே அரசவைக்குச் சென்ற அமைச்சர்கள் முதலில் முடிவில்லாத ஞானம் பெற்ற, அறிவு திரண்டு மனிதரூபமெடுத்த வசிட்டனை வணங்கிய பின்னர் தான் அரசனைத் தொழுதார்கள், அவ்வளவிற்கு அவர்கள் அறிவிற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

கல்லாதவர்களும், அறிவில்லாதவர்களும் எப்படி நடக்க வேண்டும் என்பதை கட்டளையிட்டார் வள்ளுவர், எப்படி? ''கல்லாதவரும் நனிநல்லர் கற்றார்முன் சொல்லாதிருக்கப்பெறின்'' வள்ளுவர் இதனோடு நிறுத்தவில்லை, சிலவேளைகளில் அனுபவத்தாலும், கேள்வி ஞானத்தாலும் அறிவைப் பெறக்கூடும், அப்படிப்பட்ட அறிவாளன் நிலைமையை இப்படி விளக்குகின்றார். 'கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும் கொள்ளார் அறிவுடையார்'. இப்படிப்பட்ட அறிவை நூல்பல கற்றவர்கள் அங்கீகரிக்கமாட்டார்கள். சுருங்கக் கூறின் அறிவும் வேண்டும், அதற்கான தகைமை பட்டமும் வேண்டும். இதை விளங்கிய தமிழர் தான் இன்று உலகம் பூராகவும் அறிவைப் பெருக்குவதில் சாதனையைப் படைக்கிறார்கள்.

அறிவின் முக்கியத்துவத்தைக் கொன்றை வேந்தன் இப்படிக் கூறுகிறது,

''நாற்பாற் குலத்தில் மேற்பாலொருவன்
கற்றிலனாயின் கீழிருப்பவனே
எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடிக் கற்றோரே மேல்வருமென்பர்''

கல்வியழகைப் பற்றி நாலடியார் எப்படிப் கூறுகிறார் தெரியுமா?

''குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல
நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவுநிலைமையால் கல்வியழகே அழகு''

அறிவுடையவர்களைப் பற்றிய ஔவையாரின் கணிப்பீடும் குறைவானதல்ல,

''இனிது இனிது ஏகாந்தம் இனிது அதனினும் இனிது ஆதியைத் தெழுதல்
அதனினும் இனிது அறிவுள்ளோரைக் கனவிலும் நனவிலும் காண்பது தானே''

இதுபோன்ற எத்தனை பனுவல்களைத் தமிழ் இலக்கியத்திலே காணலாம்

பொதுவாக அறிவில்லாதவர்கள் பல தசாப்தத்தில் சாதிப்பதை கல்வி அறிவுடையவர்கள் தொடக்கத்திலேயே சாதித்து முடிப்பர் சந்தேகமற்ற தெளிந்த அறிவுதான் எந்தப் பிரச்சனைக்கும் சர்வரோக நிவாரணி அதை வேறொன்றாலும் இடம்பெயர்க்க முடியாது. தமிழ்ப்பண்பாட்டில் சில பழைய முறைகள் பின்பற்றப் படுகையில் புறநானூறு கல்வியின் மேன்மையை இப்படிச் செப்புகிறது.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது மற்றல் நன்றே
பிறப்போரன்னவுடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயுமனந்திரியும்
ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோனாளரசும் செல்லும்
வேற்றுமை திரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன் கட்படுமே''

உடுப்பிட்டியில் ஒரு பெண்கல்லூரி அமைந்ததையும், அதன் அத்தியாவசியத்தையும், மகத்துவத்தையும் உணரவைக்க முற்படும்போது தலைவி செல்வி மான் (Mann) அவர்கள் அதிபராக மாத்திரமல்ல பிள்ளைகளுக்கு அறிவைப்புகட்டுவதில் பெரும்பங்கை ஆற்றியுள்ளார்கள் ஏன் பெண்கள் படிக்க வேண்டும் என்பதை அவர் பலமுறை விளங்கப்படுத்தியுள்ளார். ஒருமுறை அவரது செற்பொழிவில் "An ounce of mother wit is worth a pound of learning" என்ற பழமொழியைக் கேட்டதுண்டு, ஆனால் அதன் கருத்து அப்போது பெரிதாகத் தவறவிலை பிற்காலத்தில் மகாத்மா காந்தியின் சத்திய சோதனையை வாசிக்கும்போதுதான் அப்பழமொழியின் ஆழமான கருத்தை உணர முடிந்தது. சத்திய சோதனையில் காந்தி செப்பிடுகையில் "ஆண் கற்றால் ஒருவர் கற்பது மாத்திரம்தான், ஒரு பெண் கற்றால் ஒரு குடும்பம் கற்றதற்குச் சரி, அத்துடன் ஒரு சமுதாயம் கற்றதற்குச்சரி" என்கிறார் நிலத்தின் தன்மை பயிருக்குள்ளதாகும் நீசத் தொண்டும் மடைமையும் கொண்டதாய் எப்படி மகான்களை சமூகத்திற்குத் தரமுடியும்? அறிவால் நிறைந்த தாய்கள் உருவாகினால் நல்ல சமுதாயம் உண்டாகும். ஆதாலால் நாம் அறிவைப்பெருக்கி அனைத்தையும் பெறமுயற்சிக்க வேண்டும். அறிவே ஆற்றல்.

(125 ஆவது ஆண்டு நிறைவு ஞாபகார்த்த மலர்.
செல்வி, R. J. மேன் நினைவுக் கட்டுரைப் போட்டியில் இரண்டாமிடம் பெற்ற கட்டுரை.)

மாணவர் ஆக்கங்கள்

நான் செய்த பட்டம் அதோ பறக்கிறது பார்!

இ. கார்த்திகா
ஆண்டு 4 A (1993)

அழகிய செந்நிறம். அதன்மேல் முத்துக்கள் பதித்ததுபோல் மஞ்சள் நிறப்புள்ளிகள். மஞ்சளிலும் சிவப்பிலுமான அடர்த்தியான குஞ்சங்கள். இதைச் சுமந்தபடி எனது பட்டம் மேலே எழ ஆரம்பிக்கிறது காற்று வேகமாக வீச தொடங்குகையில் அது விர் என மேலே ஏறியது. அது ஏறியதுதான் தாமதம் எனது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் அளவேது. கயிற்றை இளக்கி இளக்கி விடுகிறேன். அதுவும் கம்பீரமாக நீல வானில் ஆடி அசைகிறது. கயிற்றைக் கெட்டியாகப் பிடித்தபடி துள்ளிக் குதிக்கிறேன்.

எனது பட்டத்தைப் பார்ப்பதற்கு என்னைச் சூழ சிறுவர் கூட்டம் கூடி விட்டது காற்று வீச அது ஒரு சிவப்பு நிறப் பறவை போல் மிதந்து மிதந்து எழுகிறது. பட்டம் மேலே ஏற ஏற அதில் கட்டப்பட்ட வின் கூவத் தொடங்குகிறது துள்ளிக் குதிக்கும் என் மனதிற்கு அதுவும் ஒரு ரீங்காரம்தான். வின் கூவ அயலில் நின்ற சிறுவர் அனைவரும் ஓடிவந்து என் பட்டத்தைப் பார்க்கிறார்கள். காற்று வீச அது தன் குஞ்சத்தைச் சிலிர்க்கிறது. சிலிர்க்கும் போது அதன் சிவப்பும் மஞ்சளுமான அழகிய குஞ்சங்கள் நெருப்புப் பொறி பறப்பது போல் தெரிகின்றன. அது மிகவும் அழகாக இருக்கிறது.

எல்லோரும் ஓடி வாருங்கள்; ஓடோடி வாருங்கள். அது நான் ஆசையுடன் செய்த பட்டமல்லவா? அதோ பறக்கிறது பாருங்கள்.

✠

வாசனை நிறைந்த மல்லிகைத் தோட்டம்

தே பிரஷாந்தினி
ஆண்டு 4 A (1993

பௌர்ணமி நிலவு. பால் ஒளி வெள்ளம். ம்.. ... அப்பா! கொள்ளை வாசனை. எங்கள் வீட்டுத் தோட்டத்திலே மல்லிகை மலர்கள் இதழ் விரித்து மணம் பரப்புகின்றன. வாசனை காற்றில் கலந்து எங்கள் வீட்டினுள் நிறைகின்றது. வெள்ளை வெளேரென்ற அழகான பூக்கள், சின்னஞ் சிறிய பூக்கள் அவைகளில்தான் எத்தனை வித்தங்கள் முல்லை, மல்லிகை, குண்டு மல்லிகை, ஊசி மல்லிகை, கொத்து மல்லிகை, அடுக்கடுக்கான சிறிய இதழ்களுடன் அழகாக மலர்ந்து நிற்கிறது.

முல்லை சின்னஞ் சிறிய இதழ்களுடன் செடியே தெரியாமல் பூத்துக் குலுங்கி நின்றது. ஊசிமல்லிகை மெல்லிய நீளமான இதழ்களோடு கொத்துக் கொத்தாகப் பூத்து நிற்கிறது சந்திரன் வரவு கண்டுதான் மல்லிகை மலருமென அம்மா கூறுகிறார். மல்லிகைத் தோட்டம் வீட்டிற்கு அழகும் பெரும் நிறைவும் தருகிறது. இந்த அழகைம் நிறைவையும் அனுபவிக்க அப்பா கதிரையோடு முற்றத்திற்குப் போய் அமர்கிறார் அப்பப்பா என்ன அழகு, என்ன வாசனை இறைவா! இந்தச் சிறிய பூவினுள்ளே இவ்வளவு வாசனையையும் வைத்தது நீதானே.

அன்பு

து. யமுனாராணி
ஆண்டு 7 A (1993)

இருளை நீக்க இரவியுண்டு. தாகம் தணிக்க நீருண்டு. இளைப்பையும் களைப்பையும் போக்க இனிய தென்றலுண்டு. உலகில் உலவி வருகின்ற கொடுந்தீமைகளைப் பூண்டோடு அழித்து எரிப்பதற்கு புனித மருந்தொன்று உண்டு. அதுவே அன்பு. அது சர்வரோக சஞ்சீவி; வாழ்வின் உயிர்: பகைக்குப் பகை: பக்தியின் ஆணி வேர்: ஆனந்தத்தின் சிகரம். ஆன்மாவின் தாய்ப்பால் உயிருடன் உயிரைப் பிணைக்கும் வெள்ளித் தளை. இரும்பு நெஞ்சையும் இளக்கி உருக்கும் அக்கினிக் கொழுந்து அது அசுரத் தன்மையை அகற்றி அமரத் தன்மையை வளர்க்கும். அறியாமையை அழித்து அறிவுச் செல்வத்தை பெருக்கும். அமைதியைக் கொடுக்கும் இவ்வுத் தேனூற்றை எங்கும் பரப்பும். இம்மண்ணையே விண்ணாக்கும். அதற்குப் பெருமையில்லை. நீடிய சாந்தமும் பொறுமையும் உண்டு. அணுகுண்டுக்கு அசையாத உளமும் அன்புக்கு அடிபணியும்.

சிவனின் முகத்திலே புன்முறுவலாய்த் திகழ்வது அன்பு. கர்த்தரின் சிலுவையில் கருணையாய்ச் சிந்துவது அன்பு. காந்தி மகானின் வாழ்வில் காந்தியையும் சாந்தினியையும் தந்ததும் அன்பே. வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதப் புனிதர் யாவருமே ''அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு'' என்றாங்கு அன்பே உருவாய் வாழ்ந்தனர். அன்பற்ற வாழ்வு துன்ப வாழ்வு; அகந்தை வாழ்வு; அடிமை வாழ்வு: அமைதியற்ற நாக வாழ்வு. நெய் பெய்யாச் சுடர் விளக்குப் போல் அன்பில்லாத வாழ்வு அணைந்துவிடும். அன்பிலாருடம்பு உயிரில்லாத வெறும் என்புதோல் போர்த்த உடம்பாகும் என்றார் வள்ளுவப்பெருந்தகை. அன்பே இறைவன். அவன் எங்குமுளான். எவற்றிலுமுளான். ஏழ்மையும் அவன் பிரதிபலிப்பே. ஏழைக்கு உதவி செய், அதனால் இறைவனை மகிழச் செய். ஏழைக்கு இரங்குபவன் இறைவனுக்குக் கடன் கொடுக்கிறான். ''அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்'' என்றனர் ஆன்றோர். 'ஆருயிர்க்கெல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்' என ஆசை கொண்டார் அருட்பா வள்ளல் இராமலிங்கசுவாமிகள். உலகம் இம்மங்கா விளக்கை கையிலேந்திக்கொள்ளாது கலங்குகிறது. வழியறியாது தயங்குகிறது. இருட்கிடங்கில் வீழ்ந்து இடர்ப்படுகிறது. இன்பம் துளியும் காணாது துன்பப்படுகிறது. அம்பு முதல் அணுகுண்டு ஈறான அழிவுப் படைகளை ஆக்கி பகை வஞ்சம் பிரிவினைகளைப் பெருக்கி போரோடு போராடுகிறது. அழிவின் முடிவைத்தேடி அதிவேகமாய் இறக்கை கட்டிப் பறக்கிறது. இரங்கத்தக்க இந்நிலை மாறி அன்பு வளர வேண்டும். அன்பை வளர்க்க வேண்டும். ஒருவருக்கொருவர் அன்பை வழங்க வேண்டும். அன்புப் பணி புரிய வேண்டும் உலக நலனை முன் வைத்து எதிர்கால முன்னேற்றம் கருதி அன்பினொளி மூழங்க வேண்டும்.

நினைவிலும் பேச்சிலும் எழுத்திலும் செயலிலும் அன்புச் சுடரொளி விளங்க வேண்டும். "எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் ஓர் குலம்''. எனப்பாடிய பாரதியின் கனவும் நனவாகும், உலகமே அன்பின் குடும்பமாய்த் திகழும் என்பதில் ஐயமில்லை

தாய்மை

தி. பானு
ஆண்டு 9 D (1993)

"தாய்மை" என்னும் சொல்லுக்கு விரும்பப்படும் தன்மை என்றும் பொருள் கொள்ளலாம். இச் சொல்லை உச்சரிக்கும் பொழுதிலே தெய்வ சந்நிதானத்தில் நிற்கும் மன நிறைவே ஒருவருக்கு ஏற்படக்கூடும் பெண்மைக்கு இறைவன் அளித்துள்ள எத்தனையோ வரப்பிரசாதங்களில் இத் 'தாய்மை' என்னும் பண்பே தலைசிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது. கண்ணுக்கு 'மை' எவ்வளவு அழகோ அதேபோல் இந்தப் பெண்மைக்கும் 'தாய்மை' அழகு. கண்களுக்கு மை எழுதும் பொழுது சிறிது கரிக்கச் செய்தாலும் மை எழுதப் பட்டதால் அந்த அஞ்சன விழிகளில் மெருகு கூடுகின்றது. அவ்வாறே தாய்மை அடைந்த பெண்ணொருத்தி மகவைக் கையில் ஏந்தும் வரைக்கும் படும்சிரமங்களும், துன்பங்களும் அம்மம்மா..... சொல்லி முடியாது தன் குழந்தையைக் கையில் ஏந்தும்போது ஒரு தாய்க்கு ஏற்படக் கூடிய பூரிப்பை பெருமிதத்தை எதற்கு உவமையாக்க முடியும்?

இத்தாய்மைப் பண்பு எல்லா உயிர்களுக்குமே பொருந்துவனவாக அமைத்துள்ளது. சிற்றறிவு படைத்த விலங்குகளிடம் கூட நாம் தாய்மை உணர்வைத் தனியாகக் காணமுடியும். எத்தக் கொடிய மிருகமும் தன் கொடூரமான தன்மையிலிருந்து மாறுபட்டு நிற்பது இத்தாய்மையென்னும் தன்மையினாற்தான். விலங்குகளிற் கொடியதான சிங்கத்தை எடுத்துக் கொண்டால், அது தன் குருளை மீது காட்டும் பரிவையும், பாசத்தையும் அரவணைப்பையும் நாம் மறுக்க முடியுமா? தேவேளையிற் பசு மிகவும் சாதுவான பிராணி. ஆனாலும் தனது கன்றுக்குத் துன்பம், ஆபத்தென்று அது உணர்ந்து விட்டால் வரும் பகையை முட்டிமோதி விடாதா? கொம்பினாற் குத்தி கிழித்து விடாதா? இதே போலவே தனது குழவிக்கு ஆபத்தென்று உணரும் வேளை யில் எந்தவொரு பெண்ணும்கொற்றவையாகவே காட்சியளிக்கக் கூடும்.

'பெண்மை' என்னும் தன்மை முழுமையாக நிறைவு பெறுவது 'தாய்மைக்கு'ப் பின்னரே. பெண்களுக் குள்ளே எத்தனையோ வேறுபாடுகள், குணபேதங்கள் இருக்கலாம். ஆனாலும் அத்தனை வேறுபாடுகளையும் பேதங்களையும் இணைக்கும் பாலமாக அமைவதும் தாய்மை இயல்பே. பெண் தாய்மை என்னும் சந்நிதா னத்தில் நுழையும் பொழுது அன்பு, கருணை, பொறுமை, சாந்தம் என்பன போன்ற அரிய குணங்களும் அவளை வந்தடைகின்றன இயல்பாகவே அவளிடம் காணக்கூடிய சுயநலம் என்னும் தன்மையைத் தாய்மை என்னும் அங்குசம் கிழித்தெறிகின்றது. மற்றைய குழந்தைகளையும் தனது குழந்தையாகவே எண்ணி அரவ ணைப்பாள்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன் மக்கட்பேறு"

என்று கூறும் பொய்யா மொழிப் புலவர், மனைவியின் நற்பண்புகளே இல்வாழ்க்கைக்கு மங்கலம் எனக் கூறும் அதே வேளையில் நன்மக்களைப் பெறுவதே இல்வாழ்க்கையின் சிறந்த கணிகலனாகும் என்று வலியு றுத்துகின்றார். இல்வாழ்க்கையின் அடிப்படை அம்சமான மழலைச் செல்வத்தை பெற்றுக்கொள்வதற்காகவே அக்காலம்தொட்டு இக்காலம்வரை மன்னர்களும் மற்றும் ஆண்களும் மறுமணம் என்னும் பந்தத்தில் ஈடுபடு வதும் வழக்கமாகிவிட்டது.

இறைவன் பல அவதாரங்கள் எடுத்துள்ளார். 'பன்றிக் குட்டிகளுக்குத் தாயாக வந்தமையும்' அதில் அடங்கும். இங்கே இறைவன் 'சக்தி' என்னும் அம்மை மூலமே உலகில் உள்ள ஆன்மாக்களுக்கு அருள் கொடுக்கிறான் என்னும் உண்மை வெளிப்படுகின்றது. இதன் உட்பொருள் யாதெனில் தாய்மையாய சக்தியை தெருங்கினாலே அருளைப் பெறலாம் என்பதேயாம். ஒருவன் சான்றோனாக உயர்ந்தாலும் - அன்றி கசடனாக தாழ்ந்தாலும் தாயின் அன்பு மாறுபடாது. பிழை செய்த போதும் தாயை அணுகத் தயங்குவதில்லை.

காரணம் தாயால் தன் குழந்தையை எந்த நிலையிலும் வெறுக்க முடியாது என்ற அடிப்படைக்கரு உலகிலே ஒப்பற்ற அன்பு தாயன்பு ஒன்றேதாம். அதனாற்றான் போலும் "பால் நினைந்தூட்டும் தாயினும் சால..." என்று நம் இறையடியார்கள் பாடியுள்ளனர்.

ஓர் புகழ்பெற்ற ஓவியத்தில் ஒரு பெண் அழகான ஒரு குழந்தையைப் படகொன்றில் பாதுகாப்பாக வைத்துவிட்டுக் கண்களில் நீர் மாலைமாலையாக வழிய அதைப் பார்த்துக் கொண்டு நிற்பதாக வரையப்பட்டிருந்தது. எத்தகைய துன்பம் இருந்த பொழுதிலும் பிடிவாதத்திற்கு அறிகுறியாக அவள் உதடுகள் மடிந்தவாறு வரையப்பட்டிருந்தது. ஓவியத்தைப் பார்த்த ஓர் அறிஞர் படத்தில் காணப்படும் பெண் குழந்தையின் தாயல்ல; ஏனெனில் கண்ணனைய தன் குழந்தையை அப்படி அநாதரவாகவிட தாய் மனம் ஒருபோதும் உடன்படாது என்று கூறுகிறார். ஆனால் ஓவியத்தைப்பார்த்த இன்னொரு அறிஞர் அப்பெண் குழந்தையின் தாய்தானென்றும் அப்பெண்ணின் முகத்திலே உலகத்திலுள்ள எல்லாத் துன்பங்களையும் உள்ளடக்கிய பாவத்தையே ஓவியன் அழகாக வரைந்துள்ளான் என்றும் கூறி ஓவியனைப் புகழ்கின்றார். அந்தப் பெண்ணின் முகத்தில் பொலிந்திருப்பது தாய்மை உணர்வே என்றும் கூறுகின்றார். அந்தப்பெண் யாரென்பதோ ? அறிஞர் யாரென்பதோ எமக்கு முக்கியமல்ல, தாய்மைக்கு அவர்கள் அளித்துள்ள உணர்வுதான் இங்கே முக்கியம்.

எத்தனை வேலைப் பழுக்கள், தெருக்கூத்துகள், துன்பங்கள் இருந்த பொழுதிலும் தாய் தன் பிள்ளைகளின் கடமைகளைச் செய்யத் தவறுவதில்லை. அதைத் தாங்களே செய்ய வேண்டும் எனவும் விரும்புவர் இது இவ்வாறாக இருந்தாலும் கூட இன்று விஞ்ஞானத்தின் விந்தையிலே, பல நிகழ்வுகளை நடத்திக் காட்டிக் கொண்டிருக்கும் ஒரு புதுமையான யுகத்திலே சில தாய்மார்கள் 'ஆயாவை' வைத்து தங்கள் குழந்தைகளை பராமரிக்கிறார்கள். இதனால் விளையும் அனர்த்தங்கள் பல. அதைப் பெண்குலம் உணர வேண்டும். இவ் வகையில் பாரதத்தின் முன்னாள் பிரதமர் பாரதரத்தினம் திருமதி இந்திரா காந்தி அவர்கள், பாரததேசத்தின் பிரதமர் என்ற பதவியைவிட ராஜீவ், சஞ்சய் இருவருக்கும் தாய் என்ற பதவியையே தான் மிகவும் விரும்புவதாகக் கூறியுள்ளார். அதுமட்டுமன்றி அவர்கள் இருவருக்கும் தான் செய்ய வேண்டிய கடமைகளை தானோ அல்லது தனது நேரடி மேற்பார்வையின் கீழோ செய்தால்தான் அவருக்குத் திருப்தியாக இருக்குமாம்.

வேகமாக முன்னேறிக் கொண்டுவரும் இன்றைய உலகில் சனத்தொகை பலமடங்கு பெருகிக் கொண்டுள்ளது. சனத்தொகைப் பெருக்கத்தால் உணவுப் பற்றாக்குறை சுகாதார வசதியின்மை வேலை வாய்ப்பு இன்மை, பொருளாதார மந்தம் இப்படிப்பல சீர்குலைவுகளை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு பல வழி வகைகளைக் கையாளுகின்றது. இத்நிலையில் 'தாய்மை' பற்றியும், அதன் புனிதத் தன்மை பற்றியும் நான் கூற முற்பட்டது வாசகர்களுக்கு பொருத்தமற்ற கருத்தாகவும் படக்கூடும். இருப்பினும் சில பண்புகள், கருத்துக்கள் காலத்தினால் அழிக்க முடியாத நிலையான உண்மை என்பதையும், அத்தன்மையதுதான் 'தாய்மை' என்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டால் போதும்.



ஆசிரியர்களைப் போற்றுவோம்

சுகந்தி தனபாலசிங்கம்
ஆண்டு 13 (கலை)

" மாதா, பிதா, குரு, தெய்வம் " என நான்கு உயர்ந்த ஸ்தானங்கள் சமூகத்தில் காணப்படுகின்றன. முதல் இரண்டு ஸ்தானங்களும் அன்னை தந்தைக்கு வழங்கப்படுகிறது. ஆனால் நான்காம் இடமான தெய்வத்தைவிட உயர்ந்த ஒரு ஸ்தானம் குருவிற்கு வழங்கப்படுகிறது. தெய்வமே எம்மை இவ்வுலகில் படைத்து எம் செயல்களுக்கெல்லாம் மூலமாக விளங்குகிறார். அத்தகைய தெய்வத்தைவிட உயர்ந்த ஒரு ஸ்தானம் குருவிற்கு வழங்கப்படுவதில் இருந்து குருவின் அதாவது ஆசிரியரின் உன்னதம் புரிகின்றது. தொன்றுதொட்டு குருபத்தி என்பதற்கு எல்லாச் சமயங்களிலும் சமூகங்களிலும் மிகுந்த உயர்வு கொடுக்கப்பட்டு வந்துள்ளது.

இந்து மதத்தில் " எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் " என்ற கருத்தும் கிறிஸ்தவ சமயத்தில் நல்ல ஒரு ஆசிரியர் சிறந்த மேய்ப்பராகக் கொள்ளப்படுவதும் நோக்கத்தக்கது. இவ்வாறு கூறப்பட்டாலும் குருகுலக் கல்வி முறையில் காணப்பட்ட குரு சிஷ்ய பாவமும் ஆசிரியரைப் போற்றும் பண்பும் பாடசாலைக் கல்வி முறையில் அருகிவருகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

சமுதாயத்தில் ஒரு மருத்துவரையோ, பொறியியலாளரையோ, கணக்கியலாளரையோ உருவாக்குவது மட்டும் ஆசிரியரின் பணியன்று, நற்பண்பும் ஒழுக்கமும் நிறைந்த மனிதனை உருவாக்குவதே ஆசிரியரின் மிகச் சிறந்த பணியாகும் நல்ல மனிதனால் நல்ல சமூகம் உருவாக்கப்படுகின்றது. " இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் " என்று கூறும்போது அந்த இன்றைய இளைஞனை உருவாக்குவதும் ஆசிரியரே.

எமக்கு இந்த உலகில் முதல் உறவு அன்னை, பின் தந்தை, பின் குரு என உறவுகள் கிளைவிட்டுப் பரவுகின்றன, ஆனால் ஒரு குழந்தை ஐந்து வயதில் இருந்து வாலிபப் பருவமான 25 வயதுவரை கல்வி கற்கின்றது. தனது வாழ்வின் முக்கிய பகுதிகளை பாடசாலையிலே கழிக்கின்றது. இக் காலப்பகுதியில் பெரும் பொழுது பாடசாலையிலேயே கழிக்கின்றது. அதனால் அம்மாணவனுக்கு ஆசிரியரே பெரும் உறவாகின்றது எமது உணர்வுகள் பழக்க வழக்கங்கள் திருத்தியமைக்கப்படுகின்றன.

ஒரு கல்லைச் செதுக்கினால்தான் சிலை. செதுக்காவிட்டால் அது வெறும் கல் தான். அதற்கு மதிப்பில்லை. அப்படி எம்மை சிலைகளாக உருவாக்குகின்ற சிற்பிகளே ஆசிரியர்கள். அத்தகையவர்களை நாம் மதித்துப் போற்றுவதுடன் மறக்கவும் கூடாது.

" ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன எனக் கேட்ட தாய். "

என வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார், அந்தத் தாய் அடைகின்ற மகிழ்வைவிட அவன் திறமையில், புலமையில், நற்செயல்களில் ஆசிரியர் அடைகின்ற மகிழ்ச்சி பெரிதாகும்.

தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரையில் " கல்வி " என்ற பெருஞ் செல்வமே நிலைத்திருக்கின்றது. அந்த கல்விப் பயிருக்கு நீரூற்றுபவர்கள் ஆசிரியர்கள் என்பதை மறக்கக் கூடாது. இத்தகைய மகத்தான சேவைகளை ஆற்றுகின்ற ஆசிரியப் பெருந்தகைகளை வெறுமனே காலில் விழுந்து வணங்குவதிலோ, தலை குனிந்து நிற்பதிலோ அர்த்தமில்லை, அவர்களுக்கு உள்ளன்புடனும் மரியாதையுடனும் கீழ்ப்படிதலே சிறந்ததாகும்.

இன்றைய காலகட்டங்களில் ஆசிரியருக்கு கொடுக்கப்படுகின்ற மதிப்பானது குறைந்து வருகின்றது என்பது கசப்பான உண்மையாகும். மாணவர்களிடையே குருசிஷ்யபாவம் என்பது மறைந்து நாகரிகப் புற்று நோய் புரையோடி வருகின்றது. இது வேர்களையே செல்லரித்துவிடும். ஆனால் சிங்கள சமுதாயத்தை பெகறுத்த வரையில் மாணவர்கள் ஆசிரியர்களை மிகவும் பணிந்து போற்றுகின்றனர். இங்கும் அது கொண்டு வரப் படவேண்டியதொன்றாகும்.

ஆசிரியர்களில் வெகுசிலர் நற்பயிரிடையே தோன்றும் களைகளாக இருப்பர் அவர்களைக் கொண்டு முழுவதும் களைகள் என்றும் கூறிவிடமுடியாது. அப்படிக்கூறி பயிர்களை வெட்டித் தூக்கி எறிந்து மிதித் தால் அது மாணவ சமுதாயத்திற்குத்தான் இழப்பு.

உண்மையில் ஒரு ஆசிரியரிடம் எமக்கு மிகுந்த அன்பு ஏற்பட்டால் அவர் கற்பிக்கும் பாடத்தில் விருப் பம் மிகும் பாடத்தில் ஏற்படும் விருப்பமரனது தேர்வுகளில் வெற்றிபெற வழிவகுக்கும்' இது பலர் அனுபவ ரீதியாக கண்ட உண்மையாகும் ஆகவே நாமும் ஆசிரியரைப் பணிந்து போற்றுவோம்.

சில மாணவர்கள் ஆசிரியர்களின் முகத்திற்கு முன்பும் பாடசாலை வளாகத்திலுள்ளும் அவர்களைப் போற்றிப் பணிவதாய்ப் பாவனை செய்வர். அவர்கள் சென்ற பின்னரும் வளாகத்திற்கு வெளியேயும் புறம் பேசித்திரிவர். இது மாணரின் ஒழுக்கச்சீர்கேட்டிற்கு வழிவகுக்கின்றது. வீதியால் செல்லும் ஆசிரியர்களுக்கு மறைந்திருந்து மாணவர்கள் கல்லெறிந்த உண்மைச் சம்பவங்களும் உண்டு. ஆனால் இதற்காகப் பின்னாளில் வருந்தாத மாணவர்கள் இல்லை. பாடசாலையில் கற்பித்தலின்போது ஆசிரியர் கடுமையாகப் பேசினால் மாணவனுக்கு கோபம் வருகிறது அவமானமாக உணர்கிறான், அதில் ''இதைவிடக் கூடிய புள்ளிகள் எடுக் கும்வரை ஓயமாட்டேன்'' என்ற வைராக்கியம் பிறக்கின்றது. அந்த வைராக்கியம் வாழ்க்கைக்கு விளக்கு ஏற்றுகின்றது. ஆனால் ஆசிரியர் தனது நன்மைக்குத்தான் ஏசினார் என்பதை அம்மாணவனுக்குக் காலமும் சிந்தனையும் உணர்த்தும்.

வாழ்கையில் வெற்றிபெற்ற வரலாற்றுத் தலைவர் ளினதும் மாவீரர்களினதும் வரலாற்றை நோக்கும் போது அவர்களின் வெற்றிக்கு காரணமாக ஏதோ ஒரு வகையில் ஆசிரியர்களும் அவர்களைப் போற்றும் தன்மையும் காணப்படுகிறது. இந்தியக் கவிஞர் வைரமுத்து கூட தனது வெற்றிப் படிகளில் நின்று கவிதை மலரால் தன் தமிழாசிரியரை அர்ச்சிக்கின்றார். அதாவது

''அய்யா உங்களுக்கு நான்
ஒன்றுமே செய்யவில்லை அய்யா
எனது தங்கச் சிறைச்சாலையில்
உங்கள் ஞாபகமாக மெழுகுவர்த்திகளை
எப்போதாவது ஏற்றிக கொள்கிறேன் அய்யா''

என உருகுகிறார். இதுவே அவரது வெற்றியின் காரணம். ஒவ்வொரு மாணவனும் மனிதனும் தன் மனதினுள் இந்த உருக்கத்துடன் ஆசிரியரைப் போற்ற வேண்டும். அதைவிட்டு வெற்றி வெற்றி வெற்றி என்று இலக்கில்லாமல் அலைவதில் அர்த்தமில்லை.

இவ்வாறு ஆசிரியர்கள் தன்னலம் கருதாத மகத்தான சேவையினை மாணவ சமுதாயத்திற்கு ஆற்றி மாணவ சக்தியை மாபெரும் சக்தியாக்குகின்றனர் எந்த ஒரு மாணவனும் ஆசிரியரைப் போற்றி மதித்து நடக்காவிடின் அது அவனை தோல்வியின் படிகளில் வீழ்த்திவிடும். நாம் வெறுமனே ஆசிரியர் தினம், வாரம் என கொண்டாடுவதிலோ அவர்களுக்கு புகழ்மாலை சூடுவதிலோ பயனில்லை. அவர்களைப் போற்றி மதித்து உள்ளன்புடன் நடத்தலே சிறந்ததாகும். எனவே மாணவ சமுதாயத்தின் உயர்ச்சி ஆசிரியர்களின் கரங்களி லேயே இருக்கின்றதென்பதை உணர்ந்து அவர்களைப் போற்றுவோமாக.

இன்றைய மாணவரும் நாளைய சமுதாயமும்

சிறிசகுந்தலா தில்லைநடராஜா
ஆண்டு 13 (வர்த்தகம்)

ஆன்று தொட்டு இன்று வரையும் மக்கள் மத்தியில் கல்வி பிரதான இடத்தை வகித்து வருகின்றது, அந்த வகையில் தொன்மை வாய்ந்த பல நூல்களிலும் கல்வி பற்றியும், கல்வி கற்பவர் பற்றியம் கல்வி கற்பவர் ஒழுக வேண்டிய ஒழுக்கங்கள் பற்றியும் கற்றதனாலாய பயன் பற்றியும் கல்வியைக் கற்கும் மாணவருக்கும் சமுதாயத்திற்கும் இடையேயான தொடர்பு பற்றியும் சிறந்த பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளமை நோக்கற்பாலது

இந்து தருமக் கோட்பாடுகளில் ஒன்றாகிய வர்ணாச்சிரம தர்மக் கோட்பாடு ஒரு மனிதனின் வாழ்க்கையை பிரம்மச்சாரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என நான்காக வகுத்து வளம்படுத்தி இருந்தமையை அவதானிக்கலாம். இதிலிருந்தே அன்றைய சமுதாயத்தில் மாணவ நிலை பெற்ற முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடிகின்றது.

அன்றைய மனிதனின் அறிவு வளரத்தொடங்கிய காலமாக பிரம்மச்சாரியநிலை காணப்படுகின்றது. அன்று சிறந்த குருவை நாடிச் சென்று அறஒழுக்கங்களைக் கற்று அறிவு நிரம்பியவனாக வளர்ந்து அந்நிலையில் பெரியவர்களது ஆசியோடும், விருப்பத்தோடும் இல்லற நிலைக்குச் சென்று சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளையும், வேள்விகளையும், யாகங்களையும் இயற்றி சமுதாயத்தை விருத்தியடையச் செய்வதற்கு வேண்டிய அறிவை பிரம்மச்சாரிய நிலையினூடாகப் பெற்று, சமுதாய மேன்மைக்கு அடிப்படையாக பிரம்மச்சாரிய கால அறிவைப் பாவித்ததை அறிய முடிகின்றது.

அதுபோன்றே இன்றைய மாணவர்களும் விளங்குகின்றார்கள். இன்றைய மாணவர்களே நாளைய சமுதாயத்தின் விடிவெள்ளியாகத் திகழ்கிறார்கள். எவ்வாறெனில் இவர்கள்தாம் கற் கல்வியை அணுவணுவாக ஆராய்ந்து அதற்குச் செயல்வடிவம் கொடுத்து நாளைய சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் அயராது உழைக்கின்றனர். அவ்வுழைப்பின் பயனாக இன்றைய மாணவர்கள் நாளைய சமுதாயத்தின் தலைவர்களாக திகழ்கின்றார்கள்.

மாணவர்கள் தாம் கற்கும் தொழில் நுட்பக் கல்வியின் வாயிலாகவும், பிறகல்வியறிவு சார்ந்த வேலை வாய்ப்பினூடகவும் எதிர்காலத்தில் சிறந்த தொழில்வாய்ப்பைப் பெறுவதனூடாகவும் சமுதாயத்தை முன்னேற்றுவதற்கு வழிவகுக்கின்றனர்.

இருந்த போதிலும் இன்று சில மாணவர்கள் தமது மாணவப் பருவத்தில் கல்வியைப் புறக்கணிக்கின்றமையினால் பல அவலங்களைச் சந்திக்கின்றனர் எனவே கல்வியின் அருமை பெருமைகளை உணர்ந்து அதனைப் போற்றி கசடறக் கற்றல் வேண்டும்.

இன்றைய மாணவர்களது கல்விச் செல்வமே எதிர்கால சமுதாயத்தின் பெரும் மூலதனமாகும். எனவே நாளைய மூலதனமாகத் திகழும் இன்றைய மாணவர்கள் தமது கல்வி வாய்ப்புக்களை சிறப்பாகப் பயன்படுத்துதல்வாயிலாக நாளைய சமுதாய்த்தின் விருத்திக்கு வித்திட்டவர்களாகிறார்கள்.

இன்று மாணவர்களது கல்வியின் தரம் குறைவதும் கல்வியில் ஆர்வமின்மை ஏற்படுவதும் மாணவர்களை ஒழுக்கக்கேடர்களாயும், கட்டுபாடற்றவர்களாயும் மாற்றும் எனவே கல்வியை ஆர்வத்துடனும் உணர்ச்சியுடனும் கசடறக்கற்று ஒழுக்க சீலர்களாகவும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்தவர்களாயும் வாழ்ந்து எமது எதிர்காலச் சந்ததி வளமான சந்ததியாக வளர முன்னுதாரணமாகத் திகழ வேண்டும்.

பகுத்தறிவு படைத்த மாணவ சமுதாயம், பெற்றோர்களும் ஆசிரியர்களும் தமக்களித்த சுதந்திரத்தை நேர்வழியில் பயன்படுத்தி அதன் வாயிலாக அறிவு மிகுந்த பல கருத்துக்களைப் பெற்று தமது வாழ்க்கை யையும் எதிர்காலச் சந்ததியினுடைய வாழ்க்கையையும் செப்பனிட அறிந்திருக்க வேண்டும்.

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்குதல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்ற புறநானூற்றுப் பாடல் தனிமனிதன் ஒருவனின் வளர்ச்சிக்கு அவன் பெற்றோரும் அரசனும் செய்யவேண்டிய கடமைகளையும் இவற்றிற்கு கைம்மாறாக அவன் நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமைகளை யும் விரித்துரைக்கின்றது. இப்பாடலிலுள்ள உண்மையானது எக்காலத்திற்கும் பொருந்துவதேயாகும். இன் றைய மாணவ சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பெற்றோரும், அரசாங்கமும் மட்டுமன்றி சமூகமும் பலவழி களிலும் உதவி புரிகின்றது. கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தம் கடமை தவறாது கற்பித்தலில் முழுமன தோடு ஈடுபட்டு வருவதனால் மாணவர்கள் நல்லவர்களாய் மட்டுமன்றி கல்வியில் வல்லவர்களாயும் உருவாகி றார்கள். இலவச பாடப் புத்தக வசதி, இலவச உணவு பங்கீட்டு வசதி இலவச மதிய உணவு முத்திரைவசதி இலவச மருத்துவ வசதி என்ற பலவும் சமூகத்தின் பிரதிநிதிகளாகிய மாணவர்களுக்கு அரசு வழங்குவனவா கும். சுருங்கச் சொன்னால் மாணவ சமுதாயத்தின் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் நாடும் சமூகமும் மாணவர்களை சிறந்த அறிவுஜீவிகளாக உருவாக்க உதவியுள்ளது. எனவே மாணவர்கள் தாம் வாழும் சமூகத் திற்கு நீங்காத கடப்பாடுடையவர்கள். எனவே இன்றைய மாணவர்கள் நாளைய சமுதாயத்திற்கு தம் கடப் பாட்டை நினைத்து தம்மாலான கைம்மாறு செய்தே தீரவேண்டும்.

மேலும் ஆசிரியர் எல்லோரும் ஆசிரியர் அல்லர். தாமும் தம் குடும்பமும் என்று தம் உள்ளங்களை ஒடுக்கிக் கொண்டு தாம் பெறும் சம்பளம் ஒன்றையே இலட்சியமாகக் கொண்டு அதனை வெறும் தொழிலாக கொள்பவர் ஆசிரியத் தொழிலாளிகளே என்பது என் உறுதியான கருத்தாகும்.

ஆசிரியனாதல் வெறுமனே ஆசிரியத் தொழிலை நடாத்தவன்று என்ற இலட்சியத்துடன் அதனை ஒரு தெய்வீகப் பணியாகக் கருதி பிள்ளைகளாகிய தெய்வங்களைத் தெய்வீக நிலைக்கு உயர்த்த முற்படும் தூய பணியாகக் கருதி செயற்படும் ஆசிரியப் பெருந்தகைகளை பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் மட்டும் ஆசிரி யர்களாக மதியாது என்றுமே இன்றைய மாணவர்கள் அதாவது நாளைய சமுதாயத்தவர்கள் தம் வாணாள் காலம் வரைக்கும் ஏற்றிப் போற்றி மதித்தல் இன்றைய மாணவர்கள் நாளைய சமுதாய வளர்ச்சிக்கு செய் யும் ஒரு முன்னுதாரணச் செயலாகும்.

அத்துடன் இன்று பல வழிகளிலும் குறிப்பாக தமிழ் மாணவர்களது கல்வி நிலை சீரழிக்கப்படுகின்றது. கல்வித் தரப்படுத்தல் உயர் வெட்டுப் புள்ளி போன்ற பல பயங்கர பூதங்களை மாணவர்களின் முன் நிறுத்தி அச்சமூட்டுகிறார்கள். இவற்றையெல்லாம் கண்டு இன்றைய மாணவர்கள் பயங்கொள்ளாது அப்பூதங்களை எதிர்த்து அழித்தொழித்து எதிர்கால சந்ததியின் முன்னேற்றத்திற்கு அரும்பணியாற்றுதல் வேண்டும்.

மாணவர்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க போராடுவது மிகவும் அவசியமானதொன்றாகும் அதற்காக கல்வியைப் பலியிடுவது மாணவர்கள் நாளைய சமுதாயத்திற்கு இழைக்கும் மாபெரும் துரோகமா கும். எனவே கல்வியைப் பலியிடாது தமது கல்வியை வளர்த்துக் கொள்வதன் வாயிலாக உரிமைகளைச் செல்வனே வென்றெடுத்து நாளைய சமுதாயத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களாக இன்றைய மாணவர்கள் விளங்கவேண்டும்

இன்றைய மாணவர்கள் தமது தாய்மொழியை மட்டும் கற்றுத்தேர்ச்சி அடைவதுடன் நின்றுவிடாது ஆங்கிலம், பிரெஞ், ஜேர்மன், இந்தி, வடமொழி போன்ற பல மொழிகளிலும் தேர்ச்சி அடைவதன் வாயி லாகப் பல அறிவுப் பொக்கிஷங்களை எதிர்கால சந்ததிக்குச் சேர்த்துவைத்துப் பாதுகாப்பது நிகழ்கால மாண வர்களின் மறுக்கவோ மறைக்கவோ முடியாத காலத்தின் கட்டாயமாகும்.

அதுமட்டுமன்றி இன்று சமூகத்தில் காணப்படும் இன, மத, மொழி, சாதிப் பாகுபாடுகளையும், சீதனக் கொடுமைகளையும் ஒழித்து நன்மைகள் பலவற்றையும் ஒன்றுதிரட்டி தீயவற்றைக் களைந்து பெண் சுதந்திரம், பெண் விடுதலை, அறம், அன்பு, இரக்கம், தயை போன்ற சிறந்த ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கொள்கையின் கீழ் ஒழுகி நாளைய சமுதாயம் ஆரோக்கியம் நிறைந்த தாக உருவாக வழிசமைக்க வேண்டும்.

நாளைய சமுதாயமானது தொழிலாளி முதலாளி என்ற வர்க்க வேறுபாடுகளின்றியும் சாதிப் பாகு பாடுகளற்றதாகவும் ஆணுக்குப் பெண் சரிநிகர் சம அந்தஸ்து உடையவர்களாகவும் மக்களனைவரும் சமமான வர்களாகவும் விளங்குவதற்கு இன்றைய இளம்மாணவ சந்ததி வித்திடுவது தலையாய கடமைகளிலொன்றாகும்.

நாட்டின் நாளைய தலைவர்களாகிய இன்றைய மாணவச் செல்வங்கள் அயராது பாடுபட்டு, எதிர்கால சந்ததியினருக்கு ஒரு கலங்கரை விளக்காக திகழவேண்டியது இன்றைய மாணவர்கள் நாளைய சமுதாயத் திற்கு ஆற்றும் மிகப்பெரிய கைம்மாறு எனின் மிகையாகாது

AN UNFORGETABLE DAY IN MY SCHOOL LIFE

Suganya Kumarasamy,
Year - 8 B (1993)

It was the 15th of October, 1991. It had rained in the night and the morning was rather cloudy. The time was 7-45 a. m. I had just left my home on my bicycle for school.

Hardly had I gone about a hundred yards suddenly the whirring of bombers fell on my ears. I was about 75 yards away from the junction. I got into an upstair house for safety. Two bombers exploded near the junction and the bombers flew away to their base.

So I got out of the house to get up on my bicycle where I saw a child of eight or nine years running along the road in panic. As she passed me I saw blood on her back. I immediately had the presence of mind to her "We can go faster on my cycle to your home".

She sat on the pillion and I took her as fast as I could to the hospital. Luckily I was the first to reach the hospital with the wounded girl. A few minutes later some more injured were brought in an ambulance van.

One doctor who was on duty attended the girl and noted my name and address on the register.

Two days later I was summoned by our Principal to the office, where I saw the parents of the girl. They all thanked me and gave a set of English Story books. The following day Monday the principal awarded me the Certificate of Honour for service, Can anyone forget such a day in one's life?

BOOKS MAKE OUR LIFE PERFECT

Jalini Sinnadurai,
Year - 9 D (1993)


Reading maketh a man. Books are one's everlasting friends. These and many more sayings amply speak for the value of books and reading them. Books are said to stand in good stead any time or hour of our life. They will help achieve not only material benefit but spiritual gains too. Our behaviour depends mostly on breeding and acquaintance. Instead of acquainting ourselves with useless and misguiding companions we would be much benefitted, if we would from our infancy develop the taste for reading useful material. Stories meant for small children would inculcate noble ideas in the crystal clear minds of the children and would help them grow as useful citizens. Children as they grow up must be directed to read biographies, auto-biographies, chronological facts and figures of the nations and books on science and its inventions. Books of this nature would mould and re-mould our character and conduct. History books that take us back to very nncient times and keep us informed and well-versed in the growth and development of mankind and its civilization are worth reading again and again. tBooks, periodicals or any printed matter on the scientific and technical advancement would enhance our world with scientific knowledge and enthuse us to follow and adopt new methods of production and marketing that would add to the prosperity of the individual as well as to the country at large

Books dealing with different religious precepts would foster in us religious spirit and humane qualities. Literature books are a pleasure by themselves. They replenish our thoughts keep us in an imaginative world and help us forget our worries, that envelope us in this material world. They would pave the way for a contented, healthy, sound, long, true and useful life. The characters depicted in t e age old Literature books, Puranas, and Lyrics are the real image of many faceted charactrs living amongst us. By studying these characters and various situation in which they were placed, we learn to face and weather different situtions. The noble ideas embodied in the age old veddhas world help us lead an exemplary life. Books written by philosophers with the deepest and analytical knowledge and expertise on various fields would help us understand the intrinsic nature of the problems and how to encounter them. By reading such books we learn to forsee things and take necessary precautionary measures that would guard us against dangers, various, odds and pitfalls that we may have to face in our day - to - day life.

It isn't enough if we just confine ourselves to certain prescribed books that would help us get through certain written and oral examinations. Those books might serve a partiemar perpose. Our reading should be broad - based. We mustn't be satisfied with our reading certain books that might lead us only to achieve our selfish and narrow goals. The books that we read should reform us into full-fledged citizens, Books on Fine Arts such as Art. Painting, Music. Dance Drama would transform us and keep us always in tranquil, serene, peaceful and calm mood. These characteristics and features a e very much wanted in this war torn world. Nobody - else, but good books only can provide us such wealth and happiness.


Lots of books and publications are printed and released every day. The time is limited. We have to select the best and useful books to suit our age and aptitude, If we would follow a cretain guide line we can select the most wanted books and discard the others. Let us select the most useful ones and adorn our libraries. We must as far as possible equip ourselves with a mass knowledge on various fields and diversified schools of thought. " Knowledge is Power ". A well read man is a ready man He will be able to tackle any situation " Pen is mightier than the sword ". For one to achieve this skill on must be well read and equipped.

We may realise the value of good books. But, it is unfortunate only a very selected few are affluent enough to own them and make the best use of them. Many are deprived of the privileges and opportunities of going through and amassing volumes of knowledge propounded through these books. To save us from these embarrassing positions, let us collectively pool our resources and furnish our home and public libraries and enable everybody read add benefit by every useful publication under the Sun.



உயர்தர மாணவர் ஒன்றிய ஒன்று கூடல் நிகழ்வுகள்







THE FIRST AND THE BEST TEACHER OF A CHILD IS ITS PARENTS

Vijitha Mahendran
Year 12 (Science)

" The child is the father of the man " is an old axiom. The child passes through different stages of development before it reaches the status of a father or the head of a family.

The family, in whieh the child is born, is the nursery for the child. A child should be well nurtured nursed, looked after, brought up for it to be healthy strong and sound physically, mentally as well as morally. " Men sana corpors sana " is a Latin proverb that implies " sound mind in a sound body ". It is the duty of every parent to bring up the child free from physical illness or mental retardation. For a child to be physically fit and sound parents should as far as possible provide the child with the most nutritious diet. The affluent parents may feed the child with the richest food containing all the nutrition. Children born in such families are really fortunate The unfortunate lot born in very poor homes are bereft of all the facilities the blessed children enjoy Anyhow the parents though poor can find them at least simple cheap commonly available nutritious food.

It's true that the child's physical growth depends on the food it takes. But we must realise that the mere food it takes won't help in the healthy growth of the child. Besides a healthy body the child should possess a healthy mind too. To own a healthy mind the child should be brought up in a healthy sound peaceful religious cultured atmosphere and surroundings. The child should be taught good manners and disciplined way of life in the prime of its life itself. It is the primary duty of every parent to inculcate in the child noble thoughts. " The habit in the cradle goes to the grave " is a saying. The good or bad manners that the child picks up in its infancy would make or mar the child. The child's bright future depends on how it is guided during its childhood and its various stages of its growth. The children should be well directed and motivated. The child, even the school going, spends most of its time with the parents The parents must plan their children's future.

They must provide their children with the necessary material that would help not only in their physical development but chiefly their mental and intellectual growth. The children should be supplied with the necessary reading material that would widen their general knowledge and sharpen their general intelligence. Each child has its I. Q; The way it is developed paves the way for its brilliant succes s in any field that the child embarks at, on any stage of its life. The parents should be the child's example. The child imitates first its parents, then the others in the family and the neighbourhood. What it observes and learns at home and its surroundings goes a long way in moulding its character The parents should set an example

to the children in every field the child would be interested. The parent can allocate few hours to read some valuable books and periodicals and in listening over the radio or watching over the T. V., some interesting programmes. The children however playful and mischievous they are at the start, would naturally be attracted towards the tastes and aptitudes of their parents. It will be no wonder at a certain stage, the children might surpass their parents in gathering knowledge and skill in various arts under the sun: It is really a matter of pride that the children are equally good as their parents of even better than them. The credit goes first to the parents for having brought up the children so nicely and successfully. Next to the parents are the teachers who shape the child's behaviour. The child is under the teacher's surveillance for few hours only at school. Much cannot be achieved within the few hours the child stays at school. Maximum the child spends six hours or a little more at school The rest of the day is spent at home in the company of its parents. It is the parents who would be more responsible for the child's academic proficiency religious beliefs, aptitude for work, efficiency in its technical skill, its sports talents, its sociable character and the readiness to serve others.

The child's skill and talents can be put to the best use, if at home, parents would create multifaceted useful activities such as home gardening, growing flower plants, rearing pets photography and philately (if these two pastimes are within their means) the task for aesthetic studies, such as art, music, dance and dramatic activities. These would foster in the child the liking for nature and its beauty. The child would develop love compassion, regard, consideration for others and the good habit of give and take. If the taste for sport too is developed from its youth that would help the child to grow up to be a decent gentleman wanted and respected by one and all in the society, he lives in. " The battle of Waterloo " was won at Eaton So said Nelson who could win several wars and achieve laurels. His successes are attributed to the rigorous training and best qualities imbibed at the sports - field. Parents must give all the encouragement and enthusiasm for the child to take part in sports activities, socio! events, shramadana work undertaken in the vicintty or any other activities that would improve the lot of the society he is born in.

The facts enunciated and illustrated above would amply bear testimony to the topic, "The first and the best teacher of a child is its parents".



125-ம் ஆண்டு விழா





நிகழ்வுகளில் சில





அன்னையின்
நூற்றிருபத்தைந்தாவது அகவையின்
ஆரம்ப நிகழ்வுகள்

எங்கள் கல்லூரியின் நூற்றிருபத்தைந்து ஆண்டு நிறைவையொட்டி 19 - 02 - 93 வெள்ளிக்கிழமை அன்று கல்லூரியிலே ஆரம்ப விழாவொன்று நடத்தப்பட்டது. இவ்விழாவிற்கு அதிபர் திருமதி. பா இரா ஜேந்திரசிங்கம் அவர்கள் தலைமை வகித்தார். கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் காப்பாளரான யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விழாவிற்குச் சிறப்பளித்தார். விழாவின் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சிக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை, பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சே. ஏகாம்பரநாதன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. சிவராசா, உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரட்ணம், உடுப்பிட்டிக் கொத்தணி அதிபர் திரு. ந. அனந்தராஜ், ஆகியோர் வருகை தந்திருந்து விழாவைச் சிறப்பித் தனர். கௌரவ விருந்தினர்களாக வண பிதா. யேசுதாசன் வண பிதா. தேவகரன், ஸ்ரீலஸ்ரீ சோ. தண்ட பாணிதேசிகர் ஆகியோர் வருகை தந்தனர். விழாவில் விசேட உரை நிகழ்த்துவதற்கு பேராசிரியர்களும், மற்றுமறிஞர்களும், பெரியோர்களும் மனமுவந்து வருகையளித்திருந்தனர். இவ்விழாவினைப் பெருமைப்படுத்தும் வகையில் மாணவர்கள், பெற்றோர் நலன்விரும்பிகள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

விழா காலை 9-30 மணிக்கு கல்லூரிக்கு அருகில் அமைந்திருக்கும் தேவாலயத்தில் நடைபெற்ற தோத்திர ஆராதனையோடு ஆரம்பமானது. இவ்வாராதனைக் கூட்டத்தை வண பிதா. பிறேம்ராஜ் போதகர் அவர்கள் நடத்தி வைத்தார். தோத்திர ஆராதனை —

" அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
ஆதிபரன் நூற்றிருபத்தைந்து ஆண்டுகளாய் செய்து வந்த
அற்புதங்களை நினைந்தே அல்லேலூயா "

என்ற பாடலுடன் ஆரம்பமானது.

அடுத்து போதகரின் செபத்தின் பின் பாடகர் குழுவினரில் இசைக்கப்பட்ட துதிப்பாடல் இது —

அன்பினால் ஆண்டருளி எம் பாதையைச் செப்பனிட்டீர்
நன்றியால் நாம் பணிந்தோம் நல்ல நாளிதில் துதித்திடுவோம்
நூற்றிருபத்தைந்து ஆண்டு கால நெடிய பயணமதில்
நல்ல மேய்ப்பர் உமது கரத்தில் தாங்கி நடத்தினீரே.

எளிமை வாழ்வை ஏற்றே மனுக்குலத்தின் துயர் துடைத்தீர்
பெருமை வாய்ந்த நகர் பல கோடி உள்ள உலகில்
உடுப்பிட்டி என்னுமிந்த சின்னஞ்சிறிய ஊரைத் தேர்ந்தீர்
உள்ள இருளை அகற்றும் அறிவுச் சுடரை ஏற்றி வைத்தீர்.

மாறும் பருவம் மாறும் இலைகள் உதிரும் துளிர்க்கும்
தருக்கள் வீழும் முளைக்கும். உருவம் சிதையும் உயிர்க்கும்
பெருமிடிகள் விழுந்தபோதும் புயல்கள் சூழ்ந்தபோதும்
சிறு குடிலில் இந்தத்தீபம் அணைந்திடாது காத்தீர்.

உமதருளின் மழையில் நனைந்து இம்மண்ணில் சிலிர்த்த முளைகள்
அறிவின் ஒளியால் உயர்ந்து அகிலமெங்கும் பரிந்து
தண்ணிழலும் கனியும் ஈந்து நன்மக்களாக விளங்க
சித்தம் வைத்த நேசா நித்தமும் நாமம் வாழி.

தொண்டுக்காகவே பிறந்த அரிய மாந்தர் தமைத் தந்தீர்
பண்டும் இன்றும் என்றும் பாரில் நல்ல பெயர் பெற்று
நின்று நிலைத்து ஒளிதந்து நீடுபுகழ் விளங்க வைத்தீர்
அன்பின் பெருமை உணர்ந்தின்று அகமகிழ்ந்து போற்றுகின்றோம்.

தொடர்ந்த மன்றாட்ட செபத்தினிறுதியில் '' நீர் ஸ்தாபித்த இந்தப் பெண்கள் பாடசாலையில் பயிலும் சகல மாணவரும் நீர் பிற்காலத்தில அவர்களுக்கு விதிக்கும் ஸ்திதியில் தங்கள் கடமைகளை நிறைவேற்றும்படி அவர்களை ஆசீர்வதியும் " எனப் போதகரவர்கள் வேண்டினார். இறுதியாக மங்களத்துடன் ஆராதனை இனிது நிறைந்தது. ஆராதனையின் பின்னர் விருந்தினர்கள் தேவாலய வாயிலிலிருந்து கும்மி, கோலாட்ட நிகழ்ச்சிகளுடன் ஊர்வலமாகக் கல்லூரிக்கு அழைத்து வரப்பட்டனர். கல்லூரியின் தற்காலிக மான திறந்த வெளியரங்கில் (முன்னைய காரியாலயத்தின் பின்புற தளம்) நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின கொடியேற்று வைபவமும் அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றுதலும் நடைபெற்றன.

மேடை நிகழ்வுகளின் ஆரம்பமாக மௌனாஞ்சலியும் தொடர்ந்து இறை வணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து என்பவையும் அடுத்து வரவேற்புப் பாடல், பூஜா நடனம், கோலாட்டம் என்பவையும் இடம பெற்றன அடுத்து விழாத் தலைவி திருமதி பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினார். அதன் பின்னர் வண பிதா. யேசுதாசன் அடிகளார் ஸ்ரீலஸ்ரீ சோ, தண்டபாணிகதேசிகர் அவர்கள் ஆசியுரைகள் வழங்கினார்கள். அவர்களை அடுத்து, விழுந்தினாகளாகச் சிறப்புச் செய்த பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள திரு ச. செல்லத்துரை, திரு. சே. ஏகாம்பரநாதன், திரு. சி. சிவராஜா, உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரட்னம், கொத்தணி அதிபர் திரு: ந. அனந்தராஜ் ஆகியோர் உரையாற்றினர் தொடர்ந்து விழாவின் பிரதம விருந்தினர் பேராசிரியர் அ. துரைராஜ் அவர்கள் உரை நிகழ்த்தினார், அவரது உரையில் நூற்றிருப்த்தைந்து ஆண்டு ஞாபக மலர் வெளிவர வேண்டுமென்ற வேண்டுகோளும் பிரகடனமானது. இதனை அடுத்துப் பாடசாலையின் பழைய மாணவி திருமதி கோபாலரட்ணம்மாள் அரியரட்ணம் அவர்கள் எங்கள் கல்லூரியின் வாழ்வினையும் வரலாற்றினையும் கல்லூரிச் சிறப்பினையும் நயந்து உரை நிகழ்த்தினார் அவரது உரையின் பின்னர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன். பேராசிரியர் V. K. கணேசலிங்கம், திரு அரசண்ணா ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்தினர். உரைகளைத் தொடர்ந்து கும்மி இடம் பெற்றது. இவற்றின் பின்னர் பாடசாலை வரலாற்றையும், வளர்ச்சியையும் — பாடசாலை இன்று கண்டுள்ள துயர் நிலையின் பின்னும் அதனது தளராத முயற்சியையும் சித்திரிப்பதான, விரைவுரையாளர் திரு. த. கலாமணி அவர்களால் ஆக்கம் பெற்ற '' ஒளிர்வதற்காய் ஒளியேற்றும் இல்லம் '' என்ற உரைச் சித்திரம் நிகழ்வாகியது.

'' அறியாமை இருளகற்றி, அறிவுக்கண் திறந்து ஞான ஒளி விளக்காய்த் திகழும் எமது கல்லூரிக்கு இன்று வயது நூற்றிருபத்தைந்து '' என்று ஆரம்பமாகிய உரைச் சித்திரம் இவ்வாறு முடிகின்றது —
'' கட்டடங்கள் உடைந்தன ஆவணங்கள் அழிந்தன ஆனாலும்

மழுங்கியதா எம் ஆவம்
இடிபாடுகளுக்கு மத்தியிலும் கல்வி தொடர்ந்தது.
அழிப்புக்களின் மத்தியிலும் உயிர்த்தெழுந்தோம்
எம் உயிர்ப்பின் ஆதாரமாய் எமது அதிபர்
அந்த ஜீவாதாரத்துக்கு வழி காட்டும் ஜீவ ஒளியாய்
எம் உடுப்பிட்டி மாதா ..
ஆம் ! நாம் ஒளிர்வதற்காய் அவள் ஒளியேற்றிக் கொண்டிருக்கிறாள்

அந்த ஜீவ ஒளியில் —
நாம மலர்வோம் !
வாழுவோம் !!
எல்லும் வரலாற்றில் நிலைத்து நிற்போம்,

உரைச் சித்திரத்தை அடுத்து சிரேஷ்ட மாணவ தலைவி நன்றி உரை ஆற்றினார், அடுத்த நிகழ்வாக ''சோர்விலாள் எங்கள் தாய்'' என்ற நாட்டிய நாடகம் இடம் பெற்றது. பாடசாலை மாதா 1868 மே திங்கள் 7-ம் நாள் உதயமானதைக் குறிப்பதான

''குயிலினம் இசைத்தது குருகுகள் இயம்பின
குடதிசை வெளுத்தது கதிர்முகம் எழுந்தது
விடியலின் முகத்தில் வையம் விழித்தது
உடுப்பிட்டி மண்ணுக்கு உதயம் புலர்ந்தது.

சின்னஞ்சிறு நிலவாய் சிரித்திடு மெழில் வடிவாய்
வண்ணமுறு பொற்கதிராய் வந்துதித்தேன் நான் இங்கு
உற்றவர் களித்தாட கற்றவர் கொண்டாட
வற்றாக் கவிநதியாய் சிற்றாடை தவழ வந்தேன்.''

என்ற பாடலுடன் ஆரம்பமான நாட்டிய நாடகம் கலை, விளையாட்டு, கல்வித்துறைகளின் வளர்ச்சியோடு அன்னையின் ஆட்சி நிகழ்ந்ததையும் இடையே நிகழ்ந்த அனர்த்தங்களால் கல்லூரி எரியுண்டுபோன அவலத்தையும், வேதனையையும் சித்தரித்தது. இந்நிலையிலும் கல்லூரி அன்னை தன் நிலை இழக்கவில்லை என்பதைப் பின்வரும் பாடற்காட்சி உணர்த்தியது.

''அன்புறு மக்களே அன்னையின் கோலத்தை
எண்ணியே ஏங்குதல் தவிர்கவே
அழுபவர் கோழைகள் ஆற்றலுடைய குழந்தைகளே
எழுகவே திடமாகவே

அழிந்தது சடமே நான் அழுதென அளித்தநல்
அறிவுக்கு அழிவில்லையே
விழியனைய மக்களே விரிந்து சூழ் புகழுடன்
விளங்கிடத் தாழ்வில்லையே.

இடிந்திட்ட கோயிலின் கர்ப்பக் கிருகத்திலே
அணைந்திடா கல்வித் தீபமே
தொடர்ந்திடும் என்றன் கடமைகள் ஊழியைத்
தொடர்ந்துமே துலங்கிடும் பாரீர்!''

துறைகள் புத்துயிர் பெற்று விளங்க, சிறைகள் துடைக்கக் கரங்கள் நீள, குறைகள் மறைய நிறைகள் பரவ சோர்விலாது பாடசாலை மாதா திகழ்வதாக நாட்டிய நாடகம் முடிவுற்றது.

கல்லூரிக் கீதத்துடன் விழா நிறைவு கண்டது.

— மலர்க்குழு —

1993 இல் இருந்து
அதிபர், ஆசிரியர்கள், வழியாளர்கள்

1.	திருமதி. பா. இராஜேந்திரசிங்கம்	B. A. Dip-in-Ed S. L. E. A S II (அதிபர் 27 02 - 1993 வரை)
2.	திருமதி. இ. குட்டித்தம்பி	B. A (Hons) Dip-in Ed S. L. P. S. II (அதிபர் 28 - 02 93 தொடக்கம்)
3.	திருமதி. லி. நே யோசேப்	B. Sc., Dip-in-Ed. - பிரதி அதிபர்
4.	திரு. சோ. அம்பலவாணர்	B Sc., Dip in-Ed.
5.	திருமதி சு. அருண்குமார்	B. Sc, Dip-in-Ed
6	திரு. வே. நவரத்தினம்	B. Sc., Dip-in-Ed. - பிரிவுத் தலைவர்
7.	திருமதி. ச. குமாரசுப்பிரணியம்	B. A.
8.	திருமதி. பி அருள்விங்கம்	B. A.
9.	திருமதி. பு. சண்முகலிங்கம்	B. A., Dip-in-Ed. - பிரிவுத்தலைவர்
10.	திருமதி. ஈ. ஜெயராஜா	B. A.. (Hons)
11.	திரு. வை. பூபாலசுந்தரம்	B. Com
12	திருமதி. த. நடராசா	விசேடபயிற்சி மனையியல்
13.	திருமதி. பி சிதம்பரப்பிள்ளை	சங்கீத டிப்ளோமா
14.	திரு. சு. கிருஷ்ணராசா	B. A.
15.	செல்வி. பூ. சின்னத்துரை	விசேட பயிற்சி கணிதம்
16.	திரு. ஆ இராமநாதன்	B. Com
17.	செல்வி. வி. அன்னராணி	B. A
18.	செல்வி. ச. வேலுப்பிள்ளை	பொதுப் பயிற்சி (பிரிவுத் தலைவர் ஆரம்பப் பிரிவு)
19.	திருமதி. அ. கந்தசாமி	பொதுப் பயிற்சி
20.	திருமதி. அ. பாலசிங்கம்	பொதுப் பயிற்சி
21	திரு செ சூரியகுமார்	விசேட பயிற்சி ஆங்கிலம்
22.	திருமதி. பூ. பீதாம்பரம்	பொதுப்பயிற்சி
23.	திரு செ. பரராஜசிங்கம்	விசேட பயிற்சி ஆங்கிலம்
24.	திரு. வ இரத்தினசிங்கம்	விசேட பயிற்சி ஆங்கிலம் - பிரிவுத் தலைவர்
25.	திரு தா மகாதேவன்	விசேட பயிற்சி கணிதம்
26.	திரு ஆ. இந்திரலிங்கம்	B. Sc, Dip-in-Ed
27.	திருமதி. ஜே. கந்தசாமி	விசேட பயிற்சி கணிதம்
28.	செல்வி. மரி. பொன்னையா	B. A., விசேட பயிற்சி (நடனம்)
29.	திருமதி. இ. சோமஸ்கந்தமூர்த்தி	விசேட பயிற்சி கணிதம்
30.	திருமதி. தி. இராதாகிருஷ்ணன்	விசேடபயிற்சி மனையியல்
31.	திரு. ச. பூரீராமச்சந்திரன்	விசேட பயிற்சி விஞ்ஞானம்
32.	திரு. மா. இரத்தினசபாபதி	பொதுப் பயிற்சி
33.	திருமதி இ செல்வராஜா	விசேட பயிற்சி கணிதம்
34	திருமதி. மா. ஜெகநாதன்	விசேட பயிற்சி மனையியல்

35.	திருமதி. க. துரைசிங்கம்	B. A.
36.	திருமதி. செ. மனோகரன்	விசேடபயிற்சி விஞ்ஞானம்
37.	செல்வி. ஐ சாந்தினி	விசேடபயிற்சி ஆரம்பக்கல்வி
38.	செல்வி. ப. பத்மராணி	உடற்பயிற்சி ஆசிரியர்
39.	செல்வி. க. தேவகி	B Sc.
40	செல்வி. த உமா	பயிலுனர் ஆசிரியர்
41.	செல்வி. இ மெ கா ஞானமலர்	பயிலுனர் ஆசிரியர்
42.	திருமதி தி. தேவரஞ்சினி	பயிலுனர் ஆசிரியர்
43.	திருமதி. பூ. தவமணி	பயிலுனர் ஆசிரியர்
44.	திருமதி அ. சண்முகநாதன்	பயிலுனர் ஆசிரியர்
45.	செல்வி. ந விமலேஸ்வரி	பயிலுனர் ஆசிரியர்
46.	,, த. வசந்தா	பயிலுனர் ஆசிரியர்
47.	,, இ. நாகேஸ்வரி	பயிலுனர் ஆசிரியர்
48.	திருமதி. கு ஈஸ்வரி	B. A, (Hons)
49.	திமருதி. ச. மகேந்திரராஜ்	பயிலுனர் ஆசிரியர்
50.	,, ஜெ. மீனாட்சிசுந்தரம்	பயிலுனர் ஆசிரியர்
51.	,, பே. சிவகுரு	பயிலுனர் ஆசிரியர்
52.	திரு. வே. மகேந்திரன்	B Com. பட்டதாரி பயிலுனர்
53.	செல்வி. க. தயாநிதி	B. A (Hons) பட்டதாரி பயிலுனர்
54.	திரு. நா. மகேந்திரன்	விசேடபயிற்சி விஞ்ஞானம்
55.	திருமதி. கை. கலைவாணி	B. Sc.
56.	செல்வி. க. சறோஜாதேவி	B. A. (தொண்டர் ஆசிரியர்)
57.	திருமதி. லட்சுமிப்பிள்ளை வேலுப்பிள்ளை	எழுதுவினைஞர்
58.	செ. சுகந்தினி	நூலகர் (தொண்டர் உத்தியோகத்தர்)
59.	திரு. கி. ஆறுமுகராஜா	அலுவலக ஊழியர்
60.	திரு. நா. திருநாவுக்கரசு	காவலாளர் (சமயோசித ஊழியர்)
61.	திரு. ஆனந்தராஜா	காவலாளர் (சமயோசிதம்)
62.	திரு. சி. ஸ்ரீரங்கன்	நிவாரண சுகாதார ஊழியர்.

அஞ்சலி

எமது சங்கக் காப்பாளராய் விளங்கிய பேராசான் அ. துரைராஜா அவர்கள் 11 - 06 - 94 அன்று மறைந்தார்கள் என்ற செய்தி கேட்டு நாடே பெரும் சோகத்தில் ஆழ்ந்தது. அந்த மகானின் மறைவு, எல்லோர் இதயங்களையும் உலுக்கியது; உருக்கியது ஏனெனில் அவர் இழப்பதற்கரிய சொத்து. மனிதர்கள் பிறக்கின்றார்கள், மறைகின்றார்கள் அது இயற்கை. ஆனால் எப்போதாவது ஒரு முறை மட்டுமே இறைவன் மனித சமுதாயத்திற்கு ஒரு மகானை அளிக்கிறான், வாழும் முறை காட்டும் வழிகாட்டியாக, எங்களிடையே அந்த மகானைக் கடவுள் தந்தான். எங்களால் தடுக்கவே முடியாதபடி கடவுளே அவரை எடுத்துக் கொண்டான், எங்களுக்கு அவர் காட்டிய வாழ்வு முறையைப் பின்பற்றுவதே அவருக்கு நாங்கள் செய்யும் நன்றியாகும். அரிதெனினும் அவ்வழியை முயல வேண்டும்.

அன்று அந்த நாடளாவிய சோகத்தில் நாமும் பங்கு கொண்டோம். சூழ்ந்துவிட்ட இருளைச் சுட்டிக் காட்டுவதாய் கறுப்புப் பட்டிகள், காற்றிலே அசைந்து அரற்றுகின்ற தோரணங்கள், அவரது வாழ்வையும் இழப்பையும் வார்த்தைகளாக்கி எங்களை வழி மறித்த சுலோகங்கள், அரைக் கம்பத்திற்கு இறங்கிவிட்ட கொடிகள். மீள முடியாத சோகத்தைச் சேர்ந்து நாங்கள் கொண்டாடினோம்.

12 - 06 - 94 அன்று உதயன் பத்திரிகையில் வெளிவந்த எமது சங்கத்தின் இரங்கல்

எங்கள் துரையென ஊர் கொண்டாடிடும்
மங்காப் புகழினர் மாண்புறு கல்வியால்
தங்கிய சால்பினால் தண்ணொளி முகத்தினால்
தங்கமாய் மிளிர்ந்திட்ட எங்களின் வேந்தரே!
அண்ணலே !
உன் இதயம் ஒய்ந்த செய்தியை
உன்னை அறிந்த இதயங்கள் ஏற்க மறுக்கின்றன,
எங்களின் மத்தியிலே
உனது கம்பீரமான வழிகாட்டல்
அது இனி இல்லையா ?
தெய்வீகமாய் மலருகின்ற குழந்தை முறுவல்
அது இனி இல்லையா ?
கொள்கைத தெளிவோடு,
இயல்பாய், எளிமையாய்,
அன்பாய் நிகழ்கின்ற
பீடிகையில்லாத உரையாடல்
அது இனி இல்லையா ?
இரத்த பந்தம் தசையை உலுக்கும் என்பார்கள்
ஆனால் உனது பிரிவு
இரத்த பந்தத்திற்கு அப்பாற்பட்டு
எங்கள் எல்லோரின் இதயங்களையும்
தசைகளையும் அசைக்கிறதே அது ஏன் ?
நீ மேதை என்பதனாலா ? இல்லையே
உபவேந்தர் என்பதனாலா ? இல்லை
சமூக மத்தியிலே ஒரு பிரமுகர் என்பதனாலா
இல்லை, இல்லை,
இந்தப் போர்வைகளையெல்லாம் உதறிவிட்டு,
ஓர் உண்மையான மனிதனாக,
எளிமையும், அன்பும் நிறைந்த
வேடங்கள் இல்லாத மனிதனாக
எங்களிடையே வாழ்ந்தாயே
அந்த உறவுதான் எங்களை உலுக்குகிறது.
உனது விழிகள் மூடிவிட்டன,
உலகம் ஒரு மேதையை இழந்தது,
தமிழீழம் ஒரு வழிகாட்டியை இழந்தது,
பல்கலைக்கழகம் ஒரு வேந்தனை இழந்தது,
மாணவருலகம் பேராசானை இழந்தது,
சமூகம் அரிய மனிதனை இழந்தது,
நாங்கள் காப்பாளரை இழந்தோம்,
எங்கள் ஊர் துரையை இழந்தது,
உனது குடும்பம் தலைவனை இழந்தது.
அண்ணலே ! உனது வாழ்வும், பிரிவும்
எழுத்துகளுக்கப்பாற்பட்டது
எங்கள் கொடுப்பனவு இவ்வளவே ஆனது
எங்களிடம் நீ காட்டிய பண்பிற்காகப் பரிவிற்காக
தந்த துணிவிற்காக, ஊக்கத்திற்காக
இறுதியாக எங்கள் நன்றிகள்
ஓ ! நீ கனிவாகச் சிரிக்கிறாய்
" கர்மயோகம் — அதுதானே எங்கள்
வாழ்க்கைத் தத்துவம் "
என்று கதைகளினிடையே நீ சொல்லியதுண்டு
அவ்வழியைத் தொடர
எங்களுக்கு வழிகாட்டுவாயாக
நின் ஆத்மாவின் தெய்வீக ஒளியை
நின்னிடத்தில் தரிசித்தோம்.
அது சாந்தி பெறுவது இயற்கை.
அகரம் கற்ற நின் கல்லூரியின்
சோதரிகள் பிரியாவிடை தருகிறோம்.

பழைய மாணவர் சங்கம்
யாழ் / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

14 - 06 - 94 அன்று நடந்த அன்னாரின் இறுதிச் சடங்குகளின் போது எமது கல்லூரி வெளியிட்ட அஞ்சலிப் பிரசுரம்.

அந்தக் கணித மேதை
தன்னை மையமாக வைத்துப் போட்ட வட்டம்
மிகப் பெரியது
அந்த வட்டம்
அவருடைய குடும்பத்தை மட்டும் அடக்கவில்லை
அவருடைய சுற்றத்தை மட்டும் அடக்கவில்லை
அவரையொத்த அறிஞர் குழாமை மட்டும்
அடக்கவில்லை
தன்னுடைய இனத்தின் மீது உறுதியான
பற்றும் பாசமும்
வைத்திருந்த போதும்
அதற்குஅப்பாலும் அந்த வட்டம் விரிந்திருந்தது
என்ன புதுமை!
அந்தச் சூரியனிலிருந்து நிலவின் கதிர்கள்தான்
பரிணமித்தன
சாமானியர்களையும் தான்அந்தக் கதிர்கள்
சந்தோஷிக்கச் செய்தன
ஓ! அந்தக் குழந்தைச் சித்தர்
கபடமில்லாத தன் சிரிப்பினால்
எல்லா இதயங்களையும் ஸ்பரித்து
மென்மை செய்தார்
விவேகானந்தரும், ரூசோவும் சொன்னபடி
கல்வி தன் இலக்கினை அவரிடமே எய்தியது
குறைவான வார்த்தைகள்
நிறைவான உறுதி
மாறாத பொறுமை
குறையாத கருணை
அவருடைய அன்பு, ஆளுமை, அறிவு
வார்த்தை விவரணங்களில் அடங்குவனவா?
எல்லாமே முடிந்துதானே போனது!
மானுட வர்க்கத்துக்கு எப்போதாவது மட்டும்
கிடைக்கக் கூடிய அருமையான
அந்தக் குறிஞ்சி மலர்
அது உதிர்ந்துதானே போனது
எந்த இடத்திலும் தன்னுடைய சுயநீதியையே
சார்ந்து வாழ்ந்த, சராசரி மனுசத்திற் கப்பாற்பட்ட
அந்த சான்றாண்மை எமைப் பிரிந்துதானே போனது
அந்தக் கல்வீ கருவூலம் கண்களை மூடித்தானே
கொண்டது
அந்த இளநகை? அது இனிக்கிட்டாதது
இந்தக் கல்லூரியிலே சின்னவயதிலே
அரிச்சுவடி படித்தேன், ஆடி ஓடி விளையாடினேன்
அந்த வார்த்தைகள் எங்கள் செவிகளுக்கு
நிரந்தரமானவை.
எங்கள் விழாக்களிலே அவரை சூழநடந்த கணங்கள்
எங்கள் நினைவுப் பெருமைகளில் பதிந்துபோனவை.
எங்கள் தேசத்தின் மதிப்பிற்கரிய
சொத்து தனது மண்ணிலே சங்கமிக்கின்ற வேளை
கண்ணீரால் மாலை செய்து காணிக்கையாக்குகிறோம்
அவரின் ஆத்மா, அது சாந்திபெறும்.

அதிபர், ஆசிரியர், ஊழியர்
மாணவர், பழைய மாணவர்
பாடசாலை அபிவிருத்திச் சபையினர்
யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

நிரப்ப முடியாத அந்த இடைவெளியைக் காலமே இனிச் சீர் செய்யக்கூடும். பேரறிஞனுக்கு, பெருமகனுக்கு எங்களின் இறுதியஞ்சலிகள். மாமனிதரே சென்று வருக, இனியொருமுறை இறைவன் வரம்கொடுக்கும் வரை எங்கள் பூமித்தாய் காத்திருப்பாள்,

மதிப்புரை

திரு. R. S. நடராஜா
பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபர்

" பாடசாலையைத் திற சிறைச்சாலைகளை மூடு " என்பது பொருள் பொதிந்த முதுமொழி. இது கல்வியின் பண்பையும், பயனையும் விளக்குகின்றது. பாடசாலைகள் சீரிய முறையில் செயற்படுத்தப்பட்டால் மாணிடம் மாண்புறும் என்பது இக்கூற்றின் துணிபொருளாகும். நிறைவான மனிதரை உருவாக்கும் கல்வியை வழங்குவே பாடசாலைகள் உருவாக்கப்படுகின்றன. அப் பாடசாலைகளை நிறைவான கல்விக் கருமத் தொடரை உருவாக்கும் வள நிலையங்களாக உருவாக்குதல், கல்வி விருத்தியில் அக்கறை கொண்ட அனைவரது கடனாகும். இச்சிரிய சமூகக் கடமையை உணர்த்துவதே இச் சஞ்சிகையின் முக்கிய நோக்கமெனத் துணியலாம்.

பெரும் அழிவைத் தரும் மாந்தர் மனக்கோட்டம் தீர்க்கப்பட்டால் வாழ்க்கை எல்லோர்க்கும் மகிழ்ச்சியாய் அமையும். மனக்கோட்டம் நீர அவசியமான அரிய செய்திகள் திரட்டித் தருவதில் வெளியீட்டாளர் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றுள்ளனர். கல்வி, கல்வி வரலாறு, சமூகம், சமூக பண்பாட்டு விழுமியங்கள், சமய ஒழுக்கம் ஆன்மீகம் எனப் பற்பல துறைகளைத் தெவிவாக அறிந்து கல்லூரியின் மறுமலர்ச்சிக்கு உதவத் தூண்டும் முயற்சி இச் சஞ்சிகை வெளியீட்டின மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெண்ணைப் பெருமைக்கும் மதிப்புக்கும் உரிய நிலைக்கு உயர்த்த வல்லது கல்வியே " அறிவுடையார் எல்லாம் உடையார் " பெண்கல்வி சமூக முன்னேற்றத்தை விரைவுபடுத்தும் சிறந்த சாதனம். ஒன்றேகால் நூற்றாண்டு அரும்பணியாற்றி உடுப்பிட்டிப் பெண்கள் கல்லூரியின் நீண் செழிப்பான கல்விப் பண்பாட்டுப் பாரம்பரியம் தொடரச் செய்யப்பட வேண்டும் என்னும் தணியாத தாகத்துடன் பழைய மாணவியர் ஒன்று திரண்டு. உள்ள வளங்களைத் திரட்டி மீண்டும் கல்லூரியை மிளிரச் செய்ய முயற்சித்துள்ளனர் என்பது இச் சஞ்சிகையைப் படிக்கும் அனைவருக்கும் தெளிவாகும்.

கற்றல் இயல்பான செயற்பாடு இதனைப் பயனுள்ள தாக்கமான செயற்பாடாக நெறிப்படுத்தும் நிலையமாக கல்லூரி அமைதல் வேண்டும். செழிப்பான தூண்டக்கூடிய பௌதிக சமூக கல்விச் சூழலை மீண்டும் உருவாக்க ஊக்குவிப்பதே கல்லூரிக் கல்விப் பாரம்பரியத்தில் வாழ்வும். வளமும் பெற்றவர்களின் துடிப்பாகக் காணப்படுகின்றது. இக் கருத்தினையே இம் மலருக்குக் கல்வியாளர் பலரும் வழங்கிய வாழ்த்துரைகள் வலியுறுத்துகின்றன.

மகரயாழ் விருதுபெற்ற மாமனிதர் அமரர் பேராசிரியர் அ துரைராஜா அவர்கள் இக் கல்லூரியின் மறுமலர்ச்சியில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தவர். அவருக்கே இம்மலர் சமர்ப்பணமாக்கப்பட்டமை இம் மலரின் மதிப்பினைப் பெரிதும் உயர்த்துவதாகும்.

ஒன்றேகால் நூற்றாண்டின் கல்லூரிக் கல்விப் பாரம்பரியத்தை விளக்கும் வகையில் கல்லூரியின் வரலாறு பலரின் பங்களிப்பாக இம்மலரில் இடம் பெற்றுள்ளது.

கல்லூரியின் முன்னேற்ற முகவர்களான அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் அரும்பணிகள் நன்றியுணர்வோடு மாணவர்களாலும். அன்பர்களாலும் நினைவுகூரப்பட்டு அஞ்சலி செய்யப்பட்டுள்ளன. கற்றலுக்கு உகந்தொரு அமைதியும் நெருக்கமான ஆசிரிய, மாணவ உறவு கல்விப் பாரம்பரியமாக இருந்து வந்தது என்பதனை நம்மால் உணர்க்க முடிகின்றது.

பேராசிரியர் வ ஆறுமுகம், கலாநிதி சபா. ஜெயராஜா, கலாநிதி சுரேஸ் கனகராஜா, திரு. இ. நடராஜா ஆகியோர் வழங்கிய ஆக்கங்கள் சமூக மாற்றத்திற்குக் கல்வி எந்தளவு அவசியம் என்பதனையும் அது காலத்துக்கு ஏற்ற வகையில் திட்டமிட்டு ஆர்வத்தோடு வழங்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துவனவாய் அமைகின்றன.

மாணவர்களின் கல்விப் பிரச்சனைகள் பற்றிய பிரபலமான கல்வியாளர்களின் கருத்துக்களைத் தொகுத்துத் தந்தமை வரவேற்கத்தக்கது. அவர்களுடனான கலந்துரையாடலில் பெறப்பட்ட கருத்துக்கள் சிந்தனைக்கு தூண்டி ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடச் செய்யும் பெற்றியன. ஆசிரியரும், மாணவரும் தமிழிலும், ஆங்கிலத்திலும் வழங்கியுள்ள ஆக்கங்கள் கற்றலையும், கற்றபடி நிற்றலையும் தூண்டும் வகையில் அமைந்துள்ளன.

படங்கள் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தாய் அமைந்து கல்லூரியின் விருத்திப் பாதையை விளக்குகின்றன கல்லூரிக் கட்டடங்கள் '' அன்றும் இன்றும் '' என வெளியிடப்பட்டுள்ள படங்கள் கல்லூரி எத்துணை பாதிப்புக்குள்ளாயிற்று என்பதைக் காட்டுகின்றன. பொருத்தமான முகப்பு அட்டையோடு தரமான தாளில் திருத்தமாக அச்சுப் பதித்துள்ளனர். பட்டுப்பாடும், கட்டுப்பாடும் மலர் வெளியீட்டினை தடுத்து நிறுத்தவில்லை. மாறாக மலர் சுடச்சுடரும் பொன்னேபோல் சுடர்கின்றமை மகிழ்ச்சிக்குரியது. மலர் வெளி வரும் சூழலின் பின் புலத்தைக் கொண்டு நோக்கும்போது இம் மலரின் மதிப்பு பெரிதாகின்றது.

எனதுரை மதிப்புரை என்பதால் மேலும் நீடிக்காது நிறைவு செய்கின்றேன். கல்வியை விருத்தி செய்து கல்லாதவரே இல்லாத, கற்றலை வாழ்நாளெல்லாம் தொடரும் சமூகத்தை உருவாக்குவதே எமது முக்கிய தேவை. அதனை நிறைவேற்றுவதற்கு இம் மலர் உதவும் என்பதே எனது கருத்து. கல்விப்பணி தூயது எனவே, '' தூயவை துணிந்தபோது பழி வந்து தொடர்வதில்லை '' எனக் கொண்டு தொடர்ந்து பணிந்து பணி செய்வதே நம் கடன்.

நன்றிகள்

ஆரம்பம்

- இப்பணியில் எமது வழிபுனர்த்திய அமரர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள்
- இப்பணியில் எம்மை வழிநடத்திய திருமதி. பா. இராஜேந்திரசிங்கம் அவர்கள்
- கொழும்பு, வெளிநாட்டுப் பத்திரிகைகளில் விளம்பரம் தந்தவர்கள்.

ஆக்கம்

- இம்மலருக்கான ஆசிகள், வாழ்த்துகள், செய்திகள், மதிப்புரை, ஆக்கங்கள், கருத்துரைகள், அறிக்கைகள் அனைத்தையுமளித்த அறிஞர் பெருமக்கள், எமது அதிபர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், மாணவர்கள், பழைய மாணவர்கள்.
- நடுவர்களாயமைந்த திரு. ஐ சண்முகலிங்கம், திரு. தெணியான், திரு. க. முத்துவேல் ஆகியோர்
- போட்டியாக்கங்களுக்கு கவிதை அடிகள் ஆக்கித் தந்த திரு. கா. நீலகண்டன் கட்டுரைத் தலைப்புகள் ஆக்கித் தந்த திருமதி. இ. தில்லையம்பலம் ஆகியோர்.

நிதி

- உள்ளூரில் நிதி பங்களிப்புச் செய்த பழைய மாணவிகள், பெற்றோர்கள் அதனைச் சேகரித்த எமது உறுப்பினர்கள்.
- ஐக்கிய இராட்சியத்திலிருந்து நிதி பங்களிப்புச் செய்த பழைய மாணவிகள், அவற்றைச் சேகரித்தனுப்பிய திருமதி நிர்மலாதேவி விஜயகுமார்
- கனடா நாட்டின் நிதி பங்களிப்புச் செய்கின்ற பழைய மாணவிகள், அவற்றைச் சேகரிக்கும் பொறுப்பினை ஏற்றுள்ள திருமதி. இராசமணி இராதாகிருஷ்ணன், எமது சகோதர பாடசாலையான உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளையினர் அதன் தலைவர் திரு. சு. பாலேந்திரன் ஆகியோர்.
- விளம்பர அன்பளிப்புகள், வாழ்த்துகள் தந்த வர்த்தகப் பெருமக்கள், அவற்றைச் சேகரித்தளித்த எமது உறுப்பினர்கள், குறிப்பாக எமது கல்லூரியிலிருந்து இடமாற்றலான பின்பும் இப்பணியிலுதவிய திரு. ச. ஸ்ரீராமச்சந்திரன் ஆகியோர்.

அச்சேற்றம்

- புகைப்பட புளோக்குகள் தயாரித்தளித்த கொழும்பு ஸ்ருடியோ ஸ்தாபனத்தினர்
- அட்டைப்படம், கலர்ப் புகைப்படங்கள் ஆகியவற்றைக் கொழும்பில் சிறப்பு அச்சமைப்பித்து அனுப்பிய திரு. இ. முத்துரட்னானந்தன் அவர்கள்
- கையெழுத்துப் பிரதிகள் செய்து தந்த செல்வி சறோஜாதேவி கதிரவேலு தட்டச்சுப் பிரதிகள் ஆக்கித்தந்த செல்வி. இ. திருத்தேவி, திரு. கா. உமாபதி ஆகியோர்.
- இம்மலரினை அச்சிடும் பணியினை மகிழ்வோடு ஏற்று, தேவைப்பட்ட மேலதிக புளொக்குகளைத் தாமே தயார் செய்வித்து, மிக அக்கறையோடும், இன்முகத்தோடும் தேவையான ஒத்தாசைகளனைத்தும் தந்து அழகுற அச்சிட்டளித்த குமார் அச்சக உரிமையாளர் திரு. ச. காந்திதாசன் அவர்கள், திரு. வ. யோகநாதன் உட்பட அவர்தம் ஊழியர்கள்

போக்குவரத்து

- கடிதப் போக்குவரவு இடருள்ள இந்நேரத்தில் வெளிநாட்டிலிருந்து வரும் நிதிப் பங்களிப்புகளை ஆக்கங்களைப் பெற்று எமக்கு அனுப்பி வைத்த திரு. இ. முத்துரட்னானந்தன் அவர்கள்
- அட்டைப்படம், புகைப்படங்கள் ஆகியவற்றைக் கொழும்பிற் சேர்ப்பித்துதவிய திரு. கு. சண்முகலிங்கம் அவர்கள்
- அச்சிடப்பட்ட அட்டைப்படப் பிரதிகள், புகைப்படப் பிரதிகளை எமது வகைகளுக்குச் சேர்ப்பித்துதவிய திரு. சி. தில்லைநடராஜா, திரு சக்திவேல், திரு. இராஜலிங்கம் ஆகியோர்

❋ போக்குவரத்து இடர் நிரப்பிய இக்காலத்தில், நாம் அணுகிய போதெல்லாம், ஆர்வத்தோடும் முகமலர்ச்சியோடும், தொடர்பாடும் பணியில் முன்னின்றுதவிய எமதுறுப்பினர் திரு செ. பரராஜசிங்கம் அவர்கள்

❋ நாம் வேண்டிய வேளையில் மகிழ்ச்சியோடு உதவிகள் புரிந்த பாடசாலை அபிவிருத்திச்சபை முன்னாள் செயலாளர் திரு. சண்முகம், தற்போதைய செயலாளர் திரு. சி. தனபாலசிங்கம் ஆகியோர்

வெளியீடு ❋ வெளியீட்டு விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த எமது கல்விப் பணிப்பாளர் திரு கு. கந்தசாமி அவர்கள்

❋ ஆசிகளளித்த குருமார் அவர்கள்

❋ சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்புரைகள் தந்த பெரியோர்

❋ மலரினை வெளியிட்டு வைத்த திருமதி. S செல்லத்துரை அவர்கள்

❋ மலரின் முதற் பிரதியை பெற்றுக் கொண்ட திரு. வே. தவேஸ்வரன் அவர்கள்

❋ மலரின் விசேட பிரதிகள் பெற்றுக் கொண்ட பெரியோர்

❋ மலரினை ஆய்வு செய்து உரையாற்றிய கலாநிதி. நா. ஞானகுமாரன் அவர்கள்

❋ கல்லூரி அரங்கில் இவ்விழா நடைபெற அனுமதி தந்தும், சகல ஒத்தாசைகளை அளித்தும் உதவிய அதிபர் திருமதி இ. குட்டித்தம்பி அவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்

❋ மலரின் ஆக்கம் முதல் விழா ஒழுங்குகள் வரை அனைத்து வழிகளிலும் சிறப்பான பங்களிப்பு நல்கிய மலர்க்குழுவைச் சார்ந்த அனைத்து ஆசிரியர்கள், பழைய மாணவிகள், செயலாளர் திருமதி க. தேவராஜா முதல் அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்கள்

❋ மலர் வெளியீட்டின் தலைமையை ஏற்று சிறப்பாக வழி நடத்திய எமது பழைய மாணவர் சங்கத் தலைவி திருமதி ச. குமாரசுப்பிரமணியம் அவர்கள்

❋ அனைத்துக்கும் மேலாக இம்மலர் ஆக்கம், வெளியீடு முதலான சகல விடயங்களிலும் எம்முடன் இணைந்து உறுதுணையாகச் செயற்பட்ட துணை ஆசிரியர் திருமதி ஜெயலக்ஷ்மி கந்தசாமி அவர்கள்

❋ இன்னும் இதனை வரைகின்ற வேளையில் எமது நினைவுத் திரையில் முகம் காட்டாது தப்பித்து நிற்கும் நன்றிக்குரியவர்கள் அனைவோர்க்கும் எமது மனம் நிறைந்த பணிவன்பு மிக்க காலத் தாலும் மறையாத நன்றிகள் உரியன.

நிறைவு ❋ எம்மை அன்போடு ஆண்டருளி, தமது சித்தத்தின் வழிநடத்திச் செல்கின்ற எல்லாம் வல்ல இறையோனை, இம்மலரின் நிறைவுக்காக நன்றியோடு பணிகின்றோம்.

- நன்றி -

- மலராசிரியர் -

J / UDUPPIDDY GIRLS' COLLEGE

THE 125 th ANNIVERSARY

SOUVENIR

Published by

"OLD GIRLS' ASSOCIATION"

ON 28-07-1994.

Printed at Cumar Achchaham - Point Pedro

சேட்டிங், சூட்டிங் கூறைச் சேலைகள்
சிறுவர்க்கான றெடிமேட் ஆடைகள்
முதலியவற்றை
மனத் திருப்தியுடன்
பெற்றுக்கொள்ள

ரிஷிரெக்ஸ்

யாழ். வீதி வல்வெட்டித்துறை.

பழைய நகைகள் விற்கவும் புதிய நகைகள்
ஓடர் செய்து பெற்றுக் கொள்ளவும்
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்
உள்ள ஸ்தாபனம்



இரத்தின மாளிகை

57, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

வீட்டு முகவரி
தெனியம்பை வீதி, வல்வெட்டித்துறை.

வாழ்த்துகிறோம்



SUPPER MARKET

NELLIADY.

அழகிய வண்ண அச்சு வேலைகளுக்கு

தமிழ்ப் பூங்கா
அச்சகம்

நெல்லியடி.

வாழ்த்துகிறோம்



அம்சன்

பிரதான வீதி. நெல்லியடி.

- சேட்டிங் - சூட்டிங்
- திருமணப் பட்டுச் சேலைகள்
- சிறுவர் ஆடை வகைகள்

உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்ய

கிருபா புடவை மாளிகை

யாழ்வீதி, நெல்லியடி.

வாழ்த்துகிறோம்



சிமாட் ரெயிலரிங்

நெல்லியடி

வாழ்த்துகிறோம்



இந்திரா கபே

பிரதான வீதி, நெல்லியடி.

Best Compliments from

CHITHAMPARAPILLAI BOOK DEPT.

NELLIADY, KARAVEDDY.

வாழ்த்துகிறோம்

சர்வானந்தா

வர்த்தக நிலையம்

பிரதான வீதி. நெல்லியடி.

வாழ்த்துகிறோம்

அம்பிகா

வர்த்தக நிலையம்

பிரதான வீதி

நெல்லியடி கரவெட்டி

நவ நாகரிக நங்கையர்க்கேற்ற ரெடிமேட்

❊ ஸ்கேட் ❊ பிளவுஸ்வகைகள்

❊ பட்டுவேட்டி ❊ கூறைச் சேலைகள்

❊ வெளிநாட்டு ❊ உள்நாட்டு

ஆடை வகைகள் எமது தயாரிப்பிலான

தரமான, நவநாகரிக ஆடைவகைகள்

எல்லாவற்றிற்கும்

வல்லை வ

★ புடவை மாவிலை ★

வல்வெட்டித்துறை.

வாழ்த்துகின்றோம்



✠ புதிய இதயன் ✠

பிரதான வீதி, நெல்லியடி

Compliments From

★ JAMUNA TRADES ★

MAIN STREET. NELLIADY.

வாழ்த்துகிறோம்

திரு. கி. ஸ்ரீ பதமநாதன்

சந்தி, உடுப்பிட்டி.

வாழ்த்துகிறோம்

கணபதிப்பிள்ளை

கட்டிடப் பொருள்

விற்பனை நிலையம்

உடுப்பிட்டி.

வாழ்த்துகிறோம்

செல்வமுத்துஸ்

பிடனவ மாவிலை

பிரதான வீதி,

நெல்லியடி கரவெட்டி.

வாழ்த்துகிறோம்


★ கலைவாணி ★

கண்ணாடி களஞ்சியம்

பிரதான வீதி

நெல்லியடி, கரவெட்டி.

வாழ்த்துகிறோம்



த. சதாசிவம்

கணேசா பேக்கரி

உடுப்பிட்டி

வாழ்த்துகிறோம்

சரவணாஸ்

பிரதான வீதி,
நெல்லியடி. கரவெட்டி

வாழ்த்துகிறோம்



சுபாஸ் பேக்கரி

பிரதான வீதி,
நெல்லியடி. கரவெட்டி.

வாழ்த்துகிறோம்

இரத்தினம்ஸ்
பிடவை மாளிகை

பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

வாழ்த்துகிறோம்

சுதர்ஸனம்
விற்பனை நிலையம்

பிரதான வீதி நெல்லியடி.

மங்கையர் ஆடவர் மனதைக் கொள்ளை கொள்ளும்

வண்ண வண்ண

பட்டு — பருத்தி புடவைக் கடல்

கல்யாண முகூர்த்தப் புடவைகளின்

கைராசியான ஸ்தாபனம்

ஆனைமுகன் புடவை மாளிகை

பிரதான வீதி, — நெல்லியடி.

தவைமை ஸ்தாபனம்:

★ குடல்கை எம்போரியம் ★

பிரதான வீதி, — பருத்தித்துறை.

வாழ்த்துகிறோம்

தமிழ் முருகன்

A4, மத்திய சந்தை ★ நெல்லியடி

★ உங்களுக்குத் தேவையான

★ பலசரக்கு சாமான் வகைகளை

★ மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ள

SITTAMPALAM STORES


No: 90 Main Street

Nelliady. ● Karaveddy.

உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி

கல்வியில் சிறந்தோங்க

வாழ்த்தும்



★ சனசமூக நிலையம் ★

நெல்லியடி

125 ஆண்டினை நிறைவு செய்யும்
உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி
மேன் மேலும் வளர்ந்தோங்க
வாழ்த்தும்



இ. சிவசுந்தராட்ணம்
பல்பொருள் விற்பனை நிலையம்
சந்தை, உடுப்பிட்டி.

வாழ்த்துகிறோம்
பொ. தர்மலிங்கம்
பத்திரிகையாளர்
உடுப்பிட்டி.

உங்களுக்கு தேவையான ஆடைகளை எண்ணம் போலத் தைத்துக் கொள்ள
விமலகாந்தி தையலகம்
தெணியம்பை, வல்வெட்டித்துறை.

வாழ்த்துகிறோம்
விஜயரத்தினம்
இமையாணன், உடுப்பிட்டி

வாழ்த்துகிறோம்
வே. மாணிக்கத்தியாகராஜா
சந்தை — உடுப்பிட்டி

வாழ்த்துகிறோம்

சி. சிவசம்பு

பலசரக்கு கடை

உடுப்பிட்டி.

வாழ்த்துகிறோம்

இராசநாயகம்

நெல்லியடி, ~ கரவெட்டி.

வாழ்த்துகிறோம்

பூமா மிடவை அகம்

நெல்லியடி, கரவெட்டி.

வாழ்த்துகிறோம்


சிங்கம் ரேடர்ஸ்

நவீனசந்தை, நெல்லியடி.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

சிறந்த கல்வியை வளர்க்க வேண்டும் என

வாழ்த்தும்



★ ரஜனி பீடா ★

இமையாணன் உடுப்பிட்டி.

வாழ்த்துகிறோம்





சந்திரா ஸ்ரோர்ஸ்

பருத்தித்துறை - யாழ் - வீதி

உடுப்பிட்டி

உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி

கல்வியில் சிறந்தோங்க

வாழ்த்தும்



★ சனசமூக நிலையம் ★

நெல்லியடி

125 ஆண்டினை நிறைவு செய்யும்
உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி
மேன் மேலும் வளர்ந்தோங்க
வாழ்த்தும்



இ. சிவசுந்தராட்ணம்
பல்பொருள் விற்பனை நிலையம்
சந்தை, உடுப்பிட்டி.

வாழ்த்துகிறோம்
பொ. தர்மலிங்கம்
பத்திரிகையாளர்
உடுப்பிட்டி.

உங்களுக்கு தேவையான ஆடைகளை எண்ணம் போலத் தைத்துக் கொள்ள
விமலகாந்தி தையலகம்
தெனியம்பை, வல்வெட்டித்துறை.

வாழ்த்துகிறோம்
விஜயரதிதினம்
இணையாளன், உடுப்பிட்டி

வாழ்த்துகிறோம்
வே. மாணிக்கத்தியாகராஜா
சந்தை — உடுப்பிட்டி

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

உவந்து பணி செய்தே

வாழ்க பல்லாண்டு

பொ. வியாகேசு

BEACON STUDY CENTRE

VATHIRI,
KARAVEDDY.

THUVALI VEETHY,
UDUPPIDDY.

வாழ்த்துகிறோம்



நியூ விஜே போட்டோ

உடுப்பிட்டி

வாழ்த்துகிறோம்

ஜெகா மோட்டோல்ஸ்

நெல்லியடி

வாழ்த்துகிறோம்



K.T.M.

நகைத் தொழிலகம்

சந்தைவீதி, உடுப்பிட்டி.

FOR YOUR SHIRTING, SURTING

★ Radymade Dreses ★

★ *Specilist For Weeding Saries* ★

VISIT

HAPPY TEXTILES

NELLIADY.

COMPLEMENTS FROM

Vinayagar Stores

New Market. Nelliyady.

வாழ்த்துகிறோம்

நட்சத்திர அங்காடி

பிரதான வீதி, ★ நெல்லியடி.

உடுப்பிட்டி மெண்கள் கல்லூரி நிமிர்ந்து நின்று

அறிவுப் பசி தீர்க்க வேண்டும் என

வாழ்த்தும்



வே. கிருஷ்ணபிள்ளை

K. V. K.

அரிசி ஆலை

உடுப்பிட்டி

பின்னிணைப்பு :

மலராசிரியர்

கலாநிதி. நா. ஞானகுமாரன்
சிரேஷ்ட விரிவுரையாளர் மெய்யியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

நூற்றிருபத்தைந்து ஆண்டுகால சேவைதனைப் பூர்த்தி செய்து பெருமைக்கும் சிறப்பிற்கும் உரித்தாய் விளங்குகின்ற உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மேலும் சிறந்தோங்கிப் பார்புகழ் பரவும் வண்ணம் தொடர்ந்தும் கல்விப்பணியாற்ற வாழ்த்துகின்றோம். நூற்றிருபத்தைந்தாவது ஆண்டு நிறைவையொட்டி மலர்ந்தமலரை ஆய்வதில் மனமகிழ்வடைகின்றோம்.

பல வர்ணக் கலவைகள் குழைந்து, ஒளிர்வதற்காய் ஒளியேற்றுவோம். எனும் மகுடவாசகத்தைக் கொண்டிலங்கும் கல்லூரிச் சின்னத்தோடு இணைந்து நூற்றிருபத்தைந்தாவது ஆண்டு மலர் பூத்திருப்பதைக் கண்ணாரக் காணலாம் 1868-ம் ஆண்டில் மலர்ந்த ஒளி 1993-ம் ஆண்டையும் தாண்டி ஒளிர்கின்ற தன்மை இருளகற்றும் விளக்கின் குறியீட்டால் விளக்கப்படுகின்றது. மலர்ந்த மலர்த்தோட்டம் சமீப காலத்து அனர்த்தங்களால சற்றே சீர்குலைந்த போதிலும் ஆதவனின் ஒளியழகு எவ்வாறு தொடர்ந்தும் பிரகாசமாய் ஒளிக்கீற்றுக்களைப் பரப்பி நிற்கும் காட்சி அனர்த்தங்களையும் தாண்டி இருளைப் போக்கும் கல்லூரியின் ஒளிச் சிறப்புக்குக் கட்டியங் கூறுவதுபோல் அட்டைப்படம் அழகுற அமைந்துள்ளது. கல்லூரிக் கட்டடங்களின் முன்னைய நிலை பின்னைய நிலையானது அட்டைப் படத்திலும் கட்டடம் போட்ட படங்களாய் எம் மனத் திரைக்குப் பிரத்தியட்சமாயினும் துலாம்பரமாகத் தெரியும் கல்லூரிச் சின்னத்தின் நோக்கம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் மன ஓர்மத்தை புலப்படுத்தி நிற்பதுபோல அமைந்துள்ளது.

ஆண்டுமலர் மலர்ந்திட உறுநெறி காட்டிய உத்தமர் பேராசிரியர் அழகையா துரைராஜா அமரரான போதிலும் அருகிலிருந்து பார்ப்பது போன்ற பிரமையைத் தந்திடும் புகைப்படம் சமர்ப்பணத்தில் அர்ப்பணமாவது மலர் முகப்பில் காண்கின்றோம். ஆண்டு மலரில் இடம்பெற்ற அன்னாரின் பெருமையும் புலமையும் கல்லூரியின் சிறப்பிற்கொரு கலங்கரை விளக்கு என்றால் தவறாகாது.

மலராசிரியர் கழுத்துரையோடு ஆசி உரைகளும், வாழ்த்துரைகளும் இருபது பக்கங்களினை உள்ளடக்க, மலரினது கருப்பொருளானது நூற்றிமுப்பது பக்கங்களைக் கொண்டு விரிந்துள்ளது. மேலும் ஐந்து பலவர்ணப் படங்கள் (Offset) உட்பட பத்தொன்பது படங்கள் இணைந்து மலர் அமைந்துள்ளது. மலராசிரியர் மனங்கலங்குவதுபோல நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட கல்லூரியின் வரலாற்று நிகழ்வுகளை ஆவணங்களை, ஏன் கல்லூரியின் பாரம்பரியச் சான்றுகளைக்கூட கடந்த காலங்களில் நிகழ்ந்த அனர்த்தங்களில் இழந்துவிட்டநிலை வேதனைக்குரிய விடயமாகும். காலத்தின் தேவையைச் சிந்தையில் கொண்டு மலராசிரியர்களின் முயற்சியின் பயனாக முகிழ்த்த இவ்வாண்டு மலரானது கல்லூரியின் வரலாற்றுப் பாதையினைக் கோடிகாட்டி ஆவணப்படுத்துகின்ற வகையில் அமைதல் வரவேற்கத்தக்கதொன்றாகும். இவ்வகையில் நூற்றிருபத்தைந்தாவது ஆண்டு மலர் கல்லூரியின் வளர்ச்சிப் போக்கினை மதிப்பிடுவதற்குரிய ஒன்றாக அமைவதோடு வரும் சந்ததியினருக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் வளத்தினை நோக்குவதற்கும் ஒரு வாய்ப்பைத் தருகின்றது.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி புனிதவதி சண்முகலிங்கம் விளக்கிய கல்லூரிச்சின்னம் ஒரு நோக்கும், கல்லூரி கீதமும், "ஒளியெங்கணும் காண ஒளியையே ஈகின்ற" உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் தெய்வப்பணியை விளக்குவதாக அமைந்துள்ளன. கல்லூரியினவரலாறானது அதிவணக்கத்திற்குரிய எஸ். ஜெப நேசனின் "உடுப்பிட்டி மகளிர்கல்லூரியின் தோற்றமும் அமெரிக்க மிஷனரிமாரின் பங்களிப்பும்" எனும் கட்டுரை யூடாகவும் திருமதி லி. நேசரட்ணதேவி ஜோசெபின் 'முதல் ஐம்பது ஆண்டுகளில் உடுப்பிட்டி விடுதிப் பெண் பாடசாலை' எனும் கட்டுரைவழியும் திருமதி அம்பிகை பாலசிங்கத்தின் 'கல்லூரி வரலாற்றின் இரண்டாவது கட்டம்' என்பவற்றினூடாகவும் செல்வி. வதனரஞ்சனி துரைசாமியின் 'ஒருநூற்றாண்டுக்குப் பின் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி' எனும் கட்டுரை ஊடாகவும் வீரிவாக எடுத்துரைக்கப்பட்டிருத்தல் காணலாம். எஸ். ஜெப நேசனின் கட்டுரையில் கூறப்பட்ட விடயங்கள் சில பிற்பட அமைந்த கட்டுரைகளில் மீண்டும் சுட்டப்பட்ட போதிலும் 1868 ம் ஆண்டிலிருந்து கல்லூரி வளர்ந்த வளர்ச்சிப் போக்கினை அறிந்து கொள்வதற்கு அனைத்துக் கட்டுரைகளும் உதவிபுரிகின்றன எனலாம். பதினேழுபெண் பிள்ளைகளுடன் உடுப்பிட்டி விடுதிப் பெண் பாடசாலையாக ஆரம்பித்த இக்கல்லூரி பல்லாயிரக் கணக்கான பெண்களின் அறிவு வளர்ச்சிக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் சமூக அந்தஸ்த்திற்கும் வளம்காட்டிற்று என்றால் மிகையாகாது. அமெரிக்கமிஷனரிமாரின் இப் பங்களிப்பானது என்றும் மனங்கொள்ளத்தக்கதாக அமைந்துள்ளமை வியப்பிற்குரியதொன்றில்லை. அன்றைய சமூக சூழ்நிலைக்கு முகம்கொடுத்து கல்வியறிவை ஜனரஞ்சகப்படுத்திச் சமூகவளர்ச்சியில், பெண்களின் உயர்ச்சியில் பெருமைப்படும் வகையில் சேவையாற்றிய பாங்கினை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் கடந்தநூற்றிருபத் தைந்து வருடகாலவாழ்வில் கண்டு நயக்கத்தக்கதாகவுள்ளது.

கல்லூரியின் சுதேசஅதிபர்களாய் விளங்கிய ஐந்து அதிபர்களின் நிழற்படங்களும் [பக்கம் 26] 1934 ம் ஆண்டிலிருந்து பதவி வகித்தஅதிபர்களின் பட்டியலை தருகின்ற ஆவணமாய் அமைந்துள்ளது. அதிபர்கள், உப அதிபர்கள், ஆகியோரின் பட்டியலை அட்டவணைப்படுத்தக் கூடிய சாத்தியமிருப்பின் வரலாற்று ஆவணத் தேவைக்குதவி புரிவதாய் அமைந்திருக்கும். 'மைதானங்களில் நாங்கள்' [பக்கம் 18] 'நிகழ்வுகளில் சில' [பக்கம் 54, 104] எனும்தலைப்பின் கீழ்சுட்டப் பெற்றநிழற்படங்கள் பற்றிக் குறிப்புக்கள் சில வழங்கப்பட்டிருப்பின் உபயோகமாக இருந்திருக்கும்.

கல்லூரி ஆசிரியை செல்வி சறோஜாதேவி கதிரவேலின் ' உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் கலைத்துறை வளர்ச்சியும் ' எனும் கட்டுரை கல்லூரியின் கலை வளர்ச்சிப் போக்கைத் தகுந்த தரவுகளுடன் சுட்டி நிற்கின்றது. கடந்த காலங்களில் நிகழ்ந்த அனர்த்தங்கள் காரணமாகக் கல்லூரி பெரிய நிலைசார்ந்த அழிவுகளையும் சேதங்களையும் ஏற்றிருந்த போதிலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் தேக்கநிலை ஏற்படவில்லை என்பதற்குப் பல்கலைக் கழக அனுமதி பெற்றோரின் தொகையே சான்றாக விடை பகருகின்றது. கல்லூரி ஆசிரியை செல்வி பத்மராணி பத்மநாதனின் விளையாட்டுத்துறை பற்றிய செய்திகளும் கல்லூரி ஆசிரியை செல்வி. மாலினி பொன்னையாவின் இசை, நடனத்துறை பற்றிய செய்திகளும் இரு தூரைகளில் கல்லூரி கொண்டிருந்த செழுமை மிக்க வளர்ச்சியை எடுத்தாள்வதாகின்றன, மாணவரின் தனித்துவமான ஆளுமை வளர்ச்சிக்குக் கல்வி மாத்திரமன்றி உடல், உள நிலையை வளம்படுத்துகின்ற விளையாட்டுத்துறை, கலைத் துறைச் செயற்பாடுகளிலு ஊக்கம் காட்டிச் சிறப்புற வைத்த பெருமை அக் கல்லூரியின் அதிபர்களையே பெரிதும் சாந்திருந்தன அதிபர்களின் சேவைகளுக்குப் புகழாரம் சூட்டிய பத்து ஆக்கங்களும் அவர்கள் இக் கல்லூரியின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆற்றிய பணியின் அழுத்தத்தைப் புலப்படுத்தப் போதியதாகும். அதிபர்கள் பற்றிய நினைவலைகளும் சில ஆசிரியர்கள் பற்றிய பசுமை உணர்வுகளும் அவர்களின் கடமை, கட்டுப்பாடு போன்ற பண்பினைப் புலப்படுத்துவதுடன் மனிதநேயம் மிக்க அன்புள்ளங்கொண்டவர்கள் என்ப தனையும் பறைசாற்றுகின்றன கல்லூரி வாழ்க்கையில் இவர்கள் தம்மை முழுமையாக அர்ப்பணித்து கல்லூரி மாணவர்களதும் சமூகத்தினதும் உயர்வுக்கும் சிறப்புக்கும் வழிகாட்டியவர்களாக விளங்கியுள்ளார்கள் என்பது வெள்ளிடைமலையாகும். இவர்களது வாழ்வனுபவமானது மாணவர் தலைமுறையினர்க்கும் ஆசிரியர் சமூகத்திற் கும் பயன்தரவல்ல கருத்தம்சங்களாகும்.

கல்வியும் கலாசாரமும் பற்றிப் பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்களின் கட்டுரை மனித வாழ்வில் கலா சாரத்தின் மூலங்களைத் தொட்டுக் காட்டியதுடன் அந்தக்கலாசார விருத்தியின் பின்னணியில் கல்வியின் வடிவத்தினை இனங்காட்டி விளக்கிச் செல்கின்றது கல்விகற்கின்ற மாணவர்க்குப் பயன்படுகின்ற வகையில் கலாசாரம், பண்பாடு, சமூகம் எனும் அம்சங்களைக் கல்விச்சிந்தனையோடு இணைத்துத்தெளிவாக விளக்கி யுள்ளமை சிறப்பிற்குரியதாகும் குடியேற்றவாதக் கல்வியின் எதிர்விளைவுகளை குறிப்பாக யாழ்ப்பாணத்தினை

மையப்படுத்தி கலாநிதி சபா. ஜெயராசாவின் கட்டுரைஆராய்கின்றது. கலாநிதி சுரேஸ் கனகராஜா தன் ஆக்கத்தில் இன்றைய சமூக நிலையில் எதிர் நோக்குக்கு உள்ளாகும் கல்வி சம்பந்தமான சில சிந்தனையைச் சிந்திக்கத் தூண்டும் வகையில் எடுத்தாண்டமை வரவேற்கத்தக்கதாகும். திரு. சண்முகலிங்கத்தின் ' 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையும் மனனக் கல்வியும் ' எனும் கட்டுரையும் ஆங்கில ஆசிரியர் திரு. கி. இந்திரலிங்கத்தின் ' Play the game in Life too ' எனும் கட்டுரையும் ' மாணவர் அன்றும் இன்றும் ' எனும் கலந்துரையாடல் தொகுப்பும் வாசகர்களின் சிந்தனையைத் தூண்டவல்லனவாகும்.

நூற்றிருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு ஞாபகார்த்த மலர்ப் போட்டிகளின் ஆக்கங்கள் மாணவர்களின் செழுமையான படைப்பாற்றலைப் புலப்படுத்தி நிற்கின்றன. கல்லூரி மாணவி சுகந்தி தனபாலசிங்கத்தின் ' ஆசிரியர்களைப் போற்றுவோம் ' எனும் படைப்பும் மாணவி ஸ்ரீ. சகுந்தலா தில்லை நடராசாவின் இன்றைய மாணவரும் நாளைய சமுதாயமும் மாணவ ஆசிரிய உறவின் காத்திரத்தன்மையை அணுகி நோக்க விழைகின்ற தன்மைக்குத் தகுந்த உதாரணமாகின்றது. மாணவர்களின் இதர ஆக்கங்களும் அவர்களின் ஊக்கத்தின் வெளிப்பாடும், பாராட்டிற்குரித்தாய் அமைந்துள்ளன.

இன்றைய காலச்சூழ்நிலையில் ஒருமலரை மலரவைப்பதென்பது இலகுவானதொன்று அன்று எனினும் காலச் சூழ்நிலை கடந்து அழகிய தாளில் பலவர்ணப் படங்கள் இணைத்து கட்டுரைகள், கவிதைகள், வரலாற்றுச் செய்திகள் ஆகிய பல்வேறுபட்ட ஆக்கங்களைப் பெற்று மலரை மலரவைத்திருப்பது பராட்டுக்குரிய தொன்றாகும். மலரில் சிற்சில இடங்களில் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுத்துப் பிழைகள் தவிர்க்கப்பட்டிருந்தால் மலர் மேலும் சோபை பெற்றிருக்கும் எனினும் மலரினின்று எழுகின்ற வாசம் அதன் காத்திரமான பரிமாணத்தைப் புலப்படுதாதி நிற்கின்றது. மலர்ந்த மலர் பொலிவுற்று என்றென்றும் நறுமணம் வீசும் இனிய வாமலராய் விளங்க வாழ்த்துகின்றோம்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

— திருக்குறள் —

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி உயர்ந்தெழுப்ப

வாழ்த்தும்

குமார் அச்சகம்

ராஜலக்ஷ்மி கட்டிடம் - சிவன் வீதி,

பருத்தித்துறை.

புது மெருகு காட்டும்

புத்தம் புது தங்க நகைகள்

காலத்திற்கேற்ப

நவின கலைவண்ணம் காட்டும்

22 காராட் தங்க நகைகளுக்கு



தங்கராஜா

ஆறுமுகானந்தன்

நகைத் தொழிலகம்

சந்தை வீதி ★ உடுப்பிட்டி

குமார் அச்சகம் — பருத்தித்துறை